இந்திய அரசாங்கம்

MADRAS

ஆட்சிமொழி பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அறிக்கை

[ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]

1958

PRINTED IN INDIA AT HOE & CO., MADRAS-1
PUBLISHED BY THE MANAGER OF PUBLICATIONS, DELHI
1960

V2,34(Q)xN58
N60
119309

L.13.17
R.R. No: 759/58/73

திரு ஜி. பி. பந்த்,
தலைவர்,

ஆட்சிமொழி பற்றின பாராளு மன்றக் கமிட்டி,
புது டில்லி.

இந்திய ராஷ்ட்ரபதி அவர்கட்கு,
புது டில்லி.

புது டில்லி 1959-ம் ஆண்டு பிப்ரவரி 8-ந் தேதி.

ஐயா,

ஆட்சிமொழிக் கமிஷன் சிபார்சுகளை ஆராய்ந்து, அவற்றை பற்றின சிபார்சுகளைத் தங்களுக்குத் தெரிவிக்க, அரசியலமைப்பு 344-வது ஷரத்து, உறுப்பு (4)ன்கீழ் கூட்டப்பட்டுள்ள ஆட்சிமொழி பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அறிக்கையை இத்துடன் தாழ்ந்த வணக்கத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

தங்களன்புள்ள,

(ஒ-ம்) ஜி. பி. பந்த்,
தலைவர்.

இந்திய அரசாங்கம்

ஆட்சிமொழி பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அறிக்கை

1958

PRINTED IN INDIA AT HOE & CO., MADRAS-1
PUBLISHED BY THE MANAGER OF PUBLICATIONS, DELHI
1960

கமிட்டியின் உறுப்பினர்கள்

ராஜ்ய அவை

திரு கோவிந்த வல்லப பந்த்
திரு புருஷோத்தம தாஸ் தாண்டன்
திரு கே. பி. மாதவன் நாயர்
திரு அல்லூரி சத்யநாருயண ராஜு
பேராசிரியர் டாக்டர் ரகுவீரா
சர்தார் புத்சிங்
திரு பாகீரதி மஹாபாத்ரா
டாக்டர் ஏ. ராமஸ்வாமி முதலியார்
திரு பேராத் நாருயணன் நாயர்
திரு புரொபுல்லா சந்த்ர பஞ்ச் தேவ்

மக்கள் அவை

சேத் கோவிந்த தாஸ்
திரு பி. டி. தாணுப் பிள்ளை
ஸ்வாமி ராமானந்த தீர்த்தா
திரு பி. எஸ். மூர்த்தி
பண்டித தாகூர்தாஸ் பார்கவா
திரு ஹிப்சுர் ரஹ்மான்
திரு பி. பாகவதி
திரு யூ. ஸ்ரீநிவாஸ மல்லையா
திரு பிராங்க் அந்தோனி
திரு மதுரபிரஸாத் மிஸ்ரா
திரு மாணிக்யலால் வர்மா
திரு பக்த தர்ஸன்
திரு ஸ்ரீபத் அமிருத டாங்கே
திரு ஹரீஷ் சந்த்ர சர்மா
குமாரி மணிபென் வல்லபாய் படேல்
திரு ஜி. எஸ். முஸாபிர்
திரு அதுல்யா கோஷ்
திரு தேவ்ராவ் யச்வந்தராவ் கோஹோகர்
திரு ஹரீந்த்ர நாத் முகர்ஜி
திரு ப்ரமத நாத் முகர்ஜி

கமிட்டியின் காரியாலயம்

திரு ஆர். பிரஸாத், ஐ.ஏ.எஸ்., செயலாளர்
திரு எஸ். எல். மதுரீயா, உதவிச் செயலாளர்
திரு ஆர். பி. ஷர்மா, கீழ்ச் செயலாளர்
திரு எம். பி. லால், பிரிவு அதிகாரி

அரசாங்க பாஷையைப் பற்றிய பாராளு மன்றக் கமிட்டியின் அறிக்கை

அத்தியாயம் 1

முகவுரை

இந்திய அரசியலமைப்பின் 344 (1)வது பிரிவின்படி ராஷ்ட்ரபதி இந்த அரசியலமைப்புத் தொடங்கிய 5 வருஷங்களின் முடிவிலும், அதனை அடுத்து இந்த அரசியலமைப்புத் தொடங்கிய 10 வருஷங்களின் முடிவிலும் ஒரு கமிஷன் நியமிப்பார். அந்தக் கமிஷனில் ஒரு தலைவரும், 8-வது தபசிலில் குறிப்பிடப்பட்ட பல்வேறு பாஷைகளின் பிரதிநிதிகளாகவுள்ள அங்கத்தினர்களும் இருப்பார்கள். ராஷ்ட்ரபதி தனது உத்தரவில் கமிஷன் தனது கடைமைகளை நிறைவேற்றும் வழிகளைக் குறிப்பிடுவார். அதே பிரிவு, இரண்டாவது பகுதி கூறுவதாவது:—'' ராஷ்ட்ரபதி அவர்களுக்கு இந்த கமிஷன் கீழ்க்கண்டவைகளைப்பற்றிச் சிபார்சுகள் செய்யவேண்டும்:— 344-வது பிரிவின்படி அரசாங்க பாஷைக் கமிஷனின் அமைப்பும் கடமைகளும்

(அ) யூனியன் ராஜாங்கக் காரியங்களுக்காக ஹிந்தி பாஷையை மேன்மேலும் உபயோகித்தல்;

(ஆ) யூனியனின் ராஜாங்கக் காரியங்கள் எல்லாவற்றிற்குமோ அல்லது எவற்றிற்கோ ஆங்கில பாஷையை உபயோகித்தலைக் கட்டுப்படுத்துதல்;

(இ) 348-வது பிரிவில் கூறப்பட்ட காரியங்கள் எல்லாவற்றிற்குமோ அல்லது அவைகளில் எவற்றிற்கோ உபயோகிக்கப்படவேண்டிய பாஷை;

(ஈ) யூனியனின் காரியங்களில் ஏதாவது குறிப்பிட்ட ஒன்றிற்கோ அல்லது பலவற்றிற்கோ உபயோகிக்கப்படவேண்டிய இலக்கங்களின் வடிவம்;

(உ) யூனியனின் அரசாங்க பாஷையும், யூனியனுக்கும் ஒரு ராஜ்யத்திற்கும் இடையிலோ, ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையிலோ வழங்கவேண்டிய பாஷையையும், அவற்றின் உபயோகத்தையும் பற்றி ராஷ்ட்ரபதியால் அக்கமிஷனுக்கு அனுப்பப்படும் மற்றைய விஷயமும்.''

2. இந்திய அரசியலமைப்பு, 8-வது தபசிலில் குறிப்பிடப்பட்ட பல்வேறு பாஷைகளின் பிரதிநிதிகளாகவுள்ள இருபது உறுப்பினர்களையும், காலஞ்சென்ற திரு. பி. ஜி. கேர் அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு கமிஷன், 1955-ம் ஆண்டு, ஜூன் மாதம், 7-ந்தேதி ராஷ்ட்ரபதி அவர்களால் நிறுவப்பட்டது. உறுப்பினர்களின் பெயர்களும், இக்கமிஷனின் நிபந்தனைக்குறிப்பும், நடைமுறையையும்கொண்ட ஒரு அறிக்கையின் நகல் பிற்சேர்க்கையில் தரப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிடப் கமிஷனின் நியமனமும் அதன் நிபந்தனைக் குறிப்பும், நடைமுறையும்

பட்டுள்ள இரண்டாவது பகுதி, உட்பகுதி (அ)விலிருந்து (ஈ) வரை, நிபந்தனைக் குறிப்பில் திருப்பித் தரப்பட்டிருப்பதைக் காணலாம். இரண்டாவது பகுதியின் உட்பகுதி (ஈ) பிரகாரம், படிப்படியாக யூனியன் அரசாங்க பாஷையாகவும், யூனியன் ராஜ்ய சர்க்கார்களுக் கிடையேயும், ஒரு ராஜ்ய சர்க்காருக்கும் மற்றொன்றிற்கு மிடையேயும், போக்குவரத்து சாதனமாகவும், ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியைக் கொண்டுவர, ஒரு கால அட்டவணையையும், செயல்படும் விதத்தையும்பற்றி இக்கமிஷன் சிபார்சு செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. தனது நடைமுறையை முறைப்படுத்தக் கமிஷனுக்கு பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டது.

அறிக்கையை சமர்ப்பித்தல்.

3. இக்கமிஷன் ஒரு கேள்வித்தாளைப் பெருவாரியாக வழங்கியது. இதற்கு 1094 எழுத்துமூலமான பதில்கள் அல்லது யாதாஸ்துகள் வந்தன. அவைகளில் ''ஏ'', ''பி'' பிரிவு ராஜ்ய சர்க்கார்களிலிருந்தும், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், ராஜ்ய பப்ளிக் சர்வீஸ் கமிஷன்கள், பல்கலைக் கழகங்கள்; கலை, கல்விச் சங்கங்கள் இவைகளின் பதில்களும் இருந்தன. 930 தனிப்பட்டவர்களையும், சங்கங்களின் பிரதிநிதிகளையும் இக்கமிஷன் விசாரித்தது. பிறகு, தன்னுடைய அறிக்கையை, இக்கமிஷன் ராஷ்ட்ரபதிக்குச் சமர்ப்பித்தது. அதன் அச்சடித்த நகல்கள், பாராளு மன்றத்தின் இரண்டு சபைகளிலும், 1957-ம் ஆண்டு, ஆகஸ்டு 15-ந் தேதியன்று, சமர்ப்பிக்கப்பட்டன.

பாராளு மன்ற ஆட்சிமொழிக் கமிட்டி அரசியலமைப்பின் பகுதிகள் உறுப்பினர்களின் தேர்தல்

4. மக்கள் சபையிலிருந்து 20 உறுப்பினர்களும், ராஜ்ய சபையிலிருந்து 10 உறுப்பினர்களுமாக, முறையே 30 உறுப்பினர்கள் கொண்ட ஒரு கமிட்டி நிறுவ, 344-வது பிரிவு, பகுதி 4-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வோட்டு முறையினால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகளை ஆராய்ந்து, தன்னுடைய கருத்தை ராஷ்ட்ரபதிக்கு இக்கமிட்டி தெரியப்படுத்தவேண்டுமென்று ஐந்தாவது பகுதியில் காணப்பட்டிருக்கிறது. ஆகவே, 1957-ம் ஆண்டு, செப்டம்பர் 3-ந் தேதி, உள்விவகார மந்திரியின் பிரரேபணையின் பேரில், கீழ்க்கண்ட நபர்கள், இக்கமிட்டியின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ராஜ்ய அவை (11-9-1957-ல் நடைபெற்ற தேர்தல்)

1. திரு கோவிந்த வல்லப பந்த்
2. திரு புருஷோத்தம தாஸ் தாண்டன்
3. திரு கே. பி. மாதவன் நாயர்
4. திரு அல்லூரி சத்யநாருயண ராஜு
5. பேராசிரியர் டாக்டர் ரகுவீரா
6. சர்தார் புத்சிங்
7. திரு பாகீரதி மஹாபாத்ரா
8. டாக்டர் ஏ. ர்ரமஸ்வாமி முதலியார்
9. திரு பேராத் நாருயணன் நாயர்
10. திரு புரொபுல்லா சந்த்ர பஞ்ச் தேவ்

மக்கள் அவை *(13-9-1957-ல் நடைபெற்ற தேர்தல்)*

1. சேத் கோவிந்த தாஸ்
2. திரு பி. டி. தாணுப் பிள்ளை
3. ஸ்வாமி ராமானந்த தீர்த்தா
4. பி. எஸ். மூர்த்தி
5. பண்டித தாகூர்தாஸ் பார்கவா
6. திரு ஹிப்சுர் ரஹ்மான்
7. திரு பி. பாகவதி
8. திரு யூ. ஸ்ரீநிவாஸ மல்லையா
9. திரு பிராங்க் அந்தோனி
10. திரு மதுர பிரஸாத் மிஸ்ரா
11. திரு மாணிக்யலால் வர்மா
12. திரு பக்த தர்ஸன்
13. திரு ஸ்ரீபாத அமிருத டாங்கே
14. திரு ஹரிஷ் சந்த்ர சர்மா
15. குமாரி மணிபென் வல்லபாய் படேல்
16. திரு ஜி. எஸ். முஸாபிர்
17. திரு அதுல்யா கோஷ்
18. திரு தேவ்ராவ் யச்வந்தராவ் கோஹோகர்
19. திரு ஹரிந்த்ர நாத் முகர்ஜி
20. ப்ரமதநாத் முகர்ஜி

1958-ம் ஆண்டு ஏப்ரல் 2-ந்தேதி இரு அங்கத்தினர்கள், திரு ஜி. பி. பந்த் அவர்களும் சர்தார் புத்சிங் அவர்களும் ராஜ்யசபை அங்கத்தினர் பதவிகாலம் முடிந்ததால் இக்கமிட்டியின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகினுர்கள். ஆனுல், அவர்கள் உடனே ராஜ்ய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் இக்குழுவின் அங்கத்தினர்களாக மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

5. 1957-ம் ஆண்டு நவம்பர் 16-ந் தேதி நடந்த கமிட்டியின் முதற் கூட்டத்தில் திரு கோவிந்த வல்லப பந்த், இக்குழுவின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் ராமஸ்வாமி முதலியார், திரு பிராங்க் அந்தோனி, டாக்டர் ரகுவீரா, திரு எஸ். ஏ. டாங்கே, பண்டித தாகூர்தாஸ், திரு ஸ்ரீநிவாஸ மல்லையா கொண்ட ஒரு விதிகள் ஸப் கமிட்டி, இக்குழுவின் நடைமுறையையும், வேலைமுறையையும், நிர்மாணிக்க நியமிக்கப்பட்டது. நடைமுறையைப்பற்றின விதிகளும், வேலைமுறையும் பிற்சேர்க்கை 2-ல் திருப்பித்தரப் பட்டிருக்கிறது. தலைவரின் தேர்தல் நடைமுறையும், வேலை செய்வதற்கான விதிகளும்

6. மொழிப்பிரச்னை என்பது மக்களின் தேசிய முயற்சியில் பல்வேறு துறைகளிலும் தொடர்பு கொண்டிருப்பதாலும், பல்வேறு துறைகள் ஒன்றோடொன்று பிணைந்திருப்பதாலும், பிரச்னைகளை தனித்தனியாக ஆராய்வது இயலாது என்ற அரசாங்க பாஷைக் கமிஷன் எண்ணியது. எனவே, இக்கமிஷன் நிபந்தனைக் குறிப்பிற் கப்பாற்பட்டவைகளையும் ஆராய்ந்தது. ஆகவே, கமிஷன் நேரடியாகக் காணவேண்டும் என்று கோரப் கழகத்தின் சிபார்சுகளும் முடிவுகளும் குழுவின் வேலையின் எல்லை

படாதவற்றை ''முடிவுகள்'' என்றும், கோரப்பட்டவற்றிற்குக் கண்ட விடைகளை ''சிபார்சுகள்'' என்றும், பெயரிட்டது. ''கமிஷன் கண்ட முடிவுகளும், சிபார்சுகளும்; சாராம்சம்'' என்று அவற்றின் அறிக்கை பிற்சேர்க்கை 1-ல், கமிஷன், நிபந்தனைக் குறிப்பிற் கப்பாற்பட்டவைகளின் மேலுள்ள தனது குறிப்பின் முடிவில் கமிஷன் எவைகளைப்பற்றி சிபார்சு செய்ய வேண்டுமென்பது. அரசியல் அமைப்பில் இருக்கிறது என்று முன்னே சொல்லப்பட்டது. மேலும், அந்த அமைப்புக் கூறுவதாவது ''கமிஷனின் சிபார்சுகளை ஆராய்ந்து, தங்கள் முடிவுகளை ராஷ்ட்ரபதிக்கு இக்கமிட்டி தெரியப்படுத்தவேண்டும்.'' இக்கட்டளைகளினால் ''சிபார்சுகளை'' மட்டும் ஆராய்வதென்று எண்ணியது. ஆனால், ஏதாவது ஒரு சில ''முடிவுகள்'', ''சிபார்சு''களுடன் நேரடித் தொடர்பு உள்ளவை என்று நினைத்தால் அவைகளையும் பரிசீலனை செய்வது என்ற முடிவுக்கு இக்கமிட்டி வந்தது. ஆனபோதிலும், முடிவுகளைப்பற்றின கமிட்டியின் கருத்துக்களை வெளியிடவேண்டாமென்று எண்ணியது. ஆகவே, கமிட்டி, கமிஷனின் சிபார்சுகளைப்பற்றின தனது கருத்துக்களையே பதிவு செய்தது.

குழுவின் கூட்டங்கள் வேலை முறை பொது விவாதம் சிபார்சுகளை விவரமாக ஆராய்தல்

7. இக்கமிட்டி 26 கூட்டங்களைக் கூட்டியது. இக்கூட்டங்கள் நடந்த தேதிகளும், அவைகளில் பங்கெடுத்துக் கொண்ட உறுப்பினங்களின் பெயர்களும் கொண்ட ஜாபிதா சேர்க்கப்பட்டிருக்கிறது (பிற் சேர்க்கை 3).

அவைகளில் நமது நாட்டின் வருங்காலத்திற்காக முக்கியமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், கடினமாகவும் உள்ள பிரச்னைகளை ஆராயப்படுவதும் ஒன்றாகும். ஆகவே, இக்கமிட்டி, முக்கியமான பிரச்னைகளைப்பற்றி நன்றாக அறிந்துகொள்வதற்காக முதலில் ஒரு பொது விவாதம் வேண்டுமென்று விரும்பியது. அநேகமாக எல்லா உறுப்பினர்களும் இவ்விவாதத்தில் கலந்து கொண்டனர். இதனால், சில விவரங்களைப் பற்றியும், சில கேள்விகளின் முக்கியத்வத்தைப் பற்றியும் வேற்றுமையிருந்தாலும், பிரச்னைக்கு விடை காணவேண்டிய முறையிலும், குறிக்கோள்களிலும் பொதுவாக ஒற்றுமையிருப்பது தெரிய வந்தது. இதன் பிறகு, சௌகர்யத்திற்கு ஏற்றாற்போல், ஒன்றன்பின் ஒன்றாக அல்லது கூட்டமாகவோ பிரச்னைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

உபயோகிக்கப்பட்ட சாதனங்கள் நன்றி கூறுதல்

8. அதிர்ஷ்டவசமாக, இக்கமிட்டிக்கு, அரசாங்க பாஷைக் கமிஷனின் அறிக்கையிலும் மற்றும் சில யாதாஸ்துகளிலும் (இதுவரை வெளியிடாதது) இருந்து கிடைக்கும் அரசாங்க பாஷைப் பிரச்னையைப்பற்றின செய்திகளைத் தவிர, கமிஷனால் பல்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட எழுத்துச் சான்றுகளும், வாய்மொழிச் சான்றுகளும் கிடைத்தன. சென்னை அரசாங்கத்தினால் மிகத் தெளிவாகத் தயாரிக்கப்பட்ட, அரசாங்க மொழிக் கமிஷனின் அறிக்கையைப்பற்றின மகஜரும், சென்னை சட்டசபைகளில் இதைப்பற்றி நடந்த விவாதங்களின் விவரங்களும், இக்கமிட்டிமுன் இருந்தன. மேற்கு வங்கச்

சட்டவைகளில் அரசாங்க பாஷை பற்றின விவாதங்களின் விவரங்களும், மற்றும் அநேக மகஜர்களும், தீர்மானங்களும், கடிதங்களும், பல்வேறு சங்கங்கள், நபர்கள் மூலமாக, இக்கமிட்டிக்குக் கிடைத்தன.

அறிக்கையின் திட்டம்

9. அரசாங்கப் பாஷைப் பிரச்னைப்பற்றி இக்கமிட்டியின் பொதுப்படையான கருத்தும், அதற்குகந்த அரசியல் அமைப்பின் பிரிவுகளும் அத்தியாயம் 2-ல் காட்டப்பட்டிருக்கிறது. அத்தியாயம் 3-ல் கமிஷனின் பல்வேறு சிபார்சுகளைப்பற்றின இக்கமிட்டியின் கருத்துக்களும் இருக்கின்றன. மேலும், ஆட்சி மொழி அறிக்கையில் ஒன்றன்பின் ஒன்ருக வரும் கமிஷனின் சிபார்சுகளைப்பற்றின குழுவின் கருத்துக்கள் கொண்ட ஒரு ஜாபிதாவையும் காணலாம்.

அத்தியாயம் 2

இப் பிரச்னைக்குப் பொது நோக்கு

10. அரசாங்க பாஷையைப் பற்றின பிரிவுகள் அரசியல் அமைப்பின் 17-வது பாகத்தில் இருக்கின்றன.

343-வது பிரிவு 12-வது பகுதியின்படி யூனியன் அரசாங்க பாஷை தேவநாகரி லிபியிலுள்ள ஹிந்தி என்றும், யூனியன் ஆட்சி விவகாரங்களில் பயன்படுத்தப்படும் இலக்கங்கள் இந்திய இலக்கங்களின் பன்னுட்டு வடிவமேயாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் 2-வது பகுதியின்படி ஆங்கிலம், அரசியல் அமைப்பு ஆரம்பித்து பதினைந்து ஆண்டுகள்வரை, முன்னுல் எந்த அரசாங்க அலுவல்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டதோ, அவைகளுக்குத் தொடர்ந்து உபயோகப்படுத்தப்படும். ஆனால், ராஷ்ட்ரபதி இக் காலத்திற்குள் ஆங்கில பாஷையுடன் ஹிந்தி பாஷையும், இந்திய எண்களின் பன்னுட்டு வடிவத்துடன் தேவநாகரி எண்களையும் ஏதாவது யூனியன் அரசாங்க அலுவல்களுக்கு, உபயோகப்படுத்துமாறு கட்டளையிடலாம். மூன்ருவது பகுதியின்படி, அரசியல்அமைப்பு ஆரம்பித்து பதினைந்து ஆண்டுகளுக்குப்பிறகு, பாராளு மன்றம் சட்டத்தின்மூலம், ஆங்கில பாஷையையோ அல்லது தேவநாகரி எண்களையோ (1965-ம் ஆண்டு ஜனவரிக்கு பிறகும்), எந்த ஒரு காரியத்திற்கும் பயன்படுத்துமாறு செய்யலாம்.

முன்னுல் சொன்னபடி, படிப்படியாக ஹிந்தி மொழியைப் புகுத்துவதற்கும், ஆங்கிலமொழி உபயோகத்திற்கு தடைகளை ஏற்படுத்தவும், சிபார்சுகள் செய்ய ஒரு கமிஷனை நியமிக்கவும் இச்சிபார்சுகளை ஆராய ஒரு பாராளு மன்றக்கமிட்டியை அமைக்கவும் 344-வது பிரிவு இடம் கொடுக்கிறது. 344-வது பிரிவு 6-வது பகுதியின்படி ராஷ்ட்ரபதி அக்கமிட்டியின் முடிவை ஆராய்ந்து முழுவதும் அதனை ஏற்றுக்கொண்டோ அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டோ தம் உத்தரவைப் பிறப்பிப்பார். இது 343-வது ஷரத்திற்குப் புறம்பாகவும் இருக்கலாம்.

ராஜ்யங்களி லுள்ள ஆட்சி மொழி

11. 345-வது பிரிவு அந்தந்த ராஜ்யத்தின் சட்டசபை, சட்டபூர்வமாக, அந்தப் பிராந்திய மொழியையோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளேயோ அல்லது ஹிந்தியையோ, அந்த ராஜ்ய மொழியாக அல்லது மொழிகளாக, அதிகார பூர்வமான காரியங்கள் அனைத்திற்குமோ அல்லது ஒரு சிலவற் றிற்கோ பயன்படுத்தலாமென்று வகுக்கிறது. அரசாங்க சட்ட சபை சட்ட பூர்வமாக மாற்றினாலொழிய, ஆங்கிலம், அரசிய லமைப்பு வருவதற்குமுன் இருந்தாற்போல், அரசாங்கக் காரி யங்களுக்கு உபயோகப்படுத்தப்படும். 347-வது பிரிவின்படி, ராஷ்ட்ரபதியானவர் தம்மிடம் கோரப்பட்டால், ஒரு ராஜ் யத்தில் வழங்கும் ஒரு மொழியை அதற்குத் தகுதியான பெரும் பான்மையான மக்கள் பேசுவதாயிருப்பின், அந்த ராஜ்யத்தார் அந்த மொழியை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அந்த ராஜ்ய முழுவதற்கும் அல்லது அதன் ஒரு பாகத்திற்கும் தன்னால் குறிப்பிட்ட காரியங்களுக்கு பயன்படவேண்டு மென்றும் விதிப்பார்.

ராஜ்யங்களுக் கிடையேயும், சில மத்ய ராஜ்ய அரசாங்கங்களுக் குள்ளும் அர சாங்க பாஷை

346-வது ஷரத்துப்படி, தற்சமயம் மத்திய அரசாங்கத்தில் உபயோகப்படுத்தப்படும் பாஷை, ராஜ்யங்களுக்குள்ளும், ராஜ்ய சர்க்கார்களுக்கும் மத்திய சர்க்காருக்குமிடையே நடை பெறும் கடிதப் போக்குவரத்திற்கும், ஆட்சிமொழியாக இருக் கும். ஆனாலும், இரண்டு அல்லது இரண்டிற்குமேற்பட்ட ராஜ்யங்கள், ஹிந்திமொழியில் தங்களுக்குள் கடிதப் போக்கு வரத்துச்செய்ய உடன்படிக்கை செய்துகொள்ளலாம்.

சட்ட, நீதி மன்றங்களின் மொழி

12. 348-வது பிரிவு, பாராளு மன்றம் தனியே சட்டம் இயற்றும் வரையிலும், உச்ச நீதிமன்றம், மற்ற உயர் நீதிமன்றங்களுடைய நடவடிக்கைகளும், அதிகாரபூர்வமான சட்டங்களும் ஆங்கிலமொழியில் இருக்கவேண்டுமென்று வரையறுக்கிறது. ஆனால், ராஷ்ட்ரபதியின் முன் உத்தரவின் பேரில், ராஜ்யத்தின் அரசாங்க அலுவல்களுக்கு உபயோகப் படுத்தும் மொழியை, அதாவது ஹிந்தி அல்லது பிராந்திய மொழியை உயர் நீதிமன்றங்களின் நடைமுறைக்கு உபயோகப்படுத்தலாம். என்ற போதிலும் அந்த உயர் நீதி மன்றம் தருகிற தீர்ப்புகள், டிகிரிகள், உத்தரவுகள் ஆகிய அனைத்தும் ஆங்கிலத்தில்தான் இருத்தல் வேண்டும். ஒரு ராஜ்ய சட்டமன்றம், ஆங்கிலத்தையல்லாத வேறு மொழியில் அதனுடைய சட்டமூலம், மசோதா அல்லது சட்டத்தை நிறை வேற்றினால் இவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றையும் அதிகாரபூர்வமான கெஜட்டில் வெளியிடவேண்டும். இவ் விரண்டினுள் ஆங்கில மொழியிலுள்ள பகுதியே அதிகாரபூர்வ மான பகுதியாகக் கருதப்படும்.

349-வது பிரிவின்படி கி.பி. 1965-ம் ஆண்டுவரை, மேலே சொன்ன பிரிவுகளை மாற்ற ஏதாவது ஒரு மசோதாவோ அல்லது திருத்தமோ, ஜனாதிபதியின் முன் உத்தரவின்றி பாராளு மன்ற அவைகளில் (ராஜ்ய சபையிலோ அல்லது மக்கள் சபையிலோ) கொண்டுவரப்படமாட்டாது. ராஷ்ட்ரபதியானவர் இவ்வகை உத்தரவிற்குமுன், ஆட்சிமொழிக் கமிஷனின் சிபார்சுகளையும், ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அறிக் கையையும் தன் கவனத்திலிறுத்துவார்.

13. 350-வது பிரிவு ஒவ்வொரு மனிதனையும் எந்த அதிகாரியிடமும் தன்னுடைய குறைகளைப்போக்க வேண்டுமென்று தெரிவிக்கும்பொழுது அவர் ராஜ்ய அதிகாரியாக இருப்பினும் யூனியன் அதிகாரியாக இருப்பினும், யூனியன் அரசாங்க பாஷையையோ அல்லது அந்த ராஜ்யத்தில் வழங்கும் பாஷையையோ பயன்படுத்த உரிமையளிக்கிறது. 350-ஏ பிரிவின்படி, ஒவ்வொரு ராஜ்ய அரசாங்கமும் அதற்குட்பட்ட அதிகாரிகளும், மொழிவாரிச் சிறுபான்மையரின் குழந்தைகளுக்கு அவர்களின் தாய் மொழியில் கற்பிக்கப் போதிய வசதிகள் செய்துகொடுக்க வேண்டும்.

பிரத்யேகக் கட்டளைகள்

351-வது பிரிவின்படி, ஹிந்தி பாஷையை வளர்ப்பதும், இந்திய கலாசாரத்தின் பல்வேறு துறைகளில் அதை பயன்படுத்துவதும், மத்திய அரசாங்கத்தின் வேலையாகும்.

14. அரசியல் அமைப்பின் இதைப்பற்றின முக்கியமான அம்சங்களைக் கீழே காணலாம்.

அரசியலமைப்பு ஒப்பந்தத்தின் முக்கிய குணாதிசயங்கள்

முதலாவதாக, ஹிந்தி பாஷையானது, யூனியன் ஆட்சிக் காரியங்களுக்கும், மத்ய—ராஜ்ய சர்க்கார்களுக்கிடையேயும், ஒரு ராஜ்ய சர்க்கார்களுக்கும் மற்றொன்றிற்கு இடையேயும் கடிதப் போக்குவரவிற்கு மட்டும் ஆங்கிலத்திற்கு பதிலாக இருக்கும்.

ராஜ்ய சட்டசபை, சட்டமூலமாக, அந்த ராஜ்யத்தில் வழங்கும் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உபயோகத்திலிருக்கும் மொழிகளையோ அல்லது ஹிந்தியையோ, அந்த ராஜ்யத்தின் அரசாங்க பாஷையாகவோ அல்லது பாஷைகளாகவோ உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

இரண்டாவதாக, அரசியலமைப்பின் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதாவது, படிப்படியாக ஹிந்தியை அரசாங்கமொழியாகப் பயன்படுத்துதல்; முதல் கட்டத்தில் ராஷ்ட்ரபதியின் உத்தரவின்மூலம் குறிப்பிட்ட சில அலுவல்களுக்கு ஆங்கிலத்துடன் ஹிந்தியையும் உபயோகப் படுத்துதல்; அடுத்த கட்டத்தில் ஆங்கிலத்தின் உபயோகத்தை தடைசெய்து, அதற்கு பதிலாக ஹிந்தியை படிப்படியாக அரசாங்க அலுவல்களுக்கு உபயோகப்படுத்துதல்; இந்த அமைப்பு ஆரம்பித்து 15 ஆண்டுகளுக்குள்ளாக; அதாவது 1965-ம் ஆண்டுக்குமுன், ஒரு ஆட்சிமொழிக் கமிஷனும் பாராளு மன்றக் கமிட்டியும் இப்பிரச்னையைத் தீர ஆராய்ந்த பிறகுதான், இம்மாதிரித் தடைகள் விதிக்கமுடியும். இம்மொழி மாற்றத்தின் கால அளவை தீர்மானிப்பதற்கு, இந்தியாவின், தொழில்துறை, பண்பாடு, விஞ்ஞானத் துறைகளின் முன்னேற்றத்தையும், பொதுப்பணிகளில் ஹிந்தியல்லாதார்களின் நியாயமான கோரிக்கைகளையும், நலன்களையும் கவனிக்கப்படவேண்டும்.

மூன்றாவதாக 1965-ம் ஆண்டில் ஹிந்தி அரசாங்க பாஷையாக வருவதாக இருந்தாலும், அக்காலத்திற்கு பிறகும் ஆங்கிலத்தை நீடிப்பது ஏற்கெனவே யோசிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சட்டமியற்றி குறிப்பிடும் அலுவல்களுக்கு அவசியமெனக் கருதப்படும் காலம்வரையிலும் ஆங்கிலத்தை உபயோகப்படுத்தலாம் என்று பாராளு மன்றத்திற்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

நான்காவதாக, சட்டங்களின் வாசகங்களிலும் உயர் நீதி மன்றங்களிலும் ஆங்கிலத்திலிருந்து, ஹிந்தி அல்லது பிராந்திய மொழிகளில் மாற்றுவதன் கஷ்டங்களை அறிந்துகொண்டதால், இவ்விஷயங்களில் இம்மொழி மாற்றத்திற்கு ஒரு விதமான கால வரம்பும் நிர்ணயிக்கப்படவில்லை.

மேலும், ஒரு பாதுகாப்பு; ராஷ்ட்ரபதியின் முன் உத்தரவின்றி 1965-ம் ஆண்டுவரை இத்தீர்மானத்தைத் திருத்துவதற்காக எந்த ஒரு மசோதாவும் பாராளு மன்றத்தில் கொண்டு வரமுடியாது. ராஷ்ட்ரபதி கமிஷனின் சிபார்சுகளையும், அரசாங்க பாஷைபற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அறிக்கையையும் பரிசீலித்தப் பிறகுதான் திருத்தத்திற்கு உத்தரவிடலாம்.

ஐந்தாவதாக ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குறைகளைப்போக்க, யூனியன் அல்லது ராஜ்ய அதிகாரிக்கு யூனியன் மொழியிலோ அல்லது அந்த ராஜ்யத்தில் வழங்கும் மொழியிலோ மகஜர் அனுப்பலாம். ஒவ்வொரு ராஜ்ய அரசாங்கமும் அதற்குட்பட்ட அதிகாரிகளும் மொழிவாரிச் சிறுபான்மையரின் குழந்தைகளுக்கு ஆரம்ப நிலையில் அவர்கள் தாய்மொழியில் கற்பிக்கப் போதிய வசதிகள் செய்து கொடுக்கவேண்டும்.

ஆருவதாக, ஹிந்தி பாஷை பரவுவதற்கு, ஆவனசெய்தலும், இந்தியாவின் பல கூறுடைய பண்பாட்டின் சகல அம்சங்களையும் வெளியிடுவதற்கேற்ற கருவியாகப் பயன்படுமாறு ஹிந்தியை அபிவிருத்தி செய்தலும், அரசாங்கத்தின் கடமையாகும்.

அரசியலமைப்பு ஒப்பந்தம் ஒன்றிணைந்த திட்டம்

15. மேலே சொன்ன அரசியலமைப்பின் ஒப்பந்தம் ஒரு விரிவானதும், பல்வேறு வகைகளைச் சேர்த்ததுமான திட்டம். ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகு இத்திட்டமானது, அரசியலமைப்புச் சட்டசபையில் வகுக்கப்பட்டது. தீவிர ஆராய்ச்சியின் பிறகுதான் இது அரசியல் நிர்ணய சபையில் ஒரு முகமாக நிறைவேற்றப்பட்டது. ஆதலால் இது, நாட்டின் பல்வேறு மொழிப்பிரிவினைகளின் பெருவாரியான பொதுச் சம்மதத்தைக் கொண்டதாகும். அரசாங்க அலுவல்களுக்கு ஹிந்தியையும் மற்ற தேசிய பாஷைகளையும் உபயோகப்படுத்த இடமளிக்கிறது. யூனியன் அரசாங்க பாஷை ஆங்கிலத்திலிருந்து படிப்படியாக ஹிந்தியாக மாற்றுவதற்கு, ஏனையோருடைய நன்மையைக் கருதி, மிக்க சுதந்திரம் தந்திருக்கப்படுகின்றது. இவைகளினுல் மத்ய சர்க்காரும் ராஜ்ய அரசாங்கங்களும் ஏற்கெனவே சில நடவடிக்கைகள் எடுத்திருக்கிருர்கள்.

ஹிந்தி, மற்ற இந்திய பாஷைகளினுல் ஆங்கிலத்தை மாற்றவேண்டிய அவசியம்

16. அரசியலமைப்பின் பிரகாரம் அரசாங்க பாஷையான ஆங்கிலத்தைப்படிப்படியாக நாளடைவில் நீக்க வேண்டுமென்று கூறுகிறது. ஒரு நாட்டு மக்களின் சிறுபான்மையினரால் அறியக்கூடிய ஒரு மொழியில் ஜனநாயக அரசு காலவரையின்றி ஆட்சி செலுத்தமுடியாது. பொதுநல அரசாங்கம், சமதர்ம சமுதா

யம் என்ற குறிக்கோள்களையுடைய நமது நாட்டில், யூனியன் ராஜ்ய அரசாங்கங்கள் ஒவ்வொரு பிரஜையினுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் தொடர்பு கொண்டிருக்கின்றன. ஆகவே, மக்களுக்குப் பெருவாரியாக அறியக் கூடிய மொழியை அரசாங்க பாஷையாக்குவது, அரசாங்க அலுவல்களைச் சரிவரச் செய்வதற்கு மிக்க அவசியமாகும். பெருவாரியான மக்களுள் அறியக் கூடிய மொழிமூலம் அரசாங்கக் காரியங்கள் செய்யப் படவேண்டும். ராஜ்யங்களைப் பொறுத்தவரை, பிராந்திய மொழிகள் ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தங்களுக்கு உரிமையான இடத்தைப் பெறவேண்டும். ஏதாவது ஒரு இந்தியமொழி யூனியன் அரசாங்க பாஷையாகவும், ராஜ்யங்களுக்குள் கடிதப் போக்கு வரவிற்கும் உபயோகிக்கவேண்டும். ஹிந்தி, நாட்டு மக்களின் பெரும்பான்மையினருக்குத் தாய்மொழி மட்டுமின்றி, பிராந்திய மொழிகள் வேறுபடும் நாட்டின் பல்வேறு பாகங்களிலும், அது அறியப்படுகிறது. யாத்ரீக இடங்களிலும், சந்தைகளிலும், சாதாரண ஹிந்தியைப் பொதுவாகப் பேசுகிறார்கள். ஹிந்தி தாய் மொழியாக வழங்கும் பிரதேசத்திலிருந்து வெளியில் பரவுவது, சரித்திர காலந்தொட்டு நடந்து வருவதாகும்; சமீப காலத்தில் இந்திய தேசிய இயக்கம் இதைத் துரிதப்படுத்தினது. போக்குவரத்து, வாணிபம், வானொலி, திரைப்படம் போன்ற பொதுஜனத் தொடர்புள்ளவைகளின் அபிவிருத்தியாலும், ஹிந்தியுள்ள, ஹிந்தியல்லாத பிரதேசங்களில், பள்ளிக்கூட, கலாசாலைகளின் போதனாமுறையில் ஹிந்தியைச் சேர்த்திருப்பதாலும், இம்மொழி மேலும் பரப்பப்பட்டு வருகிறது. பல இந்திய மொழிகளுக்கிடையே பொதுவான கலாசார சம்பிரதாயம் காரணமாக ஒருவித நெருங்கிய தொடர்பும், பிணைப்பும் நிலவுகிறது. ஹிந்தியின் சொல்வளம், நடை, அகர வரிசையமைப்பு, எழுத்து உரு, இவைகளைக் கவனித்தால் ஆங்கிலத்தைவிட, பிற இந்திய மொழிகளுக்கு நெருக்கமாயிருப்பதைக் காணலாம். வேறு எந்த அந்நிய மொழிக்கும் இந்த அனுகூலம் கிடையாது. ஆகவே, ஹிந்தியை, பிற இந்திய மொழியினர் கற்பது சுலபமாகிறது.

காலவரையறையின்றி ஏன் ஆங்கிலம் தொடர்ந்திருக்கக் கூடாதென்பதற்குக் காரணம் நாட்டு மரியாதையையும் பெருமையையும் காப்பாற்றுதல்

17. சுதந்திரமடைந்த பிறகு, நாடு முழுவதிலும், இடைக்காலக் கல்விக் கட்டத்தில் ஆங்கிலத்திற்குப் பதிலாக பல இந்திய மொழிகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில பல்கலைக் கழகங்களில் ஹிந்தி, மற்ற இந்திய மொழிகள் மூலம் கல்வி கற்பிக்கப்படுகின்றது. தாய் மொழி அல்லது பிராந்திய மொழியைக் கல்வி புகட்ட எடுத்துக் கொள்வதில் உண்டான அனுகூலங்கள் தெள்ளத்தெளிவு. ஆகவே, தற்போது வளரும் தலைமுறையினருக்கு, முந்தையத் தலைமுறையினரைவிட ஆங்கில அறிவு குறைவு என்பது விளங்கும்.

ஏற்கெனவே, 7 ராஜ்யங்கள் பிராந்திய மொழியை அரசாங்க பாஷையாக்கினதை இக்கமிட்டி கவனிக்கிறது. பொது மக்களின் கருத்துக்கேற்ப மற்ற அரசாங்கங்களும் இவைகளைப் பின்பற்ற நேரலாம். இப் பத்தாண்டுகளில் விளைந்த ஆங்கில மொழி வளர்ச்சிக் குறைவினால், பொதுப்பணிகளுக்கு, ஆங்கிலமொழியில் திறம்படக் கடமைகள் செய்ய ஆட்களைத்

தேர்ந்தெடுப்பதில் சிரமம் இருக்கிறது. சிறிது காலத்திற்குப் பிறகு கல்வித்துறையிலும், ராஜ்ய அரசாங்கத்துறை, ஆங்கில மொழியிலிருந்து பிராந்திய மொழிகளுக்கு மொழிமாற்றம் அதிகமானல் இக்கஷ்டம் மேலும் தீவிரமாகும்.

ராஜ்ய அரசாங்க அலுவல்களிலும், பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளும் ஆங்கிலத்தின் இடத்தை பிராந்திய மொழிகள் படிப்படியாக வகிக்கத் தொடங்குகையில், இந்தியாவின் பல்வேறு மொழியினருக்கிடையே தொடர்புக்குகந்த பொது மொழியாக விளங்கிய ஆங்கிலம் இப்பொறுப்பை இனித்திறம்பட நடத்த இயலாது.

ஆகவே, ஆங்கிலத்திற்குப் பதிலாக, ஹிந்தியும் பிராந்திய மொழிகளும் அரசாங்க பாஷைகளாவது அனுபவத்தை யொட்டிய அவசியமாகும். ஆனல், உணர்ச்சி என்பது தனி மனிதனுடைய வாழ்க்கையிலும் நாட்டின் வாழ்க்கையிலும் முக்கியமானது. ஏனென்ருல், அது முயற்சிக்குச் சாதகமாகிறது. மாகாணங்களுக்கிடையேயும், இந்தியா முழுவதற்கும் பொதுவான ஒரு மொழியாக சமீபகாலத்தில் ஆங்கிலம் இருப்பதும் அதனுல் சில சௌகர்யங்கள் இருப்பதும் உண்மை. ஹிந்தியைப் பெரும்பான்மை அரசாங்க பாஷையாகவும், யூனியன் ராஜ்ய அலுவல்களுக்கு பாஷையாகவும் ஆங்கிலத்திற்குப் பதிலாகப் புகுத்துவது தேசிய உணர்ச்சிக்குப் பொருத்தமாகும். ஒரு பொதுவான இந்திய மொழிவழியானது, பல்வேறு மொழியினரை ஒற்றுமைப்படுத்த இயலும். ஏனென்ருல், நமது பழக்கவழக்கங்கள், கலாசாரம், நாகரிகம் எல்லாம் ஒன்றே. தனிப்பட்ட சரித்திர கலாசாரமுடைய இந்தியா அந்நிய மொழியின்மூலம் தன் கடமையைச் செய்யமுடியாது.

இக்காரணங்களினல், யூனியன் அரசாங்க பாஷையாக ஹிந்தியை கொண்டுவருவதை நிலைமைக்குத்தகுந்தபடியல்லாமல், துரிதப்படுத்துவது சரியல்லவென்றும், ஹிந்தி மற்றும் பிராந்தியமொழிகள் அவரவர்கள் பிரதேசங்களில் இயற்கையாக வளர்ந்து ஆங்கிலத்தின் கடமையை ஏற்றுக்கொண்டு ஒரு இடைவெளி இல்லாமல் செய்யவும் இதற்கான போதுமானதும், பலனுள்ளதுமான முறைகளைக் கையாளாமல் இருப்பது விரும்பத்தகாதது என்றும் இக்கமிட்டித் தீர்மானிக்கிறது.

18. சில சமயங்களில் ஹிந்தியும் மற்ற இந்திய மொழிகளும் ஆங்கிலத்திற்குப் பதிலாக அரசாங்க பாஷைகளாவதற்கு போதிய வளர்ச்சி பெறவில்லை என்று குறிப்பிடப்படுகிறது. ஆனல் இப் பாஷைகள் எல்லா அரசாங்க அலுவல்களுக்கும், கிராம தபசிலில், மாவட்ட இடங்களில், உபயோகப் படுத்தப்படுகின்றன. தற்சமயம்வரை ஒரு சில சமஸ்தானங்களில் இந்திய மொழிகள் அரசாங்க மொழிகளாக இருந்தன. ஆகவே, இம்மொழிகள் உயர்தர அரசியல் அலுவல்களுக்கு இயற்கையாகவே பயன்படாது என்று சொல்லமுடியாது.

உயர்தர அரசாங்க அலுவல்களுக்குத் தற்போது காணப்படும் சொல்வளக் குறைவுக்குக் காரணங்கள், ஒரு நூற்றுண்டிற்கு மேலாக இம்மொழிகளை உபயோகிக்காததும், மத்திய, ராஜ்ய அரசாங்கங்களில் ஆங்கிலத்தை அரசாங்க பாஷையாகச் செய்ததும்தான். உபயோகத்தினுல் ஒரு மொழி வளர்கிறது. இதன் கருத்து வளமும், சொல் வளமும், பெருக இது மற்ற புதுவிதமான கருத்துக்கள், எண்ணங்கள், பலவிதச் செயல்களைத்தொடர்ந்து, சந்தித்து அவைகளைத் தன்னுள் அடக்கியும், முடிந்தவரை மாற்றிக்கொண்டும் இருக்கவேண்டும். ஆகவே, ஹிந்தி, மற்ற மொழிகளின் இக்குறைகளைப்போக்க, இம்மொழிகளை, யூனியன், ராஜ்ய அலுவல்களுக்கும் மற்றும் தேசியத் திட்டங்களுக்கும் உபயோகப்படுத்தவேண்டும்.

இந்தியாவின் ஒன்றிணைந்த கலாசாரத்தின் இடைநிலை மொழியாக ஹிந்தியை வளர்த்தல்

19. 351-வது பிரிவின்படி இந்தியாவின் ஒன்றிணைந்த கலாசாரத்தின் எல்லாப் பகுதிகளும் உபயோகப்படுத்தும் மொழியாக ஹிந்தியை வளர்க்கவேண்டும் என்ற இக்கட்டளைக்கு இக்கமிட்டி மிகுந்த முக்யத்துவம் கொடுக்கிறது. மேலும், ஹிந்துஸ்தானி மொழியின் வடிவங்களையும், நடையையும், சொல் ஆட்சியையும் ஜீரணித்து ஹிந்திமொழியை வளம்படுத்த வேண்டுமென்றும், இதே முறையில் 8-வது தபசிலில் குறிக்கப்பட்ட மொழிகளின் வடிவம், நடை, சொல்லாட்சி இவைகளையும், எங்கு அவசியமோ அல்லது விரும்பத்தக்கதோ, அங்கு சமஸ்கிருத மொழியிலிருந்தும் ஜீரணித்து ஹிந்திமொழியை வளம்படுத்தவேண்டும் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நெடுநாள் வளர்ச்சியின் காரணமாக, சமஸ்கிருதம், மற்ற இந்தியமொழிகள், சொல்வளத்திலிருந்தும், மற்றும் பாரசீக, அராபிய, ஆங்கில மொழிகளிலிருந்தும் அதிகமான வார்த்தைகளை ஹிந்தி ஏற்றுக்கொண்டிருக்கிறது. மற்ற மொழிகளின் சங்கத்தால் அதனுடைய இலக்கணமும் மாறுபட்டிருக்கிறது. ஆங்கிலமும், மற்றும் உலகத்திலுள்ள பெரிய மொழிகளும், இவ்வாருக மற்ற மொழிகளிலுள்ள சொற்கள், கருத்துக்கள் ஆகியவற்றை உட்கொண்டிருக்கின்றன. இந்தியா பல்வேறு மொழிகள் வழங்கும் நாடு. ஆகவே, பல மாகாணங்கள் தொடர்புக்கும், பல்வேறு மொழியினரை ஒன்று சேர்ப்பதற்கும் ஒரு திறமை வாய்ந்த மொழியாக ஹிந்தியாகவேண்டுமானுல், அது தன்னந்தனியாக நின்றுகொண்டிருக்க முடியாது என்பது தெளிவு. சமீபகாலத்தில், கடினமான சொற்களின் உபயோகமானது, ஹிந்தி பரவுவதையும், பல காரியங்களுக்கு அதிகமாக பயன்படுவதையும் தடை செய்கிறது. கடினமான கருத்துக்களைத் தீண்டும்பொழுது, மொழியும் கடினமாக மாறுகிறது. ஆனுல், எல்லா மொழிகளிலும் ஒரு சில நல்ல எழுத்தாளர்கள், சாதாரண நடையில் எழுதுகிருர்கள். ஏனென்ருல், ஒரு நல்ல வார்த்தை அல்லது சொற்றொடர் என்பது, பெரும்பான்மையான மக்களுள் எளிதில் அறியப்படுவதாகும். யூனியன் அரசாங்க பாஷையாகவும், ராஜ்யங்களுக்குள் கடிதப்போக்குவரத்திற்கும் உபயோகப்படும் ஹிந்தியின் நல்ல அம்சங்களானது, அதன் எளிதில் புரியக்கூடிய தன்மையும், நாட்டின் பெரு

மளவில் அதன் உபயோகமும்தான். ஒரு இந்திய பாஷைதான் அரசாங்க பாஷையாதல் வேண்டுமென்ற வாதங்கள் அவ்வளவும் அதற்குப் பொருந்தும். ஏனென்ருல், அது பாமர மொழி. ஆகவே, ஹிந்தியினிடம் பொதுமக்கள் தொடர்பு குறையக்கூடாது என்பது முக்கியமானது. அம்மொழியில் மேலும் சாதாரண, கடினமற்ற வார்த்தைகளின் உபயோகத்தை உற்சாகப்படுத்த வேண்டும்.

ஹிந்திக்கும் மற்ற தேசிய மொழிகளுக்கும் சண்டை இல்லை

20. ஹிந்திக்கும் மற்றுமுள்ள இந்திய மொழிகளுக்குமிடையே சண்டை என்ற கேள்வி எழாது. இந்திய கலாசாரம் பலதரப்பட்டது. ஆகவே, பல்வேறு பாகங்களிலுள்ள மொழிகள் மூலம் இதன் பன்மைத்தன்மையும், இந்தியா முழுமைக்கும், ராஜ்யங்களுக்குள்ள விவகாரங்களுக்கும் இந்திய அடிப்படை ஒற்றுமையைப் பிரதிபலிக்க ஒரு மொழி அவசியம். ஒரு நூற்ருண்டிற்கு மேலாக, போதனுமொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருந்து வந்த ஆங்கிலத்தைத் தள்ளிவைத்தால், ஹிந்தியும் மற்ற இந்திய மொழிகளும், எல்லாத்துறைகளிலும் முழு சுதந்திரம் அதனுல் வளர்ச்சியும் அடையும். மேலும், சேர்க்கையினுலும், கிரஹிப்பதாலும் ஒரு மொழியின் வளர்ச்சியானது மற்ற மொழிகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

விஷயங்களில் ஹிந்திக்குத் தனி இடம்

21. ஆங்கிலத்தைப் படிப்படியாக அகற்றி அதற்குப் பதிலாக ஹிந்தியையும் பிராந்திய மொழிகளேயும் அரசாங்க பாஷையாக்குவதால் ஆங்கிலத்துடன் நமது பிணைப்புகள் அனுப்புவதாகாது. கல்வி, விஞ்ஞானத் துறைகளில் அதற்குரிய தனியிடமும், பன்னுட்டுச் சம்பந்தத்திற்கு அது ஒரு கருவியாக இருப்பதும், தற்போதைய நிலைமை நீடிப்பதைப் பொறுத்ததல்ல. நாமிருக்கும் இக்காலத்தில் வெகுவேகமாக விஞ்ஞானம் முன்செல்கிறது. இயந்திரப் புரட்சி நடைபெறுகின்றது. வருங்காலத்தில், விஞ்ஞான, இயந்திரங்களின் முன்னேற்றம் மிக விரைவாக இருக்கலாம். ஆகவே, நமது நாட்டு வாழ்க்கையில் இவைகள் முக்கியமாகப் பங்கெடுத்துக் கொள்ளும். இந்தத் தலைப்புகளில் வெளிவரும் பத்திரிகைகள் மிக அதிகம். வெளிவரும் முக்கியமான புத்தகங்களையும், கட்டுரைகளையும் மொழிபெயர்த்தல் முடியாததாகும். இயல் நூல், விஞ்ஞானம் இவைகளில் வெகுவாக முன்னேறியிருக்கும் மாணவர்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அந்நிய மொழிகள் தெரிந்திருப்பது அவசியம். மேற்கு நாடுகளின் கருத்துக்களும், கலாசாரமும் கலந்த ஒரு நல்ல இலக்கியம் ஆங்கிலத்திலிருப்பது மட்டுமல்ல, அம்மொழி, விஞ்ஞான, தொழில் முறைகளை அறிவதற்கும், தற்சமயம் பயன்படுகிறது. உலகத்தில் பெரும்பான்மையரின் மொழியும் இன்றைய உலகில் அதுவே. நமக்கு, அந்நிய மொழிகளுக்குள் ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுப்பதின் காரணம், தெள்ளத்தெளிவு. ஏனென்ருல், அது முக்யத்வம் வாய்ந்தது; உபயோகமுள்ளது; அதைப் பற்றின அறிவும் நம்மிடமிருக்கிறது. இப்படியாக ஆங்கில மொழி, நெடுநாளைக்கு கல்வி நிலையங்களிலும், கலாசாலைகளிலும் போதனுமொழியாகவும், யூனியன், ராஜ்ய அரசாங்க

பாஷையாக இருக்கமுடியாவிட்டாலும், போதனமுறைகளி லொன்றுகவும் இருந்து முக்கியமாக விஞ்ஞானத் துறைகளில் ஆழ்ந்து ஆராய்பவருக்கும்—நமக்கு மிக்க உதவி செய்து கொண்டிருக்கும்.

விஞ்ஞான, தொழிலியல், கலைச்சொற்கள் ஏற்கெனவே பல லட்சக் கணக்கில் இருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் ஆயிரமாயிரம் புதுக் கலைச்சொற்கள் ஆக்கப்படுகின்றன. நமது விஞ்ஞானிகளும், தொழில் நிபுணர்களும் ஆங்கிலக் கலைச்சொற்களை நன்கறிந்தவர்கள். தற்போதைய விஞ்ஞான தொழிலியல் கலைச்சொற்களையும், இனிமேலாக்கப்படும் கலைச் சொற்களையும் மொழிபெயர்ப்பது மிகப்பெரிய வேலையாகும். இம்மொழிபெயர்ப்பு, செயற்கையாகவோ, சரியில்லாமலோ, அல்லது விஞ்ஞானிகளுக்கும், தொழில் வல்லுனர்களுக்கும் புரியாததாகவோ இருக்கக்கூடாது. பல்வேறு இந்திய மொழிகளில் பல்வேறு மொழிபெயர்ப்புக்கள் குழப்பத்தை விளைவிக்கும். நாட்டிற்குள் விஞ்ஞான, இயல் அறிவின் பரிமாற்றத்தைப் பாதிக்கும். கலாசாலைக் கல்விபற்றி ஆராய்ந்த இராதாகிருஷ்ணன் கழகம், இக்கேள்வியைப் பற்றிப் பின்வருமாறு சொல்லுகிறது:—

''கடன் வார்த்தைகளைப்பற்றிய பொது விவாதமானது, நம்மை, பிரத்தியேகக் கலைச்சொற்கள் பிரச்னையில்—முக்கிய மாக பூதசாத்திரக் கலைச்சொற்கள் பிரச்னையில்—கொண்டு விடுகிறது. தற்கால பிராந்திய மொழிகளுக்கெல்லாம் இப் பிரச்னை பொது. எல்லா மொழிகளுக்கு மேற்றவாறு இப்பிரச் னைக்கு முடிவு கண்டால், முயற்சி லாபமடைகிறது மட்டுமல் லாமல், எல்லா பிராந்திய மொழிகளை ஒன்றேடொன்று சேர்ப் பதில் முக்கிய பங்கெடுப்பதுபோலாகும்.''

ஹிந்தி, மற்ற இந்திய மொழிகளில் உபயோகிக்கப்படும் விஞ்ஞான, தொழிலியல் கலைச்சொற்கள், ஆங்கிலத்திலும், பன்னடுகளில் வழங்கிவரும் கலைச்சொற்களையும் ஒட்டியதாக இருக்கவேண்டுமென்று இக்கமிட்டி நினைக்கிறது. ஏனென்றல், நாம் உபயோகிக்கும் கலைச்சொற்கள், இந்தியாவில் மேன் மேலும் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சிகள் ஓங்கு வதற்கும், பன்னடுகளில் விஞ்ஞான, தொழிலியல் விஷயங் களில் சம்பந்தமேற்படுத்திக் கொள்வதற்கும் உதவியாக இருக்கவேண்டும். ஆரம்பமுதல் விஞ்ஞான, தொழிலியல் கலைச்சொற்களின் வளர்ச்சி சரியான முறையில் இருக்க வேண்டும். ஆகவே, இந்த விஷயத்தில் பலதரப்பட்ட தனியார் முயற்சியை ஒன்றுபடுத்தவும் மேற்பார்வை செய்யவும், ஏற்கெனவே நடைபெற்ற வேலையை சீர்தூக்கிப் பார்ப்பதற் கும், எல்லா இந்திய மொழிகளிலும் விஞ்ஞான, தொழில் நுட்பக் கலைச்சொற்கள் கொண்ட அதிகாரபூர்வமான நிகண்டுகளை வெளியிடவும் ஒரு நிரந்தரக் கமிட்டி ஸ்தாபிப்பது, விரும்பத்தக்கது.

மொழி மாற்றத்தின் முறை

22. அரசாங்க அலுவல்களுக்கு ஆங்கிலத்திற்குப் பதில் ஹிந்தி மற்றும் பிராந்திய மொழிகளைக்கொண்டு வருவதின் அவசியத்தையும், இன்றியமையாமையையும் கவனித்தாலும், இம்மொழிமாற்றம் எவ்விதம் நடக்கவேண்டுமென்பதை மிகக் கவனமாக பரிசீலனை செய்யவேண்டும். மத்ய சர்க்காரின் அலுவல்கள் மிக்க விரிவுடைமையாகும், பல்வேறு வகையான வேலைகளைப் பல்வேறு வகையான துறைகளில் பல்வேறு மொழியினர் செய்கிறார்கள். பொதுத்துறையிலும், ராஜ்யங்களிடமுள்ள உறவிலும், நாட்டின் பல்வேறு மொழிப்பிரிவினருடன், தனித்தனியாகவும், பொதுவாகவும் தொடர்பு கொள்ள நேருகிறது. ஆகவே, ஒரு ராஜ்யம் தனது அரசாங்க பாஷையைத் தீர்மானிக்கும் பிரச்னையைவிட, யூனியன் அரசாங்க பாஷைப் பிரச்னை வித்தியாசமானது. யூனியன் அரசாங்க பாஷையாக, ஆங்கிலத்திற்குப் பதில் ஹிந்தியைக் கொண்டு வருதல், குறைந்தபட்ச அசௌகர்யமுடனும், அலுவல்கள் நின்றுவிடாவண்ணமும் சாதிக்கப்படவேண்டும். இம்மாறுதல் வேகத்தை நிர்ணயிக்கையில், ஹிந்திமொழி பேசப்படாத வட்டாரங்களில் அம்மொழியின் வளர்ச்சியும், தற்போதுள்ள அரசாங்க ஊழியர்களின் மொழித் தேர்ச்சியும் கவனிக்கப்படவேண்டும். இம்மொழிமாற்றம், பொதுப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விஷயத்தில் எந்த ஒரு மொழியினருக்கும் அதிக பிரதிகூலம் பயக்கும் நிலை ஏற்படலாகாதவாறு இருத்தல்வேண்டும்.

1965-ம் ஆண்டிற்குள் ஹிந்தி மொழிமாற்றமே சாத்தியமில்லை

23. முதல் கட்டத்தில் ஆங்கிலத்துடன் ஹிந்தியும் உபயோகிக்கப்படவேண்டும். படிப்படியாகப் பல்வேறு அரசாங்க அலுவல்களில் ஆங்கில உபயோகத்தைக் கைவிடும் அடுத்த கட்டத்திற்கு ஏதுவாக முதல் கட்டத்திலேயே முன்னேற்பாடுகள் செய்யப்படவேண்டும். இறுதியில் எல்லா அலுவல்களுக்கும் ஹிந்தியை உபயோகிக்கும் மாறுதல், இந்த நடைமுறை பூர்த்தியாவதைக் குறிக்குமேயன்றி புதியதொரு கட்டமாக விளங்காது. 1965-ம் ஆண்டுவரை ஆங்கிலம் முக்கிய அரசாங்க பாஷையாகவும், ஹிந்தி துணை அரசாங்க பாஷையாகவும், அவ்வாண்டிலிருந்து, ஹிந்தி அரசாங்க பாஷையான பிறகு, பாராளு மன்றம் சட்டமியற்றிக் குறிப்பிடும் அலுவல்களுக்கும் அவசியமெனக் கருதப்படும் காலம் வரையிலும் ஆங்கிலம் உபயோகத்திலிருந்து வரவேண்டுமென்று இக்கமிட்டி நினைக்கிறது.

24. இம்மொழிமாற்றமானது, வரிசையாக, ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறவேண்டுமெனினும், இதற்கு அனுகூலமாக, தொடக்கக் காரியங்களுக்கான முயற்சி குறையக் கூடாது. இதனால் கட்டாயம் எழும் நடைமுறைக் கஷ்டங்களை முன்னாலேயே நன்றாக யோசித்து வரையறுக்கப்பட்ட நடவடிக்கை மூலம் வெல்லலாம். கமிஷனின் சிபார்சுகளைப் பற்றிய இக்கமிட்டியின் தீர்மானங்கள், இம்மாதிரியான ஒரு நடவடிக்கைக்கு அடிப்படையாக இருக்கும். என்று எண்ணுகிறது.

அத்தியாயம் 3

25. மொழிக் கமிஷனின் நிபந்தனைக் குறிப்பின் ஒவ்வொன்றைப்பற்றின சிபார்சுகளை ஒன்றன்பின் ஒன்ருகப் பிரிவு 1-ல் தரப்பட்டிருக்கிறது. பிரிவு 2-ன்கீழ், இக் கமிஷனின் சிபார்சுகளை அறிக்கையில் காணும் வரிசையின் படி கொடுக்கப்பட்டு, அவைகளைப்பற்றி இக்கமிட்டியின் தீர்மானங்களைக் காணலாம். இந்த அத்தியாயத்தின் விவரம்

பிரிவு 1

உட்பிரிவு 1

யூனியன் அரசாங்க பாஷையாக ஹிந்தியைப் படிப்படியாக உபயோகித்தல்

26. யூனியன் ஆட்சி விவகாரங்களில் மொழிமாற்றத் திற்கான அடிப்படை வேலைகள் செய்யக் கீழ்கண்ட முதல் தேவைகள்பற்றிக் கமிஷன் எண்ணுகிறது. மொழிமாற்றத் திற்கான அடிப் படை வேலைகளை தயாரித்தல்

(1) ஆட்சித் துறையில் பயன்படுத்தப்படுகின்ற பிரத் யேகமான கலைச்சொற்களைத் தயாரித்தலும், நிலைப்படுத்துதலும்.

(2) ஆட்சித் துறைக்குத் தேவையான விதிகள், ரெகு லேஷன்கள், கையேடுகள், மற்றும் நடைமுறை யிலுள்ள புத்தகங்களை ஹிந்தியில் மொழிபெயர்த் தல்.

(3) மொழிமாற்றத்திற்காக இயந்திர சாதனங்கள் தயார் செய்து அளித்தல்.

(4) அந்தந்த துறைக்கேற்றபடி ஹிந்தியில் ஊழியர் களுக்குப் பயிற்சி அளித்தல்.

27. ஆட்சித்துறை, விஞ்ஞானத் துறைகளிலுள்ள கலைச் சொற்களை, ஹிந்தியிலும் மற்ற தேசியமொழிகளிலும் மொழி பெயர்க்கும் வேலையை நன்ருக ஆராய்ந்து கமிஷன் இம்மொழி பெயர்க்கும் வேலைக்குரிய சில அடிப்படைக் கருத்துக்களை சுட்டிக்காட்டினது. கலைச்சொற்களை உண்டாக்கும்பொழுது தெளிவு, வரையறுத்த தன்மை, எளிமை ஆகியவற்றை முக்கியமாகக் கருதவேண்டும். மொழித் தூய்மையைப்பற்றி அதிகமாகக் கவலைப்படவேண்டாம் என்று கூறுகிறது. இக்கமிட்டி இதை ஆமோதிக்கிறது. பழங்காலத்தில் நடை முறையில் இருந்துவந்த சொற்களிலிருந்தும், நாட்டின் பல்வேறு பாகங்களில் வழங்கும் சொற்களிலிருந்தும், பொருத்தமான இடங்களில் பன்னுட்டுக் கலைச்சொற்களி லிருந்தும், இந்திய மொழிகளின் அமைப்புக்கேற்ப கலைச் சொற்களை உருவாக்கவேண்டும். யூனியன் அரசாட்சியின் சில பகுதிகளில் தொழில் நுட்ப ஆங்கிலச் சொற்களைத் தேவையான காலம் தொடர்ந்து உபயோகிக்கலாம்.

இச் சிபார்சுகளைப் பொதுவாக ஏற்பது, ஹிந்தி, பிராந்திய மொழிகளை அரசாங்க பாஷைகளாக்குவதற்குப் பயன்படும். தேவையான காலம் வரை, ஆங்கிலக் கலைச்சொற்களையோ, பன்னாட்டுச் சொற்களையோ குறிப்பிட்ட பகுதிகளில் உபயோகப்படுத்தலாம் என்ற கழகத்தின் சிபார்சு, 351-வது பிரிவின் கீழ் காணப்படுகின்ற பொதுக் குறிக்கோள்களுக்கு மாறுபடுவதாக இல்லை. இதனால் ஹிந்தியும் மற்ற பிராந்திய மொழிகளும் மேலும் மேலும் வளரும் விஞ்ஞான, தொழிலியல்களில் கலைச்சொற்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்ய உதவும்.

28. யூனியன் மொழிக்கும் பிராந்திய மொழிக்கும் இக் கலைச்சொற்களை ஆக்கும்பொழுது இவற்றினிடையே ஒரு அதிகபட்ச ஒற்றுமைப்பாட்டைக் காணவேண்டும் என்றும் இவ்வேலையை ஒருமுகப்படுத்தத் தேவையான வழிகளை வகுத்துக்கொள்ளவேண்டும் என்று கமிஷன் சிபார்சு செய்கிறது. பலதுறைகளில், ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியும் மற்ற பிராந்திய மொழிகளையும் கொண்டு வருவதற்கும், அதே சமயத்தில் பிராந்திய மொழிகளை ஒற்றுமைப்படுத்துவதற்கும், இதன்மூலம் தேச ஒற்றுமைக்கும், இம்மாதிரி பல இந்திய மொழிகளின் உருவம், சொல்லமைப்புக்கு ஏற்றபடி, பொதுக் கலைச்சொற்களைக் கொண்டு வருவது நல்லது என்று இக் கமிட்டி அபிப்பிராயப்படுகிறது.

29. இக் கலைச்சொற்கள் தயாரிக்கும் வேலையை ஆராயுமிடத்து, யூனியன் அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் இன்னும் விரைவாகவும் ஒற்றுமையுடனும் செய்யலாம் என்று கமிஷன் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, மத்திய அரசாங்கமும், ஏனைய அதிகாரிகளும், இக்கமிஷனின் சிபார்சுகளைப் பரிசிலித்துத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

விதிகள், ரெகுலேஷன்கள், கையேடுகள், மற்றும் அரசாங்க வெளியீடுகளை ஹிந்தியில் மொழிபெயர்ப்பது

30. விதிகளும், ரெகுலேஷன்களும் கொண்ட அரசாட்சிக்கான புத்தகங்களை ஹிந்தியில் மொழிபெயர்க்கும் தற்போதைய வேலையை பரிசிலித்து, இம்மாதிரி மொழிபெயர்ப்பில் உபயோகிக்கும் வார்த்தைகள் எல்லா இடங்களிலும் ஒன்றாக இருக்கவேண்டுமென்பதற்காக, மத்திய அரசாங்கத்தின்கீழ் ஒரு இலாகாவிடம் இந்த வேலையின் ஏற்பாட்டையும், மேற்பார்வையையும் ஒப்படைக்கவேண்டுமென்று இக்கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது.

அரசாங்க அலுவல்களில் பெரும்பான்மையானது, பல்வேறு இலாக்காக்களின் கையேடுகளிலுள்ள விதிகள், கட்டளைகள், முதலியவைகளுக்கு விரிவுரைப்பது, தனி விஷயங்களுக்கு இவ்விதிகளை உபயோகிப்பது என்பன, காலக்கிரமமாக, மத்ய, ராஜ்ய அரசாங்கங்களுக்குப் பொதுவான விதிகள் தோன்றின. பாதுகாப்பு அமைச்சு நீங்கலாக மற்ற அமைச்சுக்களிலும் இலாக்காக்களிலும் உபயோகத்திலிருந்துவரும் கையேடுகளில் உத்தேசமாக எண்பத்தியாராயிரம் பக்கங்கள்

(86,000) இருக்கின்றன. பல கையேடுகள் இதுவரை ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றன. ஆனல், ஒவ்வொரு அமைச்சும் இம்மொழிபெயர்ப்பைத் தனியாகச் செய்கிறது. பல இடங்களிலும் செய்யப்படுகின்ற இவ்வேலையை ஒன்றுபடுத்தவும், மேற்பார்க்கவும் ஒருதனி இலாகா இல்லை. விதிகள், கையேடுகள் மற்றுமுள்ள அரசியல் இலக்கியங்களில் உபயோகிக்கப்படும் வார்த்தைகளில் ஒற்றுமையின் அவசியத்தினல், கமிஷன் சிபார்சு செய்ததை அதாவது, இவ்வேலையை ஒன்றுபடுத்தி, மேற்பார்வை முதலியவைகளை, மத்ய அரசாங்கத்தின்கீழ் ஒரு தனி இலாகாவினிடம் ஒப்படைக்கவேண்டுமென்பதை இக்கமிட்டி ஆமோதிக்கிறது.

வேலைக்கான இயந்திர சாதனங்களின் வசதி

31. தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆகியவர்கட்கு, பிரத்யேக விடுமுறை தந்து, எல்லா வசதிகளும் செய்துகொடுத்துப் புதிய இடைநிலை மொழியில் தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் பழகிக்கொள்ளுமாறும் புதிய யூனியன் அரசாங்க பாஷையை அறிந்துகொள்ளுமாறும் வசதிசெய்து கொடுக்கவேண்டுமென்று கமிஷன் சிபார்சு செய்துள்ளது. தேவநாகரி எழுத்து உருவில் அதிகாரப்பூர்வமான சீர்திருத்தம் வேண்டுமென்றும், மிக விரைவாக ஹிந்தி தட்டெழுத்துக் ''கீ-போர்டை'' முடிக்கவேண்டுமென்றும் கமிஷன் நமது கவனத்திற்கு கொண்டுவருகிறது. இந்தக் கருத்துக்களை இக் கமிட்டி ஆமோதித்து, அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வர சிபார்சு செய்கிறது.

நிர்வாக ஊழியர்களுக் குப் பயிற்சி

32. அலுவலக நேரத்திற்குள்ளே, மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஹிந்தி கற்பிக்க அரசாங்கம் ஒரு கொள்கையை மேற்கொண்டுள்ளது. பலதரப்பட்ட பரிட்சைகளில் அதிக அம்சங்களைப் பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. தற்சமயம், அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப, பதினுறுயிரம் மத்ய அரசாங்க ஊழியர்கள் இத்திட்டத்தின் பிரகாரம் ஹிந்தி கற்றுக்கொள்கிறுர்கள்.

இத்திட்டத்தின்படி ஹிந்தி கற்பதில் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லையானல், அரசாங்கம் ''தங்கள் மொழிக்கொள்கைக்கேற்ப கால அளவைத் தந்து, அதற்குள் ஹிந்தி மொழியில் இன்ன தகுதி பெறவேண்டும்'' என்று கட்டாயப்படுத்தலாம் என்று கமிஷன் சிபார்சுசெய்கிறது. நாற்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட அதிகாரிகள் விஷயத்தில் தேவைப்படுகிற ஹிந்தி அறிவு ''புரிந்துகொள்ளும் அறிவாக'' இருப்பது போதுமானது என்று எண்ணுகிறது. கழகத்தின் கேள்விகளுக்குப் பதில் கூறுமிடத்து, சென்னை அரசாங்கம், இம்மொழிமாற்றத்திற்கு தகுந்த இலாகா மொழித்தேர்வுகள் வைக்கவேண்டுமென்றும், இவைகள் புதிதாக சேரும் ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல், பொதுப் பணியிலிருக்கும் அலுவலகர்களுக்கும் வைக்க வேண்டுமென்று சொன்னது. மேலும், புதுமொழியை கற்க சக்தியுள்ள பழைய ஊழியர்களுக்கு, ஹிந்தி கற்கப் பிரத்யேகமான வசதிகள் செய்துகொடுத்து அதன்பிறகு அவர்களை இலாகா மொழித்தேர்வுக்கு ஆஜராக்க வேண்டுமென்று இவ்

வரசாங்கம் சொன்னது. நெடுநாளாக, மத்ய, ராஜ்ய அரசாங்கங்களின் பலதரப்பட்ட பணிகளுக்கு இலாகாத் தேர்வுகள் இருந்துவருகின்றன. குறிப்பாக, ஆங்கிலேய அரசாட்சி காலத்தில் பாதுகாப்புப் பணிகளுக்கும், இன்னும் சில உயர் தரப் பணிகளுக்கும், உதாரணமாக, இந்திய சுங்கப் பணிக்கும் (முன்னுள் அரசர் சுங்கப் பணி), ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி அறிவு கட்டாயமாக இருந்தது. பழைய ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல் புதிதாகச் சேரும் ஊழியர்களுக்கும் ஹிந்தி கற்றுதரும் ஏற்பாடுகள் நீடிக்கும். இப்புதியமொழியில் நிர்வாகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தலின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தவேண்டிய அவசியமில்லை. ஆகவே, கமிஷனின் தீர்மானங்களை இக்கமிட்டி ஆமோதிக்கிறது. ஆனுல், புதுமொழியைக் கற்பதில் வயதான ஊழியர்களுக் கேற்படும் கஷ்டத்தை அறிந்தும், தற்சமயத்திற்கு ஆங்கிலத்துடன் ஹிந்தி உபயோகிக்கப்படுவதாலும், 1965-ம் ஆண்டிற்குப் பிறகும்கூட சில காரியங்களுக்கு ஆங்கிலம் நீடிக்குமாதலாலும், 45 வயதிற்கு மேற்பட்டவர்களைக் கட்டாயமாக ஹிந்தி கற்கச் சொல்லக்கூடாது என்று கமிட்டி அபிப்பிராயப்படுகிறது.

யூனியன் பணிகளுக்கு இனிமேல் ஆட்களெடுத்தல்

33. மத்தியத்துறைக்கும், அகில இந்தியத் துறைகளுக்கும் மொழிமாற்றத்தினுல் புதிதாக ஆட்கள் எடுப்பதைப் பற்றி இக்கமிஷன் தீரவிசாரித்து, கீழ்கண்டவைகளுக்கு தனித் தனியான சிபார்சுகளைச் செய்தது :—

(1) பல்வேறு பாகங்களில் மத்திய அரசாங்கப் பிரிவுகளுக்குக் கீழ்த்தரச் சிப்பந்திகளைத் தேர்ந்தெடுத்தல்;

(2) ராணுவக் கல்லூரி, தேசியப் பாதுகாப்புக் கழகம், கடற்படைப் பயிற்சிக் கழகம், வானஊர்திக் கழகம் போன்ற பயிற்சித் தளங்களுக்கு ஆள் பொறுக்குதல்;

(3) அகில இந்திய மேல்தர மத்திய அரசாங்கப் பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்தல்.

34. மத்ய அரசாங்கத்தின் பிராந்திய அலுவலகங்களின் கீழ்த்தர சிப்பந்திகளைத் தேர்ந்தெடுப்பதுபற்றி கழகத்தின் சிபார்சுகள் பின்வருமாறு:—

மத்ய அரசாங்கத்தின் பிராந்திய அலுவல்களுக்குக் கீழ்த்தரச் சிப்பந்திகளைத் தேர்ந்தெடுத்தல்

(அ) இந்திய அரசாங்கத்தின் இலாகாக்களான இரயில் வேக்கள், தபால், தந்தி, கலால், வருமானவரி முதலிய அமைப்புக்களிலுள்ள பிரிவுகளிலும், கிளைகளிலும் நிலைபெற்ற இரட்டை மொழிகளிலும், கிளைகளிலும் நிலைபெற்ற இரட்டை மொழிபேசும் அமைப்புகளாகவே இருத்தல் வேண்டும். அதாவது, உட்துறை அலுவல்களுக்கு ஹிந்தியைப் பயன்படுத்திக் கொண்டு, பொதுமக்களோடு தொடர்புகொள்ள பிராந்திய மொழியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

''இந்த ஆட்சி அமைப்புக்களிலும் இலாகாக்களிலும், உள்ள ஊழியர்கள் இவ்வாறு இரட்டை மொழித் தேவையை பூர்த்தி செய்யவேண்டி யிருப்பதால் அதற்கேற்ப, ஊழியர் அமைப்பு முறை மாற்றியமைக்கப்படவேண்டும். அதாவது, ஒருமுகப்படுத்தாமல் பன்முகப்படுத்தவேண்டும். ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, தகுதி முதலியன அதற்கேற்ப மாற்றியமைக்க வேண்டும்.''

(ஆ) ''வேலை அளிப்பவர் என்ற நிலையிலுள்ள இந்த அகில இந்திய இலாகாக்களும், அமைப்புக்களும் தன்கீழ் வேலை பார்க்கும் ஊழியர்கள் ஒரளவு ஹிந்தி பயிற்சி உடையவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் (தேவைப்பட்ட இடங்களில் அந்தப் பிராந்திய மொழிகளில் பயிற்சி உடையவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதும்) நியாயமானதே. சில பகுதிகளிலும், பிராந்தியங்களிலும் தேவைக்கு ஏற்றபடி ஹிந்தியின் தரத்தைத் குறைத்துக் கொள்ளலாம் என்றாலும், தலைமைக் காரியாலயத்தைப் பொறுத்தமட்டில் முழுவதும் வேலைகள் ஹிந்தி மொழியில் நடைபெறுமாதலால் அங்கு பணியாற்றுபவர்கள் பெரிதும் ஹிந்தி அறிவு படைத்தவர்களாக இருக்க வேண்டும்.''

(இ) ''மொழிமாற்றக் காலத்தில் கிடைக்கும் சந்தர்ப்பம் அனைவருக்கும் சமமாக இருக்கவேண்டுமென்பதற்காக எதிர்பார்க்கப்படும் ஹிந்தி அறிவின் அளவை மிகுதியும் குறைத்து வைத்துக்கொள்ளலாம். குறைந்துள்ள ஹிந்தி அறிவை வேலைக்குச் சென்றபிறகு நிறைவு செய்துகொள்ளலாம். அந்தந்தப் பிராந்தியங்களில் ஹிந்திபோதனை வளர்ச்சி அடைய அதற்கேற்றபடி இத்தேர்வுகளில் எதிர்பார்க்கப்படும் தரமும் உயர்ந்துகொண்டே செல்லலாம்.''

(ஈ) ''மத்ய அரசாங்கப் பணிகளுக்குப் பொறுக்கப்படுவோர்க்கு, ஹிந்தி மொழியில் எந்த அளவிற்குத் தேர்ச்சி வேண்டுமென்று நிர்ணயிக்க மத்ய அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. ஆனால் போதிய அளவு அவகாசம் இதற்குத்தரப்படுவதோடு, மொழித்தேர்ச்சி யோக்யதாம்சமும் மிதமாக நிர்ணயிக்கப்படவேண்டும். குறையறிவைப் பிற்காலத்தில் வேலையுடன் பயிற்சிபெற்று பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.''

இச்சிபார்சுகள், பொதுப்பணித் தேர்வுகளுக்கு, ஹிந்தி மொழியல்லாதாரின் சௌகர்யத்திற்காக, ஏற்படுத்தப்பட்டன. இவைகளை ஏற்குமாறு இக்கமிட்டி சிபார்சு செய்கிறது. குறிப்பாக, பிராந்திய வாரியாக, மத்ய சர்க்காரின் கிளைக் காரியாலயங்களிலுள்ள கீழ்த்தர சிப்பந்திகளைத் தேர்ந்தெடுத்தால், பல்வேறு மொழிப் பிரிவுகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களைத் தேர்தெடுப்பது சாத்தியமாகும்.

சென்னை அரசாங்கம், அரசாங்க பாஷைக் கமிஷனிற்கு சமர்ப்பித்த யாதாஸ்தில், எப்பணிகளுக்கு ராஜ்யவாரியாகத் தேர்வுவேண்டும், எப்பணிகளுக்கு அகில இந்தியத் தேர்வு

அவசியமென்றும் வரையறுக்கவேண்டுமென்று சிபார்சு செய்தது. மேலும், இப்பணிகளுக்கு வேண்டிய யோக்யதாம்சங்களில், ஹிந்தியில் அதிகாரபூர்வமான ஒரு பள்ளித்தேர்வும், ஆட்சி அலுவல்களுக்கான பொதுமொழியில் போதுமான அறிவு வேண்டியதற்காக ஒரு இலாகா மொழித் தேர்வும் வேண்டுமென்று சென்னை சர்க்கார் சொன்னது. சென்னை அரசாங்கத்தின் சிபார்சுகளும், கமிஷனின் சிபார்சுகளும் இவ்விஷயத்தில் ஒன்றுதான்.

பயிற்சி கூடங்களுக்கு ஆட்கள் எடுத்தல்

35. முதலாவதாக தேசியப் பாதுகாப்புக் கழகம் போன்ற துறைகளில் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியைப் போதனு மொழியாகக் கொண்டுவருவதற்கு ஆராயவேண்டுமென்றும், நாட்டின் பல பாகங்களில் இடை நிலைக்கல்வியில் ஆங்கிலத்தின் இடத்தைப் பிராந்தியமொழிகள் ஏற்றுக்கொண்டதினுல், இத்துறைகளுக்கான போட்டி பரிட்சைகளில் ஆங்கிலத்திற்குப் பதிலாக பிராந்திய மொழிகளை உபயோகிக்க வேண்டுமென்றும் கமிஷன் கூறியுள்ளது. இவ்வாறு செய்வதால், இப்போட்டித் தேர்வுகள் அகில இந்தியத் தன்மையைப் பெருமல் பிராந்தியவாரியாகப் பிரிக்கப்பட்டுவிடும். ஆதலால் ஒரு வகைப் ''பங்கீட்டு'' முறையையே மேற்கொள்வதாக அமையும். இத்துறைகளின் நுழைவுப் போட்டிகளில் பங்கீட்டு முறையை அனுசரிப்பது, அகில இந்தியப் பணிகளுக்கு இம்முறையை உபயோகிப்பதுபோல் அவ்வளவு அதிருப்தியுள்ளதாக இல்லை என்று கமிஷன் கொள்கிறது.

தற்சமயம், இத்துறையிலுள்ளவர்களுக்குப் போதிக்க, போதனுக் கையேடுகளும், மற்றும் தொழில் இலக்கியங்களும் ஹிந்தியில் இல்லை. மேலும், பயிற்சிபெறும் ஹிந்தியல்லாதாரில் பலர் ஹிந்தி அறிவு அதிகமில்லாததால், ஹிந்தியால் சொல்லிக்கொடுக்கப்படும் பொருட்களை அறிவது கடினம். ஆகவே, இப்பயிற்சி நிலையங்களில் ஆங்கிலமே சிலகாலம் தொடர்ந்திருக்க வேண்டுமென்று இக்கமிட்டி எண்ணுகிறது. நாளடைவில், இத்துறைகளில் எல்லாவற்றிற்குமோ அல்லது ஒரு சில விஷயங்களுக்கோ, போதனுமொழியாக, ஹிந்தியைக் கொண்டுவரத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இப்பயிற்சிக் கூடங்களின் நுழைவுத் தேர்வுக்கான மொழியைப்பற்றிக் கமிட்டி எண்ணுவதாவது, எல்லா வினுத்தாள்களுக்கோ, அல்லது அவைகளில் ஏதாவது ஒன்றிற்கோ, மாணவர்கள் ஹிந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடைதர சுதந்திரம் வேண்டும். நுழைவுத் தேர்வுகளுக்குப் பிராந்திய மொழிகளைப் புகுத்துவதை இக்கமிட்டி ஆட்சேபிக்கவில்லை. ''பங்கீட்டு முறையை''க் கொண்டு வராமல், தேர்வுகளுக்குப் பல்வேறு பிராந்திய மொழிகளைப் புகுத்துவதைப்பற்றிக் கமிஷன் ஐயப்பாடு கொண்டது. இப்பயிற்சிக் கூடங்களுக்குரிய நுழைவுத் தேர்வுகளுக்கு இங்ஙனம் பங்கு முறையை ஏற்றுக்கொள்வது: அகில இந்தியப் பணிகளுக்கு அதிகாரிகளைப் பொறுக்கும்பொழுது பங்கு முறையை மேற்கொள்

வதைவிட அதிருப்தியுள்ளதாக ஆகாது என்ற கமிஷனின் கொள்கையை இக்கமிட்டி ஆதரிக்கவில்லை. ஆகவே, பங்கு முறையைக்கொணராமல், பிராந்திய மொழிகளினால் தேர்வுகளை நடத்துவதின் சாத்தியக் கூற்றைப்பற்றி ஆராய ஒரு நிபுணர்கள் கமிட்டி நியமிக்கப்படவேண்டுமென்று இக்கமிட்டி சிபார்சு செய்கிறது.

அகில இந்திய உயர்தர மத்யப் பணிகளுக்கு ஆட்களெடுப்பு

36. அகில இந்திய, உயர்தர மத்தியப் பணிகளுக்கான ஆள் சேர்த்தலைப்பற்றி இக்கமிஷன் சிபார்சு செய்வதாவது, முதலாவதாக, கட்டாயப் பிராந்திய மொழிகளில் வினாத்தாள்களைச் சேர்ப்பதும் இரண்டாவதாக, இப்போட்டித் தேர்வுகளுக்கு உபயோகிக்கப்படும் மொழிபற்றியதையுமாகும். கட்டாயப் பிராந்திய மொழிகளைச் சேர்ப்பதுபற்றின கமிஷனின் சிபார்சுகளைக் கீழே காணலாம்:—

(அ) ''வருங்காலத்தில், அகில இந்திய, மத்தியத்துறைப் பணிகளுக்கு வேண்டிய மொழி அறிவை உத்தேசித்து, இதற்கான பரிட்சைகளில், போதுமான முன்னறிவிப்பின் பிறகு, ஹிந்தி மொழியில் ஒரு கட்டாய வினாத்தாளை ஏற்படுத்துவது நியாயமானது. ஹிந்தி பேசாத மாணவர்களின் நலன்கள் கேடடையாமலிருக்க, தொடக்கத்தில் தேவைப்படும் ஹிந்தி அறிவு மிகக் குறைவானதாகவும், இவ்வினாத்தாளை வெறும் ''தகுதிச்சோதனை'' யாகவும் வைத்துக் கொள்ளலாம். பின்னர் தகுந்த முன்னறிவிப்பிற்குப்பிறகு மற்றைய கட்டாயப் பாடங்களைப்போல் இதனையும் வைத்து, இதில் பெற்ற அம்சங்களை மொத்த மார்க்குகளுடன் கூட்டி மதிப்பிடலாம். மேலும், தென்னாட்டு மொழிகளுள் ஏதாவது ஒன்றைப்பேசும் மாணவர்களைப் பொறுத்தமட்டில், ஹிந்தி மொழியுடன் தொடர்புடைய ஆனால், ஹிந்தியல்லாத மொழிபேசும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் வினாத்தாளில், இரண்டொரு மிகக் கடினமான கேள்விகளுக்கு, தென்னிந்திய மாணவர்கள் விடைதரவேண்டாம் என்று கட்டளையிடலாம்.''

(ஆ) ''ஹிந்தி பேசாத மாணவர்கள் ஹிந்தி மொழியில் விடை தருவதற்குச் சமமாக, ஹிந்தி பேசும் மாணவர்கள் அவர்கள் ஏனைய விடைத்தாள்களில் எழுதும் அதே மொழியில் தென்னாட்டைப் பொறுத்த ''பண்பாட்டுப் பாடங்களைப்'' பற்றியோ, எட்டாவது தபசிலில் குறிப்பிட்டுள்ள ஹிந்தியல்லாத ஒரு மொழியையோ எடுத்துக்கொண்டு விடை தரலாம்.''

(இ) ''ஹிந்தி மொழி பேசும் மாணவர்களை, ஹிந்தி மொழியல்லாதாருடன் சரிப்படுத்த, ஹிந்தியல்லாத ஒரு பிராந்திய மொழியிலோ (அல்லது ஒரு தென்னிந்திய மொழியிலோ) விடை தரவேண்டுமென்பதற்குத் தகுந்த காரணங்கள் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை.''

(ஈ) ''குறிப்பிட்ட வினுத்தாள்களின் மூலம், அகில இந்தியப்பணி நுழைவுத் தேர்வுகளுக்கு வரும் மாணவர்களே, ஆங்கிலத்தில் சோதனை செய்ய, பிராந்திய மொழிகள் தேர்வு மொழிகளாயிருப் பினும், ஒருவழி வகுக்கப்படவேண்டும்.''

37. அகில இந்திய, உயர்தர மத்தியப் பணித்துறைகளி லிருக்கும் ஊழியர்களுக்கு இருக்கவேண்டும் ஹிந்தி அறிவைக் கவனித்து, அதற்கேற்ப, தகுந்த முன்னேற்பாட்டின்படி, ஹிந்தி மொழியில் ஒரு கட்டாய வினுத்தாளேச் சேர்க்கவேண்டு மென்பதை, இக்கமிட்டி ஆமோதிக்கிறது. முதலாவது இந்த ஹிந்தி வினுத்தாளேத் ''தகுதிச் சோதனை''யாகச் சேர்க்க வேண்டுமென்ற கமிஷனின் சிபார்சை இக்கமிட்டி ஏற்றுக் கொள்ளவில்லே. ஏனென்ருல், ஹிந்திமொழியில் குறைந்த அம்சங்கள் கிடைத்தாலும், போட்டிப் பரிட்சையில் வெற்றி யடையும் மாணவர்களே, இதனுல் தகுதியற்றவர்களாகச் செய்யமுடியும். மேலும், ஹிந்தி மொழிபேசும் மாணவர்கள் தென்னிந்தியப் பண்பாட்டு பாடங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றியோ, அல்லது, 8-வது தபசிலில் கண்டுள்ள ஹிந்தியல் லாத ஒரு மொழியிலோ, விடைதரலாமென்றும், ஹிந்தியல் லாத ஒரு பிராந்திய மொழியில் விடை தரவேண்டிய கட்டாயம் வேண்டாமென்ற கமிஷனின் சிபார்சுகளே இக்கமிட்டி ஆமோ திக்கவில்லே.

அகில இந்தியத்துறை, உயர்தர மத்யப் பணித்துறை ஊழியர்களுக்கு, ஹிந்தியல்லாத மற்ருெரு பிராந்திய மொழி யறிவு இருத்தல் விரும்பத்தக்கது. ஆகவே, இக்கமிட்டி போதுமான முன்னறிவிப்பிற்குப் பிறகு, இத்தேர்வுகளுக்கு, ஒரேதரமுடைய இரண்டுமொழி வினுத்தாள்கள் கட்டாயமாக இருத்தல் வேண்டுமென்று சிபார்சு செய்கிறது. இவைகளில் ஒன்று ஹிந்தி மொழியிலும், மற்ருென்று ஹிந்தியல்லாத தற்கால இந்திய மொழியிலும் இருக்கும். இவ்வேற்பாட்டின் படி, ஹிந்தி மொழி பேசும் மாணவர்கள், ஹிந்தியிலும், ஹிந்தி, உருது அல்லாத ஒரு தற்கால இந்திய மொழியிலும் விடை தருவர்; மற்ற ஏதாவதொரு தற்கால இந்திய மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள மாணவர்கள், ஹிந்தியிலும், அவர்கள் தேர்ந்தெடுத்த ஒரு மொழியிலும் விடை தருவார்கள்.

இன்னும் வெகுகாலத்திற்கு, அகில இந்திய, உயர்தர மத்யத் துறை ஊழியர்களுக்கு, தங்கள் வேலேகளேச் சரிவரச் செய்ய போதுமான ஆங்கில அறிவு இருத்தல் அவசியம். ஆகவே, தேர்வுகளின் மொழி மாறினுலும், கட்டாயமாக ஒரு ஆங்கில வினுத்தாள் வேண்டுமென்றும், எல்லா அரசாங்க அலுவல்களும் ஹிந்தியில் மாறும்வரையிலும், இம்முறை தொடர வேண்டுமென்று, இக்கமிட்டி எண்ணுகிறது.

38. அகில இந்தியத்துறை, உயர்தர மத்யத் துறை களுக்கான போட்டிப் பரிட்சைகளின் மொழியைப்பற்றின கமிஷனின் சிபார்சுகள் பின்வருவன;—

(அ) ''அகில இந்தியப்பணி, மத்ய அரசாங்கப் பணிகளைப் பொறுத்தவரை (வேறு விதமாக ஏற்படுத்தினலொழிய இது இனிமேல் உண்டாக்கப்படும் மற்ற அகில இந்தியப் பணிகளுக்கும் பொருந்தும்) தக்க அறிவிப்பிற்கு பிறகு, இப்போதைய ஆங்கில மொழியுடன் ஹிந்தி மொழியையும் மாற்ருகக் கொண்டு வரலாம். ஏனைய பிராந்திய மொழிகள் பல்கலைக் கழக நிலைமையிலும் பட்டப் படிப்பு நிலைமையிலும் இன்றுள்ள ஹிந்தியின் நிலைமையை அடையும்பொழுது அந்தப் பிராந்திய மொழிகளை இப்பரிட்சைகளுக்கு இடைநிலை மொழிகளாக ஆக்க வேண்டுமென்பதைப்பற்றி ஆராயலாம்.

ஒரு மொழி இப்போட்டிப் பரிட்சைகளுக்கு இடைநிலைமொழியாக ஆவதற்குத் தகுதி பெற்றுவிட்டதா என்பதை அறிவதற்குப் பல்கலைக் கழகக் கல்வி முறையில் போதனமொழியாக அம்மொழி எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை அறியவேண்டும். அவ்வாறு ஆவதற்குத் தகுந்த சில ஏற்பாடுகளைச்செய்து அதனுடைய தகுதியை ஆராயலாம்.

இந்த இடைநிலை மொழியாக உள்ள ஆங்கிலம் தேவையான காலம்வரை இருந்துக்கொண்டேயிருக்கலாம். நாளாவட்டத்தில் ஆங்கிலத்தை நீக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வருமேயானல் அப்பொழுதும் தகுந்த அளவு நீண்டகால அறிவிப்புச் செய்துவிட்டு இதனைமாற்றி அமைத்து விடலாம்.

(ஆ) இடைநிலை மொழிகளின் எண்ணிக்கைக் கட்டுப்படுகின்ற வகையில் ''மிதப்படுத்துதல்'' என்பது இயலக்கூடிய காரியமானலும் இரட்டை அல்லது மும்மொழி அறிந்த பரிட்சகர்கள் கிடைப்பதைப் பொறுத்து அதிகப்படியான இடைநிலை மொழிகளை இப்பரிட்சைகளில் புகுத்தலாம். ஓரளவுக்கு அப்பாற்பட்டு இவை நடைமுறையில் இயலாததாகும்.

இந்நிலை ஏற்படுவதற்குமுன் யூனியன் அரசும், ராஜ்ய அரசும் ஒன்றுகூடி ஆலோசித்து, கீழ்க்காணும் வகைகளில் முடிவு செய்யவேண்டும்:—(1) இந்த அகில இந்தியப் பணிகளுக்கு ஆள் எடுக்கும் முறையில் சில மாற்றங்களைச் செய்ய அவர்கள் உடன்படவேண்டும். (2) இப்பரிட்சைகளின் இடைநிலை மொழிகளின் எண்ணிக்கையை ஒரு அளவில் வைக்க அவர்கள் ஏற்றுக்கொள்ள்வேண்டும். அல்லது (3) இப்பரீட்சை முறைகளிலேயே தேவையான மாற்றங்களைச் செய்ய அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும்.''

39. கமிஷன் குறிப்பிட்டதுபோல் போட்டிப் பரிட்சை களுக்கு, மிக அதிகமான இடைநிலை மொழிகளை ஏற்படுத்தினுல், மிதப்படுத்தும் வேலையின் திறமும் ஓரளவு பாதிக்கப்படும். யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனும் (அநேகமாக எல்லா ராஜ்ய பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன்களும்) கழகத்தின் கேள்வித் தாளின் பதில்களில் இக்கஷ்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டனர். இதற்கு மருந்தாக, ''பங்கீட்டு'' முறையைக் கொண்டு வந்தால், இப்பணிகளின் அகில இந்தியத் தன்மையைக் குலைத்து விடும்; தேர்வின் தரமும் குறைந்துவிடும். அநேக ராஜ்ய அரசாங்கங்கள், தங்கள் யாதாஸ்துகளிலும், கழகக் கேள்வித் தாளின் பதில்களிலும், ஆங்கில மொழியை நீடிப்பதற்கும், ஹிந்தியை இடைநிலை மொழியாக, உடனே அல்லது சிறிது காலத்திலோ கொண்டுவர விரும்பி இருக்கின்றன. சென்னை அரசாங்கம் கமிஷனுக்கு அனுப்பிய தங்கள் யாதாஸ்தில் கூறியிருப்பதாவது:—பரிட்சை எழுதும் மாணவனுக்கு அவன் விரும்பியபடி, ஆங்கிலத்திலோ அல்லது ஹிந்தியிலோ பரிட்சை கொடுக்கலாம் என்ற அடிப்படை விதியை, விதிவிலக்கில்லாமல் ஒப்புக்கொள்ளவேண்டும். மேலும், கமிஷனின் கேள்வித் தாளுக்குப் பதிலளிக்கையில் அவர்கள் சொன்னதாவது:— முடியுமானுல் பிராந்திய மொழிகளை இடைநிலை மொழிகளாக்கு வது விரும்பத்தக்கது; முடியாவிட்டால் வேண்டாம்.'' கமி ஷனின் சிபார்சுகளைப்பற்றி சமர்ப்பித்த யாதாஸ்தில், சென்னை அரசாங்கம் எண்ணினதாவது:—''ஒவ்வொரு பிராந்திய மொழியும், பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், பட்டப் படிப்பு முடிய போதனுமொழியாக ஆக்கப்பட்டால், அதை உடனே, ஐக்கிய அகில இந்திய பரிட்சைக்கு இடைநிலை மொழியாக்கலாம். மிதப்படுத்தும் பிரச்னையை யூனியன் பொதுப்பணிக் கழகம் சுமுகமாகத் தீர்க்கவேண்டும்.'' இப் பிரச்னையை எல்லா வழிகளிலும் ஆராய்ந்த பிறகு, இப் பரிட்சைகளுக்கு ஆங்கில மொழியே உபயோகத்திலிருந்து வர வேண்டுமென்றும், சிறிது காலத்திற்குப் பிறகு ஹிந்தியை மாற்ருகக் கொண்டுவரலாமென்றும், ஹிந்தியும், ஆங்கிலமும் இடைநிலை மொழிகளாகி, ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து பரிட்சை எழுதப்போதுமான காலவரையறை இருக்கவேண்டு மென்று இக்கமிட்டி தீர்மானித்துள்ளது. பங்கீட்டு முறை யைக் கொண்டுவராமல், பிராந்திய மொழிகளை இடைநிலை மொழிகளாகக் கொணர்ந்து இப்பரிட்சைகள் நடத்துவது சாத்தியமானுல், இம்முறைக்குக் கமிட்டி எதிராக நிற்காது. மிதப்படுத்துவதில் உண்டான கடினமான பிரச்னைகளையும், ஏதாவது ஒரு திட்டத்தை வகுத்து அது பங்கீட்டு முறையில் கொண்டுவிடலாம் என்ற ஒரு அபாயத்தையும் எண்ணி, பிராந்திய மொழிகளை, பங்கீட்டு முறையின்றி, இடைநிலை மொழிகளாகக் கொண்டுவர, ஒரு நிபுணர்கள் கமிட்டியை நியமிக்க சிபார்சு செய்கிறது.

ஹிந்தியை பரப்புதலும் வளர்த்தலும்

40. ஹிந்தி மொழியைப் பரப்புதலும், இந்தியாவின் ஒன்றிணைந்த கலாசாரத்திற்குப் பயன்படும் மொழியாக இதை வளர்த்தலும், 351-வது பிரிவின்படி, மத்ய அரசாங்கத்தின் கடமையாகும் என்று முன்னே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மொழிமாற்றம் செய்யும் பொழுது, ஹிந்தி மொழி பேசுவோரல்லாத பிரதேசங்களின் ஹிந்தி வளர்ச்சியில் கவனம் செலுத்தவேண்டுமென்றும் சொல்லப்பட்டது. மிகக் குறைந்தபட்ச அரசாங்க ஆதரவுடன், ஹிந்தியல்லாத பகுதிகளில் ஹிந்தி அறிவைப் பெருக்கும் தாமே இயங்கும் உறுப்புக்களின் சிறந்த வேலையை கமிஷன் கவனமாகப் பரிசீலித்தது. அரசியல் சட்டத்தின் கட்டளையைக் கவனத்தில் வைத்துக்கொண்டும், யூனியன் அரசாங்க பாஷையான ஹிந்தி பரிமாற்றத்தின் முக்கியத்தை உணர்ந்தும், இனிமேல் இவ்வேலைக்கான பொறுப்பை அரசாங்கம் நேரடியாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இக் கமிஷன் சிபார்சு செய்கிறது. எங்கு தானே இயங்கும் உறுப்புக்கள் தகுந்த அனுபவமும் அதற்கேற்ற முறைகளும், வசதியும் வைத்திருக்கின்றனவோ, அங்கு ஹிந்தி கற்பித்தல், பிரசாரம் இவைகளை, முக்கியமாக இவ்வுறுப்புக்களே செய்ய வேண்டும். இம்மாதிரி உறுப்புக்களுக்கு, பணம், மற்றும் வசதிகள் செய்து தருவதும், மேற்பார்வை செய்வதுமே, அரசாங்கத்தின் வேலையாகும். பலதரப்பட்ட உறுப்புக்களின் வேலைகளை ஒன்றுபடுத்தவும், திட்டத்தை விஸ்தரிக்கவும், முன்னுக்குக் கொண்டுவரவும் மேற்பார்வை அவசியம். எங்கு அதிகாரபூர்வமற்ற உறுப்புக்கள் கிடைக்கவில்லையோ, ஆங்காங்கு இம்மாதிரி உறுப்புக்களை ஏற்படுத்த, அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். ஹிந்தி மொழி பரப்புதலுக்கு ஒரு ஒழுங்கான உறுப்பை நிர்மாணிக்கவும், பரப்புதல் வேலையை விஸ்தரிப்பதற்கும் கமிஷன் சில வழிகளைக் குறிப்பிட்டிருக்கிறது. இவ்வழிகளின் முறையே தங்கள் நடவடிக்கைகளைப் பரப்புவதற்கு, தானுக இயங்கும் இவ்வுறுப்புக்களுக்கு அரசாங்கம் தாராளமாகப் பண உதவி செய்யவேண்டுமென்று நினைக்கிறது. மேலும், யூனியன், ராஜ்ய அரசாங்கங்கள், மொழியியல், மொழி நூல்கள் துறையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், இதன்மூலம் பல்வேறு இந்திய மொழிகளிலும் ஒற்றுமைப்பாட்டை வளர்க்கவும், இந்தியாவின் பலதரப்பட்ட கலாசாரத்தை நன்கு புரியவும் வகை செய்யும். இம்மாதிரியே பல்வேறு இந்திய மொழிகளிலுள்ள இலக்கங்களையும் படிக்க உற்சாகமளிக்கப்பட வேண்டுமென்று இக்கமிட்டி கருதுகிறது.

பிரிவு 2

ஆங்கில உபயோகத்தைத் தடைசெய்தல்.

41. தற்சமயத்திற்கு யூனியன் அரசாங்க அலுவல்களுக்கு உபயோகிக்கப்படும் ஆங்கிலத்திற்கு எவ்விதத் தடையும் புகுத்தவேண்டுமென்று கமிஷன் சிபார்சு செய்யவில்லை. யூனியன் ஊழியர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு ஹிந்தி மொழியில் வேலை செய்யப் பயிற்சி அளிக்கப்படாததால், ஆங்கில மொழி உபயோகத்திற்குத் தடைகள் விதித்தால், அநுபவபூர்வமான கஷ்டங்கள் ஏற்படும். கமிஷன் கூறினுற்போல், தற்சமயம் இதனுல் யாதொரு அனு

கூலமும் கிடையாது. மேலும், கமிஷன் கேள்வித்தாளுக்கு விடையளிக்கையில், பல்வேறு ராஜ்ய அரசாங்கங்கள், இம்முறையை எதிர்த்திருக்கிறுர்கள் என்பதும் சொல்லத்தக்கது. இக்கமிட்டி, கமிஷனின் கருத்துக்களை ஆமோதிக்கிறது.

பிரிவு 3

சட்ட மொழியும் நீதிமன்ற மொழியும்

அரசியலமைப்பின் பகுதிகள்

42. உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றங்கள் மொழியைப் பற்றியும், பாராளு மன்ற, ராஜ்ய அவைகளுடைய சட்ட, மசோதாக்களின் மொழியைப் பற்றியும், அரசியலமைப்பு, 348, 349-வது பிரிவுகளில் காணலாம் என்று முன்னே சொல்லப்பட்டிருக்கிறது.

கமிஷனின் சிபார்சுகள் சட்டமியற்றும் மொழி

43. கமிஷன், தனது அறிக்கையின் 9-வது அத்தியாயத்தில் சட்டமியற்றும் மொழியைப்பற்றி ஆராய்ந்து, கூறுவதாவது:

(அ) ''பாராளு மன்ற, ராஜ்ய சட்டமியற்றும் மொழி ஹிந்தியாகவும், அச்சட்டங்கள் அதிகாரபூர்வமாக இருக்கும் என்பதைத்தவிர, பொதுமக்களின் சௌகர்யத்திற்காக, பல பிராந்திய மொழிகளில் இச்சட்டங்களின் மொழிபெயர்ப்புக்களை வெளியிட அவசியமாகும். ராஜ்யங்களைப் பொறுத்தமட்டிடிலும், சாதாரணமாக இது அந்தந்த ராஜ்யத்திலுள்ள பிராந்திய மொழியிலோ (அல்லது மொழிகளிலோ) இருக்கும். பாராளு மன்றச் சட்டத்தைப் பொறுத்தவரை இது நாட்டின் எல்லா முக்கியமான பிராந்திய மொழிகளிலும் இருத்தல் அவசியமாகும்.''

(ஆ) ''இம்மொழிமாற்றம் செய்வதற்குரிய காலம் வரும்பொழுது, நாட்டிலுள்ள நிலைச்சட்டங்கள் அனைத்தும் ஒரே மொழியில்தான் இருக்கவேண்டுமென்றும், அது ஹிந்தியைத்தவிர வேறென்ருக இருக்க முடியாதென்றும் நாங்கள் கருதுகிறேம். எனவே, ராஜ்யங்களில் நிறைவேற்றப்படுகிற சட்டங்களும், பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களும், ஒரே மொழியில் இருக்கவேண்டுமாதலால், நிலையான உத்திரவுகளும், மற்றவைகளும் ஹிந்தி மொழியில்தான் இருக்கவேண்டும்.

பாராளு மன்றச் சட்டம், மசோதா, இவைகளின் மொழி கமிட்டியின் கருத்து

44. கமிஷனின் வினுத்தாளுக்கு பதிலளிக்கையில், ராஜ்ய அரசாங்கங்கள், உச்ச நீதிமன்றம், உயர்தர நீதிமன்றங்கள் ஒரு மனதாக, பாராளு மன்றத்தில் சட்டமியற்றும் மொழி ஹிந்தியாக வேண்டுமென்று கூறின. சென்னை அரசாங்கம், வெகு நாட்களுக்கு வருங்காலத்தில் இரட்டைமொழிச் சட்ட

மியற்றவேண்டுமென்றும், 1965-ம் ஆண்டுவரை, அதிகார பூர்வமான சட்டம் ஆங்கிலத்திலும், அதிகாரபூர்வமான ஹிந்தி மொழிபெயர்ப்புடனும் இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது.

பொதுவாக இவைகளை இக்கமிட்டி ஆமோதிக்கிறது. முதலாவது அதிகாரபூர்வமான ஹிந்தி மொழிபெயர்ப்புக்கு வழிசெய்ய வேண்டுமென்று எண்ணுகிறது. நடுவணர் நீதிமன்றங்கள், பொதுமக்களின் சௌகர்யத்திற்காக, ராஜ்ய ஆட்சி மொழிப்பெயர்ப்புகளுக்கும் வசதி செய்யவேண்டியது அவசியமென்றும் கருதுகிறது.

ராஜ்யங்களில் மசோதா, சட்டங்களின் மொழி கமிட்டியின் கருத்துக்கள்

45. மசோதா, சட்டமியற்றுவதற்கு பிராந்தியமொழியையே உபயோகிக்கலாம் என்று அரசியலமைப்பிலிருந்தாலும், இதன் ஆங்கில மொழிபெயர்ப்பானது அரசியல் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டு அதிகாரபூர்வமானதாகக் கருதப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்படுத்தியுள்ளது. இம்முறை மாற்றலில்லாமல் இருக்கவேண்டுமென்று இக்கமிட்டி எண்ணுகிறது. ஆனால், எங்கு சட்டங்கள், ஹிந்தியல்லாத ஒரு மொழியில் இருக்கின்றனவோ, அங்கு ஹிந்தி மொழிபெயர்ப்புக்களுக்கும் வழிவகுக்கவேண்டும் என்று எண்ணுகிறது.

உச்ச நீதிமன்றத்தின் மொழி

46. உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் உள்ள இடைநிலை மொழியைப்பற்றிக் கீழ்க்கண்ட சிபார்சுகளைக் கமிஷன் தருகிறது:—

(அ) ''உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரை, எல்லா நடைமுறைகளிலும், ரிக்கார்டுகளிலும், தீர்ப்புக்கள் உத்தரவுகள் முதலியவைகளுட்பட ஒரே ஒரு மொழிதான், அதாவது, ஹிந்திதான் இறுதியில் இருக்கும். மொழிமாற்றத்திற்கு ஏற்ற காலம் வரும்பொழுது இம்மன்றம் ஹிந்தியில்மட்டுமே தொழிற்படவேண்டும். இம்மன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்புக்களை அதிகாரபூர்வமாக வெளியிடும்பொழுது அதனை அந்த மொழியிலேயே வெளியிடவேண்டும்.''

(ஆ) ''உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்படும் கட்டளைகள் ஹிந்திமொழி பேசாத பகுதியில் வாழும் ஒருவருக்கோ அன்றி ஹிந்தி மொழி பேசாத ஒருவருக்கோ வழங்கப்படவேண்டுமானால் அவருடைய சௌகர்யத்தை முன்னிட்டு ஒரு மொழிபெயர்ப்புடனே அனுப்பலாம்.''

(இ) ''உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை ஒவ்வொரு ராஜ்ய பிராந்திய மொழியிலும், நம்பிக்கையான முறையில் மொழிபெயர்க்க வசதி செய்யவேண்டும்.''

(ஈ) "தனிப்பட்ட நீதிபதிகள் விரும்பினால், ஆங்கிலத்தில் தீர்ப்புக்களை வழங்கலாம்; பொதுவாக மொழி மாற்றம் ஏற்பட்டபிறகும், தேவைப்பட்டால் ஆங்கிலத்தில் வழக்காட, வழக்கறிஞர்களுக்கு நீதிபதிகள் உரிமை வழங்கவேண்டும்."

மேல்தர நீதிமன்றங்களில் மொழிமாற்றமானது நெடுநாளைய வேலை ஆகும். மற்ற ஆட்சித்துறைகளில் மொழிமாற்றம் ஏற்பட்டபின்னர்தான், இம்மொழிமாற்றம் முடிவடையும். உச்ச நீதிமன்றத்தில் ஹிந்தி உபயோகப்படுத்துவதை ஒட்டிய கமிஷனின் சிபார்சை இக்கமிட்டி பொறுத்தமானதென்றும் ஏற்கிறது.

உயர் நீதி மன்றங்களின் மொழி

47. உயர்தர நீதிமன்றங்களில் வழங்கும் மொழிபற்றிய கமிஷனின் முக்கிய சிபார்சுகளை கீழே காணலாம்:—

(1) மொழிமாற்றக்காலம் நெருங்கும்பொழுது, உயர்தர நீதிமன்றங்களின் கட்டளைகள், உத்தரவுகள், ஆணைகள் முதலியவைகள் ஹிந்தியில் இருத்தல் வேண்டும். கீழ்நிலை நீதிமன்றங்கள், உயர்தர நீதிமன்றங்கள் கொடுக்கும் வியாக்கியானப்படி தொழிற்படவேண்டு மாதலால், இவைகளின் வெளியிடத்தகுந்த தீர்ப்புக்களை, பிராந்திய மொழிகளிலும் நம்பிக்கைக்குரியனவாக மொழி பெயர்த்தல் வேண்டும்.

(2) உயர்தர நீதிமன்றங்களின் கட்டளைகள், உத்தரவுகள், ஆணைகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் எங்கெங்கே தேவைப்படுகின்றனவோ அங்கேயெல்லாம் ஹிந்தி மூலத்தோடுகூட "அதிகாரபூர்வமான மொழிபெயர்ப்பையும்" சேர்த்துக் கொடுக்கலாம்;

(3) மொழிமாற்றத்திற்குப் பின்னரும், உயர் நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் தீர்ப்புக்களை வேண்டுமானால் ஆங்கிலத்தில் வழங்கலாம் என்று சொல்லும் உரிமையோடு, தேவைப்பட்டால் பிராந்திய மொழிகளிலும் வழங்க உரிமை வழங்கவேண்டும். அவ்வாறு செய்தால் அத்தீர்ப்புக்களின் ஆங்கில அல்லது ஹிந்தி மொழிபெயர்ப்பை அதிகாரபூர்வமாக வெளியிட அவர்கள் உடன்படவேண்டும். அதற்கேற்ப, வழக்கறிஞர்களும் தேவைப்படும் வழக்குகளில் ஆங்கிலத்திலோ, பிராந்தியமொழியிலோ வழக்காட, நீதிபதிகள் உரிமை வழங்க வேண்டும்.

48. 348-வது பிரிவு, இரண்டாவது பகுதியின்படி, ராஜ்ய கவர்னர், ராஷ்ட்ரபதியின் அனுமதியின்பேரில், ராஜ்யத்தின் ஆட்சிக்காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் மொழியை, ஹிந்தி அல்லது பிராந்தியமொழியை, உயர் நீதி

மன்றங்களில், தீர்ப்புகள், டிகிரிகள், ஆணைகள் நீங்கலாக, மற்றவைகளுக்கு பயன்படுத்தலாம். இவ்வாருக, உயர் நீதி மன்றத்தின் நடைமுறையில் (தீர்ப்புகள், டிகிரிகள், கட்டளைத் தவிர) இப்போதிருக்கும் அரசியலமைப்புப் பிரகாரம் விரும்பினுல் ராஷ்ட்ரபதியின் அனுமதியின்பேரில், ராஜ்ய அரசாங்க பாஷையில் நடைபெறலாம். இதை மாற்றியமைக்க போதிய காரணமில்லையென்று இக்கமிட்டி கருதுகிறது. நீதிமன்றக் கட்டளைகள் பிராந்திய மொழிகளிலும், ஹிந்தி மொழியில் ஒரு மொழிபெயர்ப்புடன் பிறப்பிக்கலாம் என்றும் கருதுகிறது.

49. உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள், டிகிரிகள், கட்டளைகள் முதலியவை, ஆங்கில மொழிமாற்றத்திற்குப் பிறகு ஹிந்தி மொழியில் இருக்கவேண்டுமா அல்லது இம்மன்றங்களின் நடைமுறையிலிருப்பதுப்போல், இவைகளிருக்கும் பகுதிகளில் வழங்கும் மொழிகளில் இருக்கவேண்டுமா என்பது ஒரு முக்கியமான பிரச்னை. இதற்கு விடைதருவது எளிதல்ல.

பலராஜ்யங்கள், ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்கள் உள்பட, அரசாங்கபாஷைக் கமிஷனுக்கு அனுப்பின யாதாஸ்துகளில், உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகள், டிகிரிகள், கட்டளைகள், ஆங்கில மொழிமாற்றத்திற்குப் பிறகு, ஹிந்தி மொழியில் இருக்கவேண்டுமென்று எண்ணுகின்றன. மற்றும் சில ராஜ்யங்கள் இவ்விஷயங்களுக்கு, ஹிந்தியுடன் பிராந்திய மொழிகளையும் அல்லது பிராந்திய மொழிகள்மட்டும் உபயோகப் படுத்தவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. ஆங்கிலத்திலிருந்து மொழிமாற்றத்திற்குப்பின், உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றங்களிலும் வழங்கப்படும் மொழி ஹிந்தியாதல் வேண்டுமென்று, அட்டர்னி - ஜெனரலும் வலியுறுத்துகின்றனர்.

50. உச்ச நீதிமன்றத்திற்கும், உயர் நீதிமன்றங்களுக்கும் ஒரு பொது மொழியமைக்கப் பல காரணங்கள் இருக்கின்றன. ஒரு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளும், கட்டளைகளும், மற்ற உயர் நீதிமன்றங்களில் மேற்கோள்களாக குறிப்பிடப்படுகின்றன. மேல் வழக்காடிடும் இடத்தில், உச்ச நீதிமன்றம் தன் முன் தீர்ப்புகளின் மூலப்பிரதிகளை வைத்துக்கொள்ளல் வேண்டும். ஏனென்ருல், தீர்ப்புகளின் மொழிபெயர்ப்பில் அபிப்பிராயபேதம் ஏற்படலாம். ஒரு உயர் நீதிமன்றத்தில் ஆஜராகும் வழக்கறிஞர், மற்ற உயர் நீதிமன்றங்களிலும், உச்ச நீதிமன்றத்திலும் ஆஜராகலாம். எனவே, இம்முறையால் அகில இந்திய வழக்கறிஞர் சங்கம் ஒன்று ஒரு மாதிரியாக உருப்பெற்றிருக்கிறது. இவ்வுயர் நீதிமன்றங்களின் மொழிகள் வெவ்வேருகவும், இந் நீதிமன்றங்களின் மொழியும் உச்ச நீதிமன்றத்தின் மொழியும் ஒன்ருக இல்லாவிட்டால், இவ்வழக்கம் நெடுநாள் நிலைக்காது. உச்ச நீதிமன்றத்தின் மொழியிலிருந்து, எல்லா அலுவல்களுக்கும், தீர்ப்புக்கள், கட்டளைகள், ஆணைகளுக்கும்கூட, பல உயர் நீதிமன்றங்களின்

மொழி வேறுபட்டால், நீதிபதி இந்த நீதிமன்றங்களிலிருக்கும் முது நீதிபதிகளிலிருந்தும், நாட்டிலுள்ள முது வழக்கறிஞர் களிலிருந்தும், உச்ச நீதிமன்றத்திற்குத் தேவையான நடு வணர்களைத் தேர்ந்தெடுத்தல் கடினமானதாகும். மற்றொரு புறத்தில் நோக்குமிடத்து, கீழ்த்தர மன்றங்கள் எல்லா இடங் களிலும் பிராந்திய மொழிகளில் தொழிற்படும்; ஆகவே, உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளும், கட்டளைகளும் பிராந்திய மொழியில் இருந்தால் வழக்காளிகளுக்கும், இம்மன்றங்களுக் கும் சௌகர்யமாகும் என்பதையும் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும். உயர் நீதிமன்றங்களின் எல்லா தீர்ப்புகளும், கட்டளைகளும், ஆணைகளென்று சொல்லப்படுவதில்லை. ஒரு சில வழக்குகள்தான் உச்ச நீதிமன்றத்தில் மேல் வழக்காடச் செல்லுகின்றன. ஆகவே, அறிக்கையில் செல்லத் தகுந்த தீர்ப்புக்களையும், உச்ச நீதிமன்றத்தில் மேல் வழக்காடச் செல்லும் வழக்குகளின் தீர்ப்புக்களையும் நம்பிக்கையாக மொழிபெயர்க்க முடியவேண்டும். நாளடைவில், அறிவாளி களிடம் முக்கியமாக வழக்கறிஞர்களிடம் ஹிந்தி மொழி ஓரளவு பரவிய பிறகு, வருங்காலத்திலும், தற்போதுள்ளது போல் ஒரு உயர் நீதிமன்றத்தில் ஆஜராகும் வழக்கறிஞர் அடுத்த உயர் நீதிமன்றத்தில் வழக்காட வசதியேற்படும் என்று இக்கமிட்டி எதிர்பார்க்கிறது. உச்ச நீதிமன்ற நீதி பதிகளைத் தேர்ந்தெடுப்பதில் கஷ்டங்கள் இருக்கின்றன என்ற பயத்தையும், இதே மாதிரி, நாளடைவில், தீர்த்துவிடலாம். இதன் நடுவில், உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றங் களிலும், சந்தேகமில்லாமல் ஆங்கில மொழி உபயோகத்தி லிருந்துவரும். கமிஷன் சிபார்சு செய்தபடி, இம்மன்றங் களில் பொதுவாக மொழிமாற்றத்திற்குப் பின்னும் தனிப் பட்ட நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் ஆங்கில மொழியை உபயோகிக்கலாம். மற்ற துறைகளைப்போல், நியாயம் வழங்கும் துறையிலும், அந்தந்த ராஜ்யங்களில் பிராந்திய மொழிகளுக்குப் பூரண சுதந்திரம் உண்டென்பது இக்கமிட் டியின் கருத்து. இதன்படி, ஒரு ராஜ்யத்தின் ஆட்சி மொழி யையோ, அல்லது அதன் பிராந்திய மொழிகளையோ ராஷ்ட்ர பதியின் முன் அனுமதியின்பேரில் தீர்ப்புக்கள், டிகிரிகள் கட்டளைகள், இவைகளுக்குப் பயன்படுத்துவதற்கும், அறிக் கையில் வரக்கூடிய எல்லாத் தீர்ப்புகளையும், கட்டளைகளையும் ஹிந்தியில் மொழிபெயர்க்கவும் வசதி செய்யவேண்டுமென்று இக்கமிட்டி சிபார்சு செய்கிறது.

சட்டத்தைப் பொறுத்தவரை மொழிமாற்றத் திற்கென ஆரம்ப வேலைகள்

51. சட்டமியற்றுதலிலும், நியாயம் வழங்குவதிலும், மாற்றமேற்பட, கீழ்க்கண்ட வழிகள் தேவையென்று கமிஷன் எண்ணுகிறது:—

(1) ஒரே தரமுடைய சட்ட அகராதியைத் தயாரித்தல்.

(2) மத்திய, ராஜ்ய சட்டங்களையெல்லாம் ஹிந்தியில் மொழிபெயர்த்து நிலைபெற்ற சட்டப் புத்தகத்தை வெளியிடுதல்.

52. ஒரேதரமுடைய சட்ட அகராதியைப் பொறுத்த வரை, நமது பழைய நூல்களிலிருந்தும், பழைய சுதேச மன்னர்களின் காலத்தில் உபயோகத்திலிருந்த, கலைச்சொற்களிலிருந்தும், சொல்லாட்சியிலிருந்தும், எங்கு தேவையோ அங்கு பன்னாட்டுக் கலைச்சொற்களிலிருந்தும் எடுத்துக் கொள்ளலாம் என்று கமிஷன் அபிப்பிராயப்பட்டது. சட்டச் சொற்களும், சொல்லாட்சிகளும் நாட்டின் எல்லாப் பாகங்களிலும், எல்லோராலும் ஒரே பொருளில் அறியப்படுவது. நாட்டின் நீதித்துறை ஒற்றுமை, சட்ட ஒற்றுமைக்கு இன்றியமையாதது என்று இக்கமிஷன் கருதுகிறது.

இக்கமிட்டி பொதுவாக இவற்றை ஆமோதிக்கிறது. ஹிந்தியிலும், மற்ற பிராந்திய மொழிகளிலும் ஒரேமாதிரியாக கலைச்சொற்களையும், சட்டச் சொற்களையும்கொண்ட ஒரு அகராதியைத் தயாரித்தல், மத்ய, ராஜ்ய சட்டங்களின் மொழிபெயர்ப்புக்கு இது பெரிதும் பயன்படும். எங்கு ஒரே வகைச் சொற்கள் கிடைக்கவில்லையோ, அங்கு பிராந்திய மொழிகளில் மாற்றுச் சொற்களைக் கொடுக்கவேண்டும்.

இவ்வகராதி இச்சொற்களுக்கு வரையறுத்த பொருளைக் குறிக்கும். ஏனென்றால், சட்டமொழியின் அவசியமாக இருக்கும். இதனால் சட்டங்களை ஹிந்தியிலும் மற்ற மொழிகளிலும் மொழிபெயர்ப்பது இலகுவாக இருக்கும். இம் மொழிபெயர்ப்புக்களை, அதிகாரபூர்வமாகச் செய்தோ, அல்லது தகுந்த சட்டசபைகள் மூலம் மறுபடியும் சட்டமாக்கவோ வேண்டும். இவ்வேலையின் கடினத்தைக் கவனத்திலிருத்தி, எல்லாப் பிராந்திய மொழிகளிலுமுள்ள சட்ட நிபுணர்களைக்கொண்டு ஒரு நிரந்தரக் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்றும், இதனால் சட்டக் கலைச்சொற்கள், நிகண்டுக்கள் தயாரிக்கும் வேலையைத் திட்டம் போட்டு முடிப்பதும், சட்டங்களை ஹிந்தி மொழிபெயர்ப்பதும் சுலபமாகும் என்றும் கமிஷன் எண்ணுகிறது. இந்த நிரந்தரக் கமிட்டி தயார் செய்யும் சட்டச் சொல்லாட்சிகளால் தகுந்த மத்திய அரசாங்க அதிகாரிகளுடன் ஆலோசனை செய்துகொண்டு, ராஜ்யச் சட்டங்களை, ஆங்கிலத்திலிருந்து தங்கள் ஆட்சிமொழிகளில் மொழிபெயர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று ராஜ்ய அரசாங்கங்களுக்குச் சிபார்சு செய்கிறது.

53. சட்டக் கலைச்சொற்களை உற்பத்திசெய்யும் வேகத்தைத் தற்காலத்திலிருப்பதைவிட மிகவும் விரைவாக்க வேண்டுமென்றும், தகுந்த அதிகாரியின் அத்தாட்சியின்பேரில், ஒவ்வொரு குறிப்பிட்ட நாளில் இம்மாதிரியான சட்ட நிகண்டுக்களை பிரசுரிக்க வேண்டுமென்றும் கமிஷன் சிபார்சு செய்கிறது. இச்சிபார்சுகளை இக்கமிட்டி ஆமோதிப்பதுடன் இவைகளை நடைமுறையில் கொண்டுவரவும் சிபார்சு செய்கிறது.

பிரிவு 4

இலக்கியங்களின் வடிவம்

யூனியன் அரசாங்க அலுவல்களுக்கு உபயோகப்படும் இலக்கங்களின் வடிவம்

54. 343 (1) பிரிவுப்படி யூனியன் ஆட்சி அலுவல்களுக்குப் பயன்படும் இலக்கங்களின் வடிவமானது, இந்திய இலக்கங்களின் பன்னாட்டு வடிவமேயாகும். ஆனால், இந்தப் பிரிவின் 2-வது பகுதியின்படி, அரசியலமைப்புத்தொடங்கி 15 ஆண்டுகள் வரையிலும், யூனியன் அலுவல்களில் ஏதாவது சிலவற்றிற்கு, பன்னாட்டு வடிவங்களுடன் தேவநாகரி வடிவமும் உபயோகிக்க ராஷ்ட்ரபதி கட்டளையிடலாம். இந்தப் பிரிவின் மூன்றாவது பகுதியின்படி, 1965-ம் ஆண்டிற்குப் பிறகும், சட்டபடி, பாராளு மன்றம் குறிப்பிட்ட காரியங்களுக்கு தேவநாகரி இலக்கங்கள் வடிவத்தை உபயோகிக்கத் தீர்மானிக்கலாம். நிபந்தனைக் குறிப்பிலுள்ள ஒரு நிபந்தனைப்படி, யூனியன் அலுவல்களில் ஒன்றிற்காவது, அல்லது அதற்கு மேற்பட்டதற்காவது, எந்த வகையான வடிவத்தை உபயோகிக்கவேண்டுமென்று சிபார்சு செய்யவேண்டும். அவர்கள் தங்கள் அறிக்கையில் கூறுவதாவது:—''தென்னாட்டில் உள்ள பிராந்திய மொழிகளில் இலக்கங்களின் பன்னாட்டு வடிவமே மிகுதியும் பயன்படுத்தப்படுகிறதென்பதாலும், அரசியலமைப்பு யூனியன் அலுவல்களுக்கும் ராஜ்யங்களினிடையே உள்ள தொடர்புகளுக்கும் இந்த இலக்கங்களையே பயன்படுத்த வேண்டுமென்று கூறுவதாலும், இந்தியா முழுவதும் ஒரே வகையான இலக்கங்களை ஏற்றுக்கொள்வதானால் இந்த இலக்கங்களையே ஏற்றுக்கொள்ளவேண்டும்.'' இதன்படி, இலக்கங்களின் பன்னாட்டு வடிவத்துடன் தேவநாகரி வடிவத்தையும் சேர்த்து உபயோகப்படுத்த ராஷ்ட்ரபதிக்கு ஒரு சிபார்சும் இக்கமிஷன் செய்யவில்லை. ஆனாலும், யூனியன் அரசாங்கம், வெவ்வேறு அமைச்சுக்களுடைய வெளியீட்டுக்களிலும், அவைகளின் பொதுஜனத் தொடர்புக்கேற்ப, பன்னாட்டு வடிவங்களுடன் தேவநாகரி இலக்கங்களையும் சேர்க்க, மாறாத ஒரு கொள்கையை ஏற்படுத்த வேண்டுமென்று கூறுகிறது. பன்னாட்டு வடிவங்களுடன் தேவநாகரி இலக்கங்களைச் சேர்க்கும் கொள்கையை உருவகப்படுத்தும்பொழுது எந்த விஷயத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் கவனிக்கவேண்டுமென்று இக்கமிட்டி உணர்கிறது. இப்படியாக, பொது நிர்வாக அல்லது இலக்கியங்களைப் பற்றின வெளியீடுகளில் தேவநாகரி வடிவங்களும் உபயோகப்படுத்தலாம். விஞ்ஞான, தொழில்நுட்ப, கணித வெளியீட்டுக்களில் பன்னாட்டு வடிவங்களே, பொது மக்களின் உபயோகத்திற்கேற்றது என்று எடுத்துக்கொள்ளவேண்டும்.

பிரிவு 5

யூனியன் அரசாங்க பாஷையாகவும், யூனியன்—ராஜ்ய அலுவல்களுக்கும், ராஜ்யங்களுக்கிடையேயும் உபயோகப்படும் மொழியாக ஹிந்தியை ஆங்கிலத்திற்குப் பதிலாகக் கொண்டுவருவதின் பல்வேறு நிலைகளும், கால அளவும்,

55. யூனியன் அரசாங்க பாஷையாகவும், யூனியன்—ராஜ்ய அலுவல்களுக்கு அரசாங்க பாஷையாகவும் படிப்படியாக ஹிந்தியைக் கொண்டுவர, பூர்வாங்க நடவடிக்கைகளைக் கமிஷன் குறிப்பிட்டிருக்கின்றது. ஆனால், இவற்றைச் செய்து முடிக்கவேண்டிய முறையைப்பற்றியும், கால அளவைப் பற்றியும், மத்ய அரசாங்கம், பூர்வாங்க வேலையின் அளவையும், அரசாங்க ஊழியர்களின் மொழி அறிவையும், அவர்கள் பயிற்சி முடியும் சுமாரான கால நிர்ணயத்தையும், இன்னும் பல காரணங்களையும் ஆராய்ந்து முடிவு செய்து கொள்ளும். இவ்வாறு தயார் செய்யப்பட்ட கால அளவை அவ்வப்பொது ஆராய்ந்து, அனுபவத்தின் பேரிலும், ஊழியர்களின் பயிற்சியின் முன்னேற்றத்தைப் பொறுத்தும் மற்றும் சில ஆரம்பு நடவடிக்கைகளின் பேரிலும், சரிசெய்துகொள்ள வேண்டுமென்றும் கமிஷன் கருதுகிறது. இம்மாதிரித் தயார் செய்யப்பட்ட கால அட்டவணையை, நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டிய பொறுப்பு இருப்பதால், மத்ய சர்க்காரால்தான் அமுலுக்குக் கொண்டுவரவேண்டு மென்றிருந்தாலும், இம்மாதிரித் திட்டங்கள், மற்ற நடைமுறைக்குச் சாதகமான காரணங்களும், இப்பயிற்சியின் வளர்ச்சியைக் கொண்டும், அடிக்கடி சரிசெய்யப்படவேண்டு மென்பதையும் நினைவிலிருத்திக் கொள்ளல் வேண்டும். ஆகவே, கமிஷனின் சிபார்சின்படி, இத்திட்டத்திற்கான செய்முறையைத் தயாரித்து, நடைமுறையில் கொண்டுவரவேண்டிய பொறுப்பு யூனியன் அரசாங்கத்தினிடம் விட்டுவிடவேண்டியது என்று இக்கமிட்டி கருதுகிறது. இவ்வாறு செய்முறையைத் தயாரிக்கும்பொழுது, அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபாரிசுகளைப் பற்றின இக்கமிட்டியின் தீர்மானங்களை, யூனியன் அரசாங்கம் சந்தேகமின்றி கவனிக்கும்.

பிரிவு 2

56. அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகளை அறிக்கையில் கண்டவாறு வரிசையாகக் கொடுத்து, அவற்றைப்பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்களையும் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	அத்தியாயம் 5 **கலைச்சொற்கள்**	
1	கலைச்சொற்களை உண்டாக்கும்பொழுது தெளிவு, வரையறுத்த தன்மை, எளிமை ஆகியவற்றை முக்கியமாகக் கருதவேண்டும். "மொழித் தூய்மை" என்பது பற்றின பிடிவாதக் கொள்கையை அனுசரிக்கக் கூடாது.	
2	பழங்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்த விஷயங்களில் இன்று கலைச்சொற்களைச் சேகரிப்பதற்குரிய மூலப் பொருள்கள் மிகுதியாக உண்டு. அன்றியும் இன்றுள்ள கைத்தொழில்களைச் செய்வோரிடம் அன்றாட வாழ்க்கையின் பயன்படும் பல சொற்களும், சொல்லாட்சிகளும் கலைச்சொற்களை ஆக்கப் பயன்படும். இவற்றை நன்கு ஆராயவேண்டும். பொருத்தமான இடங்களில் பன்னாட்டுக் கலைச்சொற்களை அப்படியே ஏற்றுக்கொண்டோ, இந்திய மொழிகளின் மரபுக்கேற்றபடி மாற்றி அமைத்தோ பயன்படுத்தவேண்டும்.	இச்சிபார்சுகளை ஏற்றுக் கொள்ளலாம்.
3	கலைச்சொற்களை ஆக்கும்பொழுது, கூடுமானவரை எல்லாப் பிராந்திய மொழிகளுக்கும் பொதுவாக இருக்கின்ற சொற்களைப் பொறுக்குவதையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.	
4	யூனியன் அரசாங்க பாஷைக்கும், பிராந்திய மொழிகளுக்கும் இந்தக் கலைச்சொற்களை ஆக்கும்பொழுது இவற்றினிடையே ஒரு ஒருமைப்பாட்டைக் காணும் முறையில் தேவையான அளவு வழிதுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.	
5	இதுவரை இந்திய அரசாங்கக் கல்வியமைச்சு இம்முறையில் செய்திருக்கும் வேலைகளை ஆராயுமிடத்து இன்னும் விரைவாகவும், ஒருமைப்பாட்டுடனும் பல்வேறு அமைப்புகளும் சேர்ந்து இவ்வேலையைச் செய்யலாம் என்று நினைக்க இடம் ஏற்படுகின்றது.	

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்

அத்தியாயம் 7

பொதுப் பணியில் மொழியின் இடம்-1

யூனியன் அரசாங்க பாஷை

நிர்வாகத் துறையில் மொழிமாற்றத்திற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் கீழ்க் காண்பவை:—

(1) ஆட்சித் துறையில் பயன்படுத்தப்படுகின்ற பிரத்யேகமான கலைச்சொற்களைத் தயாரித்து தரப்படுதல்.

(2) ஆட்சித் துறைக்குத் தேவையான சட்டங்கள், ரெகுலேஷன்கள், கையேடுகள், குறிப்புப் புத்தகங்கள், ஏனைய வழித்துறை இலக்கியங்கள் ஆகியவற்றை ஹிந்தியில் மொழிபெயர்த்தல்.

(3) புதிய இடைநிலை மொழியைத் தகுந்த அளவுப் பரிச்சியத்தோடு வசதியாகப் பயன் படுத்தக் கூடிய முறையில் ஊழியர்கள் அந்தந்த துறைக்கு ஏற்றபடி மொழி வன்மை பெறுமாறு பயிற்சி பெறவேண்டும்.

(4) புதிய இடைநிலை மொழிக்குத் தேவையான யந்திர சாதனங்களை விரைவில் தயாரித்து அளித்தல். அதாவது, தட்டெழுத்து யந்திரங்கள், சுருக்கெழுத்தாளர் அச்சு யந்திரங்கள், நகல் செய்யும் இயந்திரங்கள், தொலை அச்சு இயந்திரங்கள், ஆகியவை புதிய இடைநிலை மொழிக்கு ஏற்ப வேண்டும்.

மேலே 1-ல் கூறப்பட்டுள்ளது 5-ம் அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ள கலைச்சொற்களின் பொதுப் பிரச்னையைப் பொறுத்ததே.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
6	மேலே 2-ல் சொல்லப்பட்ட முறையில் இந்த இலக்கியங்களை மொழிபெயர்க்கும்பொழுது ஒரு வகையான ஒருமைப்பாடும் ஒரே தன்மையும் கடைப்பிடிக்கப்படவேண்டும். அதற்கேற்றபடி மத்திய அரசாங்கத்தின் ஒரு அதிகாரியிடத்து இத்துறையின் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட வேண்டும்.	இது ஏற்றுக்கொள்ளப் படலாம்.
7	மேலே 3-ல் கூறப்பட்டதற்கு (ஊழியர் பயிற்சி) இப்பொழுது இந்திய அரசாங்கம் தன்னுடைய ஊழியர்கள் தாமே ஹிந்தி கற்றுக்கொள்வதற்கு செய்துள்ள ஏற்பாடுகளை ஆராய்ந்துள்ளோம். இவ்வாறு விரும்பினால் கற்றுக்கொள்ளும் முறையில் தகுந்த அளவு பயன் ஏற்படவில்லை என்று அனுபவத்தின் மூலம் தெரிந்தால் அரசாங்கம் தன்னுடைய மொழிக் கொள்கைக்கு ஏற்ப, அரசாங்க ஊழியர்கள் ஹிந்தி மொழியில் இன்ன தகுதி பெறவேண்டுமென்று ஒரு காலவரையறைத் தந்து கட்டுப்படுத்தலாம்.	ஹிந்தியில் தேர்ச்சி கட்டாயமென்று அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் விதிக்கலாம்.
8	மேலே 4-ல் சொல்லப்பட்டதற்குத் தட்டெழுத்தாளர்கள் சுருக்கெழுத்தாளர்கள் ஆகியவர்கட்கு பிரத்தியேகமான விடுமுறை தந்து, பிரத்யேகமான வசதிகள் செய்துகொடுத்துப் புதிய இடைநிலை மொழியில் தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் பழகிக்கொள்ளுமாறும் புதிய யூனியன் மொழியை அறிந்துகொள்ளுமாறும் வசதி செய்ய வேண்டும்.	இது ஏற்றுக்கொள்ளப் படலாம்.
9	ஆட்சித் துறையில் பல்வேறு துறைகளுக்கும் பணிகளுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது ஆங்கிலத்தில் எந்த தகுதிபெற்றிருக்க வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளதோ, அதே அளவு தகுதி ஹிந்தி மொழியிலும் தேவைப்படும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. மாற்றக் காலத்தில் ஓரளவு குறைந்த தரமாக இருப்பினும் போதுமானது.	இதுவும் கொள்கையில் ஏற்கப்படலாம். ஆனால் மாற்றக்காலத்தில் சற்றே குறைந்த தரம் போதுமானது.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
10	பொதுவாகக் கூறினல், குறிப்பிட்ட கால அளவில், தகுந்த அளவு ஹிந்தி பயிற்சி பெறுதவர்கட்குத் தண்டனை கொடுப்பது பொருத்தமானதுதான். என்றுலும் குறிப்பிட்ட குறைந்த அளவு தேவைக்குமேல் பெற்றுள்ளவர்கட்குப் பரிசு முதலியன வழங்குதல் மிகவும் பொருத்தமுடையது.	இச்சிபார்சு தள்ளப்படலாம்.
11	யூனியன் அரசாங்கத்தின் ஆட்சி இயந்திரத்தின் சில பகுதிகளில் தொழில் நுட்ப, ஆங்கிலச் சொற்களையே தொடர்ந்து பயன்படுத்தி வரலாம். இந்தியக் கலைச்சொற்களை அத்துறைகளுக்குத் தேடி எடுக்கவேண்டிய இன்றியமையாமையில்லை. அதேபோல வெளி நாடுகளோடு தொடர்புகொள்ளும் பகுதிகளில் ஆங்கிலத்திலேயே, கடிதப்போக்கு இருந்து வரலாம்.	ஆங்கிலச் சொற்களை இந்தியச் சொற்களுக்குப் பதிலாக, வேண்டும் காலத்திற்கு, உபயோகப் படுத்தலாம். நெடுநாட்களுக்கு உபயோகிக்கப் படக்கூடாது என்பதைத் தவிர, இச்சிபார்சு ஏற்றுக்கொள்ளப்படலாம்.
12	இந்திய அரசாங்கத்தின் அமைச்சுக்கள், இலாகாக்கள் ஆகியவற்றில் மொழி மாற்றம் நடைபெறுவதோடு ஆட்சி அமைப்புக்களான, ரயில்வேக்கள், தபால், தந்தி, கலால், சுங்கம், வருமான வரி ஆகிய அமைப்புக்களிலும் இம்மொழிமாற்றம் நடைபெற வேண்டும். இந்த அமைப்புக்களின் பகுதிகளும், கிளைகளும், நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அமைக்கப் பட்டுள்ளன. ஆதலால், இப்பிரச்னை பிரத்யேகமாக ஆராயப்பட வேண்டியுள்ளது. அதாவது, ஆட்சிப் பொறுப்புடைய இந்த அமைப்புக்கள் நிலைபெற்ற முறையில் இரட்டை மொழி பேசும் அமைப்புகளாகவே இருத்தல்வேண்டும். அதாவது, உட்துறை அலுவல்களுக்கு, ஹிந்தி மொழியைப் பயன்படுத்திக்கொண்டு பொதுமக்களோடு தொடர்புகொள்ளப் பிராந்திய மொழியைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.	இது ஏற்கப்படலாம்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
13	இந்திய அரசாங்கத்தின் இந்த ஆட்சி அமைப்புக்களிலும் இலாகாக்களிலுமுள்ள ஊழியர்கள் இவ்வாறு இரட்டைமொழித் தேவையை பூர்த்தி செய்யவேண்டி இருந்ததினுலும், அதற்கேற்ற முறையில் ஊழியர் அமைப்புமுறை மாற்றியமைக்கப்படவேண்டும். அதாவது, ஒரு முகப்படுத்தாமல், பன்முகப்படுத்தவேண்டும். ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, தகுதி முதலியன, அதற்கேற்ற முறையில் மாற்றியமைக்கப் படவேண்டும்.	இச்சிபார்சுகள் ஏற்றுக் கொள்ளப்படலாம்.
14	வேலை அளிப்பவர் என்ற நிலையுள்ள இந்த அகில இந்தியா இலாகாக்களும் அமைப்புக்களும். தன் கீழ் வேலை பார்க்கும் ஊழியர்கள் ஓரளவு ஹிந்திப் பயிற்சி உடையவர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் (தேவைப்பட்ட இடங்களில் அந்தப் பிராந்திய மொழிகளில் பயிற்சி உடையவர்களாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதும்) நியாயமானதே. சிறு பகுதிகளாலும், பிராந்தியங்களிலும் தேவைக்கேற்றபடி ஹிந்தியின் தரத்தைக் குறைத்துக் கொள்ளலாமென்றாலும் தலைமைக் காரியாலயத்தைப் பொறுத்தமட்டில் முழு வேலைகளும் ஹிந்தி மொழியில் நடைபெறுமாதலால் அங்கு பணியாற்றுபவர்கள் பெரிதும் ஹிந்தியறிவு படைத்தவர்களாக இருக்கவேண்டும்.	
15	மொழிமாற்றக் காலத்தில் வேலை கிடைக்கும் சந்தர்ப்பம் அனைவருக்கும் சமமாக இருக்கவேண்டுமென்பதற்காக எதிர்பார்க்கப்படும் ஹிந்தியின் அளவை மிகுதியும் குறைத்து வைத்துக் கொள்ளலாம். குறைந்துள்ள ஹிந்தி அறிவை வேலைக்குச் சென்றபிறகு பிராந்தியங்களில் ஹிந்தி போதனை வளர்ச்சியடைய அடைய அதற்கேற்றபடி இப்பரிட்சைகளில் எதிர்பார்க்கப்படும் தரமும் உயர்ந்துகொண்டே சொல்லலாம்.	

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
16	அகில இந்திய ஆட்சி அமைப்புக்களாக உள்ள இரயில்வே, தபால் தந்தி, ஆகியவைகள் பொதுமக்களோடு தொடர்பு கொள்ளும்பொழுது அந்தப் பொதுமக்களுக்கு வசதியாக உள்ள முறையிலேயே மொழியைப் பயன் படுத்தவேண்டும். இந்த இலாகாக் களை வைத்துக்கொண்டு பொதுமக் களுக்கு இடையூருக இருந்தாலும் கவலைப்படாமல் ஹிந்தி மொழியைப் பரப்ப இதனை ஒரு கருவியாகப் பயன் படுத்தக் கூடாது. குறியீட்டுப் பல கைகள், கைகாட்டிகள். ஆகிய இடங்களில் பொதுமக்களுக்குப் பழக் கம் உண்டாக்குவதற்காக; ஹிந்தி மொழியை பயன்படுத்தினுலும், கூடவே பிராந்திய மொழியிலும் தேவையுள்ள இடத்தில் ஆங்கிலத் திலும் அது எழுதப்படவேண்டும்.	இச்சிபார்சுகள் ஏற்கப் படலாம்.
17	புதிதாக ஆக்கப்படும் ஹிந்தி கலைச் சொற்களை ஆராயவேண்டும். சிறப் பாக அகில இந்திய ஆட்சித்துறையில் பயன்படும் சொற்கள் நாட்டின் பல் வேறு பிராந்தியங்களிலும் வழங்கப் படும்பொழுது அப்பிராந்தியத்தில் அச்சொல்லுக்குள்ள பொருளோடு முரண்படாத வகையில் பயன்படுத்தப் படவேண்டும். பல்வேறு பிராந்தி யங்களிலும் பல்வேறு பொருள்க ளோடு வடமொழி வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனல் பொருத்தமற்ற முறையில் இவற்றை பயன்படுத்தக் கூடாது. இப்பொருளைத் தெரியாமல் சொற் களைப் பயன்படுத்துதல், புதிய இடை நிலை மொழியை அவமானப்படுத்துவ தாகும்.	
18	இப்புதிய இடைநிலை மொழிப் பயிற் சியை எல்லா ஊழியர்கட்கும் தரு வதை விட்டுவிட்டு, மொழிபெயர்ப் புக்குரிய தனிப்பட்ட சிறு இலாகாக் களை ஏற்படுத்துவது பொதுப் பணத் தை வீணடிப்பதாகும். ஆட்சி அமைப்பில் நிலைபெற்ற முறையிலும் மொழிமாற்றக்காலத்தில் குறிப்பிட்ட	இதுவும் ஏற்கப்படலாம்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	கால அளவிலும் மொழிபெயர்ப்பு அமைப்புக்கள் இருக்க வேண்டியது நியாயம் என்ருலும் ஊழியர்கள் தங்களுடைய அலுவல்களை நேரடியாக ஹிந்தி மொழியில் செய்வதற்கு இது மாற்று முறையாக இருக்கமுடியாது. எங்களுடைய கருத்துப்படி மூல வேலையை ஆங்கிலத்தில் செய்து அதனை பொதுப் பணத்தை செல வழித்துப் பல்வேறு படிகளிலும் ஹிந்தியில் மொழிபெயர்க்கும் முறையை யூனியன் ஆட்சி விவகாரங் களுக்குப் படிப்படியாக ஹிந்தியைப் பயன்படுத்தும் முறை இதுதான் என்று அரசியலமைப்பு கூறவில்லை.	
19	புதிதாக யூனியன் அரசாங்கப் பணி களுக்கு வருகிறவர்கள் குறைந்த அளவு ஹிந்தியறிவு பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்று ஒரு எல்லையை நிர்ணயித்து அதற்குரிய அறிவிப்பை முன்கூட்டியே செய்து விடுமேயானுல் அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. அப்படியிருந்தும் இருக்கின்ற குறை பாட்டை வேலைக்குச் சென்ற பிறகு பயிற்சி கொடுத்து மாற்றியமைத்துக் கொள்ளுமேயானுல் அவ்வாறு கட்டுப்பாடு செய்வதில் தவறு ஒன்றும் இல்லை.	இச்சிபார்சு ஏற்கப்பட லாம்.
20	45 வயதிற்கும் மேற்பட்ட அதிகாரிகள் விஷயத்தில் தேவைப்படுகின்ற ஹிந்தி யறிவு ''புரிந்துகொள்ளும் அறிவாக'' இருந்தால் போதுமானதென்றும் அவர்களுடைய ஆங்கில அறிவிற்கு ஏற்ற அளவில் ஹிந்தியறிவு இருக்க வேண்டிதில்லை என்றும் கருதுகிருேம். தேவைப்பட்டால் இவ்விஷயங்களுக்கு தனிப்பட்ட சோதனைகளை ஏற்படுத்த லாம்.	45 வயது மேற்பட்டவர் களுக்குக் கட்டாய ஹிந்தியறிவு அவசிய மில்லை என்று இக்குழு கருதுகிறது.
21	யூனியன் அரசாங்கத்தில் எந்த ஒரு விவ காரத்திற்கும் இப்பொழுது பயன் பட்டு வருகின்ற ஆங்கில மொழியை குறைக்க வேண்டுமென்ற எந்த வித மான சிபார்சையும் நாங்கள் செய்ய வில்லை.	இது அங்கீகரிக்கப்படலாம்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
22	அரசியலமைப்பில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் யூனியன் ஆட்சி விவகாரங்களில் மொழிமாற்றம் செய்வதற்குரிய ஒரு அட்டவணைக் கால அடிப்படையில் தருவதற்கு எங்களால் இயலவில்லை. இந்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களெல்லாம் ஒரு பொது அமைப்பின் உறுப்புக்கள் ஆதலினால் படிப்படியாக, ஹிந்தியைப் பயன்படுத்துவது என்பது பல்வேறு அமைச்சுக்களிலும் இலாகாக்களிலும் ஒரே நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இந்திய அரசாங்கத்தின் எல்லா அமைச்சுக்களிலும், இலாகாக்களும் மேற்கொண்டுள்ள ''நடைமுறைத்திட்டம்'' பற்றி நாங்கள் ஒன்றும் அறிய முடியவில்லை. எனவே, அவர்களுக்குள்ள பிரத்யேகமான தொல்லைகள், அடிப்படை வேலையின் அளவு, இன்றுள்ள அரசாங்க ஊழியர்களின் மொழியறிவு எல்லை, புதிய இடைநிலை மொழியில் அவர்களனைவரும் பயற்சிபெறக் கூடிய கால அளவு, ஆகியவற்றைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. எனவே, அடிப்படையான முதல் தேவைகளை நாங்கள் வெளியிட்டுள்ளோம். அவற்றைப் படிப்படியாக நிறை வேற்றுவது, அவற்றோடு தொடர்புடைய பிரச்னைகளை ஆராய்வது, நடைமுறைத்திட்டம் வகுப்பது, அதற்கேற்ற கால அட்டவணை தயாரிப்பது, ஆகிய இவற்றை எல்லாம் தேவையான நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு இந்திய அரசாங்கம் தானே முடிவு செய்ய வேண்டும்.	ஆட்சிமொழிக் கழகத்தின் சிபார்சுகளைப் பற்றின இக்கமிட்டி அபிப்பிராயங்கள் பிரகாரம் ஒரு நடைமுறைத் திட்டத்தை அரசாங்கம் வகுக்கவேண்டுமென்று இக்குழு விரும்புகின்றது.
23	இந்தியத் தணிக்கைத் தலைவர் கீழுள்ள இந்தியத் தணிக்கை, கணக்கு, இலாக்காவின் பிரத்யேகமான நிலையும் ஆராயப்பட்டுள்ளது. ஒரு ராஜ்யம் அதனுடைய பிராந்திய மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்ட பிறகு அந்த ராஜ்யத்தில் வேலை செய்கின்ற இந்தியக் கணக்குத் தணிக்கை இலாகாவிலுள்ள ஊழியர்கள், அந்த ராஜ்யத்தில் வழங்கும் மொழியில்	இச்சிபார்சு ஏற்கப்படலாம்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளுமன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	தகுந்த அறிவு பெற்றவர்களாக இருந்து தங்கள் கடமையைச் செய்யவும், கணக்குகளைத் தயார் செய்யவும் தகுதிபெற்றிருக்க வேண்டும். அதாவது ராஜ்யத்திலுள்ள மண்டலக் கணக்கர், அதாவது தணிக்கைத் தலைவரின் பிரதிநிதி, அவருடைய அலுவலகத்திற்கு அனுப்பப்படும் பிராந்திய மொழியில் எழுதப்பட்ட கணக்குகளிலிருந்து கணக்கு தயாரிக்கவும், பிராந்திய மொழியில் குறிக்கப்பட்டுள்ள ஆட்சித்துறை முடிவுகளை அறிந்துக்கொள்ளவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.	
24	இப்பிரச்னையை சமாளிப்பதற்கு ''தணிக்கையை ராஜ்ய அதிகாரத்திற்கு உள்ளடக்குதல்'' என்பது ஒரு வழியாகக் கூறப்பட்டது. என்றாலும் அத்தகைய ஒரு மறுவழி அரசியலமைப்பில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்துமாதலால் இப்பொழுது தேவையில்லை என்று கூறுகிறோம். இன்றுள்ள அர்சியலமைப்பின் ஏற்பாடுகளின்படியே இதற்கு ஒரு வழி காணமுடியும் என்று கருதுகிறோம். ஒரு வகையில் மண்டலக் கணக்கர்களின் அலுவல்களே அந்தந்த ராஜ்யங்களிலுள்ள ராஜ்ய மொழியில் எழுதப்பட்ட கணக்குகளைப் பரிசோதனை செய்யமுடியும். அதே அலுவலகம் யூனியனைப் பொறுத்த மட்டில், கணக்கு, தணிக்கை செய்யும் வேலையை மேற்கொள்ளுகின்ற இந்தியத் தணிக்கைத் தலைவரின் ஓர் உறுப்பாக இருந்து பணியாற்ற முடியும். இந்தியக் கணக்கு, தணிக்கை இலாகாவின் அமைப்பையும், பணியாளர்கள் தேர்ந்தெடுக்கும் நிலையையும் மாற்றியமைக்கவேண்டும். நாடுமுழுவதிலும் பரவியுள்ள மத்திய அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்களிலும் சொல்லிய முறையிலேயே இந்த மாற்றமும் ஏற்படவேண்டும்.	இச்சிபார்சை ஏற்றுக் கொள்ளலாம்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்

அத்தியாயம் 8

பொது ஆட்சியில் மொழி-2

ராஜ்ய ஆட்சி விவகாரங்களில் ஹிந்தி மொழியைப் பயன்படுத்துவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி

25	தம்மிடம் ஊழியம் செய்யும் எந்த அதிகாரிகள் எந்த நிலையில், எந்த சந்தர்ப்பத்திற்காக யூனியனோடோ, அல்லது மற்ற ராஜ்யங்களோடோ வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ எப்பொழுது உறவுகொள்ள நேரிடும் என்பதை ராஜ்யங்கள் தாமே முடிவு செய்யவேண்டும். இராஜ்ய அரசாங்கங்கள் எத்தகைய ஊழியர்களை மேற்கொண்டு ஹிந்தி மூலம் கடிதப் போக்குவரத்து செய்வதற்கு எம்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் ஊழியர்களுக்கு எத்தகைய பயிற்சி அளிக்கப்படவேண்டுமென்பதையும் அவர்களே முடிவுசெய்யவேண்டும்.	இச்சிபார்சு ஏற்கப்படலாம்.
26	யூனியன் அரசாங்கத்தைப்போலவே ராஜ்ய அரசாங்கங்களும் தம்மிடம் பணிபுரிகின்ற ஊழியர்கள் ஏனைய ராஜ்யங்களோடும், யூனியனோடும் தொடர்புகொள்ளக் கூடிய தேவையைப் பெற்றிருப்பார்களேயானல் புதிய இடைநிலைமொழியில் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துவது நியாயமானதே ஆகும். இதற்கு மேற்பட்ட நிலையில் ஹிந்தி மொழியில் அறிவு பெறுவதென்பது பரிசு கொடுத்தல் மூலம் தூண்டப்படவேண்டுமே தவிர, கட்டாயப்படுத்தலின் மூலமும் தண்டனை கொடுத்தல் மூலமும் செய்யப்படக் கூடாது. என்றாலும், அந்தந்த ராஜ்யங்களே இதனை நன்கு முடிவு செய்யக்கூடிய கருவிகளாகும்.	இச்சிபார்சுகள் ஏற்கப்படலாம். (26, 27)
27	யூனியன் அரசாங்கத்திலிருந்து ஹிந்தி பேசும் ராஜ்யத்திற்குச் செல்லும் ஒரு செய்தி அறிக்கை ஆங்கிலத்திற்குச் சென்றாலும் ஒரு ஹிந்தி மொழி பெயர்ப்போடு செல்லவேண்டும். எப்பொழுதாவது அந்த இராஜ்யம் இங்ஙனம் வேண்டிக்கொண்டால்	

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளுமன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	இது உறுதியாகச் செய்யப்பட வேண்டும். ஆட்சித்துறையில் 1965-க்கு முன்னரே ஹிந்தியைப் பயன்படுத்துகின்ற இத்தகைய முறை ஏற்படுமேயானால் சொல்லாட்சி முதலியவற்றை அப்புதுமொழியில் காண்பதற்கு இது உதவியாகும்.	இச்சிபார்சுகள் ஏற்கப்படலாம்.

இலக்கங்களின் வடிவம்

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளுமன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
28	இலக்கங்களின் பன்னாட்டு வடிவம் இந்தியாவில் தொடங்கப்பட்டதாதலின் அதுவே பழைய இந்திய எண்களின் மாறுபட்ட வடிவம் ஆதலாலும் இன்று பல்வேறு வகையான வடிவங்களைப்பெற்று அவற்றிற்குரிய தனிப்பட்ட வரிவடிவ முறையோடு நவீன இந்திய முறைகளில் வழங்கப்பட்டு வருகிறது. தென்னாட்டில் நான்கு பெரிய திராவிட மொழிகளிலும் இலக்கங்களின் இந்தப் பன்னாட்டு வடிவம் அன்றாட உபயோகத்தில் இருந்து வருகிறதென்பதைக் கவனிக்கவேண்டும். அந்தந்த மொழிகளிலுள்ள எண்களின் வடிவங்களோடு மிகுதியாகவும் குறைவாகவும், அவற்றோடு சேர்ந்தும் இந்த எண்கள் பயன்படுத்தப்படுகின்றன.	இது ஏற்றுக்கொள்ளப்படலாம்.
29	ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள சில ராஜ்யங்களில் ராஜ்யத்தின் உள் ஆட்சித்துறையில் எண்களின் தேவநாகரி வடிவத்தை மட்டும் பயன்படுத்துவதோடு சில சமயங்களில் பன்னாட்டு வடிவத்தையும் சேர்த்து பயன்படுத்துகின்றனர். அந்தந்த இராஜ்யங்களே இதைப்பற்றி முடிவுசெய்ய வேண்டும். யூனியன் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டிலும் எந்தெந்த வெளியீடுகள் யாருக்கு வெளியிடப்படுகின்றனவோ அவர்களைப் பொறுத்து தேவநாகரி இலக்கங்களைப் பயன்படுத்துவதோடு தேவையானபொழுது பன்னாட்டு வடிவத்தையும் பயன்படுத்தலாம்.	யார் யாருக்கு எந்தெந்த வெளியீடுகள் எந்த விஷயத்தில் வெளியிடப்படுகின்றனவோ, அவைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பன்னாட்டு வடிவத்துடன் தேவநாகரி வடிவ இலக்கங்களின் உபயோகத்தைத் தீர்மானிக்க ஒரு பொதுக் கொள்கையை மத்திய அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டுமென்று இக்கமிட்டி கருதுகின்றது.

<table>
<tr><th>எண்</th><th>அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்</th><th>ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்</th></tr>
<tr><td>30</td><td>இப்பொழுதிலிருந்து 1960-ல் அடுத்த கமிஷன் நியமிக்கப்படுகிறதற்குள்ளாக யூனியன் விவகாரங்களில் பயன்படுத்தப்படும் பன்னாட்டு இலக்கங்களோடு சேர்த்து தேவநாகரி வடிவத்தையும் பயன்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி ராஷ்ட்ரபதிக்கு நாங்கள் யாதொரு சிபார்சையும் செய்யவில்லை.</td><td>இது தேவையில்லை. ஆதலால் இதைக் கவனிக்க வேண்டாம்.</td></tr>
</table>

அத்தியாயம் 9

சட்ட மொழியும் நீதிமன்றங்களும்

சட்டம் செய்யும் மொழி

<table>
<tr><td>31</td><td>சட்டமன்றங்களில் கேள்விக்குப் பதில் சொல்லுமுறை, இடத்திற்கு இடம் மாறப்படுகின்றது. சிலவிடங்களில் கேள்விகளும், விடைகளும் அந்தச் சட்டமன்றத்தில் வழங்காத மொழியில் இருக்குமேயானால் உறுப்பினர்கள் தேவைக்கு ஏற்ப மொழிபெயர்த்து எழுத்துமூலம் தரப்படுவதாகவும் தெரிகிறது. இத்தகைய ஒரு பழக்கத்தைப் பொதுவான ஒரு பழக்கமாக மேற்கொள்ளலாம்.</td><td rowspan="2">அரசியலமைப்பு 348-வது பிரிவின்படி எந்தெந்த விஷயங்களுக்கு எந்த மொழி உபயோகப்படுத்தவேண்டுமென்று சிபார்சு செய்வது கழக நிர்மாணக் கோரிக்கைகளில் ஒன்று. பாராளுமன்ற, ராஜ்ய அவைகளில் உபயோகப்படுத்தும் மொழி 348-வது பிரிவில் குறிக்கப்படவில்லை. ஆகவே, இவைகள் நிபந்தனைக் குறிப்பிற்கப்பாற்பட்டதால், இவைகளில் கவனம் செலுத்தவேண்டாம்.</td></tr>
<tr><td>32</td><td>குறிப்பிட்ட (அதாவது பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை 1965, ஜனவரி 26-ந் தேதிக்குப் பிறகு) காலத்திற்கப்பாற்பட்டும், பாராளுமன்றத்தில் ஹிந்தியும், ராஜ்யங்களில் அந்த ராஜ்ய மொழிகளும் ஆங்கிலத்தின் இடத்தைப் பெற்ற பிறகும்கூட சில சந்தர்ப்பங்களில் ஒரு உறுப்பினர் ஹிந்தியிலோ ராஜ்யமொழியிலோ அல்லது அவருடைய தாய்மொழியிலோ தம் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாமல் இருக்கலாம். அத்தகைய நேரங்களில் சட்டமன்றத்தில் தலைமை வகிப்பவர்கள் இத்தகையவர்கள் ஆங்கிலத்தில் தம் கருத்துக்களை வெளியிடலாம் என்ற உரிமை வழங்கப்பட வேண்டும்.</td></tr>
</table>

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
33	பாராளு மன்றச் சட்டமும், ராஜ்யச் சட்டமும் நாளாவட்டத்தில் அதிகார பூர்வமான ஹிந்தியிலே இருக்க வேண்டும் என்பது எங்கள் கருத்து. அவ்வாறு இருப்பினும் பொதுமக்களினுடைய நலத்தைக் கருதிப் பல்வேறு பிராந்திய மொழிகளில் மொழி பெயர்ப்புக்களை வெளியிடவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். ராஜ்ய சட்டமன்றங்களைப் பொறுத்தமட்டில் அந்தப் பிராந்தியத்திலுள்ள மொழியில் மொழிபெயர்ப்பதே போதுமானது என்றாலும், பாராளு மன்றச் சட்டங்களை நாட்டின் எல்லா முக்கியமான பிராந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.	1965-ம் ஆண்டுவரையிலும் அல்லது ஹிந்தி, ஆங்கிலத்திற்குப் பதிலாக வரும் வரையிலும், பாராளுமன்றம் ஆங்கில மொழியிலேயே சட்டமியற்ற வேண்டும். அதிகாரபூர்வமான ஹிந்தி மொழிபெயர்ப்பையும் இயற்றவேண்டும். ராஜ்ய ஆட்சி மொழிகளில் இவைகளை மொழிபெயர்க்கவும் ஏற்பாடுகள் செய்யலாம்.
34	இம்மொழிமாற்றம் செய்வதற்குரிய காலம் வரும்பொழுது நாட்டிலுள்ள நிலைச்சட்டங்கள் அனைத்தும் ஒரே மொழியில்தான் இருக்கவேண்டுமென்றும், அது ஹிந்தியைத்தவிர வேறொன்றாக இருக்க முடியாதென்றும் நாங்கள் கருதுகிறோம். எனவே, ராஜ்யங்களில் நிறைவேற்றப்படும் சட்டங்களும், பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களும் ஒரே மொழியில் இருக்கவேண்டுமாதலால் நிலையான உத்தரவுகள், விதிகள் முதலானவைகள் ஹிந்தியிலேயே இருக்கவேண்டும்.	ராஜ்ய அவைகளில் சட்டமியற்றும் மொழியைப் பற்றி, அந்தந்த ராஜ்யங்கள் இவ்வாறு செய்தால், 348 (3) பிரிவின்படி ஆங்கிலத்திலும் அதிகாரபூர்வமான மொழிபெயர்ப்பை வெளியிட வெண்டும். ஹிந்தியல்லாத ஒரு மொழியில் சட்டமியற்றினால், ஹிந்தி மொழிபெயர்ப்பையும் வெளியிடவேண்டும்.

அத்தியாயம் 10

சட்ட மொழியும் நீதிமன்றங்களும்

நீதிமன்றங்களில் வழங்கும் மொழி

35	உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரை, மன்ற நடவடிக்கைகளில் ஒரே ஒரு மொழிதான் அதாவது ஹிந்திதான் இறுதியில் நிற்கும். மொழிமாற்றத்திற்கு ஏற்ற காலம் வரும்பொழுது உச்ச நீதிமன்றம் ஹிந்தி மொழியில் மட்டுமே தொழிற்படவேண்டும். உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்பை அதிகாரபூர்வமாக வெளியிடும்பொழுதும் அதனை அந்த மொழியிலேயே வெளியிடவேண்டும்.	இச்சிபார்சுகளை ஏற்கலாம்.

<table>
<tr><th>எண்</th><th>அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்</th><th>ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்</th></tr>
<tr><td>36</td><td>உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்படும் கட்டளைகள், ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியத்தில் வாழும் ஒருவருக்கோ, அன்றி ஹிந்தி மொழி பேசாத ஒருவருக்கோ வழங்கப்பட வேண்டுமேயானால் அவருடைய சௌகர்யத்தை முன்னிட்டு ஒரு மொழிபெயர்ப்போடு கூடவே அனுப்பப்படலாம்.</td><td rowspan="2">இச்சிபார்சுகளை ஏற்கலாம்.</td></tr>
<tr><td>37</td><td>உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை ஒவ்வொரு ராஜ்ய மொழியிலும், அதிகாரபூர்வமான முறையில் மொழி பெயர்த்து மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யலாம்.</td></tr>
<tr><td>38</td><td>உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரை ஹிந்தி அல்லது பிராந்திய மொழிகளை வழங்குவதைப்பற்றிய நன்மை, தீமை என்ற இரண்டும் மிகவும் கவனமாக ஆராயப்பட்டுள்ளது. மொழி மாற்றம் செய்வதற்குரிய காலம் வரும்போது, உயர் நீதிமன்றத் தீர்ப்புகள், கட்டளைகள், ஆணைகள் ஆகியவைகள் அனைத்தும் நாடு முழுவதிலும் ஒரே பொது இடைநிலை மொழியில் அதாவது, ஹிந்தி மொழியில் இருக்கவேண்டுமென்பதற்காக காலம் வரும்பொழுது ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒரு ''மொழி பெயர்ப்பு அமைப்பை'' ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.</td><td rowspan="2">348-வது பிரிவு 2-வது பகுதியின்படி ராஷ்ட்ரபதியின் சம்மதத்தின் பேரில் உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் ஹிந்தியிலோ அல்லது ராஜ்ய ஆட்சிமொழியிலோ இருக்கலாம். ஆனால் தீர்ப்புக்கள், டிகிரிகள், கட்டளைகள், ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும். இவைகளுக்கும் தேவையானால் ஹிந்தியோ, மற்ற ஆட்சிமொழிகளோ, ராஷ்ட்ரபதியின் உத்தரவின் பேரில் உபயோகப்படுத்தலாம் என்று பாராளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டுவர வேண்டுமென்று இக்கமிட்டி ராஷ்ட்ரபதியை கேட்டுக்கொள்கிறது. தீர்ப்புக்கள், டிகிரிகள், கட்டளைகள், மற்ற மொழிகளிலிருந்தால் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புடன் வெளியிடவேண்டும். வெளியிடக்கூடிய தீர்ப்புக்களும், கட்டளைகளும், ஹிந்தியிலும் மொழிபெயர்க்கப்படவேண்டும்.</td></tr>
<tr><td>39</td><td>கீழ்நிலை நீதிமன்றங்கள் உயர் நீதிமன்றம் கொடுக்கும் சட்ட வியாக்யானப்படி தொழிற்படவேண்டியவை ஆதலால் உயர் நீதிமன்றத்தின் வெளியிடக்கூடிய தீர்ப்புகளை எடுத்து வெளியிடும்பொழுது பிராந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து தரவேண்டும். இந்த மொழி பெயர்ப்புக்கள் நம்பிக்கைக் குரியனவாக இருக்க வேண்டுமென்பதற்காக காலம் வரும்பொழுது ஒவ்வொரு உயர் நீதிமன்றத்திலும் ஒரு ''மொழிபெயர்ப்பு அமைப்பை'' ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.</td></tr>
</table>

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
40	உயர் நீதிமன்றங்களின் கட்டளைகள், உத்தரவுகள், ஆணைகள் ஆகியவற்றை பொறுத்தமட்டில் எங்கெங்கே தேவை ஏற்படுகின்றனவோ அங்கேயெல்லாம் ஹிந்தி மூலத்தோடுகூடிய ''அதிகார பூர்வமான மொழி பெயர்ப்பையும்'' சேர்த்துக் கொடுக்கலாம் என்று நாங்கள் ஆலோசனை சொல்லுகிறோம்.	டிகிரிகள், கட்டளைகள், இவற்றின்மொழிபற்றிய கமிட்டியின் கருத்தை 38-ன் கீழ் ஏற்கெனவே சொல்லியிருக்கிறது. உத்தரவுகள் பிராந்திய மொழியில், யூனியன் மொழிபெயர்ப்புடன் இருக்கலாம்.
41	இது போன்ற எல்லா நிலைகளிலும், நீதிமன்றங்களின் இடைநிலை மொழியைப் பொறுத்தமட்டிலும், முழு நிலையிலும் மொழிமாற்றம் செய்வதையே நாங்கள் விரும்புகிறோம். தேவைப்படும்பொழுது தகுந்த காரணம் இருக்குமேயானால் இவ்விதிக்குச் சில விலக்குகள் தருவதில் தவறு ஒன்றுமில்லை. அதாவது உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதியாக வர வேண்டிய ஒருவரோ, அன்றி உயர் நீதி மன்றத்திற்கு நீதிபதியாக வர வேண்டியவர்களோ இம்மொழி மாற்றத்திற்கு விலக்கு வேண்டினால் அதை உடனே தருவதில் தவறு ஒன்றும் இல்லை. நீதித்துறை முழுவதிலும் இத்தகைய ஒரு பொதுவான மொழிமாற்றம் ஏற்பட்ட பிறகும் கூடத் தனிப்பட்ட சில நீதிபதிகள் தம்முடைய தீர்ப்புக்களை ஆங்கிலத்தில் வழங்க விரும்பலாம். அவ்வாறானால் அவர்கட்கும் இடம் தர வேண்டும்.	இச்சிபார்சு ஏற்றுக்கொள்ளப்படலாம்.
42	ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் உயர் நீதிமன்ற நீதிபதிகள்பற்றிச் செய்த சிபார்சுகளையும், நாடு முழுவதிலும் ஒரே நீதித்துறை இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்ட ஏற்பாடுகளையும் கவனத்தில் வைத்துக்கொண்டால் உயர் நீதிமன்ற நீதிபதிகளைப் பொறுத்தமட்டில் பிராந்திய மொழிகளிலும், ஹிந்தியிலும் குறைந்த அளவு அறிவுபெற்றவராக இருக்க வேண்டுமென்று சட்டம் செய்வதில் தவறு இல்லையோ என்று தோன்றுகிறது.	உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு மொழி அறிவுப் பரிட்சை கூடாது என்று இக்கமிட்டி கருதுகிறது. அந்தந்த பிராந்தியத்திலுள்ள நீதிமன்றங்களிலுள்ள நடுவணர்களுக்கு அந்தந்த ராஜ்ய ஆட்சி மொழியும், ஹிந்தியும் தெரிந்திருப்பது நல்லது என்று தோன்றுகிறது.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
43	உயர் நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் தீர்ப்புக்களை வேண்டுமானால் ஆங்கிலத்தில் வழங்கலாம் என்று சொல்லும் உரிமையோடு தேவைப்பட்டால் பிராந்திய மொழிகளிலும் வழங்க உரிமை தரப்படவேண்டும். ஆனால், அவ்வாறு செய்தால் அத்தீர்ப்புகளின் ஆங்கில அல்லது ஹிந்தி மொழி பெயர்ப்பை அதிகாரபூர்வமாக வெளியிட அவர்கள் உடன்படவேண்டும்.	கமிட்டியின் அபிப்பிராயத்தை 38-ம் எண்ணின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது.
44	வழக்கறிஞர்களைப் பொறுத்தமட்டில் உச்ச நீதிமன்றத்தில் தேவைப்பட்டால் ஆங்கிலத்தில் வழக்கை எடுத்துரைக்கவும், பல்வேறு உயர் நீதிமன்றங்களில் ஆங்கிலத்திலும், பிராந்திய மொழிகளிலும் வழக்கை எடுத்துரைக்கவும், பொதுவான முறையில் மொழிமாற்றம் நடைப்பெற்ற பிறகும் கூட இம்மொழிகளைக் கையாளுதற்கு உரிமை வழங்கவேண்டும்.	இது ஏற்கப்படலாம்.
45	அதற்கேற்ற காலம் வரும்பொழுது, மாவட்ட நிலையில் வழக்கறிஞர்கள் விருப்பப்பட்டால் ஹிந்தி மொழியில் தங்கள் நியாயத்தை எடுத்துக் கூறியதற்குரிய ஓர் உரிமையை அவருக்கு வழங்கவேண்டுமென்று அந்த ராஜ்யங்களுக்குச் சிபார்சு செய்கிறோம். மிகப் பெரிய நகரங்களில் இது தேவைப்படும் என்றே கருதுகிறோம். சிறிய நகரங்களில் இது தேவைப்பட்டால் அச்சட்டத்தைத் தளர்த்துவதன் மூலம் இதையும் செய்து கொடுக்கலாம்.	348-வது பிரிவின் கீழ், உயர் நீதிமன்றத்திற்குக் கீழுள்ள மன்றங்களின் மொழியைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. எனவே, இச்சிபார்சு நிபந்தனைக் குறிப்பிற்கு அப்பாற்பட்டது.
46	பிரத்தியேகமான நடுவணர் மன்றங்களைப் பொறுத்தவரை அவர்களுடைய உத்தரவுகளும், ஆணைகளும், ஒரு தனிப்பட்ட பிராந்தியத்தை மட்டும் பொறுத்ததாக இல்லாமல் இருக்குமேயானால், அவைகள் ஹிந்தி மூலத்திலேயே வழங்கப்படவேண்டும். தேவைப்பட்டால் கட்சிக்காரர்களுக்கு மொழிபெயர்த்துத் தரப்படலாம். மொழிமாற்றக் காலத்திற்கு உயர் நீதிமன்றங்களுக்குச்	இச்சிபார்சு ஏற்கப்படலாம்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	சொல்லப்பட்டது போலவே இப்பிரத்யேக மன்ற நீதிபதிகளுக்கும் பல காலத்திற்குத் தேவைப்பட்டால் ஆங்கிலத்தில் தம் தீர்ப்பு முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தலாம்.	

அத்தியாயம் 11

சட்ட மொழியும் நீதிமன்றங்களும்

மாற்றத்தின் இயக்கவகை இயல்

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
47	நீதித் துறையிலும் சட்டத் துறையிலும் மொழிமாற்றம் செய்வதற்குரிய அடிப்படைக்குக் கீழ்க்கண்ட முதல் தேவைகள் நடைபெற்று முடிய வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்:— (1) ஒரே தரமுடைய சட்ட அகராதி ஒன்றை தயாரித்தல். (2) மத்திய, ராஜ்ய சட்டங்களையெல்லாம் ஹிந்தியில் மொழிபெயர்த்து நிலைபெற்ற சட்டப் புத்தகத்தைவெளியிடுதல்.	இச்சிபார்சுகளை இக்கமிட்டி அங்கீகரிக்கிறது. மேலும், கலைச்சொற்கள், அகராதி இவைகளைத் தயாராக்க இருக்கும் திட்டத்தைச் சரிவர கண்காணிக்க பல தேசியமொழி வல்லுநர்களைக் கொண்ட ஒரு உயர்தர உறுப்போ, அல்லது நிரந்தரக் கமிட்டியோ ஏற்படவேண்டுமென்று நினைக்கிறது.
48	சட்டக் கலைச்சொல் அகராதி தொகுப்பதை பொறுத்தவரை கீழ்க்கண்ட ஒரு நடைமுறை அட்டவணையை ஏற்படுத்தி மிக விரைவாக அதனைப் பின்பற்றவேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம்:— (1) சட்டத் துறையில் இந்திய மொழிகளில் புதிய கலைச் சொற்களை உண்டாக்கும் வேலை இப்பொழுது நடைபெறுவதைக் காட்டிலும் மிக வேகமாக நடைபெற வேண்டும். (2) இச்சொற்கள் தயாராகிக் கொண்டிருக்கும்பொழுதே அடிக்கடி இவற்றை வெளியிட ஒரு குறிப்பிட்ட அதிகாரியின் கீழ் ஒப்படைக்கப்படவேண்டும். இவை ஏற்றுக்கொள்ளப்படும் தரமுடைய சொற்களாகக் கருதப்படவேண்டும்.	ராஜ்ய சட்டங்களை ராஜ்ய மொழிகளில் மொழிபெயர்ப்பதைப் பற்றி அந்தந்த ராஜ்யங்கள்,

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	(3) மத்திய அரசாங்கத்தின் கீழ், மத்திய, ராஜ்ய சட்டப் புத்தகத்தை உடனடியாக ஹிந்தியில் வெளியிடவேண்டும். இத்தகைய முறையில் புதிதாக ஹிந்தியில் வெளியிடப்படும் சட்டங்களை அந்தந்த சட்டமன்றங்கள் மறுபடியும் ஒரு முறை நிறைவேற்ற வேண்டுமா, வேண்டாமா என்பதை நிர்ணயிக்க வேண்டும். இவைபற்றிச் சரியான முடிவுகளை மேற்கொண்டு மத்திய, ராஜ்யச் சட்டங்களை நிர்ணயிக்கவேண்டும்.	தகுந்த மத்திய அரசாங்க அதிகாரிகளைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று கருதுகிறது.
49	முதன் முறையாகச் சட்டத்தை எழுதும் பொழுதே ஹிந்தியில் எழுதக் கூடிய வன்மையைப் பெறுவதற்காக மக்கள் அதற்குரிய அறிவைப்பெற வேண்டிச் சட்ட வரைவுகளை ஹிந்தி மொழியில் எழுதத் தொடங்க வேண்டும். அதற்காக எந்தராஜ்யங்களில் இதை ஹிந்தியில் செய்ய விரும்புகிறார்களோ அந்த ராஜ்யங்களுக்கு உத்தரவு கொடுத்து ஹிந்தியிலேயே இதை வரையச் செய்யவேண்டும்.	இச்சிபார்சுகள் ஏற்கப் படலாம்.
50	மொழிமாற்றக் காலத்தில் இந்தியச் சட்டப் புத்தகத்தில் ஒரு பகுதி ஹிந்தியாகவும், ஒரு பகுதி ஆங்கிலமாகவும், இருக்கின்ற ஒரு காலத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம். அன்றியும் வழக்குச் சட்டங்களும், இங்ஙனம் இரு மொழிகளிலும் இருத்தல் கூடும். நாளாவட்டத்தில் இவ்விருபகுதிகளுள் ஹிந்திப்பகுதி விரிந்து கொண்டே செல்லும். இத்தகைய மாற்றக் காலத்தில் இவற்றை ஹிந்தி, ஆங்கிலம் என்ற இரு மொழிகளிலும் தருவதோடு ஒன்று மூலமாகவும், மற்றொன்று அதனுடைய அதிகாரபூர்வமான மொழிபெயர்ப்பாக இருக்குமாறும் செய்யலாம்.	

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளுமன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்

அத்தியாயம் 12

யூனியன் மொழியும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் பரிட்சைகளும்

51	கல்வி முறையில் எது போதனாமொழியாக இருக்கிறதோ அதற்கேற்ற முறையில் போட்டிப் பரிட்சைகளில் இடைநிலை மொழியும் இருக்கவேண்டுமென்று சொல்லத் தேவையில்லை.	இச்சிபார்சைத் தள்ளிவிடலாம்.
52	பயிற்சி அமைப்புக்கள் பலவற்றில் போதனாமொழியை மாற்றி அமைக்க வேண்டிய வேலை இன்னும் முற்றிலும் நடைபெறவில்லை என்று தெரிகிறது. ஹிந்தியில் மாற்றி அமைக்கக்கூடிய இயல்பு இருப்பினும் ஏறத்தாழ மாற்றி அமைக்கலாம். ஆயினும், இன்னும் ஆங்கிலத்திலேயே அவைகள் இருந்து வருகின்றன. நாட்டில் இடைநிலைக் கல்வியில் ஏற்படுகின்ற மாறுதல்களை ஒட்டியும் இந்தப் பல்வேறு பயிற்சி அமைப்புக்களிலும் உள்ள போதனாமொழி ஆகியவற்றை ஒட்டியும் இவற்றிற்குரிய நுழைவுப் போட்டிப் பரிட்சைகளில் தக்க முறையில் போதனாமொழியை அமைக்க வேண்டும்.	இக்கமிஷனின் சிபார்சுகளில் சொல்லப்பட்டுள்ள பயிற்சி அமைப்புக்களில் உள்ள மொழி ஆங்கிலமாகவே சிறிது காலத்திற்குத் தொடர்ந்து உபயோகப்படுத்த வேண்டும். இப்பயிற்சியின் எல்லா, அல்லது ஒரு சில பாகங்களுக்கு, ஹிந்தியை உபயோகிக்க தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். இப்பயிற்சி அமைப்பு நுழைவுத் தேர்வுகளுக்குள்ள மொழிபற்றி, இக்குழு நினைப்பதாவது, ஹிந்தி அல்லது ஆங்கிலமோ, எல்லா அல்லது ஒரு சில வினாத்தாள்களுக்குக் கொடுக்கலாம். பங்கீட்டு முறையைக் கொண்டுவராமல் பிராந்திய மொழிகளை இப்பரிட்சைகளுக்கு உபயோகப்படுத்த ஒரு நிபுணர் கமிட்டி ஏற்படுத்த வேண்டும்.
53	இப்போட்டிப் பரிட்சைகளுக்கு இப்பொழுது இடைநிலை மொழியாக உள்ள ஆங்கிலத்தை மாற்றி அமைக்க வேண்டுமானால் இப்பொழுது நாட்டின் பல பாகங்களிலும் இடைநிலைக் கல்வியில் போதனாமொழியாக இருந்த ஆங்கிலத்தின் இடத்தை பிராந்திய மொழிகளை எடுத்துக்கொண்ட காரணத்தால் இப்போட்டிப் பரிட்சைகளுக்கும் ஆங்கிலத்திற்குப் பதிலாகப் பிராந்திய மொழிகளை இடைநிலை மொழிகளாக அமையவேண்டும். இவ்வாறு செய்வதால் இப்போட்டிப் பரிட்சைகள் அகில இந்தியத் தன்மை பெறாமல் பிராந்தியவாரியாக பிரிக்கப்பட்டுவிடும் ஆதலால், ஒருவகை பங்கீட்டு முறையையே மேற்கொள்வதாக அமையும். பயிற்சி அமைப்புக்குரிய நுழைவுப் போட்டிப் பரிட்சைகளில் இங்ஙனம் பங்கு முறையை ஏற்றுக்கொள்வதற்கும், அகில இந்தியப் பணிகளுக்குரிய உயர்தர அதிகாரிகளைப் பொறுக்கும்பொழுது பங்கு முறையை மேற்கொள்வதற்கும் நிறைந்த அளவு வேற்றுமை உண்டு.	

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
54	அகில இந்தியப் பணிகளிலும், மத்தியத் துறைப் பணிகளிலும் அதிகாரிகளாக வருபவர்களின் மொழியறிவுத் தேர்வை உத்தேசித்து, ஹிந்தியில் ஒரு கட்டாய விஞத்தாளை இப்பரிட்சைகளில் ஏற்படுத்துவது தகுதியுடையதென்றே நினைக்கிருேம். ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள மாணவர்கட்கு அதிகத் தொல்லை விளையாத முறையில் மாற்றக்காலத்தில் இவ்விஞத்தாள் மிக எளிமையானதாகச் செய்யப்பட்டு ''தகுதித் தாளாக மட்டும்'' இதனை வைத்துக் கொள்ளலாம். மேலும், தென்னிந்திய மொழிகளைப் பேசும் மாணவர்கள் இந்த ஹிந்தி விஞத்தாளில் உள்ள ஒன்று அல்லது இரண்டு கடுமையான கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டியதில்லை. ஹிந்தி மொழியோடு தொடர்புடைய மொழிகளைத் தாய் மொழியாக உள்ள மாணவர்கள் இவ்விஞக்களுக்கு விடை எழுதலாம்.	
65	ஹிந்தி மொழி பேசாத மாணவர்களின் தரத்தையும் ஹிந்திமொழி பேசும் மாணவர்களின் தரத்தையும் ஒப்புவமை செய்வதற்காக ஹிந்தி மொழி பேசும் மாணவர்கள் அவர்கள் தாய் மொழியிலேயே கீழ்க்கண்ட விஷயங்களுள் ஏதாவதொன்றைப்பற்றி ஒரு விஞத்தாளை எழுதலாம். பல்வேறு விஷயங்களுள் பண்பாட்டுத் தொடர்புடைய பாடங்களும் 8-வது தபசிலில் சொல்லப்பட்ட ஹிந்தி நீங்கலாக உள்ள மற்ற மொழிகளோடு தொடர்புடைய பாடங்களும் இதில் இடம் பெறலாம்.	
56	ஹிந்தி மாணவர்கள் ''ஈடு செய்யும் முறைக்கு'' பிராந்திய மொழிகளில் (அதுவும் தென்னிந்திய மொழிகளுள் ஒன்றில்) ஹிந்தியல்லாத பிறமொழி விஞத்தாள் ஒன்றை எழுதவேண்டுமென்று கூறப்பட்ட ஆலோசனைக்குத் தகுந்த நியாயம் இருப்பதாக நாங்கள் கருதவில்லை,	

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
57	அகில இந்தியப் போட்டிப் பரிட்சைகளில் இடைநிலை மொழி வேறு மொழியாகவோ, அல்லது மொழிகளாகவோ மாற்றப்பட்ட பிறகுகூடத் தேவைப் பட்டால் ஆங்கிலத்தில் சில வினாத் தாள்களை வைத்துப் பரிட்சை செய்வதற்குரிய ஏற்பாடுகளை வைத்துக் கொள்ளலாம்.	அகில இந்தியப் பணி, உயர்தர மத்தியத் துறைப் பணிகளுக்கான போட்டிப் பரிட்சைகளைப் பற்றி, இக்கமிட்டி கீழ்கண்டவாறு எண்ணுகிறது.
58	அகில இந்தியப்பணிகளுக்கும், மத்யத் துறைப் பணிகளுக்கும், நடைபெறுகின்ற போட்டிப் பரிட்சைகளில் இடைநிலை மொழியை மாற்றும் பொழுது ஏற்படுகின்ற முக்கியமான தொல்லை யாதெனில், நாட்டிலுள்ள 13 பிராந்திய மொழிகளும், பரிட்சைக்கு இடைநிலை மொழிகளாக அமையுமேயானால் திருப்தியான முறையில் ''மிதப்படுத்துதல்'' இயலாத காரியம். இப்பரிட்சைகளின் இடைநிலை மொழிகளின் எண்ணிக்கை தகுந்த அளவு மிதப்படுத்துதலுக்கு அப்பாற்பட்ட முறையில் அதிகப்பட்டுவிடுமேயானால் பங்குமுறை என்பது இன்றியமையாத தாகிவிடும். இன்றேல் இப்பரீட்சையின் இயல்பையே மாற்றியமைக்க நேரிடும். பங்குமுறை யென்பது இன்றுள்ள இப்பரிட்சைகளின் அகில இந்திய இயல்பை மாற்றியமைத்துவிட்டு இவ்வகில இந்தியப் பரிட்சைகளைத் துண்டாடி, இப்பரிட்சைகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மாணவர்களின் தரத்தையும் குறைத்துவிடும். ஆட்சித் துறையில் உள்ளவர்கள் செய்யவேண்டிய கடமைகளை நினைத்துப்பார்க்கும் பொழுது உத்தியோகத்திற்கு வருகின்றவர்களின் தரத்தை எவ்விதத்திலும் பாதிக்கக்கூடிய கொள்கைகளை அல்லது திட்டங்களை நாங்கள் விரும்பவில்லை. அகில இந்தியப் பணிகளைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு பிராந்தியமும் தன்னுடைய நலத்தைமட்டும் கவனிப்பதாக மட்டுமிருந்தால்கூட அப்பொழுதும் ''தரத்தையே'' பெரிதாக மதிக்கும். இக்காரணங்களினால் உயர்தர மத்தியப் பணிகளுள்	(அ) ஆங்கில மொழி தொடர்ந்து உபயோகிக்கப்பட வேண்டும். சிறிது காலம் கழித்து மாற்று மொழியாக ஹிந்தியைக் கொண்டு வரலாம். தேவைப்படும் காலத்திற்கு, மாணவர்கள் ஆங்கிலத்திலோ, ஹிந்தியிலோ, விடைதர அனுமதிக்கப்படவேண்டும். (ஆ) தகுந்த முன்னறிவிப்பிற்குப் பிறகு, ஹிந்தியிலும், ஹிந்தியல்லாத மற்றொரு தற்கால இந்திய மொழியிலும் (இது மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது) கட்டாயமாக மாணவர்கள் விடை தரவேண்டும். (இ) இடைநிலை மொழியில் மாற்றம் ஏற்பட்டாலும், எல்லா ஆட்சித் துறைகளுக்கும் முழுவதாக ஹிந்தி உபயோகிக்கப்படும்வரை ஆங்கில மொழியில் ஒரு வினாத் தாள் கட்டாயமாக இருக்கவேண்டும். (ஈ) பிராந்திய மொழிகளை பரிட்சைகளுக்குக் கொண்டு வருவதுபற்றி ஒரு பிரத்யேக கமிட்டி

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் கிடைக்கும் உத்தியோகங்களின் எண்ணிக்கை ஒருபுறமிருக்கத் தரத்தையே பெரிதாகக் கருதவேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. இப்பணிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள போட்டிப் பரிட்சைகளின் இடைநிலை மொழிகள் பற்றிக் கீழ்க்கண்டவற்றைச் சொல்ல விரும்புகிறோம்:— (அ) இப்பொழுதுள்ளதும் இனி ஏற்படுத்தப் போவதாக இருப்பினும் அப்பொழுதுள்ளதுமான அகில இந்தியப் பணிகளிலும், மத்யத் துறைப் பணிகளிலும் உள்ள ஆங்கில இடைநிலை மொழிகளோடுகூட ஹிந்தி இடைநிலை மொழியைத் தகுந்த அளவு முன்னறிவிப்புச் செய்துவிட்டுப் புகுத்தலாம். ஏனைய, பிராந்திய மொழிகள், பல்கலைக் கழக நிலையிலும் பட்டப்படிப்பு நிலையிலும் இன்று ஹிந்தியடைந்துள்ள நிலையை அடையும்பொழுது அந்தப் பிராந்திய மொழியை இப்பரிட்சைகளுக்கு இடைநிலை மொழியாக்கவேண்டுமா என்பது பற்றி ஆராயலாம். ஒருமொழி இப்போட்டிப் பரிட்சைகளுக்கு இடைநிலை மொழியாக ஆவதற்கு தகுதி பெற்றுவிட்டதா என்பதை கல்வி முறையில் போதனா மொழியாக அம்மொழிவந்து எந்த அளவு வளர்ச்சி அடைந்திருக்கிறதென்பதை அறிய வேண்டும். அவ்வாறு அறிவதற்குத் தகுந்த சில ஏற்பாடுகளைச் செய்து அதனுடைய தகுதியை ஆராயலாம். இன்று இடைநிலை மொழியாக உள்ள ஆங்கிலம் தேவையான காலம்வரை இருந்துகொண்டே இருக்கலாம். நாளா	நியமிக்கப்படவேண்டும். பங்கீட்டு முறையைப் புகுத்தாமல் பிராந்திய மொழிகள் கொண்டு வருவதுபற்றி இது ஆராயவேண்டும்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	வட்டத்தில் ஆங்கிலத்தை நீக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வருமேயானல் அப்பொழுதும் தகுந்த அளவு நீண்டகால அறிவிப்புச் செய்துவிட்டு இதனை மாற்றியமைத்து விடலாம்.	
	(ஆ) இடைநிலை மொழியாக இருக்கப் புகுகின்ற மொழிகள் ஓரளவுக்குக் கட்டுப்படுகின்ற வரையில் ''மிதப்படுத்துதல் என்பது இயலக்கூடிய காரியமே.'' இரட்டை அல்லது மும்மொழியறிவும் தகுதியும் உடைய பரிட்சகர்கள் கிடைப்பதைப் பொறுத்து இப்போட்டிப் பரிட்சைகளில் அதிகப்படியான இடைநிலை மொழிகளைப் புகுத்தலாம். ஓரளவுக்கு அப்பாற்பட்டு இது நடைமுறைக்கு இயலாததாகி விடும். அத்தகைய ஒரு நிலை ஏற்படுவதற்கு முன்னர் யூனியன் அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் ஒன்றுகூடி கீழ்க்கண்டவற்றுள் ஏதாவது ஒரு முடிவை ஏற்கவேண்டும். (1) அகில இந்தியப் பணிகளுக்கு ஆட்தேர்வு முறையில் சிலமாற்றங்களைச் செய்ய அவர்கள் உடன்படவேண்டும். அன்றேல் (2) இப்பரிட்சைகளில் இடைநிலை மொழிகளின் எண்ணிக்கையை ஓரளவுக்குள் வைக்க அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அன்றேல் இப்பரிட்சை முறைகளிலேயே தேவையான மாற்றங்களைச் செய்ய அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும்.	
	(இ) மேலே (ஆ) பிரிவில் சொல்லப்பட்ட சூழ்நிலை ஏற்படுவதற்கு முன்னர் ஹிந்தி மொழிபேசாத பிராந்தியங்களிலுள்ள பட்டதாரி மாணவர்கள் ஹிந்தி மொழியில் தகுந்தளவு அறிவுபெற்றிருப்	

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளுமன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	பார்கள். ஆதலால் ஹிந்தி மொழி பேசும் மாணவர்களோடு சமமான முறையில் போட்டியிடுவதற்குத் தகுந்த அளவு வன்மைபெற்று விடுவார்கள். அந்தச் சூழ்நிலை ஏற்படுகிற வரையில் ஹிந்திமொழி பேசாத மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு இப்பொழுதிருந்து வருகின்ற ஆங்கில இடைநிலை மொழியே போதுமானதாகும். யூனியன், ராஜ்ய அரசாங்கங்கள் மேலே பிரிவு (ஆ) வில் 1, 2, 3 என்ற பகுதிகளில் சொல்லப்பட்ட ஏதாவதொன்றை மேற்கொள்ளவேண்டிய சூழ்நிலையும் தேவையும் வராமலே போய்விடும் என்று எங்களில் சிலர் நம்புகிறோம்.	

அத்தியாயம் 13

ஹிந்தியையும் பிராந்திய மொழிகளையும் பரப்புதலும் வளர்த்தலும்

60	அரசியலமைப்பை ஏற்றுக்கொண்ட பிறகு இவ்வேலைபுதியதொரு இயல்பை பெற்றுவிட்டதாதலின் இது சம்பந்தமாகச் செய்யப்படும் முயற்சிகள் இப்பொழுது அரசாங்கமே செய்யும் முயற்சியாக ஆய்விட்டது.	இச்சிபார்சு ஏற்கப்படலாம்.
61	தாமே இயங்கும் அமைப்புக்கள் இத்துறையில் செய்துள்ள வேலையைக் கவனிக்கும் அளவில் இவ்வமைப்புக்களின் வேலைகளை எல்லாம் ஒழுங்குபடுத்தி ஹிந்தியை வளர்ப்பதில் மேலும் பெருக்கம் செய்யவேண்டுமேயானால் கீழ்க்கண்ட முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.	இது ஏற்கப்படலாம். ஹிந்தி பேசாத பிரதேசத்தில் ஹிந்திப் புத்தகங்களை பிராந்திய மொழி உருக்களில் வெளியிடுவது, ஹிந்தியறிவை ஹிந்தி மொழி பேசாதவர்களிடம் விருத்தி செய்வதாகும்.

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளுமன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	(1) பல்வேறு அமைப்புக்கள் செய்கின்ற வேலைகளையும் ஒருமுகப்படுத்துதலும், தேவையான இடங்களில் இவை வேலை செய்வதற்கு எல்லை வகுத்தலும் வேண்டும்.	
	(2) இவைகளுக்கு வகுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் நல்ல முறையில் தொழிற்படுவதற்குத் தேவைகள் யாவை என்று ஆராய்தல்.	
	(3) இவ்வமைப்புக்கள் நடத்தும் தேர்வுகளால் ஒரு ஒற்றுமையையும் ஒப்புநோக்கும் இயல்பையும் கொண்டுவர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல், இதற்குரிய வழித்துறைகளை ஏற்படுத்தி இவ்வமைப்புக்கள் நடத்தும் பரிட்சைகளில் ஒரே தரம் இருக்குமாறு செய்தல்.	
	(4) போதனாமுறையை வளர்ச்சியடையச் செய்வதற்குரிய தேவைகளைப் பெற்றுத் தருவதோடு ஆசிரியப் பயிற்சி அளிப்பதற்குரிய வழிதுறைகளையும் செய்து தருதல்.	
	(5) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு நிலைகளிலும் உள்ளவர்கள் ஹிந்தியில் போதனை பெறுவதற்குரிய பாடப் புத்தகங்கள் முதலியவை கிடைக்குமாறு செய்தல், புதிதாக ஹிந்தி கற்பவர்களும், குழந்தைகள், பெண்கள் ஆகியவர்களும் வேண்டுமான அளவு படிப்பதற்குரிய மேற்கோள் இலக்கியத்தைக் கிடைக்குமாறு செய்தல்.	

எண்	அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகள்	ஆட்சிமொழியைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் அபிப்பிராயங்கள்
	(6) ஹிந்தியைப் பரப்புகின்றதோடு, புதிதாக ஹிந்தி மொழி கற்றுக்கொண்டவர்கள் தேவையைப் பூர்த்திசெய்கின்ற முறையில் படிப்பகம், நூலகம், ஆகிய வசதிகளைச் செய்து தருதல்.	
62	மத்திய அரசாங்கம் அப்பொழுது ஹிந்தியைப் பரப்பும் வேலையில் ஈடுபட்டுத் தாமே இயங்கும் அமைப்புக்கள் தங்களுடைய வேலையை விஸ்தரித்து முயற்சி செய்யத்தக்க முறையில் வேண்டுமான அளவு தாராளமாகப் பண உதவி செய்யவேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம்.	இது ஏற்கப்படலாம்.
63	பல்வேறு இந்திய மொழிகளினிடையேயும் ஒரு புது மாற்றமைப்பு மிகுதியும் தேவைப்படுகிறது. இப் பல்வேறு மொழிகளிலும் மொழிஇயல் துறையிலும், மொழிநூல் துறையிலும், மேலும் கல்வியை வளர்ப்பது இந்தியாவின் பல்வேறு பண்பாட்டையும் வளர்ப்பதற்குப் பயன்படும். ஆதலால் அத்தகைய படிப்பும் ஆராய்ச்சியும் யூனியன், ராஜ்ய அரசாங்கங்களால் மிகுதியும் வளர்க்கப்படவேண்டும்.	இது ஏற்கப்படலாம். இந்திய இலக்கியத் துறையில் ஆராய்ச்சியை உற்சாகப்படுத்த வேண்டும்.

தேவநாகரி எழுத்துமுறைச் சீர்திருத்தம்

64	தட்டெழுத்து இயந்திரத்தின் ''கீ-போர்டை''ப் பற்றி முடிவு செய்வது மிக அவசரமான தேவையாகும். மேலும், மத்திய அரசாங்கத்தின் திறமையின் கீழ் நடைபெறவேண்டிய தேவநாகரி எழுத்துச் சீர்திருத்தமும் உடனடியாகச் செய்யப்படவேண்டிய தொன்றாகும்.	இச்சிபார்சுக்கு இக்கமிட்டி சம்மதிக்கிறது. ஆனால், தேவநாகரி எழுத்துமுறைபற்றி நடந்த லக்னோ மகாநாட்டுத் தீர்மானங்களைப் பற்றின வித்தியாசங்களை சீக்கிரம் ஒருமைப்படுத்த வேண்டுமென்று கருதுகிறது.

(ஓ-ம்) ஜி. பி. பந்த்

பிராங்க் அந்தோனி*

மதுரா பிரஸாத் மிஸ்ரா

கே. பி. மாதவன் நாயர்

அதுல்யா கோஷ்

பி. டி. தாணுப் பிள்ளை

பி. நாருயணன் நாயர்

எஸ். ஏ. டாங்கே

பி. எஸ். மூர்த்தி

கோவிந்த தாஸ்†

ப்ரமத நாத் முக்கர்ஜி

ஏ. ராமஸ்வாமி முதலியார்

யூ. ஸ்ரீநிவாஸ மல்லையா

தாகூர்தாஸ் பார்கவா†

ஸ்வாமி ராமானந்த தீர்த்தா

புத்சிங்

குர்முக் சிங் முஸாபிர்

பக்த தர்ஸன்

எம். ஹிப்சுர் ரஹ்மான்

புரொபுல்லா சந்த்ர பஞ்ச் தேவ்*

மணிபென் வல்லபாய் பட்டேல்

புருஷோத்தம தாஸ் தாண்டன்†

பாகீரதி மஹாபாத்ரா

பி. பாகவதி

ஏ. எஸ். ராஜு

மாணிக்யலால் வர்மா

டி. ஒய். கோஹோகர்

எச். என். முகர்ஜி

ஹரிஷ்சந்த்ர சர்மா*

ரகுவீரா*

---

* அபிப்பிராய வேறுபாட்டுக் குறிப்பின் பிரகாரம்.

† குறிப்பின் பிரகாரம்.

உறுப்பினர்களின் மறுப்புக் குறிப்புகளும் சிற்றறிக்கைகளும்

பேராசிரியர் டாக்டர் ரகுவீரா

திரு ஹரீஷ்சந்த்ர சர்மா

திரு புரொபுல்லா சந்த்ர பஞ்ச் தேவ்

திரு புருஷோத்தம தாஸ் தாண்டன்

சேத் கோவிந்த தாஸ்

திரு பிராங்க் அந்தோனி

திரு தாகூர்தாஸ் பார்கவா

தலைவரின் குறிப்பு.—1958-ம் ஆண்டு நவம்பர் 28-ந் தேதி நடைபெற்ற இக்கூட்டத்தில் கமிட்டித் தீர்மானித்தபடி, ஒரு சில சுருக்கமான பிற் குறிப்புகள் சேர்க்கப்பட்டன. அதாவது, ''இச்சிற்றறிக்கைகளிலோ, மறுப் புக் குறிப்புக்களிலோ இருக்கும் ஏதாவது சில விஷயங்களுக்கு, பதிலளிக்கவோ அல்லது விரிவுரைக்கவோ, கமிட்டி தீர்மானித்தபடிவேண்டுமானுல், குழுத் தலைவர், கமிட்டியின் சார்பாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.''

டாக்டர் ரகுவீராவின் மறுப்புக் குறிப்பு

(ரிஜிஸ்டர்டு ஏ. டி.)

பேராசிரியர் டாக்டர் ரகுவீரா
பாராளு மன்ற உறுப்பினர் (மேலவை)

தொலைபேசி எண் 34700
ஹாஸ் காஸ் என்க்லேவ்,
யூஸப் சராய் போஸ்டு,
புது டில்லி-16

அக்டோபர் 5-ந் தேதி 1958*

காரியதரிசி அவர்கட்கு,
ஆட்சிமொழி பற்றின பாராளு மன்றக் கமிட்டி,
உள்துறை அமைச்சு, இந்திய அரசாங்கம்,
புது டில்லி.

அன்புள்ள ஐயா,

நான் இவ்வறிக்கையைப் படித்தேன். அதிலுள்ள முடிவுகளைப்பற்றி நன்றாக யோசித்தேன். சாதாரண தேசபக்தன் என்பதாலும், என்னுயுளில் பெரும் பகுதியை மொழியியலையும், பல் வேறு மொழிகளையும் படிப்பதில் செல விட்டவன் என்பதாலும், மறுப்புக் குறிப்பின் மூலம் தெளிவாகவும், சந்தேக மில்லாமலும் என்னுடைய கருத்துக்களை வெளியிடுவது கடமையாகிறது. இக்குறிப்பு மிகத் தெளிவான முறையில் வரையப்பட்டுள்ளது.

இம்மறுப்புக் குறிப்பு இத்துடன் அனுப்பப்பட்டிருக்கிறது.

தங்கள் அன்புள்ள,
(ஒ-ம்) ரகுவீரா
(பேராசிரியர் டாக்டர் ரகுவீரா)

---

* இக்கமிட்டியின் பூர்வாங்க அறிக்கை, உறுப்பினர்களுக்கு, நவம்பர் 17-ந் தேதி 1958-ல் அனுப்பப்பட்டது. மேலே காணப்படும் கடிதமும் அதனுடனிருக்கும் குறிப்பும், இக் கமிட்டியின் அலுவலகத்தில் நவம்பர் 28, 1958-ல் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மறுப்புக் குறிப்பு

பேராசிரியர் டாக்டர் ரகுவீரா, எம்.ஏ., பிச்.டி., டி.லிட்., டி.பில்., எம்.பி.

இந்திய அரசியலமைப்பு 344-வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது:—

"(2) ராஷ்ட்ரபதிக்குக் கீழ்க்கண்ட விஷயங்கள்பற்றி இக்கமிட்டி சிபார்சு செய்ய வேண்டியது கடமையாகும்:—

"(அ) யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் படுத்துதல்;

"(ஆ) யூனியன் ஆட்சி விவகாரங்களில் ஒருசிலவற்றிற்கோ அனைத்திற்குமோ இப்பொழுது பயன்பட்டு வரும் ஆங்கிலத்தைப் படிப்படியாகக் குறைத்தல்;

"(இ) ஷரத்து 348-ல் சொல்லப்பட்டுள்ள அலுவல்கள் அனைத் திற்குமோ, சிலவற்றிற்கோ எந்த மொழியைப் பயன் படுத்த வேண்டும் என்பதை ஆராய்தல்;

"(ஈ) யூனியன் விவகாரங்களில் குறிப்பிட்டவற்றிற்கு பயன் படுத்த வேண்டிய எண்ணிக்கையைப்பற்றி ஆராய்தல்;

"(உ) இவற்றையல்லாமல், யூனியனுக்கும், ஒரு ராஜ்யத்திற்கும் இடையேயும், இரண்டு ராஜ்யங்களுக்கு இடையேயும் பயன்படவேண்டிய மொழி யாது என்பது பற்றியும் இன்னும் யூனியன் ஆட்சி மொழி பற்றி ராஷ்ட்ரபதி இக்கமிஷனை ஏதேனும் விசாரிக்க விரும்பினால் அவற்றைப் பற்றியும் சிபார்சு செய்யவேண்டும்.

"(3) இரண்டாவது பகுதியின்படி இக்கமிஷன் தன் சிபார்சுகளைச் செய்யும்பொழுது, இந்தியாவின் தொழில் பண்பாடு, விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றை மனதிற்கொண்டு, ஹிந்தி பேசாத பிராந் தியங்களில் உள்ளவர்கள் பொதுப் பணிகளுள் நுழைவதற்குரிய வசதி முதலானவற்றையும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளையும் மனதிற்கொண்டு தன் சிபார்சுகளைச் செய்ய வேண்டும்."

மொழிக் கமிஷனும், பாராளு மன்றக் கமிட்டியும், தங்களுடைய கடமை களை "ஆக்கவழி" யில்லாமல் எதிர்மறை வழியில் செய்தது பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். இம்மாதிரி செய்தது அரசியலமைப்பின் மறைமுக வெளிப்படை கருத்துக்களுக்குப் புறம்பானதாகும். யூனியன் ஆட்சி மொழியாக ஹிந்தியைப் படிப்படியாக ஆண்டுதோறும் உபயோகிக்கவேண் டிய வழிகளைப்பற்றி இவைகள் சிபார்சு செய்யவில்லை. ஆங்கில மொழியின் உபயோகத்தை ஏனைய அலுவல்களுக் கில்லாவிட்டாலும் ஏதாவது ஒரு யூனியன் அரசாங்கம் அலுவலுக்காவது தடை செய்யவில்லை.

கமிஷன் சிபார்சு செய்வதாவது:—

''யூனியன் ஆட்சிக் காரியங்களில் ஒன்றுக்குக்கூட தற்சமயம் ஆங்கில மொழி உபயோகத்தைத் தடை செய்ய வேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்யவில்லை.''

''அரசியலமைப்பில் குறிப்பிட்ட காலவரைக்குள், யூனியன் அரசாங்க அலுவல்களுக்கு ஹிந்தி உபயோகிப்பதுபற்றி, ஒரு கால அட்டவணையைத் தயாரிக்கவோ, அதன் பல்வேறு நிலைகளைக் குறிக்கவோ, எங்களால் முடியவில்லை.''

இவைகளை, பாராளு மன்றக் கமிட்டியும் ஆதரித்திருக்கிறது.

மொழிமாற்றத்திற்கான செய்முறையைத் தயார்செய்வது, இந்திய அரசாங்கத்தின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்கு வேண்டியவைகளைப் பற்றியும், எது முன்னால் வரவேண்டும் எது பின்னால் வரவேண்டுமென்பதைப் பற்றியும், கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது. 1965-ம் ஆண்டுக்குமுன் ஹிந்தி மொழியை ஏதாவதொரு அலுவலுக்கு உபயோகப் படுத்த ஆரம்பிக்க முடியாதபடி மேலே சொன்னவைகள் இருக்கின்றன.

செய்முறையைப்பற்றி இக்கமிஷன் சிபார்சு செய்யத்தவறினதால், எந்தெந்த பகுதிகளில் எப்படி ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தி உபயோகப் படுத்துவது, எங்கெங்கு ஆங்கிலத்துடன் ஹிந்தியைப் பயன்படுத்துவது என்பதுபற்றி பாராளு மன்றம் குறிப்பிடுவது அதன் கடமையாகும். ஆனால், இக்கமிட்டி தனது கடமையைச் செய்யாததால், நாட்டுப் பற்றுடையவன் என்பதால், நான், இவ்விஷயத்தில் எது செய்யமுடியும், எது செய்யப்பட வேண்டுமென்பதை இங்கே குறிப்பிடுகிறேன்.

(1) 1960-ம் ஆண்டிற்குப் பிறகு பொதுப் பணிகளில் சேரும் புதிய ஊழியர்கள் ஹிந்தியில் வேலை செய்யப் பயிற்சியளிக்கவேண்டும்.

(2) அகில இந்தியப் போட்டிப் பரிட்சைகளின் இடைநிலை மொழி, ஹிந்தியோ அல்லது ஆங்கிலமாகவோ, பரிட்சை எழுதும் மாணவன் விருப்பப் படி இருக்கலாம். இப்பரிட்சை முறை, ஹிந்தி, ஆங்கில மொழியில் தகுந்த அறிவில்லாததால், ஹிந்தி மொழி பேசாத பகுதிகளிலிருப்பவர்களுக்கும், ஹிந்தி மொழி பேசும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கும், முறையே பிரதி கூலம் ஏற்படாதவாறு அமையவேண்டும்.

(3) 1960-ம் ஆண்டிற்குப் பிறகு மத்திய சர்க்கார் காரியாலயத்தில் உள்ள ஊழியர்களில் 20 சத விகிதம் தங்கள் வேலையை ஹிந்தியில் செய்ய வேண்டும். இதற்குமுன் இவர்களுக்கு ஒரு ஆண்டு (அதாவது ஜனவரி 1959 முதல் டிஸம்பர் 1959 முடிய) ஹிந்தியில் பயிற்சியளிக்கவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மேலும் 20சத விகிதம் ஊழியர்களுக்குப் பயிற்சி யளித்து, ஹிந்தியில் வேலை செய்தல் வேண்டும். இவ்வாறாக, 1964-ம் ஆண்டிறுதியில், மத்திய சர்க்கார் காரியாலயத்தில் வழங்கப்படும் மொழி ஆங்கிலத்திலிருந்து ஹிந்தியாக மாறும்.

இப்பயிற்சியை மேற்கொள்ளும் ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கப் பரிசுகள் வழங்கப்படவேண்டும்.

(4) ஒரு பாராளு மன்றக் கமிட்டி, ஏற்கெனவே, கலைச்சொற்களையும், சட்டச்சொற்களையும் சேகரித்து, சரிபார்த்தது. இவைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, தங்கள் காரியாலயத்தில் உபயோகப்படுத்தவேண்டும்.

(5) பல்கலைக் கழகங்களும், பயிற்சிக் கூடங்களும், 1959-60-ம் ஆண்டு வகுப்புகளிலிருந்து, புதிதாகச் சேரும் மாணவர்களுக்கு, ஆங்கில மொழிக்குப் பதிலாக, ஹிந்தியிலோ, பிராந்திய மொழியிலோ கற்பிக்க வேண்டும். இம் மாணவர்கள் தொடர்ந்து, ஹிந்தியிலோ, பிராந்திய மொழியிலோ பயிற்சி பெறுவர். இவ்வாருக, 1965-ம் ஆண்டில், ஆங்கில மொழிக்குப் பதில், ஹிந்தியோ, பிராந்திய மொழிகளோதான் போதனமொழியாக இருக்கும்.

அகில இந்தியப் பள்ளிகளில் வழங்கும் மொழியானது ஹிந்தி யாக இருக்கவேண்டும்.

கலைச்சொற்களுக்காக அநேக ஆங்கில-ஹிந்தி அகராதிகள் இருக் கின்றன. இவைகளை லாபகரமாக உபயோகப்படுத்தலாம்.

(6) 1960-ம் ஆண்டிலிருந்து, ஹிந்தி வழங்கும் ராஜ்யங்களுடன் மத்திய அரசாங்கம் ஹிந்தியிலேயே தொடர்புகொள்ளவேண்டும். படிப்படி யாக மற்ற அரசாங்கங்களுக்கும் இம்முறை பயன்படும். ஆரம்பத்தில் இதற்காக மொழிபெயர்க்கும் அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும். மத்திய அரசாங்கத்திலும், பிராந்திய மொழிகளிலிருக்கும் கடிதங்களை கவனிப் பதற்கு, மொழிபெயர்ப்பு அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும்.

(7) 1960-ம் ஆண்டிலிருந்து பாராளு மன்றத்தில் கொண்டுவரப்படும் மசோதாக்கள் ஆங்கில மொழியுடன், ஹிந்தி மொழியிலும் இருக்கவேண்டும். 1965-ம் ஆண்டிற்குப் பிறகு இம்மசோதாக்கள் ஹிந்தியிலே இருத்தல் வேண்டும்.

(8) இதுவரை வெளி வந்த எல்லாச் சட்டங்களையும், ஆங்கிலத்தி லிருந்து ஹிந்தியில் மொழிபெயர்க்க ஒரு கழகம்* நியமிக்கப்படவேண்டும். இது ஒரு பெரிய வேலை. ஆகவே, இதற்கு நெடுநாளாகும். ஆகவே, பத்தாண்டுகளுக்குள் இம்மொழிபெயர்ப்பை முடிக்க, தேவையான ஆட்களை நியமிக்கவேண்டும்.

(9) ஒவ்வொரு அரசாங்கப் பிரிவும் தங்கள் சட்டங்கள், கையேடுகள், விதிகள், ஒழுங்குமுறைகள்† முதலியவற்றை ஹிந்தியில் மொழிபெயர்க்க வேண்டும். இதற்கு வேண்டிய வசதிகளும், தேவையான ஊழியர்களும் கொடுக்கவேண்டும்.

(10) பயிற்சி பெற்றபிறகும் தேவையான ஹிந்தி மொழி அறிவு இல்லாத 45-ம் வயதிற்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு, ஒரு ஹிந்தி உதவி யாளர் கொடுக்கப்படவேண்டும்.

(11) 1960-ம் ஆண்டிலிருந்து, ஹிந்தி மொழி தெரியும் நீதிபதிகள் உச்ச நீதிமன்றத்தில் தங்கள் தீர்ப்புக்களை ஹிந்தியில் கூறலாம். எல்லா நடைமுறைகளும், தீர்ப்புகளும் ஆங்கிலத்திலிருந்து ஹிந்தியில் மொழிபெயர்க் கப்படவேண்டும். மிக உயர் நீதிமன்றத்தின் சிப்பந்திகளில் 20 சத விகிதம் ஆண்டுதோறும் ஹிந்தியில் வேலை செய்யப் பழக்கப்படவேண்டும். அதன் மூலம் 1964ம் ஆண்டில், இம்மன்றத்தின் காரியாலயங்கள் ஹிந்தியில் செயல் படவேண்டும். 1965-ம் ஆண்டுவரை, ஹிந்தி மொழியறியாத நடுவணர்கள்

---

* குழுவின் அபிப்பிராயத்தை 52-வது பாரா, பக்கம் 32-லும், 51-வது பக்கத்திலும் காணலாம்.

† 1951-ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 1,71,742 மனிதர்களுக்கு ஆங்கிலம் தாய் மொழியாக யிருக்கிறது.

ஆங்கிலத்தில் தீர்ப்புக் கூற அனுமதிக்கப்படலாம். 1965-ம் ஆண்டிற்குப் பிறகு இவர்களுக்குத் தகுந்த உதவி கொடுக்கப்பட்டு, அவர்கள் தீர்ப்புக்கள் ஹிந்தியில் வெளிவருதல்வேண்டும்.

(12) 1960-ம் ஆண்டிலிருந்து ஹிந்தி மொழிப் பகுதிகளிலுள்ள உயர் நீதிமன்றங்களில், ஆங்கிலத்துடன் ஹிந்தியையும், உபயோகிக்கவேண்டும். ஹிந்தி மொழியறிவுள்ள நீதிபதிகள் அம்மொழியிலேயே தீர்ப்புக்கூறவேண்டும். ஹிந்தி மொழி பேசாத பகுதிகளில், 1960-ம் ஆண்டிற்குப் பிறகு, ஆங்கிலத்துடன், ஹிந்தியும், பிராந்திய மொழியும் உபயோகிக்கவேண்டும். 1965-ம் ஆண்டிற்குப் பிறகு, ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியோ, பிராந்திய மொழிகளோ உபயோகிக்க வேண்டும். தேவையான இடங்களில் ஹிந்தியிலோ அல்லது பிராந்திய மொழியிலோ தீர்ப்புக்களை எழுத, நடுவணர்களுக்கு உதவியளிக்கவேண்டும்.

(13) ஹிந்தியில் இலக்கங்களின் வடிவம், தேவநாகரி வடிவமாக வேண்டியது. ஹிந்தி, பஞ்சாபி, மராத்தி, குஜராத்தி மொழி பேசும் மக்களுக்கு, தேவநாகரி வடிவம்தான் பொறுத்தமானதென்று, புகையிரதக் கால அட்டவணை, பட்ஜெட்டுகள் மூலம் கிடைத்த அனுபவம் கூறுகிறது. கலைக்கண் கொண்டு நோக்குமிடத்து, எழுத்து உருவத்துடன் அவை ஒன்ருயிருக்கின்றன என்பது தெரியும். ஆங்கில மொழி, தென்னிந்திய மொழிகளைப் பொறுத்தவரை, ஆங்கில இலக்கங்கள் உபயோகத்திலிருந்து வரலாம். நாணயங்களிலும், ஸ்டாம்புகளிலும் தேவநாகரி இலக்கங்களும், ஆங்கில இலக்கங்களும் உபயோகத்தில் தொடர்ந்திருக்கலாம்.

(14) இந்தியத் தொழில், கலாசாரம், விஞ்ஞானம் இவைகளின் வளர்ச்சியை அரசியலமைப்பு வலியுறுத்துகிறது. ஹிந்தி, பிராந்திய மொழிகளின் மூலம் இவ்வளர்ச்சி பெருகும். இப்பொழுது ஆங்கிலத்தில் செலவிடும் நேரத்தில், அதிகமாக, கணிதத்தையும், இயந்திர நுட்பத்தையும், இரசாயன நூலையும், பூதநூலையும் கற்பிப்பதில் செலவிடலாம். தொழிலாளிகளும் தங்கள் தாய்மொழியின் மூலம் இன்னும் அதிக அறிவைப் பெறலாம். குறைவான காலத்தில் அதிக மனிதர்களுக்குப் பயிற்சி யளிக்கலாம். இப்பொழுது இல்லாத தொழிலியல் இலக்கியம் உண்டாக்கப்படும். இதுவே ஒரு பெரிய முன்னேற்றமாகும். தனக்குச் சொந்தமாக தொழிலியல் இலக்கியம் இல்லாதவரை ஒரு மொழி, தற்கால மொழியாகாது. ஆகவே, நாம் எவ்வளவு காலம் ஆங்கிலத்தையே எதிர்பார்க்கிருேமோ அவ்வளவு காலம் நமது இலக்கியத்தை விரும்பும் ஆட்களும் கிடையாது.

அந்நிய மொழி மூலம் கலாசார முன்னேற்றம் இயலாது. நமது மொழிகளிலுலேயே நாம் ஒருவருக்கொருவர் நெருங்க முடியும்.

(15) ஹிந்தி மொழியல்லாத பகுதிகளைப் பொறுத்தவரை, பொதுப் பணிகளுக்குத் தேவையான அளவில் அப்பகுதியிலுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். வேண்டுமானுல், பத்தாண்டுகளுக்கு, ஹிந்தி மொழியல்லாத பகுதிகளில் வாழ்பவர்களுக்காக, பொதுப் பணியில் ஒரு பங்கீட்டு முறையோ அல்லது அப்பணியில் ஹிந்தி மொழிப் பகுதியினர் சேர்வதற்கு ஒரு உச்ச வரம்போ, ஏற்படுத்தலாம்.

(ஒ-ம்) ரகுவீரா

திரு ஹரிஷ்சந்த்ர சர்மாவின்

மறுப்புக் குறிப்பின் தமிழ் மொழிபெயர்ப்பு

பாராளு மன்றக் கமிட்டியின் அறிக்கை ஆங்கிலத்திலிருக்கிறதென்று குறிப்புடன் எனது மறுப்புக் குறிப்பை தொடங்குகிறேன். இதனுல், எனக்கு ஆங்கிலம் தெரியாவிட்டால், இக்குழுவின் உறுப்பினராக இருப்பதில் பிரயோஜனமில்லை என்று விளங்குகிறது. எனக்கு சிறிது ஆங்கில அறிவு இருக்கிறது—பார்க்கப்போனுல் இந்நாட்டில் வெகு சிலரே நன்ருக ஆங்கிலம் கற்றறிந்தவர்கள்—இந்நாட்டில் எவ்வளவு மனிதர்களுக்கு ஆங்கில மொழி புரியுமென்று ஆராயப்படவேண்டும்.

இவ்வாறு நோக்குமிடத்து, ஆட்சி மொழிப் பிரச்னையானது, நமது தேசிய ஒழுங்கைப் பற்றினதாகும்; அரசாங்கத்தைப் பற்றினதுமாகும். ஜனநாயகமானது, அடிக்கடி மேற்கோளாக எடுத்துக்கொள்ளப்பட்ட வாக்கியப்படி, ''மக்களுடைய, மக்களால், மக்களுக்காக'' நடத்தப்படும் அரசாட்சி. மனிதர்களுக்குள் முக்கியமான தொடர்பு சாதனங்களில் மொழி ஒன்று. அரசாங்கம் மக்களுக்காக, அவர்கள் மொழியில் தொழிற்படவேண்டும்; அம்மொழி எம்மொழியாக இருந்தாலும் சரி, ஆங்கிலம் இந்நாட்டில் எவருடைய மொழி ?

இந்நாட்டில் யாருக்கும் * தாய்மொழியாக ஆங்கிலம் இல்லை.—ஒரு சதவிகிதத்திற்கும் குறைந்த ஒரு சிலரே ஆங்கில மொழியை அறிந்திருக்கிருர்கள். ஆகவே, ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கும்வரை ஜனநாயகம் இங்கு வளராது என்ற முடிவானது தெள்ளத்தெளிவு. 99 சத விகிதத்திற்கு மேற்பட்டவர்கள் அரசாங்க அலுவல்களில் பங்கெடுத்துக்கொள்ளவோ, அவைகளை அறிந்துகொள்ளவோ முடியாது. இதனுல் அரசாங்க அலுவல்கள் கேலிக்கூத்தாக முடிகின்றன. உதாரணமாக, சமுதாய நலத் திட்டத்தைப் பரப்பும் இலக்கியங்களை ஆங்கிலத்தில் அச்சடிக்கும் விதத்தை எடுத்துக்கொள்வோம்.

இம்மாதிரி ஒரு முக்ய பிரச்னையை அரசாங்க பாஷைக் கமிஷனும், அது பற்றின பாராளு மன்றக் கமிட்டியும் சரிவரக் கவனிக்காததுபற்றி நான் மிகவும் வருந்துகிறேன்.

ஆட்சி மொழிப் பிரச்னை தனியானதல்ல. ஆகவே, மற்ற தொடர்புள்ள பிரச்னைகளை ஆராயாமல் அதைப்பற்றின தீர்மானங்கள் எடுப்பது நல்லதல்ல. ஆட்சி மொழிக் கழகத்தைவிடப் பாராளு மன்றக் கமிட்டி பிற்போக்கான கருத்துக்களைக்கொண்டது. ஆகவே, அதன் சிபார்சுகளில் முக்யத்வம் இல்லை.

ஆங்கில அறிவின் தரம் இறங்கிவிட்டதென்பதை இக்கமிட்டி ஆமோதித்திருக்கிறது. ஆனுல், நாளடைவில் ஆங்கிலத்தில் வேலை செய்வது கடினம் என்பதைத் தவிர, இப்பிரச்னையைப் பொருத்தமற்ற விஷயங்களில் இக்கமிட்டி அக்கறை காட்டவில்லை. இம்முறை உணர்வற்றதன்மை, வேலைசெய்யாமை, தீர்மானமின்மையைக் குறிக்கின்றன. நாட்டின் இளைஞர்களும், யுவதிகளும் ஆயிரக்கணக்கில், ஆங்கில மொழியின் கட்டாயத்தின் பேரில் தங்களது எதிர்

---

* 1951-ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 1,71,742 மனிதர்களுக்கு ஆங்கிலம் தாய்மொழியாக இருக்கிறது.

காலத்தில் நம்பிக்கை யிழக்கிருர்கள். 1957-58-ம் ஆண்டு டெல்லி ராஜ்ய உயர் நிலே இடைக் கல்வியின் முடிவுகளேப் பார்த்தேன். ஏறத்தாழ 450 சிறுவர்கள் ஒரு பாடத்தில் தோற்றிருக்கிருர்கள். இவர்களில் 250 சிறுவர்கள், அதாவது கிட்டத்தட்ட 60 சத விகிதம் ஆங்கிலத்தில் தோற்றிருக்கிருர்கள். இச்சிறுவர்களின் எதிர்காலத்திற்கு, தோல்வி, ஏமாற்றம், தன்னிலேயிழத்தல், இவைகளுக்கு யார் காரணம்? ஆட்சி மொழியாக ஆங்கிலத்தை நிலே நிறுத்தி அதைக் கட்டாயமாகத் திணிக்கும் மனிதர்கள்தாம் காரணம். மேலும், நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மனிதர்கள் டெல்லியில் வாழ்கிருர்களென்றும், ஆகவே, டெல்லியில், நாட்டின் மற்ற பாகங்களேவிட ஆங்கிலத்தின் அவசியம் அதிகமானதென்றும் நாம் நினேவிலிருத்திக் கொள்ளவேண்டும்.

நிர்வாக நோக்குடன் பார்க்குமிடத்தும் இப்பிரச்னேயின் கெடுதலான விளேவுகள் புரியும்.

(1) நிர்வாகத்துறையில், பொய்யும், தரக் குறைவும் அதிகமாகும். அலுவலக மொழியில் போதிய அறிவில்லாததால், கெடுதலான விளேவுகள் இவை.

(2) பொது ஊழியர்கள் தங்கள் குறிப்புகளேயே புரிந்துகொள்ள முடியாததால், மக்களுக்கு இது ஒரு புதிராகவே இருக்கும். ஆகவே, பொது மக்களிடம் தொடர்பானது ஏமாற்றமாக முடியும்.

(3) ஒரு மொழியின் முக்கியமான உபயோகம் என்னவென்ருல், மக்களொருவருக்கொருவர் பேசும்பொழுதும், படிக்கும்பொழுதும் புரிந்துகொள்வர் என்பதுதான். மொழியறிவு குறைவானுல் இவ்வுபயோகம் கிட்டாது. ஆகவே, லஞ்சத்திற்கு இடமளிக்கிறது.

நமது நாட்டின் நிர்வாகம் ஜனநாயக முறையில் இருக்கவேண்டுமானுல், அதனுடைய பொதுஜனத் தொடர்பு இன்னும் அதிகமாக வேண்டுமானுல், ஹிந்தியும், மற்ற பிராந்திய மொழிகளும் உடனடியாக ஆட்சி மொழிகளாக்கப்படவேண்டுமென்பது என் திடமான கொள்கை. ஆகவே, பொதுவாக, எல்லா அரசாங்க அலுவல்களும், உடனடியாக, ஹிந்தியிலோ, அல்லது பிராந்திய மொழிகளிலோ கஷ்டமில்லாமல் நடத்தப்படலாம். சட்டங்களின் மொழிபெயர்ப்புக்கும், விஞ்ஞானத்திற்குக் கலேச்சொற்கள் உருவாக்குவதற்கும் சிறிது காலம் தேவையாகலாம். ஆனுல், உண்மையான முயற்சி எடுத்துக்கொண்டால், இவ்வேலேயும் ஒராண்டிற்குள் முடியவேண்டும். இவ்வேலேயை பல்கலேக் கழகங்கள் மூலம் வெகுவிரைவாக, திருப்தியான முறையில் முடிக்கலாம். *இக்கமிட்டி சிபார்சு செய்தபடி, இவ்வேலே மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடக்கவேண்டுமென்றும், சட்ட, விஞ்ஞானக் கலேச்சொற்கள் நாடெங்கும் பல மொழிகளிலும் ஒன்ருக இருக்கவேண்டுமென்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

கமிட்டியின் அறிக்கையில், காரணமில்லாமல் ஆங்கிலத்தையும் விஞ்ஞானத்தையும் பிணேத்திருக்கிறது; ஆங்கிலமில்லாவிட்டால் விஞ்ஞான வளர்ச்சியில்லே என்பது போல. ஆனுல், காணப்படும் நிலே இதற்கு முற்றிலும் மாருனது. ஆங்கில மொழி பேசப்படும் நாடுகளே ஒதுக்கினுல், விஞ்ஞானம், எந்தெந்த நாடுகளில் தாய் மொழிகளே உபயோகிக்கின்றனவோ, அங்குதான் முன்னிற்பதைப் பார்க்கலாம். பிரான்சு, ஜெர்மனி, ருஷியா, ஜப்பான் இந்நாடுகளில் எவைகள் ஆங்கிலத்தை உபயோகிக்கின்றன? இவைகளில்,

ருஷியாவும், ஜெர்மனியும் விஞ்ஞான வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருப்பது மிகவும் பெரிது. மற்றெல்லா நாடுகளின் முயற்சியைவிடப் பெரிது. இந்தியாவில், விஞ்ஞானம் வளர்ச்சியடைய வேண்டுமானால், அதன் தாய் மொழி மூலமாகத்தான் முடியும்.

கல்விகூட, ஆங்கில முறையின் அருவருக்கத்தக்க போலியாக இல்லாமல், தாய் மொழியிலேயே இருத்தல்வேண்டும்.

என்னுடைய கருத்துக்களாவன :—

(1) எல்லா ராஜ்யங்களிலும் தங்கள் அலுவல்களைப் பிராந்திய மொழிகளில் செயற்படவேண்டும்.

(2) மத்திய அரசாங்கம் ஹிந்தி மொழியில் தொழிற்படவேண்டும். ஹிந்தியல்லாத பகுதிகளிலிருக்கும் மத்திய அரசாங்க அலுவலகங்கள், ஆங் காங்கேயுள்ள பிராந்திய மொழிகளைப் பொதுமக்களுடன் தொடர்புக்கும், *ஹிந்தியை மற்ற வேலைகளுக்கும் பயன்படுத்தவேண்டும்.

(3) உச்ச நீதிமன்றமும், மற்ற உயர் நீதிமன்றங்களும் ஹிந்தியில் தொழிற்படவேண்டும். எங்கு தேவையோ அங்கு பிராந்திய மொழிகளில் மொழிபெயர்ப்புக்களுக்கு வசதி இருக்கவேண்டும்.

(4) பல்கலைக் கழகங்களில், போதனமொழியும், பரிட்சை மொழியும் பிராந்திய மொழியாக இருக்கவேண்டும். பட்டப் படிப்பிற்கு அப்பாற்பட்ட கல்வியைப் பொருத்தவரை, இக்கல்வியை ஹிந்தி மொழிமூலம் கற்க, கூடிய சீக்கிரத்தில் ஹிந்தியைப் பரப்ப வேண்டிய ஏற்பாடுகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

(5) ஏதாவது ஒரு ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் அதன் பிராந்திய மொழியில் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள விரும்பினால், இது அனுமதிக்கப்படவேண்டும். மேலும், எந்த ராஜ்ய அரசாங்கமாவது, அப்பிரதேசத்திலுள்ள உயர் நீதிமன்றம் பிராந்திய மொழியில் செயற்பட விரும்பினால் அதுவும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.†

இவ்விஷயங்களில் இரண்டு நம் கவனத்தின்கீழ் கொண்டுவரப்பட வேண்டும். ஒன்று மொழிபெயர்ப்புப் பற்றின பிரச்னை. ஹிந்தியிலிருந்து பிராந்திய மொழிகளுக்கும், பிராந்திய மொழிகளிலிருந்து ஹிந்திக்கும் மொழி பெயர்க்கப் போதுமான வசதிகள் செய்துதரவேண்டும். இது ஒரு கஷ்டமான வேலையல்ல. இதனுடன், ஆங்கில அறிவு படைத்தவர்கள், நாட்டின் பாரமாக மட்டுமல்லாமல், ஆங்கிலப் புத்தகங்களையும், இலக்கியங் களையும், பிராந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, தங்களாலியன்ற உதவி யைச் செய்யவேண்டும்.

அரசாங்க பாஷையாக ஹிந்தி வந்தபிறகு, மத்தியப் பணித் துறைக்குள் நுழைய ஹிந்தி மொழியல்லாத பகுதியிலிருப்பவர்களுக்குக் கஷ்டம் ஏற் படலாம் என்பது இரண்டாவது பிரச்னை. இதைத் தீர்க்க ஒரு வழியானது ஏற்கெனவே இக்குழுவின் சிபார்சுகளிலிருக்கிறது. அதாவது, மத்தியப் பணி

---

* 38-வது பக்கத்திலுள்ள கமிட்டியின் சிபார்சை பார்க்கவும்.

† மொழிக் கழகத்தின் 38-வது சிபார்சைப் பற்றியக் குழுவின் அபிப்பிராயத்தை (47, 48-வது பக்கங்களில்) காணலாம்.

களுக்கான போட்டிப் பரிட்சையில், ஹிந்தி மொழி பேசாதவர்களுக்கு ஒரு கட்டாய ஹிந்தி வினுத்தாளும், ஹிந்தி மொழி பேசுபவர்களுக்கு, மற்ற ஏதாவதொரு பிராந்திய மொழியில் ஒரு கட்டாய வினுத்தாளும், இவ்விரண்டின் தரம் ஒன்ருக இருக்கவேண்டுமென்றும், அதாவது, பிராந்திய மொழியின் தரம் எவ்வளவு ஒரு ஹிந்தி மொழி பேசும் மாணவனிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறதோ, அவ்வளவு ஒரு ஹிந்தி மொழி பேசாத மாணவனிடமிருந்து அவன் ஹிந்தி மொழியின் தரத்தை எதிர்பார்க்கவேண்டும். மேலும், தேவையானுல், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மத்தியப் பணிக்கு எடுக்கப்படும் ஹிந்தி மொழி பேசும் மாணவர்களின் எண்ணிக்கையை ஓர் வரம்பிற்குட்படுத்தலாம். உதாரணமாக, பத்தாண்டுகளுக்கு, மத்தியப் பணிகளிலுள்ள காலியான இடங்களில் 20-லிருந்து 25 சத விகிதம்தான் ஹிந்தி மொழி பேசும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று விதிக்கலாம். இதன் மூலம் ஹிந்தி மொழி பேசாத பகுதிகளிலிருப்பவர்களின் பயத்தை நீக்கலாம். மேலும், இப்பணிகளின் அகில இந்தியத் தன்மையும் குறையாமலிருக்கும்.

மேலும், இம்மொழிப் பிரச்னேயின் அடிப்படையான கொள்கைகளே பாராளு மன்றமே தீர்மானிக்க வேண்டுமென்றும், இதை நிறைவேற்றும் பொறுப்பை அரசாங்கத்திற்கு விட்டுவிடவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன். இவ்விஷயத்தில் பாராளு மன்றத் தீர்மானங்களேப்பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனே கூறவும், ஒவ்வொரு சமயம் இதன் வளர்ச்சியைப் பற்றிப் பாராளு மன்றத்திற்குத் தெரியப்படுத்தவும் ஒரு பாராளு மன்ற அரசாங்க பாஷைக் கமிட்டி ஒன்று அமைப்பது நல்லது. இம்மாதிரி ராஜ்ய சட்டசபைகளிலும் கமிட்டிகளே ஏற்படுத்தலாம்.

(ஒ-ம்) ஹரிஷ்சந்த்ர சர்மா

1-12-1958

புது டில்லி
டிசம்பர் 5, 1958

திரு புரொபுல்லா சந்த்ர பஞ்ச் தேவ்

அவர்களின் மறுப்புக் குறிப்பு

ஆட்சி மொழியாக ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தி வரவேண்டுமென்று கமிட்டியின் பொதுக்கொள்கையை நான் ஆதரிக்கிறேன்.

ஆனல் இந்தியக் குடியரசு அரசியலமைப்பின்படி ஏற்கெனவே ஏற்கப் பட்டுள்ள கொள்கையை மாத்திரம் திருப்பிச் சொல்லப்படுவதாலும், இதனல் கமிட்டியின் கூட்டங்களில் முன்னேற்றம் ஏற்படாததாலும், தனியாக எனது எண்ணங்களை ஒரு குறிப்பின் மூலம் வெளியிடுவது என் கடமை என்று நினைக்கிறேன். இக்கமிட்டியின் சிபார்சுகளின் முடிவான அறிக்கையில் இதைச் சேர்க்கப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அந்நிய மொழிக்குப் பதிலாக, நாட்டின் எல்லாப் பாகங்களாலும் அங்கீ கரிக்கப்பட்ட ஒரு மொழி வெகு சீக்கிரமாக வரவேண்டுமென்பதை (ஏனென் ருல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் எல்லாப் பகுதிகளுடை யனவும் எல்லா கொள்கைகளுடைய பிரதிநிதிகளால் ஏக மனதாகத் தீர்மானிக் கப்பட்டது), ஒவ்வொரு தேச முன்னேற்றத்தில் கருத்துள்ள பிரஜையும் எதிர்பார்ப்பான். இக்குறிக்கோளை வெகு சீக்கிரத்தில் அடையாதவரை சுதந் திரம் பூர்த்தியடைந்ததாக ஆகாது என்பது எனது எண்ணம். இக்குறிக் கோளைப் பூர்த்தி செய்ய இக்கமிட்டி ஆக்க வழியில் ஒன்றும் செய்யவில்லை என்பது, எனக்கும், பொது நலத்தின்கண் இதன் அவசியத்தை உணரும் மற்றவர்களுக்கும் ஏமாற்றத்தைத் தருகின்றது.

என் கருத்துப்படி, ராஷ்ட்ரபதிக்குச் செய்யும் சிபார்சுகளில் 22-வது சிபார்சைப் பொறுத்தவரை, அதன் வாசகம் சரியில்லாததால், நாட்டின் நலத்தை முன்னிட்டு என் மனப்பூர்வமான சம்மதத்தை இதற்குக் கொடுக்க மாட்டேன். அரசியலமைப்பின் நோக்கத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற எங்களது விருப்பத்தை, திரு தாண்டன்ஜி அவர்களின் பிரேரணைப் பிரதி பலிக்கிறது, அதாவது:—

> ''இறுதியில் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியைக் கொண்டுவர, ஹிந்தி மொழியைப் படிப்படியாக உபயோகிக்க அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றின கருத்துக் களை, இதன் முன் சமர்ப்பிக்க வேண்டுமென்று, இக்கமிட்டி எண் ணுகிறது. மேலும். இம்மாதிரி சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை, இக்குழுவின் மற்ற அங்கத்தினர்களின் பிரேரணைகளையும் சேர்த்து பரிசீலிக்கவேண்டும்.''

அரசாங்க பாஷையாக ஹிந்தியைச் சீக்கிரமே கொண்டுவருவதை நிச்சயம் செய்துகொள்ளவேண்டிய மிகக் குறைந்த நடவடிக்கைதான் இப் பிரேரணை. திரு மூர்த்தியவர்களின் பிரேரணையில் மேலே சாய்வெழுத்தி லெழுதியிருக்கும் முக்கிய வார்த்தைகள் இல்லை. வாக்கெடுப்பில் திரு தாண்டன்ஜியின் பிரேரணை தோற்றது.

இதைப் பற்றின எங்கள் பயத்தையும் சந்தேகங்களையும் போக்கத் தக்கதாக மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளில்லை. அரசியலமைப்பு அமுலாக்கப்பட்டு எட்டாண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனாலும், இன்று அரசியலலுவலங்களிலும், தனியார் சமூக் வட்டாரங்களிலும் ஆங்கிலமே ஓங்கி நிற்கின்றது. தற்போதைய நிலையில், நமது நெடுநாளைய விருப்பம் இன்னும் சில தலைமுறைகளுக்கு, செயலில் இறங்காது. நமது குடியரசின் குறிக்கோள்களை வகுக்கும் மனிதர்களின் அசிரத்தைக்கும், புத்தியின்மைக்கும் இதற்காக நாம் வந்தனம் தெரிவித்துக்கொள்கிறோம். அகில இந்திய மொழிப் பிரச்னைக்குத் தகுந்த கவனம் செலுத்தாதற்குக் காரணமாக, சமூக, அரசியல் பிரச்னைகளில் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறதென்று சொல்லித் தப்பிப்பது எது முக்கியமோ அதிலுள்ள கவனக் குறைவாக எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், இம்மொழிப் பிரச்னையின் விடைதான் மற்றப் பிரச்னைகளுக்கு விடைகாண வழியாக இருக்கிறது. அகில இந்திய ஆட்சி மொழியை விரைவில் வளர்த்தால் தேசியக் கருத்திலும், குறிக்கோள்களும் ஒற்றுமை ஏற்படும். ஆகவே, நமது அநேக பிரச்னைகளுக்கு, உணவு விவசாயப் பிரச்னையானாலும் சரி, கல்வி, எழுத்தறிவுப் பிரச்னையானாலும் சரி, இது ஆரம்ப வேலையாக முடியும்.

ஆனால், மத்ய அரசாங்கத்தின் இந்த அசிரத்தையினால், அதன் கடமையான, மொழிமாற்றத்தின் திட்டங்களையும் கால அட்டவணையையும் பாராளு மன்றக் கமிட்டிக்குச் சமர்ப்பிப்பதானதைச் சரிவரச் செய்யாததையும், 22வது சிபார்சின்கீழ் கமிட்டி எண்ணியபடி, இவைகளை, மற்ற உறுப்பினர்களுடைய சிபார்சுகளுடன் சேர்த்து ஆராயப்படுவதையும் தள்ளிவிட்டதால், அரசாங் கத்தின் தவறை இக்கமிட்டி மன்னித்தது தவறானது என்பது என் கருத்து.

இம்மாதிரி பிரச்னைகளைக் காலதாமதம் செய்யவேண்டுமென்ற அரசாங் கத்தின் விருப்பத்தை, இந்த விஷயத்தில் அவர்களின் தீர்மானமின்மை வெளிப்படுத்துகிறது. அரசியல் மூலமாகவும், மற்றவை மூலமாகவும் அரசாங்கம் பாதிக்கப்படுகின்றது. எனவே, 22-வது, சிபார்சை நிபந்தனை யின்றி ஆமோதித்ததால், ஹிந்தி மொழியை ஆங்கிலத்திற்குப் பதிலாக எதிர் பார்க்கக்கூடிய காலத்தில் கொண்டுவர அரசாங்கத்திற்கு எவ்வித உதவியும் இக்கமிட்டி அளிக்கவில்லை. மற்றொருபுறம் நோக்குமிடத்து, அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகளை நன்றாகக் கவனித்து, ஆங்கிலத்திலிருந்து ஹிந்தி மொழி மாற்றத்திற்கு ஒரு உரிய காலவரையும் அதற்கேற்ப நடை முறைகளையும் தயாரித்திருந்தால் இவ்வுறுதியான தீர்மானத்திற்கு பொது மக்களின் அநுதாபம் கிட்டியிருக்கும். மத்ய அரசாங்கத்தின் நிலையில்லாத, ஆர்வமில்லாத கொள்கையினால், மேற்கு வங்கத்திலும், சென்னை ராஜ்யத்தின் ஒரு பகுதியிலும் முற்றிலும் முரணான பலன்கள், இந்த முக்கியமான தேசியப் பிரச்னைக்குக் கிட்டியிருக்கின்றன. மேலும், வருங்காலத் தலைமுறையினர் ஹிந்தி கற்பதில் காட்டும் ஆர்வத்தை எடுத்துக்கொண்டு, இன்னும் சில ஆண்டுகளில் தேசியக் குறிக்கோள்களுக்கும் ஏற்ப, ஒரு பொது மொழியின் மூலம் அறிந்துகொள்ளவும், பேசவும், கஷ்டங்கள் ஏற்படாது என்று நினைக்கும் பொழுது, இந்த அசிரத்தையால் இன்னும் வருத்தமடைகிறோம்.

இக்கமிட்டியின் 20-வது சிபார்சு கண்டிப்பாக எழுத்துமட்டிலுமல்ல, கருத்திலும் பிற்போக்கானது. மேலும், 45 வயது கடந்த நமது நாட்டுப் பிரஜைகளின் அறிவுத்திறனைப் பழிப்பதாகும். நான் ஒரு ஒரியா மொழி யினன். நான் சிறு வயதில் ஹிந்தி கற்கவில்லை. 45 வயதிற்குப் பிறகு ஹிந்தியும் உருதும் கற்றுக்கொண்டேன். ஏனென்றால், இந்தியாவின் எதிர்கால

வாழ்விற்கு ஹிந்தி அவசியம் என்றும், ஆகவே ஒவ்வொரு தேசபக்தனும் அதைத் தன் மொழிபோல் பயிலவேண்டுமென்பது எனது தீர்மானமான எண்ணம். எங்கு விருப்பமிருக்கிறதோ அங்கு வழியுமுண்டு. இன்று, எனது ஹிந்தி மொழிவன்மை, ஹிந்தி மொழிப் பகுதியிலிருக்கும் எந்தப் பிரஜைக்கும் குறைவில்லை. ஆகவே, நான் இந்தச் சிபார்சை ஏற்க முடியாது. இந்தியா வின் எப்பாகத்திலுள்ள எவனும் என்னைவிட, அறிவிலோ, மொழித்திறனிலோ குறைந்தவன் என்று நான் நினைக்கவில்லை. தேசபக்தியுடைய ஒவ்வொரு வனும், அவனுடைய/அவளுடைய சக்திக் கேற்றவாறு, எவ்வயதினராயிருப் பினும் சரி, குடியரசின் ஆட்சி மொழியைப் பயிலவேண்டும். கமிஷனின் சிபார்சுகளை நான், இப்பிற்போக்கான எண்ணங்கொண்ட கமிட்டியின் சிபார்சு களைவிட, அங்கீகரிக்கிறேன். ஆகவே, இச்சிபார்சை ஒருபோதும் நான் ஆதரிக்கமாட்டேன். ஆனல், முதலிலிருந்த கமிஷனின் நடுநிலைமையான சிபார்சை இன்னும் குறைத்திருக்கவேண்டாமென்ற எனது மனமார்ந்த விருப் பத்தை எடுத்துக் கூறுகிறேன்.

தற்போதைய நிலைமையில் கமிஷனின் 21-வது சிபார்சு வேண்டியதில்லை. மற்ற உறுப்பினர்களும் தங்கள் மறுப்புக் குறிப்புகளில் இதைப் பற்றிச் சொல்லுவார்களானல் நான் அதிகம் கூறமாட்டேன். மாறுதலில்லாமலோ, அல்லது சில மாறுதல்களை வெளியிட்டாவது, கமிஷனின் இச்சிபார்சை ஜனதிபதி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதில் இக்கமிட்டியின் தீர்மானத்தி லிருந்து மிகத்தாழ்மையுடன் வேறுபடுகிறேன்.

மத்யப் பணித் துறைகளுக்கான போட்டிப் பரீட்சைகள் மொழியைப் பற்றின இக்கமிட்டியின் சிபார்சு, கமிஷனின் சிபார்சிலிருந்து மிகுதியாக மாறுபடவில்லை. ஏனெனில், இப்பரிட்சைகளின் தரம் மிக அதிகமாக இருக்க வேண்டுமென்றும், நமது பணிகளின் தரத்தைப் போஷிக்க இது கட்டாயமாக வேண்டுமென்ற ஒரு நிபந்தனையில்லை. சாதாரண ''தகுதிச் சோதனை''யாக மட்டும் இருந்தால், அதற்கு அதிக மதிப்பு இருக்காது, சீக்கிரமோ, அல்லது சில நாட்களுக்குப் பிறகோ, இப்பணிகளின் தரமும் குறைந்துவிடும். ஆகவே, என் எண்ணப்படி, மத்தியப் பணிகளுக்கு எடுக்கும் ஆட்களுக்கு ஹிந்தியில் பரிட்சை வைக்கவேண்டும். இதற்குப் பிராந்திய மொழிகளில் பரிட்சை நடைபெறுவதில் லாபமில்லை.

உயர் நீதிமன்றத் தீர்ப்புகள், டிகிரிகள், கட்டளைகள் பற்றியும், தேவைப்பட்டால் இவைகளை ஹிந்தியில் மொழிபெயர்க்கப்படுவதைப் பற்றியும், 348-வது பிரிவு, 2-வது பகுதியை மாற்ற ராஷ்ட்ரபதி எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியுமான கமிட்டியின் சிபார்சில், ''மற்ற ராஜ்ய ஆட்சி மொழிகள்'' என்பதைச் சேர்த்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஏனென்றால், கழகத்தின் 38-வது சிபார்சு நிலைமையை நன்ருக உணர்ந்து, சொன்னதாவது: ''எங்கள் கருத்துப்படி, மொழிமாற்றக் காலத்தில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், டிகிரிகள், கட்டளைகள் முதலியன கட்டாயம் எல்லாப் பிரதேசத்திலும் ஹிந்தியில் இருக்க வேண்டுமென்பதற்கு, போதிய, தகுதியான, வலுவான சான்றுகள் இருக்கின்றன'' என்பதாகும். ஆகவே, மொழிமாற்றம் சிக்கலில்லாமலும், விரைவிலும் நடைபெற இம்மாதிரி தொழிற்பட வேண்டும். இதே மாதிரி, மொழிமாற்றக் காலத்தில், மத்ய, ராஜ்யச் சட்டங்கள் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் நிறைவேற்றப்பட வேண்டும். இப்பொழுதிலிருந்தே, சட்டப் புத்தகத்தை ஹிந்தியில் மொழி பெயர்க்க, சிரத்தையுடன் முயலவேண்டும். காலதாமதமில்லாமல் ஒரு அறிஞர் கமிட்டியால் சட்ட அகராதி தயாரிக்கவேண்டும். இக்கமிட்டியில்,

வழக்கறிஞர்கள் மட்டுமின்றி, மொழியியல், மொழி நூல், இந்திய கலாசாரச் சரித்திரம் இவைகளிலுள்ள அறிஞர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். இவ்வேலையை முடிக்க ஒரு உத்தேசமான காலவரையும் அரசாங்கம் நிர்ணயித்தல் அவசியம். இல்லாவிட்டால், பல புகார்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமாக, காலதாமதம் ஏற்படும்.

ஹிந்தி மொழியல்லாத பகுதிகளில் ஹிந்தி மொழியைப் பரப்ப தனியார் ஸ்தாபனங்கள் வேலையாகும்* என்ற வாதம் செயலளவில் பொருந்தாது. (கமிட்டியின் 60-61-வது சிபார்சுகள்). ஆகவே, ஹிந்தி பரப்பும் வேலையை தனி ஸ்தாபனங்கள் செய்தாலும் இது அரசாங்கத்தின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டிலும் இருக்கவேண்டுமென்றும், இவ்வேலையைப் படிப்படியாக, மிகுந்த சிரத்தையுடன் மத்ய அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்றும், தேவையானல் இதற்காக சட்டங்கள், ராஜ்ய அரசாங்கங்களுடன் ஆலோசனை செய்த பிறகு, விரைவாக இயற்றவேண்டுமென்று, இச்சிபார்சை மாற்றுகிறேன்.

விஞ்ஞான, இயந்திரப் பகுதிகளில் தகுந்த ஹிந்தி வார்த்தைகள் கிடைக்கவில்லையென்றால், தகுந்த மாற்றங்களுடன், ஆங்கில பன்னாட்டுக் கலைச்சொற்களை தற்காலிகமாக உபயோகப்படுத்தலாம். மொழி நூல் வல்லுநர்களாலும், அறிஞர்களாலும் தொகுக்கப்பட்ட தற்காலிக ஹிந்தி வார்த்தைகளை எப்பொழுதும் ஆங்கில வார்த்தைகளுடன் கொடுக்கப்பட வேண்டும். எனவே, நாளடைவில், இவ்வார்த்தைகள், வளரும் தலைமுறையினரால் நன்கு உணர்ந்து உபயோகிக்கப்படும். நமது மொழியில் விஞ்ஞான, தொழிலியல் கலைச்சொற்களைத் தொகுப்பதிலுள்ள எதிர்ப்பு—கருத்தொன்ருக அமையாது என்ற எதிர்ப்பு—ஆதாரமற்றது, அர்த்தமற்றது. இதற்குக் காரணம், இவ்வெதிர்ப்பாளர்களின், நமது பழைய, தற்கால மொழிகள், நமது நாட்டின் விஞ்ஞான, தர்க்க, கணித நூல்களின் முன்னேற்றத்தின் அறியாமைதான்.

இக்கமிட்டியின் 28, 29, 30-வது சிபார்சுகளைப் பொறுத்தவரை, திரு புருஷோத்தம்தாஸ் தாண்டன்ஜியின் குறிப்புக்களைப் பார்க்கும் அனுகூலம் எனக்குக் கிடைத்தது. அவைகளை நான் முழு மனதுடன் ஆமோதிக்கிறேன். இவ்விஷயத்தில் நான் குறிப்பிட விரும்புவது என்னவென்ருல், நமது நாட்டு மக்களின் ஒற்றுமையை அதிகரிக்கவும், நூல்களை வெளியிடவும், ஹிந்திக்கு மட்டுமின்றி எல்லா மொழிகளுக்கும் ஒரு பொதுவான ரோமன் லிபியை, ஒரே ஒலி வழியின்மூலம், தகுந்த இன்னுட்டு, வெளிநாட்டு அறிஞர்களிடம் கலந்துகொண்டு புகுத்தலாம் என்பதுதான். (நான் குறிக்கும் லிபி, ஒரு சில அறிவுக் கூடங்களால் தொகுக்கப்பட்ட, குரூரமான கோடுகளும், புள்ளிகளுமில்லை.) தற்போதைய நிலையில் இக்கேள்வி எழாததால், நாட்டின் நலனுக்காக, எண்களின் தேவநாகரி வடிவத்தையே, மேலும் இக்கேள்வியைத் தொடராமல், நேரடியாக ஆட்சிக் காரியங்களுக்குப் பயன்படுத்தவேண்டும்.

கடைசியாக, ஆனல் முக்கியமாக, கமிஷனின் 52-வது சிபார்சைப் பார்ப்போம். இங்கேயும் தேசநலனை ஒரு சாராரின் நலனுக்காக பலியிடப்பட்டிருக்கிறது. இந்தியா, குடியரசு மூலம், சொல்லிலும், எண்ணத்திலும், செய்கையிலும் ஒன்றுபட வேண்டுமென்ற கொள்கையுடையவனுதலால், இம்மாதிரிச் சலுகைகளை என்னல் மன்னிக்க முடியாது. நானும், எனது மற்ற

* இதைப்பற்றிய கமிட்டியின் சிபார்சை, 40-வது பாரா, 25-26-வது பக்கங்களில் பார்க்கலாம்.

நண்பர்களும் ஜனதிபதிக்கு சிபார்சுகள் செய்ய பாராளு மன்றத்தின் கட்டளைக்கிணங்க, எது தகுதியானதும், நியாயமானதும் என்று கருது கிருேமோ, அவ்வாறே சிபார்சு செய்யப்பட்ட ''சீக்கிரமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்'', ''வேகமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக் கைகள்'' என்பவைகளுக்குப் பதிலாக, ''தகுந்த நடவடிக்கைகள்'' என்ற சொற்றொடரை, பெரும்பான்மைத் தீர்மானப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதி லிருந்து நான் மாறுபடுகிறேன். மேற்கு வங்காளத்தின் கருத்துக்களையும், சென்னை ராஜ்யத்தின் ஒரு பகுதியினரின் கருத்துக்களையும் ஆலோசிக்க இக்கமிட்டி மிக்க கவனம் செலுத்தியது; இப்பகுதிகள்தான் நாட்டில் ஹிந்தி மொழி பேசப்படாத பாகங்கள் என்பதுபோல இக்கழகம் தன் வேலையைச் செய்தது. ஹிந்தி மொழி வழங்காத ஒரு ராஜ்யத்தில் பிறந்து வளர்ந்த நான் இதை ஒப்புக்கொள்ளமாட்டேன். கலிங்கத்து மக்களின் தியாகத் தாலும், வீரத்தாலும், பல நூற்றுண்டுகளுக்கு முன்னே ''சண்டசோகன்'', ''தர்மசோகன்'' என்று பெயர்பெற்றுன். அவன் ஒரிஸாவில் (என்னுடைய ராஜ்யத்தில்) பொறித்த அசோக சக்ரமானது இன்று நாட்டின் ஒற்றுமையின் சின்னமாக இருக்கிறது. இவ்வழியாகத்தான் எனது மன நிலைகளையும், கருத்துக்களையும் ஒன்றுபடுத்தி, நாட்டின் ஒற்றுமைக்கு, ஒரிஸாவின் மகனுகப் பாடுபட்டேன். சுதந்திர இந்தியாவின் ஒரிஸா ராஜ்யத்தில் வாழ்ந்தாலும், இம்மறுப்புக் குறிப்பை எழுதுவது, என்னுடைய ராஜ்யத்தின்மேல் நேசமில்லை என்பதல்ல, இந்திய நாட்டின் மேலுள்ள மிகுதியான நேசம்தான் காரணம். ஏனென்றுல் நாமெல்லாரும் பிரமாணம் எடுத்துக்கொண்டு எந்த ஒரு குறிக் கோளை பரிபாலித்து முன்னுக்குக் கொண்டுவர விரும்புகிருேமோ, அதற்கான என்னுலான பங்கை இதன்மூலம் செய்கிறேன்.

(ஒ-ம்) புரொபுல்லா சந்த்ர பஞ்ச் தேவ்

திரு புருஷோத்தம தாஸ் தாண்டனும், சேத் கோவிந்த தாஸும்

எழுதிய மறுப்புக் குறிப்புகள்

இக்கமிட்டியின் பெரும்பான்மையரின் அறிக்கை எங்களுக்குத் திருப்திகரமாகயில்லை. ஆகவே, சில விஷயங்களில் எங்கள் கருத்துக்களை ஒரு தனிக் குறிப்பின்மூலம் தெளிவுபடுத்த வேண்டுமென்பது அவசியம். இக்குறிப்பும் கமிட்டியின் அறிக்கையின் ஒரு பாகமாக இருக்கும்.

அரசியலமைப்பு ஆரம்பத்திலிருந்து, இந்திய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நம்பிக்கையுடன் பார்த்துக்கொண்டிருந்தோம். யூனியன் அலுவல்களுக்கு ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மொழி மாற்றத்திற்கான நிபந்தனைகளைப்பற்றி சரியாக யோசனை செய்யவில்லை என்பது எங்கள் கருத்து.

அரசியலமைப்பு அமுலுக்கு வந்து ஒன்பதாண்டுகளாகின்றன. ஆனால், ஆங்கிலம், சிலருடைய மொழியாக இருந்தாலும், வெளிப்படைக் கூட்டங்களிலும், பெரிய பட்டணங்களிலும், முக்கியமாக ராஜ்யத் தலைநகர்களிலும், டெல்லியிலும், பொது, சமூக வாழ்வில் மிக முக்யத்வத்தை அடைந்திருக்கின்றது. இதனுடைய பலனாக, நிர்வாகம், திட்டம், அபிவிருத்தி என்று ஆங்கில வர்க்கத்தவர்களின் பேச்சில், பொது மக்கள் அக்கறைகொள்வதில்லை. அசிரத்தையுடனிருக்கிறார்கள். ஒரு தேசத்தின் சக்தியை எவ்வாறு மொழியினால் தட்டி எழுப்பமுடியும் என்று மத்திய அரசாங்கக் கொள்கைகளைத் தொகுக்கும் அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தால், இம்மாதிரி ஒரு நிலைமையை நீடிக்கவோ, இருக்கவோ, அனுமதிக்கப்பட்டிருக்காது. இப்பொழுதும், மத்திய அரசாங்கம் ஏற்படுத்தின சூழ்நிலையில் இக்கமிட்டி ஆங்கில சாதகமான சிபார்சுகளைச் செய்கிறது. அரசியலமைப்பினால் யூனியன் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டிருக்கும் ஹிந்தி பரப்புதலைப் பற்றின இக்கமிட்டியின் சிபார்சுகள் மொத்தமாக திருப்திகரமாக இல்லை. மொழிக் கழகத்தின் முக்கியமான சிபார்சுகளை—தற்போதைய சூழ்நிலையில் மாற்றுவதில் இச்சிபார்சுகள் அதிக எச்சரிக்கையாகவும், பிற்போக்காகவுமிருந்தாலும்—இன்னும் தளர்த்தியிருக்கிறார்கள்.

கமிஷனுடையவும் இக்கமிட்டியினுடையவுமான சில சிபார்சுகளைப் பற்றின எங்களது அபிப்பிராயங்களைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

பொது நிர்வாகத்தில் மொழி

யூனியன் அலுவல்களுக்கு ஆங்கில மொழி உபயோகத்தைத் தடை செய்ய வேண்டாமென்ற கழகத்தின் 21-வது சிபார்சை முதலில் நாங்கள் எடுத்துக்கொண்டோம். குழுவின் பெரும்பான்மையரால் இச்சிபார்சு அங்கீகரிக்கப்பட்டது. இதை எங்களால் அங்கீகரிக்க முடியாது. யூனியன் அலுவல்களில் ஒரு சிலவற்றிற்கு ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிப்பது, நியாயமற்றதும், அர்த்தமற்றதுமாகும். அவைகளைப் பொறுத்தவரை தடைகள் விதிப்பது மிக அவசியமாகும். சுயேச்சையாகவுள்ள அல்லது பாதி சுயேச்சையாகவுள்ள உறுப்புக்களையோ, அரசாங்கத்தின் பல்வேறு பகுதிகளை, புகையிரதப் பகுதி உள்பட, எடுத்துக்கொண்டு அங்குள்ள நான்காம் நிலை ஊழியர்களைக் கவனிப்போம். இவர்களுக்குத் தெரியப்படுத்தும் எல்லா

விஷயங்களும், விதிப்படி, ஆங்கிலத்தில் இருக்கிறது. எங்கு இவ்ஊழியர் பேரில் கடமை செய்வதில் அஜாக்கிரதையினுல் தவறு நேர்ந்தது என்று குற்றம் சாட்டப்பட்டால் அக்குற்றப் பத்திரிகை ஆங்கில மொழியில் அவனுக் களிக்கப்படுகிறது. அவனும் ஆங்கிலத்திலேயே பதில் தரவேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இது நியாயமானதல்ல. ஏனென்ருல் இவ்வகுப் பினருக்கு எழுத்தறிவென்பது பிராந்திய மொழியில் சிறிதளவுதான். வெகு சிலரைத்தவிர மற்றவர்கட்கு ஆங்கிலம் தெரியாது. ஆகவே, இவ்வகுப் பினருக்கு அனுப்பப்படும் எவ்விதமான உத்தரவுகளும், ஹிந்தியிலோ அல்லது பிராந்திய மொழியிலோ இருக்க உடனடியாக விதிக்கப்படவேண்டுமென்று நாங்கள் கருதுகிருேம்.

எங்கு தனி மனிதர்கள் அரசாங்கத்துடன் ஆங்கிலத்தில் தொடர்பு வைத்துக்கொள்கிருர்களோ, அவர்களுக்கு ஆங்கிலத்திலும், மற்ற இடங்களில் பிராந்திய மொழியிலோ, ஹிந்தியிலோ மத்திய அரசாங்கத்தின் பதில்கள் இருத்தல் வேண்டும். குறிப்பாக, ஏதாவது ஒரு தனி நபரோ. வர்த்தக நிலையமோ, சங்கமோ், மத்ய அரசாங்கத்தின் பிரிவுகளின் ஒன்றிற்கு ஹிந்தியிலோ, ராஜ்ய ஆட்சி மொழியிலோ எழுதினுல் அதன் விடையும் அம்மொழிகளிலே இருக்கவேண்டும். ஒரு போதும் ஆங்கிலத்தில் இருக்கக் கூடாது.

22-வது சிபார்சை இப்பொழுது எடுத்துக்கொள்வோம். இது ஆங்கிலத்திலிருந்து ஹிந்தி மொழி மாற்றத்திற்கு மத்ய அரசாங்கப் பிரிவு களின் நன்மைக்காக ஒரு செயல் திட்டத்தையும், கால வரம்பையும் பற்றினது. மத்திய சர்க்காரின் பூர்வாங்க செயல் திட்டத்தைப்பற்றித் தெரியாததால், ''முன்னுல் வேண்டுவன'' பற்றிக் குறிப்பிட்டிருப்பதாயும், ஆனுல் ஒரு செயல் திட்டத்தை வரையறுப்பது மத்ய சர்க்காரின் கீழ் விடப்பட வேண்டுமென்றும் கமிஷன் சொன்னது.

பல தடவைகள் கமிட்டியின் கூட்டங்களில், பல உறுப்பினர்கள், அரசாங்கத்தார் படிப்படியாக ஹிந்தியைக் கொண்டுவரச் செய்யும் திட்டத்தை இக்கமிட்டியின்முன் சமர்ப்பிக்கவேண்டும், ஏனென்ருல் அதைப் பரிசீலித்து, உறுப்பினர்களும் தங்கள் பிரேரணைகளையும் கொண்டுவரலாம் என்று நினைத்தார்கள். மேலும், இக்கமிட்டியின் காரியாலயமே இத்திட்டத்தை உருவாக்கிக் கமிட்டிக்குக் கிடைக்கச் செய்யலாம் என்றும் சொல்லப்பட்டது. இக்கமிட்டியின் அக்கிராசனராக இருந்துவரும் உள்நாட்டு மந்திரியவர்களின் கீழ் இருக்கும் உள் நாட்டு அமைச்சுக்கும் இம்மொழி மாற்றத்தில் பங்கு உண்டு. ஆகவே, அது ஒரு செயல் திட்டத்தை வகுக்கவேண்டும். ஆனுல், இக்கமிட்டிக்கு ஒரு செயல் திட்டமும் சமர்ப்பிக்கப்படவில்லை. கமிஷ னிற்கோ, இக்கமிட்டிக்கோ, தொழிற் திட்டத்தை சமர்பிக்க விரும்பாத இந்த மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கை வருந்தத்தக்கது. மத்திய அரசாங்கம் ஒரு திட்டத்திற்கும் தங்களை உடன்படுத்த விரும்பவில்லை போலும். இந்த ஒன்பது வருடங்களாக, அசிரத்தையாகத் தொடர்ந்து வரும் திட்டவட்ட மில்லாத கொள்கையை இனிமேல் தொடராதென்றும், தகுந்த வழியில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் நாங்கள் எதிர்பார்க்கிருேம்.

28-லிருந்து 30-ல் காணப்படும் சிபார்சுகளும், (அத்தியாயம் 3, பகுதி 1, உட்பகுதி 4) கமிட்டியின் அறிக்கையின் 54-வது பாராவும், ஹிந்தியில் உபயோகிக்கப்படும் எண்களின் வடிவத்தைப் பற்றினதைப் பற்றி ஆராய் வோம்.

அரசியலமைப்பு அவை ஹிந்தியை (தேவநாகரி எழுத்துக்களில்) அரசாங்க மொழியாக அங்கீகரித்த பிறகு, எண்களுக்கு ஆங்கில இலக்கங்களின் உருவத்தையே, அதாவது இந்திய இலக்கங்களின் பன்னுட்டு முறை என்று சொல்லப்படுவதையே, சமஸ்கிருத இலக்கங்களின் உருவத்திற்குப் பதிலாக உபயோகிப்பது விரும்பத்தக்கதல்ல. இவ்வுருவம், சமஸ்கிருதம், ஹிந்தி மொழிமட்டிலுமல்ல, மற்ற மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி முதலிய சமஸ்கிருத மொழியைப் போல உள்ள மற்ற மொழிகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பன்னுட்டு முறையை அங்கீகரிக்கும்பொழுது, இவ்வரசியல் சட்டம் ஆரம்பித்து 15 ஆண்டுகள்வரை, ராஷ்ட்ரபதி, யூனியன் ஆட்சிக் காரியங்களுக்குப் பன்னுட்டு வடிவத்துடன் தேவநாகரி எண்கள் வடிவத்தையும் உபயோகிக்க கட்டளையிடலாம் என்று அரசியலமைப்புக் கூறுகிறது. 15 ஆண்டுகளுக்குப் பிறகு வேண்டிய காரியங்களுக்குப் பயன்படுத்த பாராளு மன்றம் சட்ட மூலம் ஆவன செய்யலாம்.

யூனியன் ஆட்சிக் காரியங்களுக்கு ஹிந்தி இலக்கங்களை ஆங்கில வடிவில் (பன்னுட்டு வடிவங்கள் என்ற பெயர் மூலம்) உபயோகப்படுத்தும் தப்பிதத்தை இப்பகுதி ஒருவாறு சரிசெய்கிறது.

இவ்வாறு, ஒன்பது வருடங்களாக நடந்தது என்னவென்றால், யூனியன் அரசாங்கங்களின் வெளியீடுகளில் தேவநாகரி எண்களே உபயோகிக்கப் பட்டன. ஒரு சில அரசாங்கப் பகுதிகளில் மட்டும், ஹிந்தி வெளியீடுகளில் ஆங்கில எண்களும் உபயோகிக்கப்பட்டன.

எண்களைப்பற்றி மக்கள் எதை வேண்டுமென்கிறார்கள் என்பதைக் குறிக்க ரயில்வேக் கால அட்டவணை ஒரு நல்ல சான்றாகும். அரசியலமைப்பின் கட்டளைக்குட்பட்டு, அதிலிருக்கும், காப்புப் பிரிவையும், மக்களின் தேவையை மறுத்து, அவ்வமைப்பு அமுலுக்கு வந்தபிறகு முதன்முதலில் அட்டவணையை வெளியிடும்பொழுது தேவநாகரி எழுத்துக்களுடன் காலத்தைக் குறிக்க ஆங்கில எண்களை உபயோகப்படுத்தினார்கள். ஆங்கில அறிவில்லாத, ஹிந்தியறிவு படைத்த பெரும்பான்மையினரால் இதை உபயோகப்படுத்த முடியவில்லை என்று சொல்லத் தேவையில்லை. ஆங்கில அறிவுள்ள வகுப்பினருக்கோ ஆங்கிலத்தில் வெளியிட்ட அட்டவணை இருக்கிறது. ஆகவே, தேவநாகரி எழுத்தில் வெளியிடப்பட்டு, ஹிந்தி, குஜராத்தி மொழி பேசும் மக்களிடையே உபயோகத்திற்கான கால அட்டவணை, ஆங்கில எண்களின் காரணமாக, பயன்படவில்லை. ரயில்வே அதிகாரிகள் இதை அறிந்தனர்போலும். இதன் பிறகு வெளியிடப்பட்ட கால அட்டவணையில் ஆங்கில எண்களுக்குப் பதிலாக ஹிந்தி எண்கள் உபயோகிக்கப் பட்டன. இது தற்போதுள்ள வழக்கம். ஆகவே ஹிந்தி கால அட்டவணை பெரிதும் விரும்பப்படுகிறது.

பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஹிந்தி மொழியிலுள்ள வரவு செலவுத் திட்டப் புத்தகங்களில் தேவநாகரி எண்களை உபயோகித்து, நிலைமையை நன்குணர்ந்தவர்களாக, ரயில்வே, நிதி இலாகாக்கள் காணப் படுகின்றன.

ஆங்கில மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டோ, அல்லது சாராம்சமாகவோ ஹிந்தி வெளியீடுகள் இருக்குமிடத்து, இவைகளில் ஆங்கில எண்களை உபயோகிப்பது அர்த்தமற்றதாகும்.

1965-ம் ஆண்டுவரை, அல்லது பாராளு மன்றம் சட்டமியற்றும்வரை, எல்லா கணித தொழிலியல் வேலைகள் ஆங்கிலத்திலேயே தொடர்ந்து நடைபெறவேண்டும். ஆகவே, இவ்வெளியீடுகளின் ஹிந்தி மொழிபெயர்ப்பு ஆங்கில எண்களிலிருந்தால், ஆங்கில அறிவில்லாத நபர்களுக்கு இவற்றினுல் உபயோகமில்லை.

1965-ம் ஆண்டிற்குப் பிறகு, ஆங்கில, தேவநாகரி எண்களின் உபயோகத்தைப் புதிதாக, அப்போதைய நிலைமையை உத்தேசித்துத் தீர்மானிக்க வேண்டும்.

சட்ட மொழி

33, 34-ல் உள்ள சிபார்சுகளைப் பற்றி, 1965-ம் ஆண்டிற்குப் பிறகும்கூட ஆங்கிலத்தில் தொடர்ந்து இருக்கும் மசோதாக்கள் பாராளு மன்றத்தில் கொண்டுவரும்பொழுது, சட்ட இலாகாவினுல் அங்கீகரிக்கப்பட்ட ஹிந்தி மொழிபெயர்ப்புடன் கொண்டுவர வேண்டும். இது மக்களுக்கு மாத்திரம் நன்மையாகமட்டுமில்லாமல், ஆங்கில அறிவில்லாததால், பாராளு மன்றத்தில் மசோதாக்களிலுள்ளவைகளைச் சரிவர அறிய முடியாமல் இருக்கும் உறுப்பினர்களுக்கும் இது உபயோகப்படும்.

எல்லாப் பாராளு மன்றச் சட்டங்களும், ஹிந்தியில் மொழிபெயர்த்தாக வேண்டும். மேலே சிபார்சு செய்யப்பட்டபடி, மசோதாக்கள் கொண்டுவரும் பொழுது, அதன் ஹிந்தி மொழிபெயர்ப்பும் கொண்டுவரப்பட்டால், அது சட்டமாகும்பொழுது, அதன் ஹிந்தி மொழிபெயர்ப்பும் கூடவே கிடைக்கும்.*

மத்திய அவையிலுள்ள சில சட்டங்களை ஹிந்தியில் ஏற்கெனவே சட்ட இலாகாக்கள் மொழிபெயர்த்திருக்கின்றன. மூலச் சட்டத்திற்கு ஒப்பாக இப்பெயர்ப்புக்களைக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மூன்ருண்டுகளுக்குள்ள முழுச் சட்டப் புத்தகத்திற்கும் அதிகார பூர்வமான ஹிந்தி மொழிபெயர்ப்பு கிடைக்கவேண்டும். இச்சிபார்சுகளை ஏற்று நடத்த, சட்ட இலாகாவின் ஹிந்திப் பகுதி பெரிதும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

ராஜ்ய சட்டசபைகளைப் பொறுத்தவரை, அவர்களின் சட்டங்களை, அதிகாரபூர்வமான ஹிந்தி மொழிச் சட்டங்களாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்களுடன் ஆலோசித்துச் செய்யவேண்டும்.

நீதிமன்றங்களின் மொழி

35-லிருந்து 39-வது சிபார்சுகளைப்பற்றிக் கமிட்டி சொன்னவைகளை, அதாவது, ஹிந்தி மொழி பேசும் பிராந்தியங்களிலுள்ள உயர் நீதிமன்றங்கள், ஹிந்தி மொழிமாற்றத்திற்காக, ஆங்கிலத்தில் சாட்சியம் சொல்லுவதைத் தள்ளிவிடுவது, வழக்கறிஞர்களை ஹிந்தியில் பேசுவதற்கு அனுமதியளிப்பது, மற்ற சில்லரை விஷயங்களுக்கும், மனுச்செய்வது முதலியவைகளுக்கும் ஹிந்தி உபயோகிப்பது, இவைகளைப்பற்றி மேலும் சொல்ல விரும்புகிருேம்.

---

* 46-47-வது பக்கங்களிலும், 44-45-வது பாராக்களிலும் (27-28 பக்கங்கள்) கமிட்டியின் அபிப்பிராயத்தைக் காணலாம்.

உச்ச நீதிமன்றம், மற்ற உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை விரைவில் ஹிந்தியில் மொழிபெயர்க்க வேண்டுவன செய்யவேண்டும்.† சட்ட இலாகாவின் மேற்பார்வைக்குட்பட்ட டெல்லியிலிருக்கும் ஒரு இலாகாவினருக்கு இதை ஒப்படைக்கப்படலாம்.

பொதுப் பணித் தேர்வுகள்

பொதுப் பணிகளுக்கான தேர்வுகளிலும், பயிற்சி முறைகளிலும், ஹிந்தி உபயோகத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் நாங்கள் கூறவிரும்புகிறோம். கமிஷனின் 51-வது சிபார்சில் சொல்லுவதாவது, போதனு முறையில் எந்த மொழி உபயோகப்படுகிறது, அதுதான் பொதுவாக போட்டிப் பரிட்சைகளில் இருக்க வேண்டுமென்கிறது.

இக்குறிக்கோளைப் பொதுவாக ஏற்கவேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். இச்சிபார்சு தள்ளப்படலாம் என்ற பெரும்பான்மைத் தீர்ப்பை நாங்கள் அங்கீகரிக்கவில்லை.

52, 53-வது சிபார்சுகளைப்பற்றி, எல்லா வினுத்தாள்களுமோ, அல்லது சிலவற்றிற்கோ, ஹிந்தியோ, ஆங்கிலமோ, தற்சமயத்திற்கு, இப்பயிற்சிக் கூடங்களின் நுழைவுப் பொட்டிப் பரிட்சை மொழியாக வேண்டுமென்ற கமிட்டியின் பெரும்பான்மையான தீர்ப்பை நாங்கள் ஏற்கிறோம். ஆனுல், இன்னும் சிறிது காலத்திற்கு இப்பயிற்சிக் கூடங்களில் போதனு மொழியாக ஆங்கிலம் மட்டுமே இருக்கவேண்டுமென்பதை நாங்கள் ஏற்கவில்லை. ''எல்லாப் பாடங்களுக்குமோ அல்லது ஏதாவது சிலவற்றிற்கோ ஹிந்தியை உபயோகிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று'' அவர்கள் சொன்னது ஆணித்தரமாக இல்லை. நடவடிக்கைகள் என்ற வார்த்தையின் முன்னே ''விரைவாக'' என்று நாங்கள் சொன்னதை இக்குழு ஏற்கவில்லை. அதற்குப் பதிலாக ''தகுந்த'' என்று சேர்க்கப்பட்டது. இதிலிருந்து இச்சிபார்சுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கவேண்டுமென்று தெரிகிறது. வெகு காலம்வரை, போதனு முறையை ஆங்கிலம் இருக்க வேண்டுமென்பது பெரும்பான்மையரின் விருப்பம்போல் இருக்கிறது. இது ஒரு குறுகிய நோக்குடனுள்ள, முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோடும், தேச நலனைப் பாதிக்கும் ஒரு எண்ணம். இப்பயிற்சிக் கூடங்களில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் வயது 15-லிருந்து 18 வரை இருக்கும். அவர்களின் அடிப்படை, இடைநிலைக் கல்வி ராஜ்ய மொழியில் இருக்கவேண்டும். அவர்களுடைய ஆங்கில அறிவு மிகக்குறைவாக இருக்கும். ஆங்கிலமே போதனு மொழியாக வேண்டுமென்று சாதிப்பதில் அர்த்தமில்லை. இக்கூடங்களில் ஹிந்தி முக்கிய போதனு மொழியாகவும், ஆங்கிலம் மாற்று மொழியாகவும் உடனே இருக்க, ஏற்கப்பட வேண்டும் என்று நாங்கள் எண்ணுகிறோம்.

54-லிருந்து 59வரை உள்ள சிபார்சுகள்பற்றி, அகில இந்திய, உயர்தர மத்தியத் துறைப் பணிகளைப் பற்றிக் கமிஷன் தன் அறிக்கையில் முக்கியமாகச் சிபார்சு செய்தபடி (28 மாதங்களுக்கு முன் செய்தது) தகுந்த முன்னறிவிப்பின் படி ஹிந்தியும் ஆங்கிலத்துடன் தேர்வு மொழியாவதை, உடனடியாக அமுலுக்குக் கொண்டுவந்திருக்க வேண்டும். எதுவானுலும், இச்சிபார்சை மேலும் தள்ளிப் போடவேண்டிய நியாயமில்லை. ஏனென்றுல் பல பல்கலைக்

---

† 47–48-வது பக்கங்களிலும், 46–50-வது பாராக்களிலும் (28-30-வது பக்கங்களிலும்) கமிட்டியின் அபிப்பிராயத்தைக் காணலாம்.

கழகங்களில் கடந்த நான்கு வருடங்களாக அதிகமான மாணவர்கள் ஹிந்தியிலோ, ராஜ்ய மொழியிலோ பட்டப் படிப்பு பெற்றிருக்கின்றனர். அவர்களுக்குப் போட்டிப் பரிட்சையில் விடைதரப் போதிய ஆங்கில அறிவில்லே. உயர்தரப் போட்டிப் பரிட்சைகளுக்கு ஆங்கிலம் இடைநிலே மொழியாக வைத்துக்கொள்ளப்பட்டால், விரும்பிய மாணவர்களுக்கு ஹிந்தியை இடைநிலே மொழியாக்குவது நியாயமே.

''இடைநிலே மொழியாக ஆங்கிலம் நீடித்தும், சில காலத்திற்குப் பிறகு மாற்றுமொழியாக ஹிந்தியைக் கொண்டுவரலாம்'' என்ற இக்கமிட்டியின் பரிட்சையைப்பற்றின பெரும்பான்மையரின் எண்ணம் நியாயமற்றதும், கல்வியில் ஆங்கிலத்திற்கப் பதிலாக ஹிந்தியை விரும்பும் மாணவர்களுக்கு எதிராக இருப்பதாகும். ஆங்கிலத்துடன் ஹிந்தி மாற்றுமொழியாக வேண்டும் என்ற எங்கள் பிரச்னையை பெரும்பான்மையினர் ஏற்றுக்கோள்ள வில்லே. இதனுல் வெகு காலத்திற்கு வேலே நடைபெருமலிருக்கலாம். 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் போட்டிப் பரிட்சைகளுக்கு ஆங்கிலத்துடன் ஹிந்தியும் இடைநிலே மொழியாக்க வேண்டும். இதற்கான அறிக்கை 1959 மார்ச் மாதம் முடியுமுன் வெளியிட வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

ஹிந்தி அமைச்சுக்கான கோரிக்கை

கமிஷனுடையவும், இக்கமிட்டியினுடையவுமான சிபாார்சுகளேயும், எங்கள் சிபார்சுகளேயும் காலதாமதமில்லாமலும், மொழிமாற்றம் படிப் படியாக, முன்யோசனேயுடனும், ஒருமித்த கருத்துடனும் செய்வதற்கு, ஒரு தனியான ஹிந்தி அமைச்சு வேண்டும். இது மற்ற அமைச்சுக்களுடன் சேர்ந்து வேலே செய்தாலும் இவைகளுக்குக் கீழ் இருக்காது. என்ன காரணத் திற்காவது இது முடியாதென்ருல், உள்நாட்டமைச்சுக்குக் கீழாவது, கல்வி யமைச்சுக்குக் கீழாவது ஒரு சுதந்திரக் கமிட்டியை நியமிக்கப்பட வேண்டும். இதனுல் 1965-லாவது, அதன் பிறகு ஓரிரு வருடங்களிலாவது ஆங்கிலத்தி லிருந்து ஹிந்தி மொழிமாற்றம் எல்லாவகையிலும் முடிவடையும்.

புது டில்லி, (ஒ-ம்) புருஷோத்தம தாஸ் தாண்டன்

5-12-1958. (ஒ-ம்) கோவிந்த தாஸ்

புது டில்லி, 1958-ம் ஆண்டு டிசம்பர், 3-ந் தேதி.

திரு பிராங்க் அந்தோனியின்

மறுப்புக் குறிப்பு

இம்முழு அறிக்கையின்மேலும் இம்மறுதளிப்பைச் சமர்ப்பிக்குமாறு கட்டாயப்படுத்தப்படுவதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். இக்கமிட்டியின் கூட்டங்களில் பங்கெடுத்துக்கொண்டிருப்பதற்கு அத்தாட்சியாக இவ்வறிக்கையில் கையொப்பமிட்டிருக்கிறேன். பண்டித பந்த் அவர்களால் அக்கிராசனம் வகிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கைக்கு அடிப்படை வேற்றுமை கொள்ள வேண்டியிருப்பதானது எனது வருத்தத்தை மிகைப்படுத்துகிறது. மரியாதை, பண்பு, பொறுமை இவைகளையுடைய பண்டிதரில்லாமல் வேறு எவராவது தலைவராக இருந்தால், முன்னுக்குப்பின் முரணில்லாத ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்க முடியாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அந்தரங்க நடவடிக்கைகள்

அந்தரங்கமாகக் கமிட்டியின் நடவடிக்கைகளை நடத்த நான் தீவிரமாக எதிர்த்தேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆட்சி மொழிப் பிரச்னை பற்றிய அரசியலமைப்பு ஷரத்துக்களை நாட்டில் வெகு சிலரே, இன்னும் சொல்லப்போனால் சட்ட அவைகளில் வெகு சிலரே அறிவர். அரசியலமைப்பு 344 (4)வது பிரிவின்படி பாராளு மன்றக் கமிட்டி நியமிக்கப்பட்டது. தனிப்பட்ட அதிகாரங்களை இக்கமிட்டிக்கு அரசியலமைப்பு கொடுத்திருக்கிறது. பாராளு மன்றத்தின் இரண்டு அவைகளாலும் இக்குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது. மக்களவையிலிருந்து 20 உறுப்பினர்களும், ராஜ்ய அவையிலிருந்து 10 உறுப்பினர்களும் இதிலிருப்பர். பாராளு மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் இது ஒரு சாதாரணப் பாராளு மன்றக் கமிட்டியல்ல. பாராளு மன்றக் கமிட்டி, பாராளு மன்றத்திற்குத் தனது முடிவுகளை அறிவிக்க வேண்டும். இவ்வறிக்கை, பாராளு மன்றத்தினரால் திருத்தவோ, முழுவதும் மாற்றப்படவோ செய்யலாம். ஆட்சி மொழி பற்றின பாராளு மன்றக் கமிட்டியோ தனது அறிக்கையைப் பாராளு மன்றத்திற்கு சமர்ப்பிக்கக் கட்டாயமில்லை. இவ்வறிக்கையைப் பாராளு மன்றத்தில் சமர்ப்பித்தது வேண்டுமென்று செய்யப்பட்டதல்ல. பாராளு மன்றத்தில் இதைப்பற்றி நான் குறிப்பிட்டபொழுதுதான், பண்டித பந்த், ராஷ்ட்ரபதியின் சம்மதத்திற்குப் பிறகு, பாராளு மன்றத்தில் இவ்வறிக்கையை சமர்ப்பிப்பதாகச் சொன்னார்.

பாராளு மன்றம், இக்கமிட்டியின் அறிக்கையைப்பற்றி நாளடைவில் விவாதித்தாலும், ஏதாவது ஒரு சிபார்சையோ, இன்னும் சொல்லப்போனால் இவ்வறிக்கையின் ஒரு வார்த்தையையோ மாற்ற முடியாது.

அரசியலமைப்பின்படி ராஷ்ட்ரபதிக்கு நேராக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வறிக்கையின்படி, கட்டுப்பாடின்றி உத்தரவிட ராஷ்ட்ரபதிக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆட்சி மொழி பற்றி இந்த முக்கியமான பிரச்னையைப் பற்றி எது செய்யவேண்டும், எது செய்யவேண்டாமென்று தீர்மானிக்க இச்சிறு கமிட்டிதான் முழு அதிகாரி.

இம்மாதிரியான பிரத்யேக சூழ்நிலையினுல்தான், வெளிப்படைக் கூட்டங்கள் நடக்க வேண்டிய தேவையையும், கடமையையும் பற்றி நான் வற்புறுத்தினேன். ஏனென்ருல், இதன்மூலம் நமது முக்கியமான விவாதங்களிலும், தீர்ப்புக்களிலும், நாடும் நம்முடன் ஒத்துழைக்கும். ஆனுல், பெரும்பான்மையினரின் தீர்மானத்திற்கிணங்க அந்தரங்கமாகக் கமிட்டி கூடினதால், என் எண்ணப்படி இக்கூட்டம் உண்மையில்லாத சூழ்நிலையில் வேலை செய்தது. இக்கமிட்டியில் விவாதிக்கப்பட்ட பலவித குறிக்கோள்கள் நாட்டுக்குத் தெரியாது. நாட்டின் பல பாகங்களில் பிரதிபலிக்கும் உணர்ச்சியைக் கவனிக்க உறுப்பினர்களுக்கு வசதியில்லை. இதன் பலன் என்னவென்ருல், அந்தரங்கமாகக் கூடும் இவ்விருபது உறுப்பினர்களும், நாடுமுழுவதின் சார்பாக, இந்த முக்கியமான எதிர்ப்புக்களடங்கிய பிரச்னையைத் தீர்மானித்தனர்.

பொதுவாக இறுகப்பட்ட முறை

என் எண்ணப்படி, இப்பிரச்னைக்கு முடிவுகாண எடுத்துக்கொண்ட முறை மிகக் குறுகியது. மொழிக் கமிஷனின் சிபார்சுகளை இக்கமிட்டி ஆராய வேண்டுமென்றிருந்தாலும், என் கருத்துப்படி, இம்மொழிப் பிரச்னையைப் பற்றின மற்றப் பிரச்னைகளையும், மொழிக் கமிஷன் கவனிக்காவிட்டாலும், இக்கமிட்டி கவனிக்கலாம். இவ்வாருக, இந்தியாவின் ஒன்றிணைந்த கலாசாரத்தைப் பிரதிபலிக்க, ஆங்கிலத்திலிருந்தும் ஹிந்தி சொற்களை 351 ஷரத்துப்படி எடுத்துக்கொள்ள, ஆங்கில மொழியை அரசியலமைப்பு 8-வது தபசிலில் சேர்க்க வேண்டுமென்பதை, இக்கமிட்டி கட்டாயம் ஆராய்ந்திருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.* ஆனுல், இப்பிரேரணையை கமிட்டிக்கு அப்பாற்பட்டதென்றும், விவாதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை என்றும், ஏற்க மறுத்தது.

இவ்வாருகவே, காந்திஜியின் விருப்பப்படி, நடுநிலை மொழியான ஹிந்துஸ்தானி ஆட்சி மொழியாக வேண்டுமென்ற எனது பிரேரணையை இக்குழு நிராகரித்தது.

அரசாங்க பாஷைக் கமிஷனின் சிபார்சுகளைக் காரணமில்லாமல் குறுகிய மனப்பான்மையுடன் இக்கமிஷன் பார்த்தது என்பது என் கருத்து. இச்சிபார்சுகளைப் பற்றியதல்லாமல் வேருென்றையும் ஆராயக் கூடாதென்ற எண்ணத்துடன் இக்கமிட்டி வேலைசெய்தது. இப்படியாக, ஹிந்தி மொழி பேசாத இடங்களில், எந்த ஒரு மொழிக் கமிஷனின் உறுப்பினர்களின் நியமனத்தையோ, அல்லது அவர்களுடைய பாரபட்சமற்ற தன்மையையோ சந்தேகிக்கிருர்களோ, அவற்றின் சிபார்சுகளால், இக்கமிட்டியின் வேலை அகாரணமாக பாதிக்கப்படுகின்றது.

ஹிந்தி மொழி புகுத்தலை அதிகமாக எதிர்க்கும் நாட்டில் ஏற்பட்ட பெரிய மாறுதலைக் கவனிக்காமல், இதைப்பற்றிய சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளாதது, கமிட்டியின் பெரிய தவறு. ஆகவே, தற்போதைய நிலை தொடர வேண்டுமென்றும், ஹிந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ள முடியாதென்ற மேற்கு வங்கச் சட்டசபையின் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இக்கமிட்டி ஏற்க மறுத்தது.

---

* 35-வது ஷரத்துப்படி 8-வது ஷெட்யூலில்லாத மொழிகளிலிருந்தும் வார்த்தைகளை ஹிந்தி எடுத்துக்கொள்ளலாம். இந்த ஷரத்துப்படி, ஆங்கில பண்ருட்டுச் சொற்ருெடர்களை உபயோகிக்கலாம் என்று பாரா 27-ல் (பக்கங்கள் 16-17) தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

கமிட்டியின் முக்கிய சிபார்சுகள் ஹிந்தி மொழிமாற்றத்திற்கு 1965-ம் ஆண்டைக் கடைசித் தேதியாக இக்கமிட்டி நிர்ணயிக்கிறது

ஹிந்தி மொழிக்கு மாற்ற 1965-ம் ஆண்டு கடைசித் தேதியாக இருக்கும் என்று இக்குழு நிர்ணயிக்கிறது:—

> ''கடைசியாக ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மாற்றும் தேதியானது, இந்த முயற்சியின் முடிவைக் காட்டுமே யல்லாது, ஒரு புதிய முறையாக ஆகாது. ஆகவே, அத்தேதிவரை ஆங்கிலம் முக்கிய ஆட்சி மொழியாகவும், ஹிந்தி துணை ஆட்சி மொழியாகவும், அவ்வாண்டிலிருந்து ஹிந்தி முக்கிய ஆட்சி மொழியான பின்பு, பாராளு மன்றம் சட்டமியற்றிக் குறிப்பிடும் அலுவல்களுக்கும், அவசியமெனக் கருதப்படும் காலம் வரையிலும் ஆங்கிலம் உப யோகத்திலிருந்து வரவேண்டும் என்று இக்கமிட்டி நினைக்கிறது.''

''1965-ம் ஆண்டிலிருந்து ஹிந்தி முக்கிய ஆட்சி மொழியாகும்'' என்ற வார்த்தைகள், சந்தேகமறக் கொள்கையிலூறியிருந்தாலும், அரசிய லமைப்புப் பிரகாரம் மிகக் கெடுதலான முடிவைக் குறிக்கும். இவ் வார்த்தை கள், இக்கமிட்டி 1965-ம் ஆண்டிற்குப் பிறகு ஹிந்தி முக்கிய ஆட்சி மொழி யாகும் என்று நம்புகிறதென்பதைத் தெளிவுபடுத்துகிறது. இச்சிபார்சு களின் ஆரம்ப வாக்கியங்களிலுள்ள சொற்கள், இக்கடைசித் தேதியைப் பற்றி எடுக்கக் கூடிய நடவடிக்கை விரிந்து கொடுக்கும் தன்மையுள்ளதாகவும், நடைமுறைக்குச் சாத்தியமானதாகவும் இருக்க வேண்டுமென்று குறித் தாலும், ''1965-ம் ஆண்டிலிருந்து ஹிந்தி முக்கிய ஆட்சி மொழியாகும் பொழுது'' என்ற வார்த்தைகள் முதலிலிருந்த நல்லெண்ணத்தை மாற்றி விடுகிறது. தெளிவாகக் கூறுமிடத்து, முக்கிய ஆட்சி மொழியாக ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மாற்ற 1965-ம் ஆண்டு கடைசித் தேதியாக இருக்கும் என்பதை இக்கமிட்டி ஏற்கிறது என்பது புரியும். கமிட்டியின் இச் சிபார்சு பொதுவாக நாடு முழுவதற்கு மட்டிலுமல்ல, குறிப்பாக ஹிந்தி மொழி பேசாத பகுதிகளுக்கு, புரட்சிகரமான விளைவுகளுடையதாக இருக் கிறது. இச்சிபார்சின் பிரகாரம், 1965-லிருந்து ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மாற்ற, தன்னிச்சைபோல் ஜனாதிபதி தேவையான நடவடிக்கை களெடுப்பார்.

முதலாவதாக, 1965-ம் ஆண்டை இம்மொழி மாற்றத்திற்குக் கடைசித் தேதியாக நிர்ணயிக்கப்படமாட்டாது என்று கௌஹாத்தி மாநாட்டில் ஆளும் வர்க்கத்தினரால் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை, இச்சிபார்சு குலைக்கிறது.

''அரசியலமைப்பு 343-வது பிரிவை நடைமுறைக்கு வருவதை இச்சிபார்சு தடுக்கிறது. 343 (3) பிரிவின்படி, வேண்டிய சில அலுவல்களுக்கு, 15 வருடங்களுக்குப் பிறகும், ஆங்கிலம் உபயோகிக்கப்படலாம் என்று பாராளு மன்றம் சட்டமியற்றலாம்'' என்பது தெளிவாகிறது. இந்த பிரிவின்படி, 1965-ம் ஆண்டிற்குப் பிறகும், பாராளு மன்றம் தற்போதைய நிலை தொடர லாம் என்று தீர்மானிக்கலாம். ஆனால், பாராளு மன்றத்தின் அதிகாரத்தை மீறவும், புறக்கணிக்கவும், ஆணவமிகுதியால் இக்கமிட்டி தீர்மானித்திருக் கிறது.†

---

† ''1965-லிருந்து ஹிந்தி முக்கிய ஆட்சி மொழியாகும் பொழுது'' என்பதானது ஷரத்து 343-ல் காணப்படுகிறது. பாராளுமன்றம் சட்டப்படி தேவையான காலத்திற்கு சிலவிஷயங்களுக்கு ஆங்கிலத்தை உபயோகப்படுத்தலாம் என்று கமிட்டி சிபார்சு செய்கிறது, 343(3) ஷரத்து பாராளு மன்றத்தின் இச்சைக்கு விட்டுவிடும் இந்தபாகத்தைப்பற்றி, கமிட்டி ஆக்கமுறையில் சிபார்சு செய்கிறது.

கமிட்டியின் சிபார்சுகளின்படி, பாராளு மன்றம் என்ன நினைத்தாலும், 1965-ம் ஆண்டிற்குப் பிறகு, தற்போதைய நிலை நீடிக்காது. 1965-ம் ஆண்டிற்குப் பிறகு ஆங்கிலம் முக்கிய ஆட்சி மொழியாகத் தொடர்ந்திருக்கலாம் என்று தீர்மானிக்கப் பாராளு மன்றத்தின் உரிமையைப் பறிக்கப் பார்க்கின்றது. என் கருத்துப்படி கமிட்டி சிபார்சு நியாயமற்றவகையில் உரிமையை எடுத்துக் கொள்வதாகும். காங்கிரஸ் கட்சி கொடுத்த உறுதி மொழியை மீறுவதுடன், இச்சிபார்சு, பாராளு மன்றம் கொண்டுள்ள அரசியலதிகாரங்களை அபகரிக்கும் முயற்சியாகும்.

பலமொழிக்கருத்தின் இறக்குமதி

கமிட்டி தனது சிபார்சு மூலம், ஒரு புதுவிதமான, பயங்கரமான பல மொழிக் கருத்தைப் புகுத்துகின்றது. ஆக, அறிக்கையின் ஒரு பகுதியில் கமிட்டி சொல்வதாவது ''மேற்கூறிய அரசியலமைப்பின் பிரகாரம் ஏற்பட்ட ஒப்பந்தம் ஓர் ஒன்றிணைந்த விரிவான திட்டம். மிகக் கருத்துடன் தயாரிக்கப் பட்டு, நாட்டின் வெவ்வேறு விதமான மொழிகள் பேசும் பகுதிகளின் பொதுவான ஒற்றுமையைக் குறிக்கும்படி, ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டது.''

இவ்வறிக்கையின் மற்றொரு பகுதியில் சொல்லப்பட்டிருப்பதாவது ''ஹிந்தி மொழிக்கும் மற்ற தேசிய மொழிகளுக்கு மிடையே சண்டை என்ற பிரச்னை எழவே எழாது.''

இக்கமிட்டியினால் உபயோகிக்கப்பட்ட சொற்றொடர்கள், அரசியலமைப் பின் சட்டப்படி ஏற்படும் தெளிவான விளைவுகளைப் பற்றிக் கவனிக்கவே இல்லை. நிலைமை இன்னும் மோசமாகிறது. ஏனென்றால், இப்பல மொழிக் கருத்தை அதிகார பூர்வமாக அங்கீகரிக்கிறது. எந்த ஒரு தேசிய மொழியைப் பற்றியும் நினைக்க, அரசியலமைப்பு வேண்டுமென்றே மறுத்திருக்கிறது. இப் பன்மொழி நாட்டில், ஹிந்தியைவிட கால அளவிலும், சொல் வளத்திலும் மேம்பட்ட பல மொழிகள் இருப்பதினால், தேசிய மொழி என்று சொன்னால், அம்மொழியை நாடு முழுவதும் ''தேசிய''த்திற் கேற்ப கொண்டுவர வேண்டி யிருக்கும் என்று அரசியலமைப்பை இயற்றியவர்கள் அறிந்தார்கள்.

அரசியலமைப்பின் மொழிப் பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் ஒன்றிணைந்த திட்டமானது, யூனியன் ஆட்சி அலுவல்களுக்கு ஒரு அதிகார பூர்வமான மொழியும், பல ராஜ்யங்களிலுள்ள அலுவல்களுக்காக ஒரு அதிகாரபூர்வமான மொழியும் ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கப்பட்டது என்பது தெளிவாகும். இக்கமிட்டி உபயோகித்திருக்கும் ''தேசிய'' என்ற வார்த்தை, வருந்தத்தக்கதான கெட்ட அறிகுறி. 1950-ம் ஆண்டிலிருந்தே ஹிந்தி மொழிப் பித்தர்கள் ஹிந்தியை ''ராஷ்ட்ர பாஷா'' அல்லது ''தேசிய மொழி'' என்று பெயர் சூட்ட வேண்டுமென்று பாடுபடுகின்றனர். ''அதிகார பூர்வமான'' என்ற சொல்லுடன் அவர்கள் திருப்தியடையவில்லை. இம்மாதிரி ஹிந்தியைத் தேசிய மொழியாக்குவதற்கு ஏற்பட்ட கிளர்ச்சிக்கு ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் இயற்கையான எதிர்ப்பு ஏற்பட் டிருக்கிறது, இவ்வெதிர்ப்பை முறியடிக்க, 8-வது ஷெட்யூலில் சொல்லப் பட்டுள்ள மொழிகளை ''தேசிய மொழிகள்'' என்று குறிக்கிறார்கள்.

8-வது ஷெட்யூலில் சொல்லப்பட்டுள்ள மொழிகளைப்பற்றி நான் தாழ்மையாகச் சொல்வது, அவைகளை, சட்டப்படியோ, அல்லது மொழியியற்படியோ, ''தேசிய'' மொழிகள் என்று குறிப்பிட முடியாது. ''தேசியம்'' என்ற வார்த்தைக்கு ஒரு அர்த்தம் (மிகக் குறைந்த அளவிலிருந்தாலும்) உண்டு. ஒரு நாட்டின் குறிப்பிட்ட பாகத்தில் உபயோகத்திலிருக்கும், நாடு முழுவதிலும் ஏற்கப்படாமலிருக்கும் ஒரு மொழியை, மொழியியற்படி ''தேசிய'' மொழி என்று குறிப்பிட முடியாது. இதைத் தவிர, இம் மொழிகள் இருக்கும் நிலையில் இச்சொற்றொடரைப் புகுத்தினால் பல அபாயங்கள் இருக்கின்றன. ஹிந்தியைத் தேசிய மொழி* என்று குறிப்பிடுவதை எதிர்க்கும் ஹிந்தி அல்லாத மொழியினரைத் தேற்றுவதற்குக் கையாளும் தந்திரம் இது என்பது மிகத் தெளிவு. ''தேசியம்'' என்ற சொற்றொடருக் கொப்ப நாடு முழுவதிலும் ஹிந்தியைப் புகுத்த விரும்பும் ஹிந்தி பித்தர்களுடைய ஆசையை இது நிறைவேற்றும்.

*8-வது ஷெட்யூலில் காணப்படாத பல்வேறு மொழி பேசும் லட்சக் கணக்கானவர்களை, இந்த ஷெட்யூலிலுள்ள ஒரு சில மொழிகளை ''தேசிய'' மொழிகளென்று குறிப்பிடுவது, காரணமில்லாமல் எதிரிகளாக்கும் என்பது என் ஆட்சேபனைக்கு மற்றொரு காரணம்.

சிந்தி மொழியினர், பழங்குடிகள், இந்திய கூர்க்காக்கள், நாகர்கள், இன்னும் பல லட்சக்கணக்கானவர்கள், தங்கள் மொழிகளில் மிகுந்த பெருமை கொள்கிறார்கள். இப்பொழுது இவர்களிடம், இம்மொழிகள் தேசிய மொழிகளல்ல என்று சொல்லுகிறோம். ஹிந்தி ஆதிக்க வெறியர்களின் சொற்கள் பிரகாரம், இவர்கள் இந்திய இனத்தோடு சேராத இந்தியர்கள். இவர்கள் பேசுவது இந்திய மொழிகளன்று, இக்கமிட்டி இவர்களுடைய மொழிகளை, கீழ்த்தர தேசிய மொழிகளுக்கான குழியில் புதைக்க வேண்டுமென்று முன்னறிவிப்புக் கொடுக்கிறார்கள்.

8-வது ஷெட்யூலில் சொல்லப்பட்டுள்ள மொழிகளை மாத்திரம் ''தேசிய'' மொழிகள் என்பது, சட்டப்படி முழுவதும் தவறு. இம்மாதிரியான அந்தஸ்தும், இவ்வாறாக விவரிப்பதும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட வில்லை. அரசியலமைப்பு 351-வது பிரிவு, 8-வது ஷெட்யூலில் சொல்லப்பட்ட இந்திய மொழிகளிலிருந்தும், ஹிந்துஸ்தானியிலிருந்தும் ஹிந்தி சொற்களை எடுக்கலாம் என்று சொல்லுகிறது. 8-வது ஷெட்யூலில் இம்மொழிகளைச் சேர்த்ததின் நோக்கமென்னவென்றால், ஹிந்தி இம்மொழிகளிலிருந்து சொற்களைச் சேர்க்கலாம் என்பதுதான். இம்மொழிகளை ''தேசிய'' மொழிகள் என்று சொல்லி, இவ்வித்தியாசத்தால் பல லட்சக்கணக்கானவர்களின் மொழிகளைத் தேசிய அந்தஸ்தையும்விடக் கீழ்நிலையில் தள்ளுவதானது, அரசியலமைப்பில் எண்ணப்படாததாகும்.

இவ்வடிப்படையில் ஹிந்தியை ஆதரிப்போர்களின் கோரிக்கையான, எது எப்படியிருந்தாலும் ஹிந்தி தேசிய மொழியென்று கூறப்பட வேண்டுமென்பதை ஏற்று சட்டத்திற்குப் புறம்பாக ''தேசிய'' என்ற சொற்றொடரைச் சேர்த்ததால், இக்கமிட்டி ஈரினக் கொள்கையை மாத்திரமல்ல பல இனக் கொள்கையை ஆதரிக்கிறது. கமிட்டியின் சிபார்சுகளின்படி 14 தேசிய மொழிகளிலிருந்தால், பதினான்கு இனங்களும் உண்டு. இப் பன்மொழிக் கொள்கைக்கு முதலில் பலியானது, மொழி அடிப்படையில் ராஜ்யங்களைத்

* மொழிக்கமிஷனின் அறிக்கையில் '' தேசிய '' என்ற சொற்றொடரானது 8-வது ஷெட்யூலிலுள்ள மொழிகளுக்கு மாத்திரம் உபயோகிக்கப்பட்டவையல்ல.

திருத்தி அமைத்தல். 14 மொழிகளேயும் தேசிய மொழிகள் என்று அதிகார பூர்வமாக ஏற்ருல், இது மற்ருெரு பலியாகும். என் தாழ்மையான கருத்துப்படி ஹிந்தியைப் புகுத்துவதானது, நாட்டின் பிரிவினைக்கும், சிறு சுதந்திரப் பகுதிகளேற்படுவதற்கும் அறிகுறி.

ஆளெடுப்புக்கு முதலில் வேண்டியது ஹிந்தி மொழியறிவு என்ற கடும் நிபந்தனே

புகையிரத இலாகா, தபால் தந்தி இலாகா, வருமான வரி இலாகா போன்ற மத்திய அரசாங்க அலுவல்களில் கீழ்த்தர வேலைகளுக்கு ஆள் எடுப்பதில், ''அவர்கள் ஒரு நிரந்தர இரட்டை மொழி நிலையை ஏற்படுத்த வேண்டும். அதாவது, உள் அலுவல்களுக்கு ஹிந்தியையும், அந்தந்தப் பகுதிகளிலுள்ள மக்களுடன் தொடர்புகொள்ள அந்தந்தப் பிராந்திய மொழிகளேயும் உபயோகிக்க வேண்டும்'' என்று மொழிக் கழகத்தின் சிபார்சை இக் கமிட்டி ஏற்றுக்கொண்டது. ''தகுந்த முன்னறிவிப்பிற்குப் பின் புதிதாகச் சேரும் பணியாளர்களுக்கு, தேவையான ஹிந்தி மொழி அறிவு வேண்டுமென்று நிபந்தனேயிடலாம். ஆனல் முதலில் கோரப்பட்ட ஹிந்தி மொழி குறைவாக இருக்கவேண்டும். பற்ருக்குறை ஹிந்தியறிவை பூர்த்தி செய்ய வேலையிலிருக்கும் போழுது பயிற்சியளிக்க வேண்டும்.'' என்ற கழகத்தின் சிபார்சையும் கமிட்டி ஏற்றுக்கொண்டது. ''தகுந்த முன்னறிவிப்பு கொடுத்தபின்தான்'' என்ற வார்த்தைகள் பாதுகாப்பு அளிப்பதாகத் தெரிந்த போதிலும், 1965-ம் ஆண்டிலிருந்து ஹிந்தி முக்கிய ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற பெரும்பான்மை சிபார்சு, 1965-ம் ஆண்டிற்கு வெகு காலத்திற்கு முன்னரே, கீழ்த்தர வேலைகளுக்கும் முற்கூட்டியே ஹிந்தியறிவு வேண்டும் என்ற நிபந்தனே இன்றியமையாததாகச் செய்கிறது. ஆகையால் இதன் தவிர்க்க முடியாத முடிவு என்னவென்ருல், ஹிந்தி மொழியல்லாத பகுதிகளிலுள்ள மத்திய சர்க்கார் அலுவலகங்களில் ஆட்கள் எடுக்கும்பொழுது, அந்தப் பகுதிகளில் வாழும் ஹிந்தியைத் தாய் மொழியாயுடையவருக்கே அதிகச் சலுகை கிடைக்கும். பள்ளிக்கூடங்களில் ஹிந்தி மொழியை மூன்ருவது மொழியாக ஆக்குவதைக்கூட' சில ராஜ்யங்கள் செய்ய மறுத்தன என்பது நன்ருகத் தெரியும். ஆகவே, மத்திய அரசாங்க அலுவல்களுக்குக் கீழ்த்தர வேலைகளுக்காகப் போட்டியிடும் இம்மாணவர்களுக்கு ஹிந்தி மொழி மிகக் குறைவாக இருக்கலாம். இன்னும் ஓரிரு ஆண்டுகளிலோ, அல்லது 1965-ம் ஆண்டிற்கு முன்னுலேயே புகுத்தப்படும் இந்த நிபந்தனேயினல், மத்திய அரசாங்கக் கீழ்த்தர அலுவல்களுக்கும்கூட ஹிந்தி மொழியல்லாதவர்களேத் தேர்ந்தெடுப்பது குறைந்துகொண்டே வரும்.†

பயிற்சிக் கூடங்களில் இருமொழி. பன்மொழித் திட்டங்கள்

தேசியப் பாதுகாப்புக் கமிஷன் போன்ற பயிற்சிக் கூடங்களில் பங்கீட்டு முறை கொண்டுவருவதில், அகில இந்தியப் பணிகளில் இம்முறையைப் புகுத்துவதைக் காட்டிலும் எதிர்ப்பு இருக்காது என்ற மொழிக் கழகத்தின் கருத்தை இக்கமிட்டி ஏற்காதது வரவேற்கத்தகுந்த இதன் ஒரு சில சிபார்சுகளில் ஒன்று, என்பதை நான் தாழ்மையுடன் சொல்லுகிறேன். ஹிந்தி மொழியல்லாதாரின் இயற்கையான எதிர்ப்பைக் குறைப்பதற்கு, திட்டங்களேத்

† இச்சிபார்சுகளே, குழுவின் 13, 14, 15 சிபார்சுகளுடனும் இவ்வறிக்கையின் 22, 28 பாராக்களேயும் சேர்த்து வாசிக்கவேண்டும்.

தேடி, நாட்டின் ஒற்றுமையைக் குலைக்க எல்லாவிதமான சமரச ஒப்பந்தங்களை அசிரத்தையுடன் சமர்ப்பிக்கிறார்கள். மொழிக் கமிஷனின் சிபார்சு செய்யப்பட்டு இக்கமிஷனால் நிராகரிக்கப்பட்ட பங்கீடு முறை எப்பொழுதாவது புகுத்தப்பட்டால், தேசிய ஒற்றுமை, ஒரே தேசிய இனம் என்ற பெயரளவிலுள்ள நம்பிக்கையையும் விட்டுவிடலாம். அகில இந்தியப் பணிகளில் பங்கீட்டு முறையை ஏற்படுத்துவது, பல இனக்கருத்து என்ற பயங்கர கருத்தை அனுமதிக்க வேண்டியதாகும்.

பாதுகாப்புப் பணிகளுக்கான நுழைவுப் பரீட்சைகளை பிராந்திய மொழிகளில் வைக்கலாம் என்றும், எல்லாவற்றிற்குமோ அல்லது ஒரு சில பாடங்களுக்கோ, ஹிந்தியை ஆங்கிலத்துடன் உபயோகிக்கலாம் என்ற கமிட்டியின் சிபார்சு, கட்டாயமாக ஹிந்தியைப் புகுத்த வேண்டுமென்ற எண்ணத்திலுள்ள குழப்பத்தைக் குறிக்கிறது. பாதுகாப்புப் பணிகளில் மாணவர்களைப் பயிற்றுவிக்க இரு மொழித் திட்டத்தைக் கொண்டுவருவது, இந்த முக்கியமான பணிகளில், ஆழமானதும், கடுமையானதுமான மொழிச் சண்டைகளை உண்டு பண்ணும். சீக்கிரமாகவோ, அல்லது சில காலத்திற்குப் பின்னரோ, ஒருவேளை சீக்கிரமோ, (ஏனென்றால், 1965-ம் ஆண்டிலிருந்து முக்கிய ஆட்சி மொழியாக ஹிந்தி இருக்க வேண்டுமென்ற பெரும்பான்மையரின் சிபார்சினால்) பாதுகாப்புப் பணிப் பயிற்சிக் கூடங்களில் ஆங்கிலமும் ஹிந்தியும் சரிசமமாகப் போதனை மொழிகளாக இருக்கும் என்பது இக்கமிட்டியின் சிபார்சு. இதனால் ஏற்படும் நடைமுறையில் தவிர்க்க முடியாத முடிவுகள் என்ன என்பதும் தெளிவு. விளைவுகள் விளையாட்டாக இருந்தால், நாடு சிரிக்கலாம். ஆனால், விளைவுகள் அபாயகரமானவை. ஒரே பாதுகாப்புப் பணிப் பயிற்சிக் கூடத்தில் ஒரு சாரார் ஆங்கில மொழியின் மூலமாகவும் மற்றொரு சாரார் ஹிந்தி மூலமும் பயிற்சி பெறுவார்.* ஹிந்தி மொழியினர், ஆங்கில மொழியினர் என்று பாதுகாப்புப் பணி பிரிக்கப்படும். பாதுகாப்புப் படை, மொழி, மனம் இவற்றின் மூலம் ஒன்றுக்கொன்று பொறாமைகொண்ட பகுதிகளாகப் பிரிவதற்கு இது ஒரு அறிகுறி. இதுவே அபாயகரமாகும். ஆனால், நான் இன்னும் அபாயகர நிலையை எதிர் பார்க்கிறேன். இப்பயிற்சிக் கூடங்களில் இருமொழிப் போதனை வழியை ஒருதரம் ஏற்றுக்கொண்டால், ஹிந்தியை நிராகரித்த வங்காளம் போன்ற ஹிந்தி மொழியல்லாத பிரதேசங்களிலுள்ள உணர்ச்சி வேகத்தினால், இப்பயிற்சிக் கூடங்களில் பல போதனை மொழிகள் இருக்க வேண்டுமென்று தட்டிக்கழிக்க முடியாத கோரிக்கைகள் ஏற்படும். விரும்பத்தகாததும், நடைமுறையில் சரிவராததுமாக இருந்தாலும், பாதுகாப்புப் பணிப் பயிற்சிக் கூடங்களில் 14 அல்லது அதற்கு மேம்பட்ட மொழிகளைப் போதனை மொழிகளாக்க அரசாங்கம் கட்டாயப்படுத்தப்படும். இந்நிலையில், பாதுகாப்புப் படையில் ஒற்றுமையின் சாயை இருக்கிறது என்று நினைப்பதுகூட, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும்.

அகில இந்திய உயர்தர மத்திய அரசாங்கப் பணிகளுக்கு ஆட்கள் எடுக்க, இருமொழி, பன்மொழித் திட்டங்கள்

''இப்பிரச்னையைத் தீர விசாரித்த பின்பு, இடைநிலை மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டு மென்றும், மாற்றுமொழியாக ஹிந்தி இருக்க வேண்டுமென்றும் எண்ணுகிறது. சிறிது காலத்திற்குப்பின்

* கமிட்டியின் சிபார்சு என்னவென்றால் ''சிறிது காலத்திற்கு ஆங்கிலத்தைத் தொடர்ந்து உபயோகிக்கவேண்டும். போதனை மொழியாக, எல்லாவற்றிற்குமோ, அல்லது ஒரு சிலவற்றிற்கோ, ஹிந்தியைக் கொண்டுவரத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். ஒரு பாடத்திற்கு எது போதனை மொழியாக இருந்தாலும் எல்லா மாணவர்களும் அதில் பயிற்சி பெறுவர்.

ஹிந்தியும் ஆங்கிலமும் இடைநிலை மொழிகளாக தேவையான காலத்திற்கு இருக்கும். மாணவர்கள் இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். பங்கீட்டு முறையைப் புகுத்தாமல், பிராந்திய மொழிகளை இடைநிலை மொழிகளாக்க முடியுமானல், இக்குழு அதை எதிர்க்காது'' என்று கமிட்டி சிபார்சு செய்கிறது. எந்நிலையில் ஆராய்ந்தாலும் இச்சிபார்சு பிரிவு மனப் பான்மையை வரவேற்கிறது. நிர்வாகத் திறனுக்குமட்டுமல்ல, நாட்டின் ஒற்றுமைத் தொடர்பை ஏற்படுத்தவும் அகில இந்தியப் பணிகள் ஒரு காரணமாக விளங்கியது. ஒரு மொழியின் மூலம் ஆட்களெடுத்துப் பயிற்று வித்ததால் இது முடிந்தது. பல மொழிகள்மூலம் பயிற்றுவிக்கும் அகில இந்தியப் பணிகள் ஆங்கிலத்திற்கும் ஹிந்திக்கும் இடையிலும் தரப்படுத்துவ தென்பது இயலாததாகும். தற்சமயம் ஹிந்தி மொழியில் பட்டம் பெற்றுப் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறும் மாணவர்கள் முட்டாள்கள் என்று நம்பிக்கையுள்ள, கல்வித் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் கூறுகிறார்கள். ஆங்கில மொழியில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இருக்கும் அறிவின் தரத்தின் ஒரு பகுதிகூட ஹிந்தி மொழியில் பயிற்சி பெறுபவர்களுக்குக் கிட்டாது. ஏனெனில், அவர்களுக்கு அம்மொழியில் தேவையான புத்தகங் கள் கிடையாது. முதலாவதாக, இப்படிப்புகளுக்கு ஹிந்தி போதன மொழியாக்கப் பட்டாலும், ஆங்கில மொழியில் பயிற்சி பெறுவர், உயர்தரப் பணிகளுக்குத் தேவையான தற்போதையத் தரத்தைப் பெற முடியும். ஆனல், ஹிந்தியில் பயிற்சி பெறுபவர்களோ, கல்வியிலாவது, அறிவிலாவது, ஆங்கில மொழியின் மூலம் ''மெட்ரிகுலேஷன்'' தேறிய மாணவர்களைவிட மேம்பட்டவர்களாக இருக்க மாட்டார்கள். உயர்தரப் பணிகளில் இது காறும் நிலவின உயர்ந்த தரமும், திறனும் இம்மாதிரி அறைகுறை பயின்ற ஹிந்தி மொழிப் பணியாளர்கள் கையினல் இறக்க நேரிடும். பன் மொழிகளை இடைநிலை மொழிகளாக அகில இந்தியப் பணிகளில் எப்பொழுது வருகிறதோ அப்பொழுது ''அகில இந்திய''த் தன்மையும், தரமும் மறைந்துவிடும்.

இரு மொழித் திட்டத்திற்குள்ள மற்றொரு எதிர்ப்பு என்னவென்றால், ஹிந்தி மொழியினர்களுக்கு அதிக அனுகூலம் இதனல் ஏற்படுகிறது. இம் மாணவர்கள் தங்கள் தாய் மொழியில் போட்டிப் பரிட்சை எழுதுகிறார்கள். மற்றவர்களுக்கோ இது ஒரு அந்நிய மொழி. இம்மதிப்பற்ற அனுகூலமும் ஹிந்தி மொழி பேசும் இராஜ்யங்களுக்கு மத்திய அரசாங்கத்திலுள்ள செல்வாக்கும் சேர்ந்து, இம்மொழியினருக்காகவே மத்தியப் பணிகள் இருப் பதாகவே ஆகும். எல்லோருக்கும் சமவாய்ப்புக்கள் இருக்க வேண்டுமென்ற கருத்தும் மறையும். ஹிந்தி மொழி பேசாத இராஜ்யங்களில் உள்ள பட்டதாரிகள் படும் வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகரிக்கும்.

தேசிய மயமாக்க வேண்டும் என்று பரவிக்கொண்டு வருகிற கொள்கை மூலம், வேலைக்கான எல்லா வாய்ப்புகளும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்குமென்பதை நினைவிலிறுத்திக்கொள்ளவேண்டும். மத்தியப் பணிகளில் விரைவில் ஹிந்தியைப் புகுத்தினல் இப்பணிகள் ஹிந்தி மொழியினருக்குள்ள சொத்தாக மாறும்.

உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றங்களின் மொழியாக ஹிந்தி

நமது சட்டமுறை, நடுவணர் பகுதிகளின் ஒற்றுமையையும், நம்பிக்கை யையும் வளர்க்கச் செய்துள்ள சிபார்சு, உச்ச நீதிமன்ற, உயர் நீதி மன்றங்களில் ஒரே மொழி பேச வேண்டும் என்ற கமிட்டியின் சிபார்சாகும்.

இச்சிபார்சுக்கான காரணங்களை, கமிட்டி கொடுத்திருக்கின்றது. இவைகள் மறுக்கமுடியாதவைகள். ஒரு உயர் நீதிமன்றத்தில் வழக்காடும் வழக்கறிஞர் மற்றொரு உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் தோன்றலாம். இவ்வாருக, ஒரு அகில இந்திய வழக்கறிஞர் கமிஷன் தோன்றியிருக்கிறது. பல பகுதிகளிலுள்ள பல உயர் நீதிமன்றங்கள் பல மொழிகளில் செயல்பட்டால் இவ்வழக்கம் தொடர்ந்திருக்க முடியாது. உச்ச நீதிமன்றத்திலுள்ள மொழி, மற்றைய உயர் நீதிமன்றங்களின் மொழியிலிருந்து வித்தியாசப்பட்டால், இவைகளிலுள்ள நடுவணர்களிலிருந்தும், முதிய வழக்கறிஞர்களிலிருந்தும் உச்ச நீதிமன்றத்திற்கு நடுவணராகத் தேர்ந்தெடுப்பது கஷ்டப்படும் என்று கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றங்களில் ஹிந்தி உபயோகத்திற்கு வரும் வரை, ஆங்கிலம் தொடர்ந்து உபயோகப்பட வேண்டுமென்று இக்கமிட்டி கருதுகிறது. நாட்டின் எல்லா பாகங்களிலும் ஹிந்தியை தேசிய மொழியாகப் புகுத்திஞலுண்டாகும் கொள்கையிலும், எண்ணத்திலும் உண்டாகும் குழப்பத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது, கமிட்டியின் இந்த சிபார்சு.

ஆங்கிலத்தை ஒழிப்பதற்கு, மொழிக் கமிஷன் சொன்னதுபோல், இக்கமிட்டி தரும் இரண்டு கார்ணங்கள்:—(1) ஆங்கிலம் ஒரு அந்நிய மொழி. (2) பல ராஜ்யங்கள், பல் கலைக் கழகங்களிலும், ஆட்சி முறையிலும் பிராந்திய மொழிகளைப் புகுத்தியதால் இந்த ராஜ்யப் பணியாளர்கள் ஆங்கிலத்தில் செவ்வனே வேலை செய்ய முடியாது, என்பன. உயர் நீதிமன்றங்களிலும்,* உச்ச நீதிமன்றத்திலும் ஹிந்தி மொழி உபயோகிக்கப் படுமென்று சொல்லும்பொழுது, எதனுல் ஆங்கிலத்தை மாற்றவேண்டுமென்று சொல்லப்பட்டதோ அதன் காரணங்களை மறக்கக் கட்டாயமேற்பட்டது. ஹிந்தி மொழியல்லாதாருக்கு, ஹிந்தி, ஆங்கிலத்தைக் காட்டிலும் ஒரு அந்நிய மொழி. ''நாடு முழுவதும்'' என்று சொல்லுவது முன்னுக்குப் பின் முரணுக இருக்கிறது. ஹிந்தியும், ஆங்கிலமும் மாற்று இடைநிலை மொழிகளாக இருக்க வேண்டுமென்பது கமிட்டியின் கருத்து. பயிற்சிக் கூடங்களில் மாற்றுமொழிகள் உபயோகத்தினுல் என்ன ஏற்படக்கூடும் என்று சொன்னேனே அது இங்கும் இன்னும் அதிகமாக நடக்கும். அகில இந்தியப் பணிகள், ஹிந்தி மொழியினர், ஆங்கில மொழியினர் என்று பிரிவுபடும். பொருமை, அசூயை, வெறுப்பு என்பவைகள் மொழிமூலம் ஏற்படும் விளைவுகள். சௌகர்யப்பட்டால், பிராந்திய மொழிகளைப் போதனு மொழிகளாக்கலாம் என்று ஏற்றுக்கொண்டது கமிட்டியின் தவறு. இப் பிரச்னையில் சௌகர்யத்திற்கு இடமேயில்லை. ஹிந்திக்காகப் போராடுபவர்கள் எப்படி ஹிந்தியை மாற்றுமொழியாக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்திஞர்களோ அதேபோல் முக்கியப் பிராந்திய மொழிகளைப் பேசுபவர்களும் அகில இந்தியப் பணிகளுக்கு இவற்றை இடைநிலை மொழிகளாக்க வேண்டுமென்று வற்புறுத்துவர். அகில இந்தியப் பணிகள் என்று சொல்லப் பட்ட பணி, பல மொழிகள் மூலம் ஆட்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்றுவிப்பதாகும். ''அகில இந்திய'' என்ற சொற்ருெடரை இன்னும் வைத்துக் கொண்டால், அது, நமக்குக் கிடைத்த, ஆனல் நம்முடைய திறமையின்மையால் நிரந்தரமாக வைத்துக்கொள்ள முடியாத ''ஒரே இன''க் கருத்தை, எள்ளி நகையாடி நினைவுபடுத்துவதாகும்.

* கமிஷன் சிபார்சு செய்வதாவது எல்லா உயர்நீதி மன்றங்களிலும், தீர்ப்புக்களிலும், ஆவனங்களிலும், கட்டளைகளிலும் ஹிந்தி உபயோகப்படுத்தவேண்டும். ஆனல் கமிட்டியின் சிபார்சுப்படி, உயர் நீதிமன்றங்களில் அந்தந்த ராஜ்யங்கள் தீர்ப்புக்கள், ஆவனங்கள் கட்டளைகளுக்கும் பிராந்திய ஆட்சி மொழிகளை உபயோகப்படுத்தலாம்.

மொழிவாரியாக மாகாணங்களைத் திருத்தியமைப்பதாலுண்டான பிரிவு மனப்பான்மைக்கு மாற்றாக, இன்னும் அதிகமாக அகில இந்தியப் பணிகளை ஏற்படுத்தவேண்டுமென்றும், ராஜ்யங்களுக்குள் அதிகாரிகளைப் பரிவர்த்தனை செய்யவேண்டுமென்ற ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனின் சிபார்சு நினைவிலிருக்கலாம். பல மொழியினரைத் தேர்ந்தெடுத்து அந்தந்த மொழிகளில் அவர்களைப் பயிற்றுவித்தால், அகில இந்தியப் பணிகளில் பரிவர்த்தனை என்பதற்கு இடமேயிராது. ஒவ்வொருவனும் பயிற்சிக்குப்பின் தனது ராஜ்யத்திற்கு செல்லவேண்டியிருக்கும்.

மற்றொரு தவிர்க்க முடியாத விளைவு என்னவென்றால் அம்சங்களைக் கொடுப்பதில் போட்டி ஏற்படும். சமஸ்கிருதம் எடுத்த மாணவர்களுக்கும், பாரசீக மொழி எடுத்த மாணவர்களுக்கும் அம்சங்கள் கொடுப்பதில் சில பல்கலைக் கழகங்களிலுள்ள போட்டி நமக்குத் தெரியும். ஹிந்தி மொழி புகுத்தப்பட்டவுடன், அரசியலில் அதற்குள்ள சலுகையினால், இம்மொழி பேசும் மாணவர்களுக்கு அதிக அம்சங்கள் கிடைக்கலாம். அம்சங்கள் கொடுப்பதைத் தரப்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் நடிப்பாகும். மொழிமூலம் ஏற்படும் ஊழல் அதிகமாக இருக்கும்.

கல்வியறிவுடையவர்களுக்கு, 200 வருஷங்கள் பழகியதால், ஆங்கில மொழி ஒரு சர்வ சாதாரணமான இடைநிலை மொழியாகிறது. பல்கலைக் கழகங்கள் பிராந்திய மொழிகளைப் போதனா மொழிகளாக்கியதால் ஆங்கில அறிவின் தரம் குறைந்துவிடுகிறது என்பதானது ஹிந்தி மொழிக்கு அதிகமாகப் பொருந்தும். இருந்தாலும், ஹிந்தி மொழியல்லாதவர் ஆங்கிலத்தைவிட அந்நிய மொழியான ஹிந்தியைக் கற்று, இம்மொழியில் வழக்கறிஞர்களாகவோ, நடுவணர்களாகவோ செயலாற்றுவார்கள் என்று இக்கமிட்டி எதிர்பார்க்கிறது. ஹிந்தி மொழியல்லாதார்கள் நமது நியாய சாத்திரம் ''ஆங்கிலோ-சாக்ஸன்'' முறையைப் பின்பற்றி, அதனிடமிருந்து உயிர்பெற்று வளர்ந்தாலும், ஆங்கில மொழியின் மூலம் உலக சட்ட அறிவை நமது வழக்கறிஞர்கள் பெற்றிருந்தாலும், இவையாவையும் உதறிவிட்டு, சட்டங்களுக்கு ஆதாரமோ, சட்ட அறிவோ அல்லது சட்டங்களுக்கான சாதாரண சொல்வளமோ இல்லாத ஒரு மொழியான ஹிந்தியில் தேர்ச்சி பெறவேண்டும் என்று சொல்லப்படுகிறார்கள். இதன்மூலம் இந்திய வழக்கறிஞர்கள், நடுவணர்களின் அறிவை, பழைய மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத் தீர்ப்புக்களுக்கு மாத்திரம் வேண்டுமென்றே கட்டுப்படுத்துகிறார்கள். உலகிலுள்ள மிகத்திறமையான நடுவணர் பகுதி, வழக்கறிஞர் கழகம், சட்ட அறிவு இவற்றுடன் ஒப்பிடப்படும் நமது நாட்டிலுள்ள இவைகளைத் தகர்த்தெறிய, ஒற்றுமை, தேசப் பற்று என்று நாம் சொல்லுகிறோம். இந்த வருந்தத்தக்க நடவடிக்கை ஏற்கப்படுமேயானால், பழைய சமஸ்தான நீதிஸ்தலங்களில் நடுவணர்களிடமிருந்தும், வழக்கறிஞர்களிடமிருந்தும் கிடைத்த சந்தேகத்திற்குறிய நிலை வரும்.

மத்திய அரசாங்கத்தால் ஹிந்தி பரப்புதலும் வளர்ச்சியடைதலும்

35-வது ஷரத்தில் கண்டுள்ள அரசியலமைப்புக் கட்டளைப்படி ஹிந்தி மொழி மாற்றத்திற்கேற்ப நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென, இக்கமிட்டி சிபார்சு செய்கிறது. தானாக இயங்கும் சங்கங்களுக்கு, மத்திய அரசாங்கம், பண உதவி, மற்றும் உதவிகள் செய்யும். எங்கெங்கு இச்சங்கங்கள் இல்லையோ, அங்கங்கே, மத்திய அரசாங்கம் இவைகளை நிறுவ ஏற்பாடு செய்யும்.

மற்ற முக்கிய இந்திய மொழிகளை சமாதானப்படுத்த, இக்கமிட்டி, இவ்வாறு மற்ற மொழிகளிலுள்ள இலக்கியங்களைப் படிக்க உற்சாகமளிக்க வேண்டுமென்று, சிபார்சின் கடைசி வாக்கியத்தில் குறித்திருக்கிறது. மற்ற இந்திய மொழிகளுக்குக் காட்டப்படும் இந்த உபசாரமானது, நடைமுறைக்குக் கொண்டுவர முடியாத உபசாரம். இக்கமிட்டியின் சிபார்சின் படி, இன்னும் சில ஆண்டுகளில் சொல்வளமோ, எழுத்து உருவைத் திட்டவட்டமாக நிர்ணயிக்கவோ இல்லாத ஹிந்தியை வளப்படுத்தவும், தொழிலியல், சட்ட நிகண்டுக்களைத் தயாரிக்கவும், ஒரு ராஜ்யத்திலாவது நிர்வாகத்திற்குப் பயன்படாமலிருக்கும் ஹிந்தியை, நாட்டு நிர்வாகத்திற்குப் பயன்படுத்தவும், பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்கள் மத்திய அரசாங்கம் செலவிடும். இவ்வாருக, பட்டினி கிடக்கும், கல்வியறிவற்ற பல லட்சக் கணக்கான மக்களுக்கு உண்ணவும், உடுக்கவும், கல்வியறிவுப் புகட்டவும் செலவிடாமல், ஒரு சில அர்சியல் வாதிகளுடைய காரணமில்லாத கொள்கைக்காக பணம் செலவழிக்கப்படும். ஆகவே, நாட்டின் பெரும்பான்மையரான ஹிந்தியல்லாத மொழியினர், நாட்டின் 90 சத விகிதமுள்ள தங்களால் செலுத்தப்படும் வரிப்பணத்தை, ஏன் ஒரு சிறுபான்மையினரின் மொழிவளர்ச்சிக்குச் செலவிடவேண்டும் என்று கேட்கலாம். நடைமுறையில், கமிட்டியானது, பல இந்திய மொழிகளுக்குள் மிகுந்த பட்சபாதத்துடன் நடந்துக் கொண்டதோடு, தாரதம்மியத்தையும் மீறினது. ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்கள் மற்ற பாகங்களில் அதைப் புகுத்த மிக்க அக்கறை காட்டினுல், முதலில் அவைகள் ஆட்சி முறையில் உபயோகித்து வெற்றியடையட்டும். பிறகு மற்ற பாகங்களுக்கேற்கும் முறையில் தங்கள் செலவில் ஹிந்தியைப் பரப்பட்டும்.

எட்டு ஆண்டுகளாக உள்ள வருந்தத்தக்க அநுபவம் ஆட்சி மொழிப் பிரச்னையைத் திரும்பவும் ஆராய வேண்டுமென்பதைக் காட்டுகிறது

என்னுடைய நிலையை நன்குணர்த்த, முதலிலேயே, கமிட்டியின் உத்தரவை வேண்டினேன். ஹிந்திக்கெதிராக வாதாடுவதில் எனக்கு லாபமில்லை. நான் ஹிந்தி மொழி பேசும் ராஜ்யமான மத்தியப் பிரதேசத்தில் பிறந்தவன். பள்ளிக்கூடத்தில் இரண்டாம் மொழியாகக் கடைசிவரை ஹிந்தியைக் கற்றிருக்கிறேன். தேவநாகரி எழுத்துக்களிலுள்ள ஹிந்தியை, சாதாரணத் திறமையுடன் வாசிக்கவோ எழுதவோ தெரியும். ஹிந்தியைப் பேச இன்னும் நன்ருகத் தெரியும். மேலும், ஹிந்தி மூலம் நீதிஸ்தலங்களில் வழக்காடி, நான் வாழ்க்கை நடத்துகிறேன். ஆங்கிலோ-இந்தியக் கல்விக்கான அதில் ராஜ்யப் போர்டின் தலைவராக இருபது ஆண்டுகள் இருந்து, நாட்டிலுள்ள ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கொண்டு வரக் காரணமாக இருந்தேன். இப்பள்ளிக்கூடங்களிலுள்ள ஹிந்திப் பாடப் புத்தகங்கள் நாட்டிலுள்ள மிகச் சிறந்தவைகளில் ஒன்று.

ஆனுல், இந்த எட்டாண்டுகளாக எனக்கிருந்த அனுபவத்தினுலும், ஹிந்தி ஆதிக்க வெறியர்களின் சகிப்பில்லாத் தன்மையினுலும், நான் அறிந்ததென்னவென்ருல், இப்புதிய ஹிந்தி மதச் சார்பற்ற ஜனநாயகத்தின் எதிரி; நாட்டின் தவிர்க்க முடியாத பிளவுக்கும், சிறுபான்மையினரின் மொழியை ஒழிக்கவும் ஏற்பட்டிருக்கிறது, என்று என்னைப்போல அநேக அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள், அரசியலமைப்பில் ஹிந்தியை மிகுந்த அவநம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டோம். முதலாவதாக, காந்திஜீ, வகுத்த இடத்திலிருந்து இது பின்வாங்குவதாகும். காந்திஜீ, வழக்கம்போல் தவறில்

லாத தனது அறிவினுல், எந்த இந்திய மொழியும் ஆட்சி மொழியாக வேண்டுமானுல் நடு நிலைமை மொழியாயிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். ஆகவேதான், வேண்டுமென்றே ஹிந்தியை விலக்கிவிட்டு, ஹிந்துஸ்தானியை காந்தீஜீ பிரேரேபித்தார். ''ஹிந்தி'' யைக் கொண்டுவந்தால், பிற்போக்காளர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இம்மொழியை, பிற்போக்கு நடவடிக்கைக்கும், வகுப்பு வாதத்திற்கும் உபயோகப்படுத்துவார்கள் என்று நான் சில தேசியத் தலைவர்களிடம் சொன்னேன். கடந்த 8 ஆண்டுகளின் அனுபவம் இதை முற்றிலும் சரி என்று சொல்லுகிறது.

வட இந்தியாவில், தற்போது ஹிந்தி என்பது மதத்தின் அறிகுறி. ஹிந்தி ரக்ஷா சமிதியின் வெட்கமில்லாக் குரல் ''ஹிந்தி, ஹிந்து, ஹிந்துஸ்தான்'' என்று கூவுகிறது. வட இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும், இக்குரல், ஹிந்தி ஆதரவாளர்களின் எண்ணத்தின் சின்னம் என்று நான் வருத்தத்துடன் கூறுகிறேன். நன்ருகத் தெரிந்த ஹிந்தி ஆதரவாளர்களிடம் பேசினுல் அவர்களின் வேட்கை கண்களின் ஒளியில் தெரியும். அவர்கள் ஹிந்தியைப் போற்ருத ஒவ்வொருவனும் தேசபக்தனல்ல என்பதுடன் இந்தியப் பிரஜையில்லை என்றும் எண்ணுகிருர்கள். தேசபக்தியும் ஹிந்தியும் அவர்களுக்கு ஒன்றுதான். அது அவர்களுக்கு ''இந்தியத் தன்மையின்'' சின்னம், எத்தகைய அர்த்தமாளுலும் சரி.

இந்த மொழிப் பிரச்னையில் பிற்போக்கானவர்களும், அரசியல் வாதிகளும் சேர்ந்து குழப்பத்தை உண்டாக்கினது வருந்தத்தக்கதாகும். ஹிந்தி ஆதரவாளர்கள், ஆங்கிலேயரிடமுள்ள வெறுப்பை, ஆங்கிலத்திற்கெதிராகச் செலுத்த முயலுகிருர்கள். பாகிஸ்தானிடமுள்ள வெறுப்பை, உருது மொழியிடம் செலுத்துவதில் வெற்றியடைந்தார்கள். மொழியைப் பற்றின பிரச்னையோ, அல்லது மொழி வளர்வதைப்பற்றின பிரச்னையோ அல்ல. மதச் சின்னமாக மட்டுமல்ல, அரசியல் சர்வாதிகாரத்திற்கும், ஹிந்தி சின்னமாக இருக்கிறது. தங்கள் கனவில் காணும் ஹிந்தி சாம்ராஜ்யத்தின் ஏகபோக உரிமையாளர்களாக, ஹிந்தி ஆதிக்கப் பித்தர்கள் பேசவும், நடக்கவும் செய்கிருர்கள். பொறுமையின்மை, எதிர்ப்பு, அடக்கமின்மை இவைகள் பெருகுகின்றன. இவை ஹிந்தி ஏகாதிபத்தியத்தின் தன்மைகளாகின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஹிந்தியிலுள்ள பரிவின் காரணத்தைக் காட்டிலும், அந்நிய மொழிகளின் மேலுள்ள வெறுப்பினுல்தான் ஹிந்தி ஆதரவாளர்கள் இவ்வாறு நடக்கிருர்கள். ஆங்கிலத்தின் மீதுள்ள வெறுப்பு முதல் இடம் பெறுகிறது. இதைச் சந்தித்து, இத்துடன் சண்டைபோட, 1954-ம் ஆண்டில் எனக்கு வருந்தத்தக்க அனுபவம் கிடைத்தது. ஆங்கிலத்தை ஒழிக்குமாறு ஹிந்தி வெறியர்களின் கருத்தானது, ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக்கூடத்தின் எதிராக கட்டளையிட்ட, பம்பாய் அரசாங்கத்தினுடையது. இக்கட்டளையின்படி ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக்கூடங்கள் மற்ற ஜாதியினரான எவருக்கும் ஆங்கிலம் பயிற்றுவிக்கக் கூடாதென்று இருந்தது. இப்பள்ளிகளால் எடுத்துக்காட்டாக விளங்குகின்ற ஆங்கிலப் பயிற்சிக்கான மூலத்தை அழிக்க வேண்டுமென்பதுதான் இக்கட்டளையின் நோக்கம். ஹிந்தி மொழியல்லாதாரின் முன் ஆங்கிலம், ஹிந்தி என்ற இரண்டு மொழிகளை வைத்தால், உலக இலக்கிய வளத்தையும், மனித முயற்சியால் கிடைக்கப்பெற்ற எண்ணக் கூற்றையும் தன்னுளடக்கிக் கொண்டுள்ள ஆங்கிலத்தையே நாடுவார்கள் என்றெண்ணும் ஹிந்தி வெறியர்கள்போல், பம்பாயிலுள்ள ஹிந்தி ஆதரவாளர்களும் அவ்வாறு நினைத்து ஆங்கிலத்தை ஒழிக்க முற்பட்டார்கள். மொழிப் பிரச்னையில்

பாரபட்சமற்ற கொள்கையுடைய பிரதமரும், இதில் நான் அவரைக் கேட்டுக்கொண்டபொழுது, உதவிசெய்ய முடியவில்லை. பம்பாய் அரசாங்கத்திடம் தம்மால் ஒன்று செய்யமுடியாது என்றுசொல்லிவிட்டார். அதிர்ஷ்டவசமாக, ஒரு சுதந்திர நடுவணர் நிலையம் இருந்தது. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளின்மேல் ஹிந்தி ஆதரவாளர்களின் எதிர்ப்பை நடுவணர் மன்றங்கள் மூலம் நான் முறியடித்தேன்.

ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்களில் மொழிவாரிச் சிறுபான்மையரால் சுயமரியாதையோடு வாழ ஹிந்தி ஆதிக்க வெறி இடமளிக்கவில்லை. சமீப காலத்தில் இதற்கு உதாரணமாக டில்லி நகராட்சி மொழிக் கமிட்டி உருது மொழிக்கு எதிராகத் திர்மானித்ததுதான். அதன்படி, ஹிந்தியிலுள்ள அதிகாரபூர்வமான அகராதியில், உருது மொழி சொற்றொடர்களை உபயோகிக்கக் கூடாது.* 351-வது ஷரத்துப்படி மற்ற மொழிகளுள், ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உருது மொழிகளிலிருந்தும் சொற்களை உபயோகித்து, ஒன்றிணைந்த இந்தியக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் மொழியாக இருக்க வேண்டுமென்றிருக்க, மத்திய அரசாங்கமும், சாதாரண உபயோகத்திலிருக்கும் உருது, பெர்ஸியன் சொற்றொடர்களை ஹிந்தியிலிருந்து நீக்கும் முயற்சியிலீடுபட்டிருப்பது வருந்தத்தக்கது.

இப்புதிய ஹிந்தியானது, ஒரு மொழியாக இல்லாமல், ஒரு இழிவான போலி மொழியாக இருக்கிறது. தன்னைத்தானே சுத்த மொழியினன் என்று கூறிக்கொள்பவர்களும், அகராதி இயற்றுபவர்களும், புது சொற்களையும் சொற்றொடர்களையும் உண்டாக்குவதில் எடுத்துக்கொள்ளும் முயற்சி, ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்களிலும் எள்ளி நகையாடப்படுகிறது. ஆனால், துரதிர்ஷ்டமாக, இப்போலி மொழியை மத்திய அரசாங்கம் ஆதரிக்கிறது. ரயில்வே கைகாட்டிகள், அரசாங்க அலுவலகங்களின் பெயர்கள், மக்களவையிலுள்ள அறிக்கைகள், இவையாவையும், இறந்துபோன சொற்களைக்கொண்ட குப்பைத் தொட்டியிலிருந்த எடுத்த உயிர்ப்பிக்கப்பட்ட பல சொற்களைக் கொண்ட வார்த்தைகளாகவோ, அல்லது ஹிந்தி அகராதிகளை இயற்றுபவர்களால் பல அதிசய சொற்களைச் சேர்த்துக் கஷ்டப்பட்டு உருவாக்கப்பட்ட வார்த்தைகளாகவோ இருக்கின்றன. முன்னுள் ஹிந்தியில் தேர்ச்சி பெற்றவர்கள் கூட இப்புது ஹிந்தியில் தேர்ச்சி பெருதவர்களாகிருர்கள்.

ஆதிவாசிகளுக்குத் தலைவராகவும், கல்வியறிவு படைத்தவருமான, திரு ஜெய்பால் சிங், எம்.பி., அவர்கள், ஆதிவாசிகளுக்காகப் பேசும்பொழுது சொன்னதாவது ''காஷ்மீரி, அஸ்ஸாம் மொழி, ஒரியா போன்ற மொழி பேசுபவர்களைவிட, முண்டாரி (சந்தாலி, ஹோ, காரியா, என்பவற்றின் தாய் மொழி) பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், ஒரு ஆதிவாசி மொழியாவது, அரசியலமைப்பில் காணப்படவில்லை. இப்பழங்குடிகளின் மொழியைக் கொல்ல ராஜ்ய அரசாங்கங்கள் முயற்சி செய்கின்றன. ஒரு நூற்றுண்டாக, ஒன்றுக்கொன்று வேற்றுமையுடைய ரோமன் எழுத்து வரிசைகளையே சந்தாலிகள் உபயோகித்தனர். இதற்காக நிறையப் புத்தகங்களும் இருக்கின்றன. சுதந்திரத்திற்குப் பிறகு, இம்மொழியில் தகுந்த ஒலியை எழுப்ப முடியாத போதிலும், தேவநாகரி எழுத்து உருவையே உபயோகிக்க வேண்டுமென்று பீஹார் அரசாங்கம் வற்புறுத்துகிறது.'' பீஹார் அரசாங்கம் ஹிந்தி மொழி பேசும் இராஜ்யத்தினுடைய அரசாங்கம் என்பது குறிப்பிடத் தகுந்தது.

---

* டெல்லி நகராட்சி மொழிக்கு இம்மாதிரி தீர்மானங்கள் ஏதும் எடுக்கவில்லை.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, ஹிந்தி என்பது, ஜாதியின் பெயரால் அடிமையாக்குவதின் சின்னம் என்று ஒரு அகில இந்தியத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தலைவர் என்னிடம் சொன்னார். அவர் கருத்துப்படி, ஹிந்தி ஜாதி வேற்றுமையின் சின்னம். எவ்வளவு காலம் ஹிந்தி பேசுகிறீர்களோ அவ்வளவு காலம் அவர்கள் அடிமைத்தளையிலிருந்து விடுபட முடியாது. ஆங்கில மொழியானது, இந்தத் தளைகளிலிருந்து இவர்களை விடுவிக்க ஒரு சாதனமாகிறது என்பது இத்தலைவரின் கருத்து. ஆங்கில மொழி பேசும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கிட்டும் சுதந்திரமும் சமநிலையும் ஹிந்தி பேசும் அதே வகுப்பினருக்கு நிரந்தரமாகக் கிட்டுவதில்லை.

பஞ்சாப் ராஜ்யத்தில் ஹிந்திப் பாதுகாப்பாளர்கள் செய்வதை நாம் மிகுந்த கவலையுடன் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பல ராஜ்யங்களில் ஆட்சி மொழியாக இருக்கும், தேசத்திற்கு ஆட்சி மொழியாகப்போகும் ஹிந்திக்குப் பாதுகாப்பு வேண்டுமா? முன்னே சொன்னவாறு, பஞ்சாபிலுள்ள ஒரு சில புரோகிதர்கள், பண்டிதர்கள், மற்றும் சிலர்களைத் தவிர, மற்றவர்களுக்கு உருதுவும், பஞ்சாபியும்தான் தெரியும். ஆனால், புதிய ஹிந்தி ஆதிக்க வெறியர்களின் முயற்சியால், ஹிந்தியையோ, தேவநாகரி லிபியையோ அறியாத பெரும்பான்மையர்கள், தங்கள் தாய் மொழியாம் பஞ்சாபியைத் துறந்து, பஞ்சாபி எதிர்ப்புக் கிளர்ச்சியில் கலந்துகொள்ளத் தூண்டப்படுகிறார்கள். தமிழர், தெலுங்கர், வங்காளிகள் போன்றவர்கள் ஹிந்தியைக் கற்கவேண்டும் என்று ஹிந்தி ஆதரவாளர்கள் கட்டாயப்படுத்தும்பொழுது, தாங்களும் ஒரு பிராந்திய மொழியைக் கற்கவேண்டுமென்றபொழுது அதை ஏற்க மறுக்கிறார்கள். ஹிந்தி பாதுகாப்பாளர்களின் கருத்தில் அவர்களைப் பஞ்சாபி கற்கச் செய்வது காரணமில்லாமல் கஷ்டத்தை உண்டு பண்ணுவதாகும்.

ஹிந்தியல்லாதாரை ஹிந்தி கற்கக் கட்டாயப்படுத்தும்பொழுது, தங்களுடைய தர்க்கங்களையும், கஷ்டங்களையும் மறந்து விடுகிறார்கள்.

அந்தந்தப் பகுதிகளில் நன்றாக ஊன்றியிருக்கும் மொழிகளை முறியடிக்கத் தகுந்த பலம் ஹிந்திக்கு இல்லை. கடைசியாக, ஆங்கிலோ-இந்தியர்கள், முகம்மதியர்கள், சீக்கியர்கள், பழங்குடிகள் முதலியவர்களுக் கெதிராகத் தோன்றின பொறுமையின்மையும், ஆதிக்கவெறியும், ஹிந்தி ஆட்சி மொழியாக வந்தால், மற்ற ஹிந்தியல்லாத மொழியினருக்கெதிராக, இதே மாதிரித் தோன்றும்.

இம்மாதிரிப் பிற்போக்கான செய்கைகளினாலும், ஹிந்தி மொழியல்லாதார் பெற்ற வருந்தத்தக்க அனுபவத்தாலும், இம்மொழிப் பிரச்னை மறுபடியும் ஆராயவேண்டுமென்று பெரும்பான்மையினர் விரும்புகிறார்கள் என்று நான் நம்புகிறேன். இதனால்தான் இம்மொழிப் பிரச்னையைப் பொதுவாக ஆராய வேண்டியது தேவையானதும், விரைவாகத் தீர்மானிக்கப்பட வேண்டியதுமாகும் என்பதற்கான காரணங்களைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

ஹிந்திக்குச் சாதகமான தர்க்கங்கள்

ஹிந்தியை, ராஷ்ட்ர பாஷை அல்லது தேசிய மொழியாக்க வேண்டுமென்பதற்கு, ஹிந்தி ஆதரவாளர்கள் காட்டும் முக்கிய காரணங்களை நான் கீழே ஆராய்கிறேன். இவற்றைத்தான் இக்கமிட்டியும் அநேகமாகக் கொடுத்திருக்கிறது.

அரசியலமைப்பிலுள்ள ஷரத்துக்கள் மிக முக்கியமானவை

ஹிந்தி மொழி ஆட்சி மொழியாக வேண்டுமென்று அரசியலமைப்பிலிருப்பதால், அதைப்பற்றின பகுதிகளை மிகக் கவனமாகக் காக்க வேண்டுமென்பது, கமிட்டியின் எண்ணம். ஆனால், அரசியலமைப்பு அமுலாக்கப்பட்டு எட்டாண்டுகளுக்குப் பிறகு, இதன் முக்கியத்துவத்தை அறிந்த பல்லாயிரக் கணக்கான நாட்டு மக்கள், பல வழிகளில் தங்களுக்குக் கிடைத்த அனுபவத்தை வைத்துக்கொண்டு, இப்பகுதிகளை எதிர்ப்பார்கள் என்று நான் நம்புகிறேன். சந்தேகமற அரசியலமைப்பு நாட்டின் சட்டம்தான். ஆனால், அது மாற்றப்படலாம் என்பதும் நன்கறிந்ததுதான். மொழிகளைப்பற்றின ஷரத்துக்கள், அரசியல் சட்டத்தின் 17-வது பகுதியில் காணப்படுகின்றன. அரசியலமைப்பின் ஏதாவதொரு பகுதி மிகக் கவனமாகக் காக்கப்பட வேண்டுமென்றால் அது ஆதார உரிமைகள் கொண்ட மூன்றும் பகுதியாகும். இருந்தாலும், ஏழு ஆண்டுகளில் அனுபவ மூலமாக, ஏழுதரம் இப்பகுதிக்குத் திருத்தங்கள் கொண்டுவந்தது அரசாங்கம். இம்மொழிப் பகுதிகளில் ஆதாரமான கட்டளைகள் எதுவுமில்லை. ஆகவே, நாட்டின் நன்மைக்காகவும், மக்களின் பெருவாரிக் கோரிக்கைகளுக்காகவும், அனுபவபூர்வமாகவும், மொழிப் பிரச்னையை மறுமுறை ஆராய காலம் நெருங்கிவிட்டது.

அரசியலமைப்புச் சட்டமியற்றப்படும்பொழுது தேசியப் பற்றுதலானது மிக அதிகமாக இருந்ததென்பதை நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும். நிர்வாகத்துறையிலுள்ள கஷ்டங்களையும், மொழித்துறையிலுள்ள கஷ்டங்களையும் அப்பொழுதுள்ள நிலையில் எதிர்பார்க்கவில்லை. ஒரு வேளை வரப்போகின்ற தலைமுறையிலுள்ள இந்தியர்கள்தாம், இம்மொழிப் பிரச்னையை பற்றற்ற நிலையில் ஆராய்வார்கள் என்று சொல்லுவது சரியாகும். ஹிந்தி புகுத்துவதை எதிர்ப்பதற்கு இது ஒரு காரணமாகும்.

அந்நிய மொழி கூடாது

யூனியன் ஆட்சி மொழியாகவும், மத்திய ராஜ்ய அரசாங்கங்களுக்கு இடையேயும் உபயோகப்படுத்தும் மொழியாக ஆங்கிலத்திற்குப் பதிலாக ஒரு இந்திய மொழியை கொண்டுவருவது, தேசியப் பற்றுக்கு உகந்ததாகும் என்பது கமிட்டியின் கருத்தாகும். சாதாரணமாக ஒரு நாட்டில் தேசிய மொழியிருந்தால் அதை ஆட்சி மொழியாக, அந்நிய மொழிக்குப் பதிலாக, உபயோகப்படுத்துகிறது. ஆனால், இந்தியாவின் நிலைமையோ, சாதாரணமாக இல்லை. இந்தியாவில் தேசிய மொழி கிடையாது. ஆச்சர்யப்படுமளவுக்குள்ள பன்மொழி நிலையில், 200 ஆண்டுகள் தொடர்ந்திருப்பதால், நம் நாட்டில் ஒரே நடுநிலை மொழியாக ஆங்கிலம் இருக்கின்றது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலுள்ளக் கல்விக் கூடங்களில் சரிசமமாக இம்மொழி பரவியிருக்கிறது. இப் பன்மொழி நிலையினால்தான், அரசியலமைப்பை இயற்றியவர்கள் தேசிய மொழியை வேண்டுமென்றே குறிக்கவில்லை. யூனியன் ஆட்சி மொழியாகவும், மத்திய ராஜ்ய சர்க்கார்களுக்குள் ஆட்சி மொழியாகவும் பயன்பட ஒரு மொழியைத் தேர்ந்தெடுப்பது நமது வேலை. ஆங்கில மொழியுடன் உள்ள தொடர்பினால்தான் மற்ற ஐரோப்பியரல்லாத நாடுகளில் பன்மொழிப் பிரச்னையில்லாவிட்டாலும், அம்மொழியை ஆட்சி மொழியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆங்கிலத்தின்மூலம் அந்நியர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சட்டப் பிரகாரம் உண்மையென்னவென்றால், ஆங்கிலம் ஒரு இந்திய மொழி. ஆங்கிலோ-இந்தியர்களுக்கு ஆங்கில மொழி தாய் மொழியாகும். இந்தி

யாவின் சிறுபான்மையருள் ஒன்றென்று ஆங்கிலோ-இந்தியரைக் குறிப்பது அரசியல் சூழ்ச்சியோ, அல்லது அர்த்தமற்ற சொல்லாகவோ இல்லாமலிருந்தால், மற்ற மக்களின் மொழிகள்போல், ஹிந்தியைப்போல், ஆங்கிலத்தையும் இந்திய மொழியாக ஏற்கவேண்டும்.

பம்பாய் பள்ளிக்கூட வழக்கில் பிரதம நீதிபதி சக்ளா ''ஆங்கிலத்திற்கும் மற்ற சிறுபான்மையர் பேசும் இந்திய மொழிகளுக்கும் அரசியலமைப்பின்கீழ் வித்தியாசம் ஏதுமில்லை'' என்று சொல்லி இந்த நிலைமைக்கு அவருடைய அதிகாரபூர்வமான சம்மதத்தையும் கொடுத்தார். மேலும், அவர் குறிப்பிட்டதாவது ''நாம் கடமைப்பட்டிருக்கும் அரசியலமைப்பின்படி, இன்று மற்ற மொழிகள் மாதிரி ஆங்கிலமும் ஒரு இந்திய மொழி. மற்ற மொழிகளுக்குள்ள பாதுகாப்பு அதற்கும் கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், அம்மொழி அரசியல்லமைப்பினல் அங்கீகரிக்கப்பட்ட மொழி.''

ஆங்கிலம் தாய் மொழியாக இல்லாதவருக்கு அது அந்நிய மொழி. ஆனால், இதன்மூலம், ஆங்கிலத்தைவிட இன்னும் அந்நிய மொழியாக, ஹிந்தி பேசாதவர்களுக் கிருப்பது ஹிந்தியாகும். நான் முன்னல் சொன்னது போல், ஹிந்தி பேசாதவர்களும், ஹிந்தி மொழியினரும் ஆங்கிலத்துடன் 200 ஆண்டுகள் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவ்விதத் தொடர்பு ஹிந்தியுடன் அவர்களுக்கில்லை. ஹிந்தி மொழியல்லாத பிரதேசங்களில் பேசுவதாக எதிர்பார்க்கப்படும் ஹிந்தி, பழைய ஹிந்தி மொழியல்ல. புதிய ஹிந்தி மொழியுமல்ல. இலக்கணமில்லாத ஹிந்துஸ்தானியைப் பேசுவது ஒன்று. ஆனல், புதிதாக இயற்றப்பட்ட சொல்வளம், சொல்லணிக்களின் தனிச் சிறப்புக்கள் உள்ள புதிய ஹிந்தியைக் கற்றறிவது மற்றொன்று. ஆகவே, இப்புதிய ஹிந்தி, ஹிந்தி பேசாதார் மட்டுமன்றி, என்போன்ற பழைய ஹிந்தியைக் கற்றவர்களுக்கும் அந்நிய மொழியாக விளங்குகிறது.

பிரசித்திபெற்ற மொழிவல்லுநர்கள், உருதுவும் அந்நிய மொழி; ஏனென்றால், இந்தியாவை வென்ற அந்நியர்களால் புகுத்தப்பட்ட மொழி என்கிறார்கள். ஆனல் இன்று, இந்திய மொழியாக உருதுவை ஏற்பது சரியாகும். அதன் சொல்வளம், அழகு, நேர்த்தி இவைகளால் இந்தியாவின் எண்ணங்கள், மொழி, பண்பாடு, ஆகியவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வேளை, இந்த அந்நிய மொழிகளுக்குள்ளிருக்கும் வித்தியாசம் என்னவென்றால், உருதுவை மொழியாகக் கொண்ட அந்நியர்கள் இந்தியாவை வென்று ஆங்கிலேயரைவிட அதிக நாட்களுக்கு அடிமைப்படுத்தினர்கள் என்பதுதான். உருது மொழியுடன் தொடர்பு அதிகமாக இருந்தது. மேலும், இந்த அந்நியர்களின் கீழ்த்தரச் சிப்பந்திகளுக்காக பல மொழிகளைச் சேர்த்து உண்டாக்கினதுதான் ஹிந்தி என்பது சில மொழி வல்லுநர்களின் கருத்து.

சரித்திர பூர்வமாகவோ, இலக்கிய, பண்பாடு பூர்வமாகவோ ஹிந்திக்கு ஆதாரமில்லாததால் அடிக்கடி மாறுதல்களுக்குட்பட்டும், ஒரு ஹிந்தி மொழி பேசும் ராஜ்யத்திற்கும் அதேமாதிரியான மற்றொரு ராஜ்யத்திற்கு மிடையே இம்மொழி மாறுபடுகிறதென்பது, பிரசித்திபெற்ற மொழிவல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். ஹிந்தியில் அநேக புத்தகங்களை இயற்றிய பிரசித்திப் பெற்ற டாக்டர் சுநிதிகுமார் சட்டர்ஜி என்ற இந்திய நிபுணர் குறிப்பிடுவதாவது, தற்சமயம் கொண்டுவரப்படும் ஹிந்தி ''காரிபோலி'' ஹிந்தியாகும். இந்த மொழி இந்திய மொழிகளின் இலக்கிய உலகிலே இப்பொழுதுதான்

குருத்து விட்டிருக்கும் மொழி என்பது அவர் கருத்து. இந்த ஹிந்தியானது பல மொழிப் பிரிவுகளின் சேர்க்கைமட்டுமல்ல, ராஜஸ்தானி, கோசலி, அவாதி, மைதிலி என்ற மொழிகளின் சேர்க்கையாகும். டாக்டர் சட்டர்ஜியின் கருத்தின்படி, இந்த ''காரிபோலி'' ஹிந்தியானது 1850-ம் ஆண்டிற்கு முன் நமது நாட்டிலில்லை.

ஹிந்தி மொழிக்கு அரசியலனுபவமோ, நிர்வாக அனுபவமோ கிடையாதென்று மற்றொரு பிரசித்திப்பெற்ற இந்தியர் சொல்லியிருக்கிறார். இந்திய சரித்திரத்தில் ஹிந்தி மொழி பேசும் தனி ராஜ்யம் இல்லாததால் இம்மொழி ஆட்சி மொழியாக இருந்ததில்லை. இன்று, நாம் செயற்கை முறையில், அசாதாராணமாக ஹிந்தி ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்த முயற்சி செய்கிறோம்.

ஹிந்தியையும், சமஸ்கிருத மொழியின் நிலைமையையும் குழப்புகின்றனர் சிலர். இந்தியாவின் புராதன, வளம் நிறைந்த பண்பாட்டை பிரதிபலிக்கும், இந்தியாவின் மதத்தினுடைய மிகச் சிறந்த மொழி சமஸ்கிருதம். ஹிந்தியில் சமஸ்கிருதத்தைப் புகுத்துவது, புதிதாக வந்த செல்வந்தர்கள் புகழ்பெற்ற மூதாதையர்களைத் தேடுவதுபோல் இருக்கிறது என்பதைத் தாழ்மையுடன் சொல்கிறேன். எவ்வளவுதான் உணர்ச்சியைத் தாண்டினாலும், ஹிந்தி மொழி பேசாத, தமிழர்களோ, தெலுங்கர்களோ, வங்காளிகளோ, அஸ்ஸாம் மாகாணத்தவரோ, ஒரியர்களோ, கன்னட மொழியினத்தவரோ, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேம்பட்ட அவர்களுடைய பழமையானதும், வளமுடையதுமான மொழிகளைவிட, இன்னும் வளர்ந்துகொண்டு, முழு மொழியின் அந்தஸ்தை யடையாத இப்புதிய மொழியான ஹிந்தியிடம் சந்தோஷத்தை யடையமாட்டார்கள்.

பெரும்பான்மையர் ஹிந்தி யறிவர்?

பெரும்பான்மையான மக்களின் தாய்மொழி மட்டுமல்லாது, நாட்டின் பல பகுதிகளும், பிராந்திய மொழிகள் வேறாக இருந்தாலும் ஹிந்தி அறியப் படுகிறதென்பதால், அம்மொழியை ஆட்சி மொழியாக்கினது சரியென்பது மொழிக் கமிஷனைப் பின்பற்றி, இக்கமிட்டியின் கொள்கைகளில் ஒன்றாகிறது.

மொழிக் கமிஷனும், அதைப் பின்பற்றி மொழிக் கமிட்டியும் கொண்டுள்ள இந்த முக்கியமான கொள்கை, ஆதாரமற்றதுமட்டுமல்ல, தப்பானதுமாகும் என்று, வணக்கத்துடன் சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். ஹிந்தியைக் கொண்டு வருவதற்காக மொழிக் கமிஷனால் செய்யப்பட்ட பெரிய தவறுகளில் இது ஒன்று. கமிஷனால் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையை மேலெழுந்தவாரி ஆராய்ந்தாலும், 42 சத விகிதம் ஹிந்தியறிந்தவர்களென்பதில், உருது, ஹிந்துஸ்தானி, பஞ்சாபி, இன்னும் ஹிந்தியல்லாத பல நூற்றுக் கணக்கான மொழிப் பிரிவுகளைப் பேசுபவர்கள் சேர்க்கப் படுகிறார்கள் என்பது புலனாகும். உத்தரப் பிரதேசத்திலுள்ள முகம்மதியர்களுக்கும், பெரும்பான்மை ஹிந்துக்களுக்கும் உருது மொழிதான் தெரியும். பஞ்சாபில், சீக்கியர்களும் பெரும்பான்மை ஹிந்துக்களும், உருது மொழியும், பஞ்சாபியையுமறிவர். மத்தியப் பிரதேசத்தில் பெரும்பான்மையான ஹிந்துக்கள், உத்தரப் பிரதேசத்திலுள்ள கலப்பற்ற ஹிந்திக்குப் பதிலாக, உருது, பாரசீக மொழிகள் கலந்த ஹிந்தியையே அறிவர்.

1951-ல் மொழிக் கணக்கெடுப்பை ஆராய்ந்தால், எப்படி, முக்கிய இந்திய மொழிகளான, உருது, பஞ்சாபி, ஹிந்துஸ்தானி, மற்றும் பல நூற்றுக் கணக்கான மொழிப் பிரிவுகளைச் சேர்த்து, ஹிந்தியென்று பெயரிட்டு, ஹிந்தி மொழியறிவுள்ளவர்களின் எண்ணிக்கையை எவ்வளவு வளர்த்திருக்கிறார்கள் என்பது புரியும். இவ்வெண்களை நன்றாக ஆராய்ந்தால், ஹிந்தியைப் பரந்த மனப்பான்மையோடு கருதினாலும், தேவநாகரி மூலம் ஹிந்துஸ்தானி கற்பவர்களைச் சேர்த்தும், இந்திய ஜனத் தொகையில் 10 சத விகித மக்கள்கூட இந்த ஹிந்தியை அறிந்தவர்கள் என்று சொல்ல முடியாது. புதிய ஹிந்தி அறிந்தவர்களைக் கணக்கெடுத்தால், என்போன்ற மத்தியப் பிரதேசத்திலுள்ளவர்களுக்கு அந்த ஹிந்தி புரியாதபோதிலும், நாட்டு மக்களின் ½ சத விகிதம் கூட அரசியலமைப்பின் ஹிந்தி மொழிபெயர்ப்பு அகில இந்திய வானொலி நிலையம் இவைகளில் உபயோகிக்கிற ஹிந்தியை அறியமாட்டார்கள் என்பது புரியும். எந்த ஒரு நம்பிக்கையான ஹிந்தி மொழி பேசும் ஹிந்துவும், செய்தி கேட்க விரும்பும்பொழுது அகில இந்திய வானொலிக்குப் பதிலாக பாகிஸ்தான் வானொலிச் செய்தி வெளியீட்டைக் கேட்கிறான் என்பதை மறைக்கமாட்டான்.

நாட்டு மக்களில் 2 சத விகிதம்தான் ஆங்கிலம் அறிந்தவர்கள் என்று எப்படி கமிஷன் கணக்கிட்டது என்பதும் தெரியாது. முதலாவதாக, 1951-ம் கணக்கெடுப்பு ஹிந்தி அறிந்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், ஆங்கிலம் அறிந்தவர்களின் எண்ணிக்கையை வேண்டுமென்றே குறைக்கவும் ஏற்பட்டது. 1951-ம் கணக்கெடுப்பின்பொழுது, கணக்காளர்களை, எங்கு ஆங்கிலம் இரண்டாம் மொழியாக உபயோகப்படுகின்றதோ அங்கு அம்மொழியைக் குறிப்பிட வேண்டாமென்று கட்டளையிடப்பட்டார்கள். ஏனென்றால், ஆங்கில மொழி அந்நிய மொழி என்பதால்! ஆங்கில மொழியின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கை, ஆங்கிலத்தைத் தாய்மொழியாக வைத்துக்கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையாகும். ஹிந்தி கற்பவர்களை விட நூறு மடங்கு ஆங்கிலத்தைக் கற்றவர்கள் அதிகம் என்பது என் கருத்து. இத்துடன் கொச்சை ஆங்கிலம் தெரிந்தவர்களின் எண்ணிக்கையைச் சேர்த்தால், இது, கொச்சை ஹிந்துஸ்தானி தெரிந்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இல்லாவிட்டாலும் குறையாது.

இந்தியக் குடியரசில் ஆதாரமற்ற அரசியல் வதந்திகளில் ஒன்று, மக்களில் 42 சத விகிதம் ஹிந்தி அறிவர் என்பது.

பொதுமக்கள் தொடர்புக்காக ஹிந்தி?

மக்கள் நலனுக்கான அரசாங்கம், சமதர்ம சமுதாயம் என்ற குறிக்கோள்களையுடைய எந்த அரசாங்கமும் தன்னுடைய நிர்வாகத்தைப் பொதுமக்களுக்குப் புரியும் மொழியில் நடத்த வேண்டுமென்பது மொழிக் கமிஷனைப் பின்பற்றி கமிட்டி செய்த சிபார்சுகளில் ஒன்று. இம்முறையில் பல தவறுகள் இருக்கின்றன. பொதுஜனத் தொடர்பு என்று சொல்லுமிடத்தில், அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் தொடர்பு மொழியாக ஹிந்தி இருக்குமென்பது மிகத் தவறு. நிர்வாகத்திற்கும், மக்களுக்கும் தொடர்பு இருக்க வேண்டுமானால் பிராந்திய மொழிகள் மூலம்தான் முடியும். ஹிந்தி மொழி அல்லாத பகுதிகளிலுள்ள மக்களிடம் ஹிந்தியில் ஆட்சி நடத்தும் மத்திய அரசாங்கம் தொடர்புகொள்ள முடியாது. ஆட்சித் துறையில் வழங்கும் இப்புது ஹிந்தி கற்றறிந்தவர்களுக்கே புரியவில்லை என்று முன்னேயே சொன்னேன். நாடு முழுவதும் சந்தைகளில் பேசப்படும் ஒரு சில கொச்சை

ஹிந்துஸ்தானி வார்த்தைகள் மூலம், ஹிந்தி மொழி பேசாதவர்கள், மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியை அறியமுடியும் என்று சொல்லுவது முழுவதும் தவறு.

பெரிய இந்திய மொழிகளுள் ஹிந்தி பிற்போக்கான மொழி என்பதைத் தவிர, மற்ற மொழியினத்தவரைவிட ஹிந்தி பேசுபவர்கள் பிற்போக்காளர்கள். ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்களில் கல்வியறிவில்லாதவர்களின் எண்ணிக்கை மிக உயர்ந்தது.

ஆங்கிலம் பேசும் இந்தியர்களின் ஒரு பகுதிதான் தங்கள் நிலைமையை ஸ்திரப்படுத்த, ஆங்கிலத்தை வற்புறுத்துகின்றனர் என்பது ஹிந்தி ஆதரவாளர்களின் வாதம். இந்த வகுப்பாளர்கள், தங்கள் சலுகைகளை நிலை நிறுத்த ஆசைப்படுகின்றனர் என்று சொல்கிறார்கள். இவ்வாதம் தவறென்பது மிகத் தெளிவு. பழைய ஹிந்தியறிந்தவர்களைவிட ஆங்கிலத்தைக் கற்றவர்கள் 100 மடங்கு அதிகமென்பதை முன்னால் சொல்லியிருக்கிறேன். போதனு மொழி, ஆங்கிலமாகவோ, ஹிந்தியாகவோ இருந்தாலும், கல்வியறிவுள்ளவர்கள் சலுகை பெற்றவர்கள்தான். ஆங்கில அறிவுடைய—நாடு பூராவும் பரவியிருக்கும்—மக்களை சலுகை பெற்றவர்கள் என்று சொன்னால், இந்தியாவின் 1 சத விகிதமான புரோகிதர்களை என்ன சொல்வது? இந்த 1 சத விகிதத்திலுள்ள மக்கள்தான் மற்ற 99 சத விகித இந்தியர்களுக்கெதிராக சலுகை கொண்டாடுகிறார்கள்.

பொதுஜனத் தொடர்பைப் பற்றின பிரச்னையில் இந்தியாவின் ஒரு சிறு பகுதியில் ஹிந்தி பேசும் இராஜ்யங்கள் ஒரு மூலையில் கூடியிருக்கின்றன என்பதை நினைவிலிறுத்திக் கொள்ளவேண்டும். கல்கத்தாவில் நடந்த மொழி மாநாட்டில் ராஜாஜியவர்கள் காண்பித்த படத்தில் இது தெளிவாக்கப் பட்டிருக்கிறது. இப்படத்தில் ஹிந்தி ராஜ்யங்கள் கருப்பு வர்ணத்திலும் மற்ற பாகங்கள் சிவப்பு வர்ணத்திலும் தீட்டப்பட்டிருக்கின்றன. கூடியிருந்த மக்கள் இப்படத்தைப் பார்த்ததினால் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. இதனால் ஹிந்தியானது எப்படி நாட்டின் சிறுபான்மையினரின் மொழி மட்டுமல்ல, சிறு பகுதியில் உபயோகிக்கப்படும் மொழியாகும். மற்றவர்களிடையே புகுத்தப்படுகிற தென்பதை மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

இன்று இப்புதிய ஹிந்தி பொய்க்கோரிக்கைகள், எண்ணிக்கைமூலம், ஒரு காலத்தில் சமஸ்கிருதத்திற்கிருந்த நிலையை (தான் அடையாத நிலையை), அடைய முயற்சிக்கிறது. உருது மொழியின் ஸ்தானத்தை அபகரிக்கவும் முயற்சி செய்கிறது. காந்திஜீயின் சொல்லைத் தட்டிக் கழித்தாலும், ஹிந்துஸ்தானியின் நிலையை அபகரிக்க சூழ்ச்சி செய்கிறது. பொதுஜனத் தொடர்புக்கு உபயோகப்படுவதற்குப் பதிலாக, இப்புதிய ஹிந்தி மக்களிடமிருந்து தனித்திருக்க பயன்படும்.

ஹிந்தி புகுத்துவதை எதிர்ப்பதற்குள்ள காரணங்கள்

நாட்டின் முக்கிய நலன்களைக் கவனித்தால், அவை ஹிந்தி புகுத்துவதை எதிர்க்கிறது என்பது எனது தாழ்மையான கருத்து. நாடு முழுவதும் விரைவில் ஹிந்தியைப் புகுத்தினால், கீழ்கண்ட பிற்போக்கான குணங்களைக் காணலாம் என நினைக்கின்றேன்.

(1) ஹிந்தி, மதத்தின் சின்னம்.—ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்களுள் ஆதரிக்கப்படும் ஹிந்தி ரக்ஷா சமிதியின் சண்டைக் குரல் பிரசாரம், வட இந்தியாவில் ஹிந்தியை மதத்துடன் வேண்டுமென்றே ஒப்பிடுகிறார்கள் என்று முன்னே சொல்லியிருக்கிறேன்.

(2) மொழிவாரிச் சிறுபான்மையரை ஹிந்தி மூலம் துன்புறுத்துவதாகும்.—முகம்மதியர்கள், சீக்கியர்கள், பழங்குடிகள், ஆங்கிலோ-இந்தியர்கள் ஆகிய சிறுபான்மையரை இப்புதிய ஹிந்தி எப்படித் துன்புறுத்துகிறது என்று முன்னே சொல்லியிருக்கிறேன். தேசிய மொழியாக ஹிந்தி ஆகும் பொழுது, இக்குணமானது இந்தியா முழுவதும் பரவும்.

(3) ஹிந்தி பாரபட்சத்தின் சின்னம்.—ஹிந்தி புகுத்தப்பட்டால், தவிர்க்கமுடியாதபடி ஒரு சலுகைபெற்ற வகுப்பு தோன்றும். இதே மாதிரி தவிர்க்கமுடியாதபடி, ஹிந்தியல்லாத மொழியினரை கீழ்த்தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளப்படுவர். ஹிந்தியைப் புகுத்துவதால், ஹிந்தி மொழியினர் தாய் மொழியில் கல்வி கற்பது மட்டுமல்ல, எல்லா வெகுமதிகளும் அவர்களுக்குக் கிட்டும். ஹிந்தியல்லாத மொழியினருக்கோ மூன்று* மொழிகளைக் கற்கும் கஷ்டம் ஏற்படுகிறது. பணிகளுக்குப் போட்டியிடுபவர்களோ, வழக்கறிஞர்களாகவோ, நடுவணர்களாகவோ, செயல்பட விரும்புவோர் அந்நிய மொழியைக் கற்பதுபோல் ஹிந்தியைக் கற்கவேண்டும். அதனுள்ளிருக்கும் செல்வத்திற்காகவும், அதற்காகவும் அறிவை வளர்க்க விரும்பும் மாணவர்கள், அந்நிய மொழியாகிய ஆங்கிலத்தையும் கற்பர்.

(4) பிரிவு மனப்பான்மையின் சின்னம் ஹிந்தி.—இந்தியாவின் பிளவுக்குக் கடைசியான காரணம் ஹிந்தி புகுத்துவதுதான் என்பது என் தாழ்மையான கருத்து. ஆந்திரப் பிரதேசம் நிர்மாணிக்கும்பொழுது நான் தனியாக மக்களவையில் இதை எதிர்த்தேன். இம்மாதிரி மொழி அடிப்படையில் பிரிப்பதானது நாட்டைப் பல பிளவுகளாக்கிவிடும் என்று அரசாங்கத்தை எச்சரித்தேன். ஆனால் இன்று, குஜரத், மஹாராஷ்ட்ரா, பஞ்சாப் ஆகிய இராஜ்யங்களில், தனித்தனியாக மொழிவாரி ராஜ்யங்கள் வேண்டுமென்பதை, அரசாங்கம் கண்டிக்கிறது. ஆந்திர ராஜ்யம் உண்டாக்குவதில் ஏற்பட்ட அரசாங்கக் கொள்கையின் நியாயமான விளைவுதான் இந்த கோரிக்கைகள்.

இன்று, ஹிந்தி பேசும் ராஜ்யங்களுடைய அரசியல் ஆதிக்கத்தினாலும், அவர்களுடைய நிர்ப்பந்தத்தினாலும், ஹிந்தியைப் புகுத்துதல் என்ற பைத்தியக்காரச் செய்கையை அவசரமாக நிறைவேற்றுகிறது இந்த அரசாங்கம்.

இந்திய சரித்திரமானது, சுதந்திரம் கொண்ட பல பிரிவுகளின் சரித்திரமாகும். மொழி அடிப்படையில் தேசத்தை இப்பிரிவு மனப்பான்மைக்கேற்ற முதல் வழியாகும். ஹிந்தி புகுத்துவதானது, இதற்கான கடைசிக் காரணமாகும். ஏற்கெனவே, ஹிந்தி புகுத்தலை எதிர்த்து பகை மூண்டுகொண்டிருக்கிறது. ஹிந்தி வெறிக்கு ஏற்ற பதிலாக, ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும், ஹிந்தியல்லாத ராஜ்யங்

* அகில இந்தியப்பணிகளுக்கும் உயர்தர மத்தியப்பணிகளுக்கும் முன்னறிவிப்பிற்கு ஆங்கிலத்துடன், ஒரே தரமுடைய ஹிந்தி வினாத்தாளுக்கும் மற்றுமொரு இந்திய மொழியிலுள்ள வினாத்தாளுக்கும் விடைதர வேண்டுமென்று இக்கமிட்டி சிபார்சு செய்கிறது. ராஜ்ய மாகாணக் கல்வியமைச்சர்கள் இடைநிலைக் கல்விக்கு வகுத்த மூன்று மொழித்திட்டம் எல்லாப்பாகங்களுக்கும் பொருந்தும்.

களும் எதிர் நடவடிக்கை எடுக்கின்றது. ஹிந்தி புகுத்துவதைத் தடுக்க எடுத்துக்கொள்ளப்பட்ட இக்கொள்கையை, ஹிந்தியல்லாத மொழியினர் கைவிடவில்லை என்றால், மொழி, பண்பாடு, தேசியம் ஆகியவைகளின் அடிப்படையில் சுதந்திரம் கொண்ட சிறு பகுதிகளாக, இந்தியா பிளவுபடுவது, தவிர்க்கமுடியாததாகும். பல்கலைக் கழகங்களில் போதனு மொழியை, ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்கள் மாற்றும்பொழுது, அவ்வாறே ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்களும் மாற்றும். மிக உயர் நீதிமன்றங்களின் மொழியை ஹிந்தியென்று ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்கள் அமைக்குமானல், ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்களும், தங்கள் பிராந்திய மொழிகளை, இக்கமிட்டி என்ன நினைத்தாலும் சரி, உயர் நீதிமன்ற மொழிகளாகச் செய்யும். அகில இந்தியப் பணிகளுக்கு ஹிந்தியை இடைநிலை மொழியாக்குவதில் ஹிந்தி ஆதரவாளர்கள் வெற்றி கண்டால், ஹிந்தி மொழியல்லாத பிரதேசங்களில் தவிர்க்க முடியாத, ஆனல் வருந்தத்தக்கக் கிளர்ச்சி ஏற்படும். மத்திய அரசாங்கமும் அகில இந்தியப் பணிகளுக்குப் பிராந்திய மொழிகளை இடைநிலை மொழிகளாக்கக் கட்டாயப்படுத்தப்படுவார்கள். மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்ட ஆந்திர ராஜ்ய மூலம், அரசியலில் அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட விஷமானது, ஹிந்தியைப் புகுத்துவதில் அரசாங்கம் செய்யும் குற்றத்தைவிடக் குறைவானதுதான்.

(5) ஹிந்தி பிற்போக்கின் சின்னம்.—ஹிந்தியில் இன்னும் சொற்கள் வளம்பெறவில்லை. இன்னும் மோசமாக, அதன் எழுத்து உரு தீர்மானிக்கப்படவில்லை. ஆக, பம்பாயில் உபயோகப்படும் ஹிந்தி எழுத்துக்களுக்கும் உத்திரப் பிரதேசத்தில் உபயோகப்படுத்தப்படும் எழுத்துக்களுக்கும் வித்தியாசமிருக்கிறது. பம்பாயிலிருந்து உத்திரப் பிரதேசம் செல்லும் ஹிந்தி மாணவன் புதிதாக ஹிந்தி எழுத்துக்களைக் கற்கவேண்டும்.

வங்காளம், தமிழ் போன்ற இந்திய மொழிகளைக் காட்டிலும் 1,000 ஆண்டுகள் பின் தங்கியது ஹிந்தி மொழி. ஆகவே, ஹிந்தியைப் புகுத்தும் பொழுது, நமது நாட்டின் எல்லாத் துறைகளிலும், நாம் ஆயிரம் ஆண்டுகள் பின்னேக்கிச் செல்லுவோம். ஹிந்தியைப் புகுத்துவதிலுள்ள தீர்மானமானது, அறிவை மறைக்கும் மிகச் சிறந்த வழி. இந்த ''ஸ்புட்னிக்'' காலத்தில் நம்மை மாட்டுவண்டியை உபயோகப்படுத்தும் காலத்திற்கு கொண்டு செல்லக் கட்டளையிட முடியாது.

தற்போதைய நிலை தொடரட்டும்

மொழி, பண்பாடு, சமூக வாழ்க்கை இவைகளில் ஒன்ருகயிருப்பது தேசிய மனப்பான்மையின் அறிகுறி என்பது மிகத் தவறு. பலதரப்பட்ட, வளம்பெற்ற இந்திய தேசியத் தன்மையின் பல பாகங்களை அறிந்து இவ் வேற்றுமையைப் போற்றவேண்டும். ஒற்றுமைப் பாசத்தால், மொழிக் கொள்கைகளை அவசரமாகத் தீர்மானிப்பது, தேசியம், தேசிய மக்கள் என்பது எவை அல்லது யார் என்ற அறியாமையினுலும், மொழி, பகுதி மனப்பான்மையை அறியாததாலும் ஏற்பட்டுள்ள விளைவு.

பல பெரிய ராஜ்யங்களின் பிராந்திய மொழியாக இருப்பதால் ஹிந்தி நாட்டில் ஒரு பெரிய இடத்தை பெற்றிருக்கவேண்டும். ஹிந்தி பேசும் ராஜ்யங்களே, தங்கள் நிர்வாகத் துறையில் இதைப் பயன்படுத்த முடிய

வில்லை. முதலில் ஹிந்தி ஆதரவாளர்கள் வெற்றியடையட்டும், பிறகு மற்ற பகுதிகளில் இதைப் பரப்ப விரும்பட்டும். ஒருவராலும் எதிர்க்க முடியாத அளவுக்கு, நாட்டின் பண்பாட்டு, இலக்கிய, விஞ்ஞான முன்னேற்றத்திற்கான தலைவாசலாக ஹிந்தியை பலப்படுத்தட்டும். பிறகு ஹிந்தி மொழி பேசாதார் தாஞகவே வலிய அம்மொழியை ஏற்பர். அதுவரை, இப்பைத்தியக்காரச் செயலை நாம் தொடரவேண்டாம். ஏனென்ருல், அவ்வாறு செய்வது நாட்டின் தற்போதைய ஒற்றுமையைக் குலைப்பதாகும்.

கல்வித் துறையிலுள்ள பெரும்பான்மையரான அறிவாளிகள், இலக்கிய ஆசிரியர்கள், விஞ்ஞானிகளின் பெரும்பான்மையினர் தற்போதைய நிலை தொடரட்டும் என்று விரும்புகிருர்கள் என்று நான் எண்ணுகிறேன். அவர்களால்தான், விருப்பு வெறுப்பற்ற வருங்காலக் கண்கொண்டு இப் பிரச்னையை ஆராய முடியும்.

இக்காரணங்களினுல் நான் ராஷ்ட்ரபதிக்குத் தாழ்மையுடன் சிபார்சு செய்வதாவது, இந்த முக்கியமான மொழிப் பிரச்னையை வெளிப்படையாக நன்ருக ஆராய்ந்து, அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை அல்லது நடவடிக்கைகளைப் பாராளு மன்றம் தீர்மானிக்கும் வரையில் இப்போதைய நிலை தொடரட்டும் என்பதுதான்.

(ஒ-ம்) பிராங்க் அந்தோனி
மக்களவை உறுப்பினர்
டிவிஷன் எண் 438.

ஸ்ரீ தாகூர்தாஸ் பார்கவாவின்

குறிப்பு

நான் எழுதுவது மறுப்புக் குறிப்பல்ல. இம்மொழிப் பிரச்னையைப் பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் சிபார்சுகளையும், இதற்கு முடிவு காணும் வகையில் அவர்களுடைய அடிப்படைக் கருத்துகளையும், இக்குறிப்பு ஒத்திருக்கிறது என்பது புலனாகும். தாண்டன்ஜி அவர்களும், எனது மதிப்புக்குரிய நண்பர் சேத் கோவிந்த தாஸ்ஜி அவர்களும் அனுப்பிய குறிப்பைப் படிக்கும் அனுகூலம் எனக்குக் கிட்டினது. அக்குறிப்பையும், அவர்களால் கூறப்படும் பெரும்பான்மை அறிக்கையையும் வாசித்தபின், அவர்களால் சமர்ப்பிக்கப் பட்ட குறிப்பை, 'மறுப்புக் குறிப்பு' என்று சொல்வது முறையல்ல என்று எண்ணுகிறேன். இவ்விரண்டுகளிலும் பொதுவான கருத்துகள் அதிக மாதலால், இப்பாராளு மன்றக் கமிட்டியின் அறிக்கை ஒரு மனதாக எழுதப் பட்டதாகும். மேலும், இக்கமிட்டியின் பூர்வாங்க விவாதங்களைப் பொறுத்து இவ்வறிக்கையில் எழுதியது "இவ்விவாதத்தில் அநேகமாக எல்லாரும் கலந்துகொண்டனர். சில விவரங்களில் வேற்றுமை யிருந்தாலும், குறிக்கோள்களைப் பற்றியும், பிரச்னைக்கு விடைகாணும் முறையிலும் பொது வாக ஒற்றுமை யிருப்பது புலனானது" உண்மை என்றும் தோன்றுகிறது.

கொள்கையைப் பொறுத்தவரை வேற்றுமை யில்லை. விவரங்களைப் பற்றியோ, ஒரு விஷயத்தில் பல மன நிலைகளையும், பல அபிலாஷைகளையும் கொண்ட இரண்டு அறிவாளிகள், இவ்விவரங்களில் எது முக்கியம், எது முக்கியமில்லை என்பதில் வேற்றுமை கொள்ளாமல் இருக்க முடியாது. ஒரு காலத்தில் நாட்டில் நிலவின எதிர்ப்பும், இப்பிரச்னைக்கு விடைகாண தகாத முயற்சியும் மாறி, எங்கள் அக்கிராசனராக இருந்த ஸ்ரீ பந்தின் அறிவுமிக்க வழிகாட்டுதலால், இக்கமிட்டியின் நடைமுறைகளில் சமாதானமும், கூட்டுறவும் நிலவின.

ஸ்ரீ பந்த் மற்றும் தேசத்தலைவர்களுக்கும், ஸ்ரீ முதலியார், ஸ்ரீ டாங்கே, ஸ்ரீ அதுல்யா கோஷ், மற்றும் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலிருந்து வந்த நண்பர்களுக்கும், மதிப்புக்குரிய தாண்டன்ஜி, சேத் கோவிந்த தாஸ்ஜி, மற்றும் ஹிந்தி மொழி பேசும் பிராந்தியங்களிலிருந்து வந்த நண்பர்களுக்கும், இப்பிரச்னைக்கு விடைகாண அவர்களுடைய நாட்டுப் பற்று நிறைந்த நோக்கிற்கும், ஒருவருக்கொருவர், அவரவர் கருத்துக்களுக்கு மதிப்புப் பாராட்டியதற்கும் நான் எனது வந்தனத்தைச் செலுத்தாமலிருக்க முடியாது. ஒவ்வொரு சமயம், இக்குறிப்பில் சொல்லப்பட்டதுபோல் விவரங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி வித்தியாசங்கள் இருந்தாலும், இம்முக்கியமான, பெரிய பிரச்னையை யாரும் எதிர்க்கவோ, சந்தேகப்படவோ இல்லை.

இப்பாராளு மன்றக் கமிட்டி ஒற்றுமையாகவும், மொழிப் பிரச்னைக்கு விடைகாணும் அடிப்படை முறையில் வேற்றுமை யில்லாமலிருப்பதைப்பற்றி நாடு சந்தோஷப்பட ஏதுவாக இருக்கிறது. அவ்வறிக்கையின் 2-வது பகுதி, இக்கமிட்டி உறுப்பினர்களின் ஏகமனதான கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. ஆகவே, இவ்வறிக்கை கூறுவதாவது:—

''இப்பிரச்னேயின் எல்லாப் பாகங்களேயும் ஆராய்ந்த பிறகு, இவ்வொப்பந்தத்தைப் பின்பற்றுவதே (இப்பகுதியில் கொடுத்திருப்பது போல்) பத்திரமானதும், செய்முறைக்கு ஏற்றதுமாகும்.''

சில விவரங்களேப்பற்றின முக்கியத்துவத்தைப்பற்றியும், தொழில் முறையைப்பற்றியும், சில உறுப்பினர்களுக்குள் வேற்றுமை இருந்தது. ஆனல், இவ்வைகளே ஒன்று சேர்க்க முடியாமலோ, அல்லது இவ்வேற்றுமைகள் மிகவும் விரிவாகவோ இல்லே. அநேகமாக எல்லா வேற்றுமைகளும் தீர்க்கப்படலாம் என்பது எனது தாழ்மையான கருத்து.

இவைகளில் சிலவற்றைப் பற்றி, திரு தாண்டன்ஜி அவர்களுடன் என்னுடைய குறிக்கோளும், கருத்துக்களும் ஒற்றுமைப்படுகின்றன. இவைகளில் சிலவற்றைப்பற்றி சிறிது கூற விரும்புகிறேன்.

21-வது சிபார்சிலுள்ளதைப்பற்றி, நான்காம் நிலே ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் குற்றப் பத்திரிகையைப்பற்றியோ அல்லது அவர்கள் ஆங்கிலத்தில் தரும் பதில்களேப் பற்றியோ ஏதாவது பேசப்பட்டதா என்பது என் நினேவிலில்லே. நான்காம் நிலே ஊழியர்களுக்கு அனுப்பப்படும் எவ்விதச் செய்தியும், ஹிந்தியிலோ, அவ்வூழியர்கள் இருக்கும் பிராந்திய மொழிகளிலோ இருக்க வேண்டுமென்பதை நான் ஆமோதிக்கிறேன். இவர்கள் பொதுவாக எழுத்தறிவில்லாதவர்களாதலால், ஹிந்தி உபயோகப்படுத்துவது, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் உபயோகப்படுத்துவதுபோல் நியாயமாகாது. ஆகவே, தற்போதுள்ள சூழ்நிலேயில் இந்த ஊழியர்கள் இருக்கும் ராஜ்யத்திஞல் அங்கீகரிக்கப்பட்ட மொழியை உபயோகப்படுத்துவது மிக்க நலமாகும்.

அயல் நாட்டுக்கனுப்பப்படும் தூதர்களுடைய நியமனத்தாள்களே, நாட்டு மொழியில் ஏற்கெனவே அனுப்புகிருர்கள் என்று நான் நினேக்கிறேன். இது தவருனல், இச்சிபார்சை நான் மிகவும் ஆமோதிக்கிறேன். ஏதாவது ஒரு உறுப்பினரும் இதை எதிர்ப்பார் என்று நான் நம்பவில்லே.

22-வது சிபார்சைப் பற்றி, அரசாங்கம் தனது பிரேரணேகளேயும் கருத்துக்களேயும் கமிஷனிடம் சமர்ப்பிக்காததால், இக்கமிஷனுல் ஒரு கால அட்டவணேயைத் தயாரிக்க முடியவில்லே என்பதைப் பற்றி நான் வருந்துகிறேன். மேலும், பல உறுப்பினர்களால், நான் உள்பட, கேட்டுக் கொண்டபடி அரசாங்கம் ஒரு கால அட்டவணேயைத் தயார் செய்யவில்லே என்பதைப் பற்றி மேலும் வருந்துகிறேன். 1951-ம் ஆண்டிலிருந்து கல்வியமைச்சு தன் வேலேயைச் சரிவரச் செய்திருந்தால் இப்போதுள்ள மொழிச் சண்டை ஏற்பட்டிருக்காது என்பதை நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். கடந்ததைப் பற்றி சொல்லி வருந்துவதில் பயனில்லே. ஒரு காலத்தில் சில உறுப்பினர்கள் இவ்விஷயத்தில் ஏதாவது செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், அரசாங்கம், தனது கொள்கைகளேயும், கால அட்டவணேயைத் தயாரிக்கத் தேவையான தேதிகள் முதலியவற்றை கொடுக்காத வரையில் இவ்வட்டவணேயைத் தயாரிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியடையாதென்பது சொல்லத் தேவையில்லே.

இவ்வட்டவணேயை நடைமுறையில் கொண்டுவர அரசாங்கத்திஞல்தான் முடியும். இவ்விஷயத்தில் இன்னும் அரசாங்கம் வேகமாகச் செல்லலாம் என்றுதான் ஒரு தனி மனிதனல் சொல்லக்கூடிய காரியம். இதைப்பற்றி விரைவாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது மதிப்புக்

குரிய உள் நாட்டமைச்சருக்குத் தெரியும் என்று நான் திர்மானமாக நம்பு கிறேன். இதைப்பற்றி 2-வது பகுதியில் சொல்லப்பட்ட கொள்கைகளின் பிரகாரம் எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பார். மிக்க நல்ல பலன்களைக் காண அவருடைய முறைதான் ஏற்றதென்று நான் எண்ணுகிறேன்.

அறிக்கையின் 24-வது பாராவில் இக்கொள்கையை நன்றாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

''இம்மொழிமாற்றம் ஒழுங்காகவும் படிப்படியாகவும் ஏற்பட வேண்டு மென்றாலும், இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளைப்பற்றி எடுக்கும் முயற்சியில் தளர்ச்சி ஏற்படக்கூடாது. நடைமுறைகளில் கட்டாயம் எழும்பு கின்ற கஷ்டங்களை, ஆழ்ந்து ஆராய்ந்து வகுத்த ஒரு திட்டத்தின்படி, வெல்லலாம்.'' இம்முன்னேற்றத்திற்கான தொடர்ந்த முயற்சி செய்ய, அடிக்கடி நினைவுபடுத்துவதற்காக, ஒரு கால அட்டவணை தேவை. இக் கமிட்டியின் விவாதங்களில் நான் இதைப்பற்றி வெகுவாகச் சொன்னேன். இப்பொழுதும் இக்கால அட்டவணையை வகுக்க வேண்டுமென்று, தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இக்கால அட்டவணையைத் தயாரிக்கும்பொழுது, ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ளவர்களின் கருத்துக்களையும், நியாயமான எதிர்ப்பு களையும் நன்றாக, அவைகளுக்கேற்ற முறையில் கவனிக்கப்பட வேண்டும். இவ்விஷயத்தில் நமது பயத்திற்கு இடமிருக்காது. ஏனென்றால், மதிப்பிற் குரிய உள் நாட்டு அமைச்சரால் கொண்டுவரப்பட்ட கால அட்டவணை ஹிந்தி மொழி பேசாதவர்களின் எண்ணங்களை நன்கு ஆராய்ந்தபின் கொண்டு வருவதாக இருக்கும்.

ஹிந்தி மொழிக்காகத் தனியமைச்சு நிறுவ ஒரு பிரேரணை திரு தாண்டன்ஜியால் கொண்டுவரப்பட்டது. நான் அதை ஆமோதிக்கத் தக்க நிலையில் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இச்செய்கை ஹிந்தி மொழி பேசாத மக்களிடையே, இம்மொழி மாற்றம் காரணமில்லாமல் மிக அவசரமாக நடைபெறும் என்ற ஒரு மனப் பிராந்தியை ஏற்படுத்தும்.

முன்னுள்ள சோம்பேறித்தனமும், விருப்ப மில்லாமையும் போக்கி, மொழிமாற்றத்திற்கான அவசியமான வேலை, திடமுடனும் நம்பிக்கை யுடனும், சரிவரச் செய்ய உள் நாட்டமைச்சரின் கீழ் ஒரு குழு ஏற்படுத்த வேண்டுமென்பதை நான் ஆமோதிக்கிறேன்.

1965-ம் ஆண்டிலோ, அதிலிருந்து ஓரிரு ஆண்டுகளாகவோ, முழு மொழிமாற்றம் ஏற்படவேண்டும் என்று திரு தாண்டன்ஜி தமது குறிப்பில் எழுதியிருப்பதை நான் ஆமோதிக்கவில்லை.

ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள நமது நண்பர்களுக்கு இது சம்மதமாகாது என்று நினைக்கிறேன். இக்கமிட்டியும் ஒரு தேதியை நிர்ணயிக்கவோ, அல்லது சம்மதிக்கவோ இல்லை. இவற்றின் அறிக்கையில் கண்டுள்ள காரணங்களுக்காக இம்மொழிமாற்றத்தின் தேதி இவ்வளவு சீக்கிரத்தில் இருக்க முடியாது. 1965ம் ஆண்டுக்குள் மொழிமாற்றம் என்பது நடைமுறையில் முடியாதது என்று அறிக்கை கூறுவதை நான் ஆதரிக்கிறேன்.

அரசியலமைப்பில், எண்களின் வடிவத்தைப் பற்றி ஒரு தலைகீழ் மாற்றம் வேண்டுமென்று நான் விரும்பவில்லை. ஹிந்தி எண்கள் வடிவத்திற்குப் பதிலாக பன்னாட்டு எண்களின் வடிவத்தை உபயோகப்படுத்த வேண்டுமென்ற அரசியலமைப்பின் ஷரத்தை வாக்கெடுப்பில் எதிர்த்தாலும், திரு தாண்டன்ஜி தமது குறிப்பில் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லாதது, மெச்சத்தக்கது. இதைப்பற்றி இப்பொழுதுள்ள வழக்கம் விரும்பத்தக்கது. ஹிந்தியிலுள்ள மத்திய அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில், எண்கள் ஹிந்தி வடிவத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஹிந்தியிலுள்ள ரயில்வேக் கால அட்டவணையின் பன்னாட்டு எண் வடிவங்களை உபயோகிப்பது ஒவ்வாததுதான். நடைமுறையில் எப்படி ஆங்கிலக் கால அட்டவணையில் ஹிந்தி வடிவங்களை உபயோகித்தால் எவ்வளவு கஷ்டங்கள் இருக்குமோ, அவ்வளவு ஹிந்தி அட்டவணையில் பன்னாட்டு வடிவங்களை உபயோகித்தாலும் ஏற்படும். தற்போதுள்ள கொள்கையும், நடைமுறையும் தொடர்ந்து செயல்படுவது விரும்பத்தக்கது என்பது என் எண்ணம். ஒவ்வொரு வெளியீட்டின் தரத்தைக் கொண்டும் மற்றும் இவைகளை ஒட்டின விஷயங்களைக் கொண்டும், ஹிந்தி எண்கள் வடிவம் உபயோகிக்கப்பட வேண்டுமா என்று தீர்மானிக்கப்பட வேண்டும்.

> ''விஞ்ஞான, தொழில் நுட்ப, கணித வெளியீடுகளில் பொதுஜன உபயோகத்திற்கேற்ப பன்னாட்டு வடிவங்களை குறிப்பாக உபயோகப்படுவது தகுந்தது''

என்ற கருத்தானது, திட்டவட்டமாக இல்லை.

33, 34-வது சிபார்சுகளைப் பற்றி, பெரும்பான்மையரின் அறிக்கை என்று சொல்லப்பட்டதற்கும், குறிப்புக்கும் வித்தியாசமிருப்பதாக நான் உணரவில்லை. இப்பொழுதும், இந்தியன் பினல் கோடு, கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு, சாட்சிச் சட்டம் (எவிடன்ஸ் ஆக்ட்) முதலிய முக்கியமான சட்டங்கள், உருதுவிலும், ஹிந்தியிலும் வெளியிடப் படுகின்றன. மற்ற சட்டங்களின் அதிகார பூர்வமான மொழிபெயர்ப்பில் அரசாங்கம் இப்பொழுது ஈடுபட்டுள்ளது. எல்லாச் சட்டங்களும் ஆட்சி மொழியில் வெளியிடப் போவதால், பாராளு மன்றத்தில் கொண்டுவரப்படும் மசோதாக்கள் ஆங்கிலத்துடன், ஹிந்தி மொழிபெயர்ப்பிலும் கொண்டுவருவது பொருந்தும். பாராளு மன்றத்தில் ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களின் அனுகூலத்தைச் சார்ந்து இந்நடை முறையை அனுசரிப்பது தேவையானதுமாகும். யூனியன் அவைகளிலுள்ள சட்டங்களனைத்தும், எங்கெங்கு மொழிபெயர்க்கப்படவில்லையோ, அப்பிராந்திய மொழிகளில் விரைவாக மொழி பெயர்க்கப்படவேண்டும்.

பொதுப் பணிகளைப் பற்றி, சிறிது காலத்திற்கு, இப்பயிற்சிக் கூடங்களில் போதன மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டுமென்றும், இப்பயிற்சியின் எல்லாவற்றிற்குமோ அல்லது ஏதாவது சில பாகங்களுக்கோ போதன மொழியாக ஹிந்தியைக் கொண்டுவரத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று இக்குழு அங்கீகரிக்கிறது. ''விரைவாக'' என்று கொண்டுவந்த திருத்தத்தை ஏற்க மறுத்தது. ''விரைவாக'' என்பதை ஏற்று இதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சம்மதித்திருந்தால் ஒருவருக்கும் நஷ்டமில்லை. ஆங்கிலத்தை நிறுத்தவோ அல்லது உடனடியாக ஹிந்திக்கு மாற்றவோ ஒருவரும் விரும்பவில்லை. ஆங்கிலத்தில் போதிய அறிவில்லாத மாணவர்களின் நன்மைக்காக ஆங்கிலத்துடன் ஹிந்தியையும்

உபயோகிக்க வேண்டும் என்பதுதான் கோரிக்கை, இக்கோரிக்கை அவசர மானதல்ல. ஹிந்தியை ஆட்சி மொழியாக்க, அரசாங்கம் சௌகர்யம்போல் நடவடிக்கைகளை விரைவாக எடுக்கலாம். அரசாங்கம் தன் கொள்கைகளுக் கேற்ப உண்மையாக நடந்தால், விரைவில் ஹிந்தியைக் கொண்டுவராது என்பதில் எனக்கு சந்தேகமேயில்லை. ஹிந்தி பேசும் மக்களின் நலன்பேரில் ஹிந்தி பேசாத மக்களின் நலன்போல் அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது. இச்சலுகை ஹிந்தி பேசும் மக்களுக்களிக்கப்பட்டால், ஹிந்தி பேசாத மக்களுக்கு இதனுல் நஷ்டமில்லை. இது ஒரு காப்புப் பகுதி. ஆகையால், அவர்களைக் கஷ்டத்திற் குள்ளாக்காது.

இதே மாதிரி, போட்டிப் பரிட்சைகளில் இடைநிலை மொழியாக ஹிந்தியை ஆங்கிலத்துடன் விரைவாக உபயோகிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது. அதை ஏற்றிருக்க வேண்டியது அவசியம். ஹிந்தி மொழி பேசாத மாணவர்களுக்குப் பிரதிகூலம் ஏற்படக் கூடாதென்று நாம் எண்ணுகிருேம். ஆனுல், இவ்வளவு நாட்களாக தண்டிக்கப்பட்டு வரும் ஹிந்தி மொழி பேசும் மாணவர்களின் கோரிக்கை அநியாயமானதல்ல. இம் மொழி பேசும் மாணவர்களுக்கு ஹிந்தி இடைநிலை மொழியாக இருப்பதற்கு எதிர்ப்புகள் என்னவாக இருக்கு மென்பதை என்னுல் அறிய முடியவில்லை. இம்மாணவர்களைப்பற்றி பாரபட்சமோ, வேறுபாடு இல்லாமலிருக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலிருந்து வருகிற சகோதரர்கள்போல், பஞ்சாப் ராஜ்யத்தி லுள்ள ஹரியாஞ, குஜரத்திலுள்ள சில பிரதேசங்கள், இவைகளிலுள்ள ஹிந்தி மொழி பேசும் மாணவர்கள், ஆங்கிலக் கல்வி குறைவினுல், அம்மொழியில் அவ்வளவு நன்ருக விடைதர முடியாது என்பது அப்பட்டமான உண்மையல்லவா? எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இரண்டுவிதமானவர்களையும் ஒரே நிலையில் வைத்தாலென்ன?

காலம் மாறுகிறது. இம்மொழிச் சிக்கலினுல் பிராந்திய மொழிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்வமானது, இந்தியாவின் எல்லாப் பாகங் களிலும், முக்கியமாக இருக்கும் ஆங்கிலத்தின் இடத்தை அபகரிப்பதாகும். அரசியலமைப்பு 16-வது ஷரத்துப்படி, நாம் முடியும்வரை விரைவாக ''ராஜ்யத்தின் கீழுள்ள எல்லாத் துறைகளிலும் வேலையைப் பொறுத்தவரை எல்லாப் பிரஜைகளுக்கும் சமமான சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும்.'' முடிந்தவரை இந்திய நாட்டின் ஒரு பிரஜையும் மற்றெருவனுக்குத் தன்னைவிட அதிக சலுகையோ, அனுகூலமோ கிடைத்திருக்கிறது என்று எண்ணுவதற்கு இடமளிக்கக் கூடாது. எல்லா மாணவர்களும் தங்கள் தாய் மொழியில் விடைதர வேண்டுமென்பதுதான் மிகச் சிறந்த வழி. இது செய்யப்படும் வரை நியாயமற்ற வகையில் ஆங்கிலத்தையே வேண்டுமென்று சொல்லி ஒருவரையும் தண்டிக்கக் கூடாது.

மொழிகள் ஒன்றுக்கொன்று உறுதுணையாயிருப்பது, அரசாங்க அலுவல் களைத் தவிர, தேச ஒற்றுமைக்குப் பயன்படும் ஓர் அரிய சக்தி. எல்லா பிராந்திய மொழிகளும், நமது தேசிய மொழிகள். அவைகளின் முன்னேற் றத்திற்கு நம்மால் முடிந்தவரை முயற்சி செய்யவேண்டும். யார் என்ன சொன்னுலும், ஹிந்தி ஒரு தேசிய மொழியாக இருக்கிறது. அகில இந்திய மொழியாக ஆவதற்குள்ள நிலைமையிலும் இருக்கிறது. மற்ற பிராந்திய மொழிகளிலிருந்து சாதாரண சொற்களையும், சொல்லாட்சிகளையும் சேர்த்து ஹிந்தியை வளர்க்க விரும்புகிருேம். ஏனென்ருல், இந்தியாவின் எல்லா பாகத்தினரும் ஹிந்தியை தங்கள் பொது மொழியாகக் கருதி, தங்களுக்குள்

பேச்சுப் பரிவர்த்தனைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஹிந்திக்கும் பிராந்திய மொழிகளுக்கும் சண்டையோ, ஆதிக்கமோ கிடையாது. மேலும், எப்படி மத்திய அரசாங்கமானது நாட்டின் எல்லாப் பாகங்களுக்குமுள்ள அரசாங்கமோ, அவ்வாறே எல்லாப் பாகங்களுக்கும் ஹிந்தி மொழி பொது மொழியாகும். நமது புனிதமான அரசியலமைப்பிற்காக எல்லாரும் ஒற்றுமையாயிருந்து அதன் குறிக்கோள்களை நடைமுறைக்குக் கொண்டு வருவோமாக. அரசியலமைப்பை சந்தோஷமாக ஏற்று அதனுல் மொழி பற்றி ஹிந்தி பேசாதவர்கள் கஷ்டத்திற்காளாகி யிருக்கிருர்கள் என்பது எனக்குத் தெரியாததல்ல. மேலும் இதனுல் ஹிந்தி அல்லாத தாய் மொழியினர், இதற் கேற்பட்டுள்ள கஷ்டங்களை வென்று தேச ஒற்றுமையை ஸ்தாபிக்கத் தியாகம் செய்கிருர்கள். சென்னை அரசாங்கம் தக்க காரணங் களுடன் அனுப்பிய யாதாஸ்தை நான் மிக்க சந்தோஷத்துடன் படித்தேன். ஹிந்தி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிக திருப்திகரமானது. இடை நிலைக் கல்வித் துறையில் மற்ற இந்திய ராஜ்யங்களைப்போல் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக அவர்களும் சம்மதித்திருக்கக் கூடாதா என்று நான் எண்ணுகிறேன். ஆனுல், அவர்கள் கணக்குப்படி, ஹிந்தி கட்டாயமாக இல்லாவிட்டாலும், படிப்பவர்களின் எண்ணிக்கை, அம்மொழிக் கட்டாய மாக்கப் பட்டால் ஏற்படும் முடிவைப் போன்றிருக்கிறது என்பதை நான் மறைக்கவில்லை.

பல ஆயிரக் கணக்கான அந்நியர் ஆட்சிக்குப் பிறகு நமக்குக் கிடைத் திருக்கும் தேசத்தின் ஒற்றுமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும், தியாகம் செய்பவர்களுடைய புகழ் ஓங்கட்டும். தன்னலத்திற்குப் பிரதிகூல மேற்பட் டாலும், நாட்டின் ஒற்றுமைக்கும், இணைப்புத் தன்மைக்கும் தியாகம் செய்ய நமக்கு அறிவும், பலமும் எல்லாம் வல்ல இறைவன் அருள்வாராக.

புது டில்லி, (ஒ-ம்) தாகூர்தாஸ் பார்கவா

1958-ம் ஆண்டு டிஸம்பர் 5-ந் தேதி. பாராளு மன்றக்கமிட்டி உறுப்பினர்

———

பிற்சேர்க்கைகள்

பிற்சேர்க்கை 1

இந்திய அரசாங்க உள்துறை அமைச்சின் அறிக்கை
எண் 43/9/55-பொது 1, புதுடில்லி-2, 1955 ஜூன் 7-ந் தேதி

அரசியலமைப்பின் 344-வது விதியில் சொல்லப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி ராஷ்ட்ரபதி இக்கமிஷனை ஸ்ரீ பி. ஜி. கெர் தலைமையிலும், கீழ்க்கண்டவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு இயங்குமாறு நியமிக்கிறார். இக்கமிஷன் ஆட்சி மொழிக் கமிஷன் என வழங்கப்படும்.

1. டாக்டர் பிரிஞ்சி குமார் பருவா, அசாம் மொழித்துறைத் தலைவர், கௌஹாத்திப் பல்கலைக் கழகம், கௌஹாத்தி, அசாம்.

2. டாக்டர் எஸ். கே. சட்டர்ஜி, தலைவர், மேற்கு வங்கச் சட்ட மேலவை, கல்கத்தா, மேற்கு வங்காளம்.

3. ஸ்ரீ மகன்பாய் தேசாய், குஜராத் வித்யாபீடம், அஹமதாபாத், பம்பாய்.

4. ஸ்ரீ டி. சி. பவதே, துணை வேந்தர், கர்நாடகப் பல்கலைக் கழகம், பம்பாய்.

5. பேராசிரியர் பி. என். புஷ்ப், அமர்சிங் கல்லூரி, ஸ்ரீநகர், காஷ்மீர்.

6. ஸ்ரீ எம். கே. ராஜா, ஆசிரியர், தீனபந்து, எர்ணாகுளம், கேரளம், திருவிதாங்கூர்-கொச்சி.

7. டாக்டர் பி. சுப்பராயன், உறுப்பினர், மக்கள் சபை, சென்னை—சென்னை.

8. ஸ்ரீ ஜி. பி. நேநே, ராஷ்ட்ரபாஷா பவனம், பூனா, பம்பாய்.

9. டாக்டர் பி. கே. பரிஜா, கூட்டு வேந்தர், உட்கல் பல்கலைக் கழகம், கட்டாக், ஒரிசா.

10. சர்தார் தேஜா சிங், ஓய்வு பெற்ற முன்னாள் முதல் நீதிபதி, பெப்சு, பாட்டியாலா, பெப்சு.

11. ஸ்ரீ எம். சத்தியநாராயணா, உறுப்பினர், மக்கள் சபை, சென்னை—சென்னை.

12. டாக்டர் பாபு ராம் சாக்ஸேனு, வடமொழித் துறைத் தலைவர், அலஹாபாத், உத்திரப் பிரதேசம்.

13. டாக்டர் ஹபீத் உஸேன், ஜமியா மிலியா, டெல்லி—டெல்லி.

14. டாக்டர் அமர்நாத் ஜா, தலைவர், பொதுப் பணிக் கழகம், பாட்னு, பிஹார்.

15. டாக்டர் ஆர். பி. திருபாதி, துணை வேந்தர், சாகர் பல்கலைக் கழகம், சாகர், மத்தியப் பிரதேசம்.

16. ஸ்ரீ பாலகிருஷ்ண சர்மா, எம்.பி., டெல்லி—டெல்லி.

17. ஸ்ரீ மவுலி சந்த்ர ஷர்மா, டெல்லி—டெல்லி.

18. டாக்டர் ஹஸாரி பிரசாத் திவிதி, ஹிந்தித் துறைத் தலைவர், காசி பல்கலைக் கழகம், காசி-உத்திரப் பிரதேசம்.

19. ஸ்ரீ ஜெய் நாருயண் வியாஸ், ஜெய்பூர், ராஜஸ்தானம்.

20. ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்கார், துணைத் தலைவர், மக்கள் சபை, டெல்லி, மதராஸ்.

கீழ்க் கண்டவைகளைப் பற்றி இக்கமிஷன் ராஷ்ட்ரபதிக்குத் தன் சிபார்சுகளைச் செய்ய வேண்டும்.

(அ) யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்துதல்.

(ஆ) யூனியன் ஆட்சி விவகாரங்களில் எல்லாவற்றிற்குமோ, அன்றி ஒரு சிலவற்றிற்கோ ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதைக் குறைத்தல்.

(இ) அரசியலமைப்பின் 348-வது விதியில் சொல்லப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டிய மொழியைப்பற்றி ஆராய்தல்.

(ஈ) குறிப்பிட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட யூனியன் விவகாரங்களுக்குப் பயன்படுத்த வேண்டிய எண்களின் வடிவங்களைப்பற்றிக் கூறுதல்.

(உ) யூனியன் ஆட்சி மொழியாகவுள்ள ஆங்கில மொழியைப் படிப்படியாக ஹிந்தியின் மூலம் மாற்றுவதற்குரிய ஒரு கால அட்டவணையையும், வழியையும் தயாரித்துத் தருதல்; மேலும் யூனியனுக்கும் ராஜ்யங்களுக் கிடையேயும், ராஜ்யங்களிடையேயும் பயன்படுத்த வேண்டிய ஹிந்தி மொழியைப்பற்றி ஒரு கால அட்டவணை தயாரித்தல்.

2. இக்கமிஷன் தன்னுடைய சிபார்சுகளைச் செய்யும்பொழுது இந்தியாவின் தொழில், பண்பாடு, விஞ்ஞான வளர்ச்சிகளை மனத்துட்கொண்டு ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ள மக்கள் பொதுப் பணிகளில் நுழைவதற்குரிய உரிமைகளைப் பாதிக்காத முறையில் சிபார்சுகளைச் செய்ய வேண்டும்.

3. இக்கமிஷன் கீழ்க்கண்டவற்றைப் பெறவும், செய்யவும் உரிமை பெறுகிறது :—

(அ) மத்திய சர்க்காரிடமிருந்தும், ராஜ்ய சர்க்காரிடமிருந்தும், மிக உயர் நீதிமன்றத்திடமும், உயர் நீதிமன்றங்களிடமிருந்தும், சட்ட சபைகளிலிருந்தும், இன்னும் தனிப்பட்ட சங்கங்கள், அமைப்புக்களிலிருந்தும், தனிப்பட்ட மனிதரிடமிருந்தும், தங்களுக்குத் தேவை என்றுபடும் தகவல்களையும், தங்கள் ஆராய்ச்சிக்குப் பயன்படும் தகவல்களையும், எழுத்து மூலம் பெறவோ, விசாரித்து அறியவோ, வேறு எந்தெந்த வகைகளில் வேண்டுமானாலும் பெறவோ உரிமை பெறுகிறது.

(ஆ) தாங்கள் செயற்படும் முறையை வகுக்கவும், கூடுகின்ற இடம், காலம் முதலியனவற்றை முடிவு செய்யவும், பிறர் அறியவோ, அறியாமலோ கூடவும், வேண்டிய ஏற்பாடுகளைத் தானே செய்து கொள்ள உரிமை பெறுகிறது.

(இ) கழகத்தார் பிரித்துக் கொடுக்கின்ற தனிப்பட்ட அலுவல்களைக் கவனிக்கவும், அதற்குரிய அதிகாரத்தைப் பெறவும், அதைக் கொண்டு செலுத்தவும் தகுதி உடைய துணைக் குழுக்களைத் தன்னுடைய உறுப்பினர்களிலிருந்தே தெரிவு செய்யும் உரிமை பெறுகிறது.

(ஈ) இந்தியாவின் எந்த பாகத்திற்கும் போக வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டால் இக்கமிஷனே அல்லது இதன் துணைக் கமிட்டிகளோ போக உரிமை பெறுகிறது.

(உ) சட்டத்தில் கூறப்பட்டதற்கும் புறம்பாக எந்த ஒரு அங்கத்தினரும் வராமல் இருப்பினும், ஒரு ஸ்தானம் காலியாக இருப்பினும் அதைப்பற்றி அக்கறைப் படவேண்டியதில்லை.

4. இந்தக் கமிஷன் தாங்கள் பெறும் சான்றுகளைக் கொண்டு தங்கள் சிபார்சுகளை ராஷ்ட்ரபதி அவர்கட்கு 1956 ஏப்ரல் 30-ந் தேதிக்குப் பிற்படாமல், வசதிப்பட்டால் முற்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.

ராஷ்ட்ரபதியின் உத்தரவுப்படி
(ஒ-ம்) வி. விஸ்வநாதன்
கூட்டுச் செயலாளர்.

பிற்சேர்க்கை 2

ஆட்சி மொழிபற்றின பாராளு மன்றக் கமிட்டியின் நடைமுறை விதிகளும், செய்முறையும்

---

1. **சிறு தலைப்பு.**—இவ்விதிகள் ''ஆட்சி மொழிபற்றின பாராளு மன்றக் கமிட்டியின் நடைமுறை விதிகளும், செய்முறையும்'' என்று அழைக்கப்பட வேண்டும்.

2. **சூத்திரங்கள்.**—இவ்விதிகளில், சந்தர்ப்பத்தினுல் மாற்றுப் பொருளுக்குத் தேவையேற்பட்டாலொழிய, ''உறுப்பினர்'' என்பது ஆட்சிமொழி பற்றியப் பாராளு மன்றக் கமிட்டியின் உறுப்பினரைக் குறிக்கும்.

''செயலாளர்'' என்பது அதன் செயலாளரையும், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் செயலாளராகப் பணியாற்றுபவரையும் குறிக்கும்.

''கமிட்டி'' என்பது ''ஆட்சி மொழிபற்றின பாராளு மன்றக் கமிட்டி'' ஆகும்.

''தலைவர்'' என்பது ஆட்சி மொழிபற்றின பாராளு மன்றக் கமிட்டியின் தலைவரையும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அதன் தலைவராகப் பணியாற்றுபவரையும் குறிக்கும்.

3. **உறுப்பினர்களுக்கு அழைப்பு.**—கமிட்டியின் செயலாளர், கமிட்டி அல்லது அதன் ஒரு பிரிவு கூடும் இடத்தையும் தேதியையும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தெரிவிக்கவேண்டும்.

4. **கமிட்டியின் தலைவர்.**—கமிட்டியினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் வராமலிருக்கும்பொழுதும் அல்லது அன்னுர் கூட்டத்தினிடையே வெளியில் செல்லவேண்டியிருக்கும்பொழுதும் அவர் மற்றெரு உறுப்பினரைத் தலைவராக நியமிக்கலாம். மற்ற சந்தர்ப்பங்களில் கூடியிருக்கும் உறுப்பினர்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம்.

5. **அவைக் கூட்டத்தில் இருக்கவேண்டிய உறுப்பினர்களின் மிகக் குறைந்த எண்ணிக்கை.**—*(1)* ஒரு அவைக் கூட்டத்திலும் குறைந்த பட்சம் பத்து உறுப்பினர்கள் இருக்கவேண்டும்.

(2) அவைக் கூட்டத்திற்காகக் குறிப்பிடப்பட்ட நேரத்திலும், அல்லது அவைக் கூட்டம் நடக்கும் பொழுதும் குறைந்த பட்ச உறுப்பினர்கள் இல்லாமலிருந்தால் கூட்டத்தின் தலைவர், தேவையான உறுப்பினர்கள் வரும் வரை, கூட்டத்தை நிறுத்திவைக்கவோ, அல்லது மற்றெரு நாளுக்குத் தள்ளிப் போடவோ செய்யலாம்.

ஆனுல், மேற்சொன்னவாறு கூட்டத்தை தொடர்ந்து இருமுறைகள் தள்ளிப்போட நேர்ந்தால் அடுத்த கூட்டத்தை, தேவையான உறுப்பினர்கள் இல்லாமலிருந்தாலும், தலைவர் தொடர்ந்து நடத்தலாம்.

6. **கமிட்டியின் வாக்கெடுப்பு.**—கமிட்டியின் முன்னே வரும் எல்லா விஷயங்களில் பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்குகளுக்கேற்பத் தீர்மானிக்கப் படவேண்டும்.

7. **தலைவரின் நிர்ணய வாக்கு.**—எந்த ஒரு விஷயத்திலும், கமிட்டியின் உறுப்பினர் சமவாக்களித்தால், தலைவரோ அல்லது தலைவராகச் செயலாற்றுபவரோ, நிர்ணய வாக்கை அளிக்கலாம்.

8. **பிரிவுக் கமிட்டியின் நியமனம்.**—*(1)* தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட எந்த விஷயங்களையும் ஆராய, கமிட்டி ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட பிரிவுக் கமிட்டிகளை நியமிக்கலாம். பிரிவுக் கமிட்டிகளின் அறிக்கைகள் கமிட்டிக் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டால் அவை கமிட்டியின் அறிக்கைகளாகவே கருதப்படும்.

(2) பிரிவுக் கமிட்டியின் நிர்மாணக்கோரிக்கைகள், ஆராயப்பட வேண்டிய விஷயங்களைத் தெளிவாகக் குறிக்கவேண்டும். பிரிவுக் கமிட்டியின் அறிக்கை, கமிட்டியினல் ஆராயப்படவேண்டும்.

(3) எந்த ஒரு விஷயத்தையும் ஆராய கமிட்டி ஒரு பிரிவுக் கமிட்டியை நியமித்தால் அப்பிரிவுக் கமிட்டியின் அறிக்கை அதன் சார்பாக அதன் தலைவரால் கையொப்பமிடப்பட்டு குறிப்பிட்ட தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வறிக்கையின் நகல்கள் கமிட்டியின் எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்கள் கூடுமுன் வழங்கப்படவேண்டும்.

9. **கமிட்டியின் கூட்டம்.**—கமிட்டியின் தலைவர் குறிப்பிடும் நாட்களிலும் நேரத்திலும் கூட்டம் நடைபெறவேண்டும். ஆனல், தலைவரில்லாமல் இருந்தால் கமிட்டியின் செயலாளர் கூட்டத்தின் தேதியையும் நேரத்தையும் குறிப்பிடலாம்.

10. **கமிட்டியின் அந்தரங்கக் கூட்டங்கள்.**—*(1)* கமிட்டியின் கூட்டங்கள் அந்தரங்கமாக நடத்தப்படவேண்டும்.

(2) கமிட்டியின் கூட்டங்களில் நடப்பது இரகசியமாகக் கருதப்பட வேண்டும். கமிட்டியின் எந்த ஒரு உறுப்பினரும், அல்லது கமிட்டியின் கூட்டத்தில் நடப்பதை அறியும் வாய்ப்பு உடையவரும், எந்த ஒரு விஷயத்தைப்பற்றிய செய்தியையோ, அறிக்கையையோ அல்லது கடைசியாகவோ தற்காலிகமாகவோ எடுக்கப்படும் முடிவையோ, நேர்முகமாகவோ, செய்தி ஸ்தாபனங்களுக்கு அல்லது மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தக் கூடாது.

(3) ''இரகசிய'' மெனக் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு தஸ்தாவேஜும் உறுப்பினரிடையே சுற்றி வழங்கப்பட்டால், அதில் கண்டிருப்பவைகளை, எந்த உறுப்பினரும், தன் மறுதளிப்பிலோ, பாராளு மன்றத்திலோ, அல்லது வேறு வகையிலோ வெளிப்படுத்தக் கூடாது.

11. **கூடுமிடம்.**—கமிட்டியின் அல்லது பிரிவுக் கமிட்டியின் கூட்டங்கள் வசதியான இடத்தில் நடத்தப்பட வேண்டும்.

12. **கூட்டம் நடக்கும்பொழுது வெளியோர் இருத்தல் கூடாது.**—கமிட்டியின் உறுப்பினர்களையும், அலுவலகப் பணியாளர்களையும், அறிவிப்பவர்களையும் தவிர மற்றவர்கள் கூட்டம் நடக்கும்பொழுது வெளியேறிவிட வேண்டும்.

13. **தஸ்தாவேஜுகளைக் கையாளும் முறை.**—கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்பட்ட எந்த ஒரு தஸ்தாவேஜையும், கமிட்டியின் அனுமதியில்லாமலோ அல்லது அதற்குத் தெரியாமலோ, மாற்றவோ, திரும்பப் பெறவோ கூடாது.

14. **முடிவுகளின் கோவை.**—இக்கமிட்டியின் கூட்டத்தில் நடப்பவை பற்றிய சொல்லுக்குச்சொல் சரியான ஒரு அறிக்கை வைத்துக் கொள்ளப்படவேண்டும். இத்துடன், தலைவர் சொற்படி, செயலாளர் ஒரு நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தை வைத்திருக்கவேண்டும். அதில் கண்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள் அடுத்தக் கூட்டத்தில் எல்லோர் முன்னிலையிலும் படிக்கப்பட்டுத் தலைவரால் கையொப்பம் இடப்படவேண்டும்.

15. **கமிட்டியின் அறிக்கை.**—*(1)* கமிட்டியின் அறிக்கை அதன் தலைவராலும், உறுப்பினர்களாலும் கையெழுத்திடப்படவேண்டும். ஆனால், எந்த ஒரு உறுப்பினரும் கையொப்பமிடும் நேரத்தில் வராமலிருந்தால் அன்னாருடைய ஒப்புதலை எழுத்து மூலம் செயலாளர் வாங்கிவைக்கவேண்டும். மேலும், கையொப்பமிடும் நேரத்தில் வராமலிருந்த உறுப்பினரிடமிருந்து, அவருக்கு அறிக்கையின் நகல் அனுப்பப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் பதில் வராமலிருந்தால் அதற்காகக் காத்திராமல் அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கலாம்.

(2) அறிக்கையில் கண்டுள்ள எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் எந்த ஒரு உறுப்பினரும் தன்னுடைய மறுதளிப்பைக் குறிப்பிடலாம்.

(3) மறுதளிப்பு மிதமானதும் அழகானதுமான சொற்களைக் கொண்டிருக்கவேண்டும். அதில் கமிட்டியின் உறுப்பினர்கள் சொன்ன விஷயங்களையோ, கமிட்டியையும் அதன் உறுப்பினர்களையும் தூற்றும் முறையில் இருக்கும் விஷயங்களையோ சேர்க்கக் கூடாது.

(4) தலைவரின் எண்ணப்படி, மறுதளிப்பில் அவையடக்கமில்லாததும் தகுதியற்றதுமான சொற்கள், சொற்றொடர்கள், சொல்லாட்சிகள் இருந்தால் அவருடைய உத்தரவின்படி அத்தகைய சொற்கள், சொற்றொடர்கள், சொல்லாட்சிகளை, மறுதளிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும்.

16. **விஷயத்தைத் திரும்பி ஆராய உறுப்பினர் விரும்பினால் தலைவரின் அனுமதி பெறவேண்டும்.**—கமிட்டியில் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட எந்த ஒரு விஷயத்தையும் மறுமுறை ஆராய ஓர் உறுப்பினர் விரும்பினால், அன்னார் முதலாவதாகத் தலைவரிடமிருந்து அவ்வாறு செய்ய அனுமதி பெறவேண்டும்.

17. **எஞ்சியுள்ள அதிகாரங்கள்.**—இவ்விதிகளில் குறிப்பிடாமலிருக்கப்பட்ட எல்லா விஷயங்களும், அவற்றைப்பற்றிய நடைமுறைகளும், தலைவர் அவ்வப்பொழுது இடும் உத்தரவுக்கேற்ப நடத்தப்படவேண்டும்.

பிற்சேர்க்கை 3

ஆட்சிமொழி பற்றின பாராளு மன்றக் கமிட்டியின் கூட்டங்கள் நடந்த தேதியும் ஆஜரான உறுப்பினர்களின் எண்ணிக்கையும்.

	கூட்டம் நடந்த தேதி	ஆஜரான உறுப்பினர்களின் எண்ணிக்கை
1	16-11-1957	24
2	6- 1-1958	29
3	7- 1-1958	28
4	8- 1-1958	28
5	9- 1-1958	27
6	18- 2-1958	22
7	10- 3-1958	15
8	12- 5-1958	24
9	13- 5-1958	22
10	14- 5-1958	22
11	14- 7-1958	23
12	15- 7-1958	23
13	16- 7-1958	22
14	17- 7-1958	21
15	18- 7-1958	18
16	18- 8-1958	17
17	19- 8-1958	21
18	20- 8-1958	22
19	21- 8-1958	21
20	22- 8-1958	19
21	30- 8-1958	22
22	2- 9-1958	21
23	4- 9-1958	19
24	25-11-1958	23
25	27-11-1958	22
26	28-11-1958	23

பிற்சேர்க்கை 4

இந்திய அரசாங்கம்

உள் நாட்டமைச்சு

செய்திக் குறிப்பு

மொழியைப் பற்றின யாதாஸ்து

புது டில்லி, 1880-ம் ஆண்டு ஆஷாடா 23/1958-ம் ஆண்டு ஜூலை 14

(சில உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கி, எல்லாராலும் அறியப்பட்டு, செயற்படவேண்டுமென்று இந்த யாதாஸ்தை பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

பெருவாரியான மக்களால் எங்கு அதிகமாக உபயோகிக்கப்படுகிறதோ அப்பகுதிகளில் ஆட்சி மொழியாக உருதுவைக் கொள்ளவேண்டுமென்று அஞ்சுமான்-இ-தாரிக்-இ-உருது-ஹிந்த் ஸ்தாபனமிடமிருந்து பல விண்ணப்பங்கள் வரப்பெற்றோம். முக்கியமாக, உருது மொழியை வளர்க்கவும், அம்மொழியைப் போதனு மொழியாக்கவும் அதில் பரிட்சைகள் வைக்கவும் பல பிரேரணைகள் வந்துள்ளன. இவ்விண்ணப்பங்களிலிருந்தும் இன்னும் பல இடங்களிலிருந்தும் இப்பிரச்னையைச் சரிவரப் புரிந்துக்கொள்ளவில்லை என்பது தெரிவதால், இந்த தப்பெண்ணத்தை நீக்க, அரசியலமைப்பிலும், மத்திய அரசாங்கமும், மாகாணக் கல்வியமைச்சர்கள் மாநாடும் அடிக்கடி உருது மொழிபற்றிச் சொன்னதைத் திருப்பிச் சொல்லவும், விளக்கவும் விரும்பத்தக்கது.

2. உருது மொழியும் ஹிந்தி மொழியும் இணைந்திருக்கின்றன. இவை இரண்டையும் ஒரே மொழியாகக் கருதலாம். ஆனால், பொதுவாக எழுதப்படும் எழுத்து உருவிலும், இலக்கிய வகையிலும், சிறிது சொல்வளத்திலும், தனியான அம்சங்கள் இருப்பதால், ஹிந்தியைவிட மாறுபடுவது உண்மை. இந்தியாவிற்கு வந்த பல அயல் நாட்டுக் கலாசாரங்களின் சேர்க்கையினுல் ஹிந்தி மொழியின் ஒரு மாற்ருக உருது வளர்ந்திருக்கிறது. ஆனுல், கூர்ந்து நோக்குமிடத்து, அது இந்தியாவின் ஒரு மொழியாகும். அதன் தாயகம் இந்தியாவாகும். நமது அரசியலமைப்பு இம்மொழியை, 8-வது ஷெட்யூலிலுள்ள தேசிய மொழிகளி லொன்ருகச் சேர்த்திருப்பதன் மூலம் மேற்கூறிய அடிப்படை உண்மையை நன்குணர்ந்திருக்கிறது. இப்படியாக, உருது மொழி அதிகார பூர்வமாகவும், அரசியலமைப்பின் பிரகாரமும் இந்தியாவின் ஒரு தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, தேசிய மொழிகளுக்குச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் இம்மொழிக்கும் பொருந்தும்.

3. ஒரு கணிசமான எண்ணிக்கையுள்ள இந்திய மக்கள், அதிலும் வட இந்தியர்கள், இம்மொழியைப் பேசி, இதைத் தாய் மொழியாகக் கருதினாலும், எந்த ஒரு ராஜ்யத்திலுமோ, எந்த ஒரு ராஜ்யத்தின் பெரிய தொரு பாகத்திலுமோ, இம்மொழி பெரும்பான்மை மக்களால் பேசப்படவில்லை. ஜம்மு, காஷ்மீர் ராஜ்யத்தில் இது முக்கிய மொழிகளுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால், முக்கிய மொழி காஷ்மீரி மொழியாகும். ஆந்திர ராஜ்யத்தின் தெலிங்கானாப் பிரதேசத்திலும், தெலுங்கு முக்கிய மொழியாக இருந்த போதிலும், இது ஒரு கூடுதல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வட இந்தியாவில், அதிலும் டில்லி, பஞ்சாப், உத்திரப் பிரதேசம், பிஹார், ஆகிய இடங்களில், உருது மொழி பட்டணங் களில் வாழும் சிறுபான்மை மக்களிடையே வழங்கி வந்தபோதிலும், அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது. கடந்த காலத்தில், டில்லியும், லக்ஷ்மண புரியும் உருது மொழியின் முக்கிய கலாசாரக் கேந்திரங்களாக விளங்கின.

4. காவிய நயத்திலும், உயிர்த் துடிப்பிலும், சிறந்து விளங்கும் ஒரு இந்திய மொழி என்ற முறையில் வேறு பல காரணங்களுடனும், இலக்கிய நோக்குடனும் ஊக்குவிக்கப்படவேண்டும். போதனை, பரிட்சை, இவற்றிற் கான வசதிகளைப் பொறுத்தமட்டிலும், ராஜ்யக் கல்வியமைச்சர்களின் மாநாடு உருது மொழி உபயோகத்திற்கானச் சில விதிகளை ஏற்படுத்தி யிருக்கிறது. அவ்விதிகளை அரசாங்கமும் ஒப்புக்கொள்கிறது.

5. உருது மொழி வழங்கும் பிரதேசங்களில், கீழ்க்காணும் வசதிகள் முக்கியமாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

(1) பெற்றோராலோ, வளர்ப்போராலோ உருது மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர் என்று சொல்லப்படும் குழந்தை களுக்கு ஆரம்பப் பள்ளி நிலையில் உருது மொழி போதனைக்கும் அம்மொழியில் பரிட்சை வைக்கவும், வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

(2) உருது மொழியில் தகுந்த புத்தகங்கள் கிடைக்கவும், ஆசிரியர் களுக்கு பயிற்சி யளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

(3) உயர் நிலைப்பள்ளி நிலையிலும் உருது மொழி போதனைக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

(4) உருது மொழியிலுள்ள தஸ்தாவேஜுகளை, மொழிபெயர்க்கவோ வேறு வரி வடிவில் எழுதவோ செய்யாமல், நீதி மன்றங்களிலும் அலுவல்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். உருது மொழியிலுள்ள மனுக்களும் பிராதுகளும் அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(5) முக்கியமான சட்டங்கள், விதிகள், விதி முறைகள், வெளி யீடுகள் ஆகியவை, உருது மொழி வழங்குமிடங்களிலும், வேறு குறிப்பிட்ட இடங்களிலும், அம்மொழியில் வழங்கப்பட வேண்டும்.

சட்டசபையில் உருது மொழியில் சட்டமியற்றவோ, அல்லது இயற்றப் பட்ட சட்டங்களை உருதுவில் மொழி பெயர்க்கவோ வேண்டியதில்லை. ஆனால், குறிப்பிட்ட இடங்களில், முக்கியமான விதிகள், விதி முறைகள், வெளியீடுகள், ஆகியவைகளை விளம்பரப்படுத்த அவற்றையோ அல்லது

அவற்றின் சாராம்சத்தையோ, உருதுவில் வழங்க வேண்டும். இதே போல, இருமொழி வழங்கும் எல்லைப் பிரதேசங்களிலும் அரசாங்க அறிக்கைகளை இரு மொழிகளிலும் விளம்பரப்படுத்த வேண்டும்.

6. அரசியலமைப்பில் மிக முக்கியமான மொழியாக விளங்குவதுடன், உத்திரப் பிரதேசம், பிஹார், இன்னும் சில ராஜ்யங்களிலும், அரசாங்க மொழியாக ஹிந்தி விளங்குகிறது. ஹிந்திக்கும், உருதுவுக்கு மிடையே போட்டிக்கு இடமில்லை. இயற்கையாக அந்த ராஜ்யங்களில் ஹிந்தி தலைமையிடம் வகிக்கிறது. ஆனல், அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாலும், ஒரு முக்கியமான மொழிக்கு ஊக்கமளிக்க வேண்டு மென்பதாலும், உருதுவைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அதை உபயோகப்படுத்துவதற்கான வசதியும், ஊக்கமும் அளிப்பது விரும்பத் தக்கது. இது முக்கியமாக, பல நூற்றுண்டுகளாக உருது மொழியின் பீடங் களாக விளங்கும் டில்லி, உத்திரப் பிரதேசம், பிஹார் ஆகியவைகளுக்கும் பொருந்தும்.

7. பஞ்சாபில், ஹிந்தியும் பஞ்சாபியும் இரு ஆட்சி மொழிகள். அவற்றை உபயோகப்படுத்துவதற்கான முறை வகுக்கப்பட்டு, ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. ஆகையால், பஞ்சாப் ராஜ்யத்தில் உருது மொழி அதிகமாக புரிந்துக்கொள்ளப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டும் வந்த போதிலும் அதற்கு, ஹிந்திக்கும், பஞ்சாபிக்கும் ஈடான இடத்தை அளிப்பது இயலாது. ஆகையால் ஐந்தாவது பாராவில் குறிப்பிடப்பட்ட வசதிகள் பஞ்சாபிலும் செய்யப்பட வேண்டியது அவசியமும் விரும்பத்தக்கதுமாகும்.

8. பல் வேறு மொழிகளைப்பற்றிய, முக்கியமாக உருது மொழியைப் பற்றிய அரசாங்கக் கொள்கை திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லப்பட்டும், தெளிவாகவும் இருந்தபோதிலும் இதை நடைமுறையில் கொண்டுவரவில்லை என்ற குற்றச்சாட்டில் நியாயம் இருப்பதுபோல் தோன்றுகிறது. ஆகையால், அரசாங்கக் கொள்கையை விளம்பரப்படுத்துவதும் அதை நடை முறைக்குக் கொண்டுவருவதும் மிகவும் அவசியமாகும். இம்மொழிப் பிரச்னை, சாதி நோக்குடனும், போட்டி மனப்பான்மையுடனும் ஆராயப் படுவதைக் கண்டு அரசாங்கம் வருந்துகிறது. இந்தியாவின் எல்லா முக்கிய மொழிகளும் நமது நாட்டின் சிறந்த சொத்துக்களாகும். அவை ஒன்றுக்கொன்று பரிமாறுதல் செய்து கொண்டிருக்கின்றன. ஒன்றின் வளர்ச்சி மற்றவற்றின் வளர்ச்சிக்கும் உதவுகிறது. ஆகையால் இப்பிரச்னை நமது தேசிய மொழிகளை வளர்க்கும் கண்ணேக்குடனும், அவற்றிடையே பெரிய அளவில் தோழமையும் ஒத்துழைப்பும் ஏற்படுத்தும் நோக்கத்துடனும் ஆராயப்பட வேண்டும்.

பிற்சேர்க்கை 5

இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அரசாங்க பாஷையைப் பற்றிய அரசியலமைப்பிலுள்ள பிரிவுகள்

பாகம் 17

அரசாங்க பாஷை

அத்தியாயம் 1.—யூனியன் பாஷை

யூனியன் அரசாங்க பாஷை

343. *(1)* யூனியன் ராஜாங்க பாஷை தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட ஹிந்தியாக இருத்தல் வேண்டும்.

யூனியனின் ராஜாங்கக் காரியங்களுக்காக உபயோகிக்கப் படவேண்டிய இலக்கங்களின் வடிவம், இந்திய இலக்கங்களின் சர்வதேச வடிவமாக இருக்க வேண்டும்.

(2) இந்த அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு அடுத்து முன்னதாக ஆங்கில பாஷை உபயோகிக்கப்பட்டுவந்த யூனியன் ராஜாங்கக் காரியங்களுக் கெல்லாம் (1)ம் பகுதியில் எவ்வாறு இருப்பினும் இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தி லிருந்து பதினைந்து வருடகாலத்திற்கு அந்தப் பாஷையைத் தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வரவேண்டும்.

ஏனெனில் மேற்சொன்ன காலத்தில் யூனியன் ராஜாங்கக் காரியங்களில் எவைகளுக்கேனும் ஆங்கில பாஷையோடு ஹிந்தி பாஷையையும், இந்திய இலக்கங்களின் சர்வதேச வடிவத் தோடு தேவநாகரி வடிவத்தையும் உபயோகிப்பதற்கு ராஷ்ட்ர பதி உத்தரவினுல் அதிகாரம் அளிக்கலாம்.

(3) இப்பிரிவில் எவ்வாறு இருப்பினும் மேற்சொன்ன பதினைந்து வருஷ காலத்திற்குப் பிறகு பார்லிமெண்டுச் சட்டத்தினுல்—

(அ) ஆங்கில பாஷையை; அல்லது

(ஆ) இலக்கங்களின் தேவநாகரி வடிவத்தை அச் சட்டத்தில் குறிப்பிடப்படும் காரியங்களுக்காக உப யோகிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

ராஜாங்க பாஷையைப் பற்றிய கமிஷனும் பார்லிமெண்டுக் கமிட்டியும்

344. *(1)* இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தி லிருந்து ஐந்து வ்ருஷம் முடிவடைந்ததும், அதற்கு அப்பால் அத்தொடக்கத்திலிருந்து பத்து வருஷம் முடிவடைந்ததும் ராஷ்ட்ரபதி தமது உத்திரவினுல் ஓர் அக்கிராசனரையும் எட்டாவது தபசிலில் குறிப்பிடப்பட்ட பல்வேறு பாஷைகளின் பிரதிநிதிகளாக ராஷ்ட்ரபதி நியமிக்கும் மற்றைய அங்கத் தினர்களையும் கொண்டதாயுள்ள ஒரு கமிஷனை அமைத்தல் வேண்டும்; மேலும், அந்த உத்தரவு அக்கமிஷன் பின்பற்ற வேண்டிய நடைமுறையை வரையறுத்தல் வேண்டும்.